தொல்காப்பியம்

பொருளதிகாரம் - செய்யுளியல்

இளம்பூரணர் உரை

பதிப்பாசிரியர்

திரு. அடிகளாசிரியர்

இணைப்பேராசிரியர், ஓலைச்சுவடித் துறை

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு: 36

திருவள்ளுவர் ஆண்டு 2016 ஐப்பசி; நவம்பர் 1985

ஆசிரியர் : திரு. அடிகளாசிரியர்

நூல் : தொல்காப்பியம் பொருளதிகாரம்-செய்யுளியல்

விலை : உரூ. 145—00

அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக
மறு தோன்றி அச்சகம்.
தஞ்சாவூர்.

பொருளடக்கம்

		பக்கம்
	பதிப்பாசிரியர் உரை	... ஞ
	மேற்கோள் நூல் சுருக்க விளக்கம்	... உ.கூ
1.	மாத்திரை வகையும்	... 4
2.	எழுத்தியல் வகையும்	
3.	அசைவகை	... 8
4.	சீர்	... 24
5.	அடி	... 46
6.	யாப்பு	... 119
7.	மரபு	... 124
8.	தூக்கு	... 125
9.	தொடைவகை	... 137
10.	நோக்கு	... 174
11.	பாவகை	... 177
12.	அளவியல்	... 287
13.	திணை	... 338
14.	கைகோள்	... 340
15.	கூற்றுவகை	... 343
16.	கேட்போர்	... 353
17.	களன்	... 361
18.	காலவகை	... 364
19.	பயன்	... 366
20.	மெய்ப்பாடு	... 368
21.	எச்சவகை	... 372
22.	முன்னம்	... 374
23.	பொருள்வகை	... 376

24. துறை ... 379
25. மாட்டு ... 382
26. வண்ணம் ... 385
27. அம்மை ... 415
28. அழகு ... 419
29. தொன்மை ... 421
30. தோல் ... 423
31. விருந்து ... 426
32. இயைபு ... 428
33. புலன் ... 430
34. இழைபு ... 433
புறனடை ... 435
நூற்பாச் சொல்லகராதி ... 437
உரைப்பொருளடைவு ... 479
உதாரண மேற்கோள் அகராதி ... 579
நூற்பா முதற்குறிப்பகராதி ... 593

பதிப்பாசிரியர் உரை

தோற்றுவாய்

இப் பரந்த உலகத்தில் வாழும் மக்கள் பல திறப்பட்ட மொழிகளைப் பேசி வருகின்றனர். அம்மொழிகளுள் பல்லடைக் காலத்திற் றோன்றி இன்றுவரை செவ்வி கொடாதிருக்கும் மொழிகள் சிலவாகும்.

தமிழ் மொழி

அம்மொழிகளுள் ஒன்று நம் தமிழ் மொழி. இது உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கிலும் சிறந்து விளங்குகின்றது. அதுவுமன்றித் தன் னாட்டைச் சுற்றியுள்ள மொழிகட்கெல்லாம் அடியாகவும் அமைந்திருக் கின்றது. நல்ல இலக்கியவளம் நிறைந்த மொழிகளுள் இதுவும் ஒன்றாகும். சிறந்த பழைய இலக்கியங்கள் பலவற்றை அது பெற்றிருக்கிறது. பிற மொழியின் உதவியில்லாமல் தனித் தியங்கும் ஆற்றலையும் உடையது.

தமிழிலக்கணம்

ஒரு மொழியைக் கட்டுக்கோப்பாக இயங்கச் செய்வதற்கு அம்மொழியில் நல்ல இலக்கண நூல் அமைந்திருத்தல் வேண்டும். உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இரண்டு வழக்குகளும் நன்கு ஆராயப்பட்டு நுட்பமாகவும், திட்பமாகவும் எழுதப்பட் டுள்ள இலக்கண நூல்கள் தமிழ்மொழிக்கு உள்ளன. அதனால் தமிழ்மொழி அழகுடையதாக விளங்குகின்றது.

> ''இலங்கியநல் அறிஞர்களால் இலக்கணம்நீ பெற்றத னால்
> துலங்கியநின் அழகதனைத் துணிந்துரைக்க வியலாதே''
> (தமிழ் வாழ்த்து - சான்றாண்மை)

தமிழிலக்கண நூல்களைப் பண்டையோர் **நூல்** என்னும் பெய ரால் வழங்கிவந்தனர். இந்நூலுள் பழமை வாய்ந்தது தொல் காப்பியமாகும்.

இந்நூல்தானே,

''பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்''

(தொல்.சொல்.எச். 67)

என்று தனக்கு முன்னிருந்த நூல்களைக் குறிப்பிடுவதால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழிலக்கணம் எழுதப் பட்டிருந்தமை புலனாகிறது.

பிற்கால அறிஞர் சிலரின் போக்கு

வடமொழி கற்ற தமிழறிஞருள் ஒருவரும் இலக்கணக் கொத்தாசிரியரும் ஆகிய **சுவாமிநாத தேசிகரென்பார்** தம் நூலுள், ''வடநூல் வழி கலவாதே தமிழிலக்கணத்தைத் தனியே நீர் தராத்தன்மை என்னெனின்?'' என்று வினாவிக்கொண்டு, ''இலக்கணம் இலக்கியம் முதலானவை யெல்லாம் வடமொழிச் சொற்களேயாகும்; அக்காரணத்தாலும், பிற காரணத்தாலும் வடமொழி இலக்கணங்களைக் கலந்தே தமிழிலக்கண விதி எழுதியுள்ளேன்'' என்றனர். (இலக்கணக்கொத்து.நூ. 7)

அவர் கருதுகிறபடி 'இலக்கணம்' என்பது வடசொல்லா தமிழ்ச்சொல்லா என்பதை ஆராய்வோம்.

இலக்கு என்றொரு தமிழ்ச்சொல் உண்டு. அதற்குக் குறி என்று பொருள். விற்பயிற்சி செய்வோர் இலக்கு வைத்து அம்பினை எய்து பழகுவர். அசையா இலக்கு, அசையும் இலக்கு என இலக்கு இருவகைப்படும். அவ் இலக்கையுடைய மரத்தை இலக்கமரம் என்பர். விற்பயிற்சி செய்வோர் இலக்கில் அம்பு எய்து பழகுதலை,

''அலைக்கும் வெஞ்சரம் ஐந்துடை யானரோ
இலக்கம் என்னுயி ராவெய்து கற்குமால்''

(சிந்தாமணி. 995)

எனத் தேவர் கூறுதலால் தெளிக. (இம்மரம், முருக்க மரமுமாம். புறம்.169)

இலக்கு அண்மியது இலக்கணம் என்க. இலக்கிற்குக் குறி என்றொரு பெயரும் உண்டு ஆதலால், இலக்கணம் அறிந்

தோரைத் தொல்காப்பியர் 'குறி அறிந்தோர்' (தொல். அகத். 47) என்பர். இக் காரணங்களால் இலக்கணம் என்பது தூய தமிழ்ச் சொல் என்பது விளங்கும்.

தமிழிலக்கணத்தின் தனித்தன்மை

மாதவச் சிவஞான முனிவர், "தமிழ் மொழிப் புணர்ச்சிக் கட்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சொல்லிலக்கணங்களும் உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய அகத்திணைப் புறத்திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும் இன்னோ ரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா" என்று கூறுவதைக் கருதினால் தமிழிலக்கணத்தின் தனித்தன்மை புலனாகின்றது.

தொல்காப்பியம்

இப்பொழுதுள்ள தமிழிலக்கண நூல்களுள் **தொன்மையும், பெருமையும்** வாய்ந்தது தொல்காப்பியமே.

இந்நூல் நிலந்தரு திருவின் நெடியோன் என்னும் பாண்டிய மன்னன் அவையில் அரங்கேற்றப்பட்டதாக இதன் சிறப்புப் பாயிரம் கூறுவதால், இப்பாண்டியன் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் காலத்திற்குப் பல நூற்றாண்டுகட்கு முற்பட்ட தென்று தெரிவதால் இந்நூலின் தொன்மை விளங்கும்.

இளம்பூரணர் சூத்திரம், ஒத்து, படலம் என்னும் மூன்று உறுப்புக்களையும் அடக்கிக் கொண்டிருக்கும் பிண்டமாகிய பெருநூல் இத்தொல்காப்பியம் என்று குறிப்பிடுதலாலும் (செய்யு.165), நேமிநாதத்தின் பாயிரம் தொல்காப்பியத்தைத் 'தொல்காப்பியக்கடல்' என்று குறிப்பதாலும் இந்நூலின் பெருமை விளங்கும்.

இலக்கணைக் கொத்தாசிரியர் "ஒவ்வொரு நூற்கடலுள்ளே" (6) என்னும் நூற்பா அடிக்கு "அகப்பொருள் விளக்கம், யாப் பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம் முதலிய நூல்கள் ஒன்ற

னையே உணர்த்தும்; நன்னூல், சின்னூல் முதலிய நூல்கள் இரண்டனையே உணர்த்தும்; அவை போலாது தொல்காப்பியம் ஐந்தனையும் உணர்த்தலில் கடல் என்றாம்'' என்று கூறுவது நேமிநாத சிறப்புப்பாயிரம் கடல் என்று கூறும் கூற்றிற்கு விளக்க வுரை கூறுவது போல் உள்ளது.

தொல்காப்பியத்தின் பகுப்பு

தொன்மையும் பெருமையும் வாய்ந்த இத் தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று படலமாக வகுத் தமைக்கப்பட்டு எழுத்து முதலானவற்றின் இலக்கணங்களை முறையாகக் கூறுகின்றது.

பொருளிலக்கணப் பகுதி

மேற்கூறிய மூன்றில் மூன்றாவதாக உள்ளது பொருளிலக் கணம் கூறும் பொருளதிகாரமாகும். இது பொருட்பால் என்றும் கூறப்படும். இப் பொருளிலக்கணத்தைத் தொல்காப்பியர்,

''ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பு''
(தொல்.புறம்.36)

என்று கூறுவதால், இப் பொருளிலக்கணம் ஞாலத்தில் இல்லாத ஒன்றினைக் கட்டிக் கூறவந்ததன்று; அவர் காலத்தும், அவர் காலத்திற்கு முன்னும் உலகத்தில் நடந்து வந்ததென்றே தெரி கின்றது.

தொல்காப்பியத்திற்குப் 'பெருநூல்' என்று பெயர் இருத்தல் போலவே, அதன் பொருளதிகாரத்திற்குப் **'பெரும் பொருள்'** என்று பெயர் வழங்கப்பட்டிருந்ததென்பதை, ''தொல்காப்பிய னருள் ஒல்காப் பெரும்பொருள்'' என்னும் நம்பியகப் பொருள் பாயிரத்தானும் 'பெரும் பொருளகத்து' (251) என்று கூறும் அந் நூல் உரையானும் உணர்ந்து கொள்ளலாம்.

பொருளிலக்கணச் சிறப்பு

தமிழ்ப் பொருளிலக்கணச் சிறப்பினை, ''தன்னாட்டில் வற்கடந் தீர்ந்தபின் பாண்டிய மன்னன் நூல் வல்லாரைக்

கொணர்க என்று எல்லாப்பக்கமும் ஆட்போக்க, அவர் எழுத் ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டி லேம் என்று வந்தார்.

வர, அரசனும் புடைபடக் கவன்று, என்னை? எழுத்தும் சொல்லும் ஆய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றோ; பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்'' எனக்கூறிக் கவன்றான் என்று கூறும் களவியல் உரைப்பகுதி யால் உணர்ந்து கொள்கிறோம்.

மேற்கூறிய நிகழ்ச்சி பாண்டிய மன்னனுக்கு இலக்கணம் என்னும் நூலிலும், அவற்றுள் பொருளிலக்கண நூலிலும் ஏற் பட்டிருந்த ஈடுபாட்டினை நன்கு புலப்படுத்துகின்றது.

பொருளிலக்கணத்துள் செய்யுளியல்

எனவே, இச் சிறந்த பொருளதிகாரத்துள் செய்யுளியல் எட்டாவது இயலாக உள்ளது. மாதவச் சிவஞான முனிவர் **''வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமெல்லாம் வடமொழியிற் பெறப்படா''** என்று எழுதுவதைக் கருதினால் செய்யுளியல் கூறும் செய்யுள் இலக்கணம் தமிழுக்கே சிறந்த தென்பது புலனாகும். தொல்காப்பியர் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்று கூறப்படும் ஏழிற்கும் செய்யுள் என்று பெயர்வைத்து அவற்றின் இலக்கணத்தைச் செய்யு ளியலில் கூறுகிறார். யா. க. விருத்தி மேற்கோள் பாடல் (கழ. 19) ''தொல்காப்பியப் புலவர் தோன்ற விரித்துரைத்தார்'' என்று கூறுவதற் கேற்ப அவர் செய்யுளியலில் 235 நூற்பாக்க ளால் செய்யுளிலக்கணத்தினை விரிவாகவே கூறியுள்ளார். தொல்காப்பியத்துள் எந்த இயலும் இவ்வளவு நூற்பாக் களைப் பெற்றிருக்கவில்லை.

செய்யுளியல் உரைகள்

இச் செய்யுளியலுக்கு **இளம்பூரணரும் பேராசிரியரும் நச்சினார்க் கினியரும்** உரை எழுதியுள்ளனர். வேறு உரை இருந்தமை உரை யாசிரியர்தம் கூற்றால் உணர்ந்து கொள்ளுகின்றோம்.

இளம்பூரணருரை

இப்பொழுது கிடைக்கும் மூன்று உரைகளில் தொல் காப்பியர் கருத்தை உணர்ந்து கொள்வதற்குப் பெரிதும் துணைபுரிவது இளம்பூரணர் உரையே யாகும். இவ்வுரை சுருக்கமாகவும், தெளிவாகவும் அமைந்திருக்கிறது.

சொல்லதிகார இளம்பூரணர் உரைமுடிவில் (ஏட்டில்) **"சொல்லதிகார உண்மைப் பொருளும் உதாரணமும் முடிந்தன"** என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனால் இளம்பூரணர் உரை யின் சிறப்பு புலனாகும்.

மெய்ப்பாட்டியல் முதலிய நான்கினுக்குமுள்ள இளம் பூரணர் உரையினை ஒரு தொகுப்பாக உயர்திரு வ. உ. சிதம் பரம்பிள்ளை அவர்கள் 15—1—1936ல் பதிப்பித்துள்ளார்கள். அப் பதிப்பின் பதிப்புரையில் பிள்ளையவர்கள், 'தொல்காப் பியத்தைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1910 ஆம் வருடம் கிடைத்தது. அதன் பொருளதிகாரத்தை யான் படித்த போது, அதில் வேறு எம் மொழியிலக்கணத்திலும் காணப் படாத நிலப் பாகுபாடு, நிலங்களின் மக்கள், ஏனைய உயிர்கள், மரங்கள், செடிகள், மலர்கள், மக்களது ஒழுக்கங்கள், பழக்க வழக்கங்கள் முதலியன கூறப்பட்டிருக்கக்கண்டேன்.

இவ்வொப்பு உயர்வற்ற நூலைத் தமிழ் மக்கள் படியாத தற்கு ஒரு காரணம் இந்நூலிற்கு **ஆன்றோர் இயற்றியுள்ள உரை களின் கடின நடை** யென்று உணர்ந்தேன்.

இந் நூலைத் தமிழ் மக்கள் யாவரும் கற்கும்படி எளிய நடையில் ஓர் உரை எழுதவேண்டும் என்று நினைத்தேன் உடனே எழுத்ததிகாரத்தின் முதற்சில இயல்களுக்கு உரையும் எழுதினேன்.

பின்னர், யான் சென்னை பிரம்பூரில் வசித்த காலத்தில் என் உரையைப் பூர்த்தி செய்யக் கருதி, முன் எழுதியிருந்த எழுத்ததிகார இயல்களின் உரையைத் திரு. தி. செல்வக் கேச வராய முதலியார் எம். ஏ., அவர்களும் யானும் சரிபார்த்

தோம். அப்போது தொல்காப்பிய இளம்பூரண எழுத்ததிகார அச்சுப் புத்தகமும், சொல்லதிகார ஏட்டுப் பிரதிகள் சிலவும், பொருளதிகார ஏட்டுப்பிரதி ஒன்றும் திரு. த. கனக சுந்தரம் பிள்ளை பி. ஏ., அவர்களிடமிருந்து கிடைத்தன.

இளம்பூரணத்தை யான் படித்த பொழுது, அதன் உயர்வும், சிறப்பும், எளிய நடையும், தொல்காப்பியத்திற்கு யான் உரையெழுதுவது மிகை என்று நினைக்கச் செய்தன''

-என்று எழுதியுள்ளார்கள். சிறந்த வழக்கறிஞரொருவர் தொல்காப்பிய உரையாசிரியர்களைப்பற்றி இவ்வாறு எழுதியுள்ள கருத்து, நம்மாலும் உணரத்தக்கதாகவே உள்ளது.

தொல்காப்பியருடைய கருத்தினை உணர்ந்து கொள்வதற்கு ஏனைய உரையாசிரியர் உரைகளை விட இளம்பூரணர் உரையே சிறந்த தென்பது என் எண்ணமுமாகும்.

அதனால், எனக்குக் கிடைத்த இரண்டு ஏட்டுச் சுவடிகளின் துணை கொண்டு ஆராய்ந்து 1969ல் தொல்காப்பியம் இளம்பூரணம் எழுத்ததிகார உரையை மிக மிக முயன்று அச்சிட்டேன்.

அப்பதிப்பின் பதிப்புரையில் (பக்கம் XI) ''எழுத்ததிகார இளம்பூரணர் உரையினைப் பதிப்பித்தாற்போலவே சொல்லதிகார இளம்பூரணர் உரையினையும் செய்யுளியல் இளம்பூரணர் உரையினையும் பதிப்பிக்க வேண்டும் என்பது என் எண்ணமாகும். அவ்வெண்ணத்திற்கும் இறைவனுடைய திருவருள்தான் துணை செய்ய வேண்டும்'' என்று எழுதியிருந்தேன்.

அத்திருவருளின் பேராற்றலால் தஞ்சாவூரில் தமிழ்ப்பல்கலைக் கழகம் ஏற்பட்டது. அடியேனுக்கு அதில் ஒரு பணியும் கிடைத்தது. முதற் பணியாகத் தொல்காப்பியம் செய்யுளியல் இளம்பூரணர் உரையைப் பதிப்பிக்க வேண்டி அதனை ஆராயத் தொடங்கினேன்.

திரு வ.உ. சிதம்பரம் பிள்ளை பி.ஏ., அவர்கள் 15.1.1936ல் பதிப்பித்த செய்யுளியல் பதிப்பினை முதலாக வைத்துக்

கொண்டேன். அதனுடன், மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் பதிப் பித்த செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரையில் அடிக்குறிப் பாகக் காட்டப்பட்டிருக்கும் இளம்பூரணர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பதிப்பித்துள்ள செய்யுளியல் இளம்பூரணர் உரை என்னும் இரண்டையும் வைத்து ஒப்பு நோக்கிக் கொண்டேன். மற்று, செய்யுளிலக்கணங்களைக் கூறும் யாப்பருங்கல விருத்தியுரை, காரிகையுரை, வீரசோழிய வுரை, நேமிநாதவுரை, வெண்பாப்பாட்டியலுரை, இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சிதம்பரப் பாட்டியலுரை, முத்துவீரியம், செய்யுளியல் பேராசிரியர் உரை, நச்சினார்க் கினியர் உரை என்னும் இவற்றையும் வைத்து ஆராய்ந்து கொண்டேன்.

மேற்கண்ட இவ்விரண்டால் நல்ல பாடங்களைத் தேர்ந் தெடுத்துக் கொண்டு, அப் பாடப்படி, நூற்பாவினையும் இளம் பூரணர் உரையினையும் உதாரணங்களையும் செப்பமுற அமைத்துக் கொண்டேன். நூற்பாவிற்கும் உரைக்கும் கிடைத்த பாடபேதங்களையும் குறித்துக் கொண்டேன்.

இதன்பின், நூற்பாவிற்கும் உரைக்கும் விளக்கந்தரும் குறிப்பு, ஒத்த கருத்து, மாறுபட்ட கருத்து என்னும் இவற் றையும் எழுதிச் சேர்த்துக் கொண்டேன்.

இவ்வாறு ஆராய்ச்சி செய்து வெளியிடப்பெறும் இச் செய்யுளியற் பதிப்பின் பதிப்புரையில் யான் எழுதியுள்ள ஆராய்ச்சி கள் அனைத்தையும் எழுதமுடியாதாயினும், சிலவற்றை மட்டும் அறிஞர்க்கு விருந்தாகத் தருகின்றேன்.

தொல்காப்பியத்திற்கும் பிற்கால நூல்களுக்குமுள்ள வேறுபாடு

இப்பொழுதுள்ள செய்யுளிலக்கண நூல்களுள் தொல் காப்பியச் செய்யுளியல் ஒன்றே பழமை வாய்ந்தது. ஏனையவை யெல்லாம் இதன்பின் தோன்றியவையே.

எனவே, பழமை வாய்ந்த தொல்காப்பியச் செய்யுள் இலக் கணத்திற்கும் இதன் பின் எழுந்த யாப்பிலக்கண நூல்களுக்கும் உள்ள வேறுபாட்டினைச் சுருக்கமாகத் தருகின்றேன்.

வேறுபாடு

தொல்காப்பியர் செய்யுள் இலக்கணமெல்லாவற்றையும் ஓரினப் பொருள்கள் என்று கருதி ஓரினப் பொருள்களை ஒரு வழி வைப்பதற்கு இடம் ஒத்து என்னும் இயலாதலால் அவற்றைச் செய்யுளியல் என்ற ஒன்றிலேயே கூறியுள்ளார்.

பிற்காலத்தாரெல்லாம் யாப்பு என்று பெயரிட்டுத் தனி அதிகாரமாக்கியும், தனி நூலாக்கியும் செய்யுள் இலக்கணத்தைக் கூறியுள்ளனர்.

மிகப் பிற்பட்டவராகிய இலக்கண விளக்க ஆசிரியர் மட்டும் தம் இலக்கண விளக்க நூலுள் தொல்காப்பியரைப் போலவே பொருளதிகாரத்தே செய்யுளியலில் தாம் கருதிய செய்யுளிலக் கணங்களைக் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் மாத்திரை முதலாக வண்ணம் ஈறான இருபத்தாறினை யாப்பியல் உறுப்பென்று கூறி, அவற்றுடன் அம்மை முதலான எட்டினைக் கூட்டி இம்முப்பத்து நான்கும் செய்யுள் உறுப்பென்றார்.

யாப்பருங்கல ஆசிரியர் எழுத்து அசை சீர் தளை அடி தொடை தூக்கென்னும் ஏழொடு நடப்பது யாப்பென்று கூறி அவற்றுள் எழுத்து முதல் தொடை ஈறான ஆறும் உறுப்பென்று பெயர்பெறும் என்றார். மற்றவர் சிறிது சிறிது வேறுபட உரைத்துள்ளனர்.

தொல்காப்பியர் மாத்திரையை முதல் உறுப்பாகக் கூறினர். பிறர் மாத்திரையை நீக்கிவிட்டு எழுத்தினையே முதல் உறுப் பாகக் கூறினர்.

தொல்காப்பியர் எழுத்தினை இரண்டாவது உறுப்பாகக் கூறி மாத்திரையும் எழுத்தும் மேற்கிளந்தன்ன என்று மாட் டெறிந்தார்.

பிற்காலத்தார் எழுத்து பதினைந்து வகையென்றும், பதின் மூன்று வகையென்றும் விகற்பித்துக் கூறி இவையெல்லாம் அசைக்குறுப்பாம் என்றனர்.

அசை மூன்றாவது உறுப்பு தொல்காப்பியர் நேர் நிரை என அசைகள் இரண்டாகி, அவையே இருவகை உகரம் அடுத்து நேர்பு நிரைபு என மற்றொரு இரண்டாகி வரும் என்றும், இவை முறையே இயலசை உரியசை எனப் பெயர்பெறுமென்றும் கூறியுள்ளார். பிற்காலத்தார் நேர் நிரை என அசை இரண்டே யாம் என்றனர்.

சீர் நான்காவது உறுப்பு.

தொல்காப்பியர் நான்கு அசைகளை ஈரசையாகவும் மூவசையாகவும் மயக்கி, ஈரசைச்சீர் பதினாறு, மூவசைச்சீர் அறுபத்து நான்கெனக் கொண்டு, ஈரசைச்சீர் பதினாறுள் பத்தினை இயற்சீர் என்றும் ஆறினை ஆசிரிய வுரிச்சீர் என்றும் மூவசைச்சீர் அறுபத்து நான்குள் நான்கினை வெண்பாவுரிச்சீர் என்றும் அறுபதை வஞ்சியுரிச்சீர் என்றும் பகுத்துக் கொண் டார். அவர் சீர் அதிகாரத்தே இசைநிலை நிறைந்து நின்றால் அசையும் சீராகும் என்றனர். ஈரசைச்சீர் பதினாறு மூவசைச் சீர் அறுபத்து நான்கு ஓரசைச்சீர் நான்கு என எண்பத்து நான்கு சீர்களை அவர் கொண்டுள்ளனர்.

பிற்காலத்தார் ஈரசை மூவசை நான்கசையென மூன்று மயக்கம் கொண்டு ஈரசைச்சீர் நான்கு, மூவசைச்சீர் எட்டு, நான்கசைச்சீர் பதினாறு எனக்கொண்டு, அவற்றுடன் ஓரசைச் சீர் இரண்டனையும் கூட்டி முப்பது சீர் கொண்டுள்ளனர். அவற்றுள் ஈரசைச்சீர் நான்கினை இயற்சீர் அல்லது ஆசிரிய உரிச்சீர் என்றும் மூவசைச் சீருள் நேர் இற்றதை வெண்பா வுரிச்சீர் என்றும், நிரை இற்றதை வஞ்சியுரிச்சீர் என்றும் நாலசைச் சீரைப் பொதுச்சீர் என்றும் வழங்கினர்.

தொல்காப்பியர் சீர்க்குப் பின் தளை என்றொரு உறுப்பைக் கூறவில்லை. கூறாவிடினும் தளை என்பது நாற்சீரடியில் மட்டும் வரும் என்றனர் (செய். 32). அவர் ஓசையை அவ்வப் பாக்களுக்குரிய தன்சிரும் தன்சீர் நில்லாத பொழுது தளை வகையும் உண்டாக்கும் என்றனர் (செய்.52).

பிற்காலத்தார் இருசீரடி முதலான எல்லாச் சீர்க்கும் தளை

கொண்டனர். தன்சீரால் ஓசை பெறுதற்கும் தளையை வகுத்துக் கொண்டனர்.

தொல்காப்பியர் அடியை ஐந்தாம் உறுப்பாகக் கொண்டார். சீர்களைக் கொண்டது அடி என்பது பொதுக்கருத்தாயினும், அவர் இருசீர் கொண்டது குறள், முச்சீர் கொண்டது சிந்து, நாற்சீர் கொண்டது அளவு, ஐஞ்சீர் கொண்டது நெடில், அறுசீர் முதலானவற்றைக் கொண்டது கழிநெடில் என்று கூறாமையால், சீர்களைக் கொண்டு குறளடி முதலானவற்றைக் கூறும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இல்லை என்று தெரிகிறது.

அவர் அடிகளைப்பற்றிக் கூறத் தொடங்கும் முதல் நூற்பாவினை ''நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே'' என்று கூறித் தொடங்கி, அந்நாற்சீரடியினையே எழுத்துக் கணக்கினால் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடியென ஐவகை அடியாக வகுத்துக் கொண்டனர்.

பிற்காலத்தார் 'தளை அடுத்து நடத்தலின் அடியே' என்று அடிக்குப் பொது இலக்கணம் கூறினாலும் தளையைக் கொண்டு அடிக்குச் சிறப்பிலக்கணம் கூறாமல் இருசீர் குறள், முச்சீர் சிந்து, நாற்சீர் அளவு அல்லது நேர், ஐஞ்சீர் நெடில் அறுசீர் முதலியன கழிநெடில் எனச் சீரைக் கொண்டே அடியிலக்கணம் வகுத்தனர்.

யாப்பு என்பது தொல்காப்பியர்க்கு ஆறாவது உறுப்பாகும். இவ்வுறுப்பு எழுத்து அசை சீர் அடி என்னும் உறுப்புக்களைக் கூறிய பின் கூறப்பெறுவதால், எழுத்து முதலா ஈண்டிய அடியில் (செய். 74) என்று தொடங்கப்பட்டு, குறித்த பொருளை இறுதியடியளவும் முற்றுப்பெற அடியினால் நிறுத்துதலே யாப்பாகும் என்று கூறப்பட்டுள்ளது. (இளம்பூரணர் கருத்து)

பிற்காலத்தார் யாப்பினைத் தொல்காப்பியர் ஓதியவாறு உறுப்பாகக் கொண்டிலர். அதனைச் செய்யுளாகிய உறுப்பி என்றே கொண்டு ''எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு இழுக்கா நடையது யாப்பெனப் படுமே'' (யா.க. 1) என்றனர்.

அகராதி எழுதியவரும் யாப்பு என்பது செய்யுள் உறுப்பு என்பதை எழுத மறந்து விட்டு, அதனைச் செய்யுள் என்றே எழுதிவிட்டனர்.

குறித்த பொருளை அடியில் நாட்டும் யாப்பானது, பாட்டு உரை நூல் வாய்மொழி பிசி அங்கதம் முதுசொல் என எழு வகைப்பட்டு வரும் என்பர் தொல்காப்பியர்.

மரபு ஏழாவது உறுப்பாகும். செய்யுள் ஈட்டச் சொல்லாகிய இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்னும் நான் கினைச்செய்யுளில் வழங்கும் மாபறிந்து யாப்பதே மரபென்றனர்.

பிற்கால யாப்பிலக்கண நூலார் இவ்வுறுப்பினைக் கொண் டிலர். ஆனால், வச்சணந்தி மாலையும் வீரசோழியமும் மரபடுத்துவரும் செய்யுளை உறுப்புச் செய்யுள் என்று கூறி யுள்ளன.

தூக்கு என்பது எட்டாவது உறுப்பு. தூக்கென்றாலும் பாக்களுக்குரிய ஓசை என்றாலும் ஒக்கும். அஃது ஆசிரியப்பா அகவலோசையையும், வெண்பா அகவுதலில்லாத ஓசையையும், கலிப்பா துள்ள லோசையையும், வஞ்சிப்பா தூங்கலோசை யையும் பெற்று வரும் என்று கூறப்பட்டுள்ளது.

பிற்காலத்தார் தூக்கினைத் தனி உறுப்பாகக் கொண்டு கூறிலர் என்றாலும் பாக்களை உணர்த்தப் புகும்பொழுது இத் தூக்கினை ஒலி என்று கூறி வெண்பா முதலிய நான்கு பாக் களும் செப்பல் முதலிய ஓசையைப் பெற்று வரும் என்பதை,

"திண்பா மலிசெப்பல் சீர்சா லகவல் சென்றோங்கு துள்ளல், நண்பா வமைந்த நலமிகு தூங்கல்" (காரிகை. 21)

என்ற காரிகையில் கூறியுள்ளனர்.

தொடைவகை என்பது ஒன்பதாம் உறுப்பு. நாற்சீர் கொண்ட அடியிலன்றி, இரண்டு முதலான சீர்களைக் கொண்டு வரும் அடிகளில் தொடைவாராதென்பர் தொல்காப்பியர்.

அவர் மோனை எதுகை முரண் இயைபு அளபெடை பொழிப்பு ஒரூஉ செந்தொடை நிரனிறை இரட்டையாப்பு எனப் பத்துத் தொடைகளை முதற்கண் எடுத்தோதி, முதல் எட்டிற்கும் சிறப்பிலக்கண விதி கூறி, நிரனிறையும், இரட்டை யாப்பும், சொல்லதிகார எச்சவியலில் மொழிந்த சிறப்பிலக் கணத்தால் வரும் என்ற கருத்தால் ''மொழிந்தவற் றியலான் முற்றும்'' (செய். 87) என்றனர்.

உரையாசிரியர் மூவரும் ''மொழிந்தவற்றியலான் முற்றும்'' என்பதற்கு நிரனிறையும் இரட்டை யாப்பும் மேல் மொழிந்த மோனை முதலானவற்றின் இலக்கணத்தால் அவற்றுள் அடங்கி முடியவும் பெறும் என்று கூறி நிரனிறையையும் இரட்டைத் தொடையையும் நீக்கிவிட்டுத் தொடையை எட்டாகக்கொண்டு, அவ்வெட்டுடன் தொல்காப்பியர் கூறாத வேறு பல தொடை களையும் கூட்டித் தொடைத்தொகை கொண்டுள்ளனர்.

தொடைவகை கூறும் இப்பகுதி உரையாசிரியர் தம் வெவ் வேறு கூற்றால் குழம்பியுள்ளது. தெளிவுரை வேண்டும்.

பிற்காலத்தார் மோனை எதுகை முரண் இயைபு அள பெடை என்னும் ஐந்தும், அடி இணை பொழிப்பு ஒரூஉ கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் முற்று என்னும் எட்டொடு கூடியும் (5×8=40) அந்தாதி, இரட்டை, செந்தொடை என்னும் மூன்றினைப் பெற்றும் தொடைவிரி நாற்பத்து மூன்றாய் வரும் என்பர்.

பிற்காலத்தில் தொடைவகை மிக விரிந்து பொருள் உணர்ச்சியைக் கெடுத்துள்ளது.

நோக்கு என்பது பத்தாவது உறுப்பாகும். யாதானும் ஒன்றினைக் கூறும்பொழுது, கருதிய பொருள் முடியுங்காறும், மாத்திரை எழுத்து அசை சீர் அடி என்னும் அவற்றின் வடிவ மாகிய சொல்லெல்லாம் அடிப்பொருளையே நோக்கி நிற்கும் நிலையே நோக்காகும்.

அஃது ஒரு நோக்காகவும் பல நோக்காகவும் இடையிட்டு

நோக்கும் நோக்காகவும் வரும் என்பர் இளம்பூரணர். பேராசிரியர் வேறுபடக் கூறுவர்.

பிற்காலத்தார் இவ்வுறுப்பினைக் கொண்டிலர்.
பா என்பது பதினொன்றாம் உறுப்பு.

அறம் பொருள் இன்பம் என்னும் மும்முதற் பொருளையும் பாவி வருதலால் பா எனக் காரணக்குறி பெற்ற தென்பது தொல்காப்பியர் கருத்து. இப் பா ஆசிரியப்பா வஞ்சிப்பா வெண்பா கலிப்பா என நான்காய் வரும் என்றனர்.

இந்நான்கில் ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் இவ்வாறு வரும் என்று கூறும் சிறப்பிலக்கண நூற்பாக்கள் செய்யுளியலில் இல்லை யாதலால் இளம்பூரணர், ''மண்டிலம் குட்டம்'' (செய். 113) என்னும் நூற்பாவுரையில் ''இனி நான்தபாவினும் வெண்பாவும் கலிப்பாவும் முன்னெடுத் தோதுகின்றாராதலானும், ஆசிரியப்பாவும், வஞ்சிப்பாவும் இத்துணையும் ஓதிய இலக்கணத்தான் முடித்தலானும் அவையிற்றிற்கு உதாரணம் ஈண்டே காட்டுதும்'' என்று எழுதித் தற்காலத்தில் ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் வழங்கி வந்துள்ளனவற்றையே உதாரணமாகக் காட்டியுள்ளார்.

வெண்பாவும் கலிப்பாவும் இத்துணையும் ஓதிய பொது விலக்கணத்தானன்றி முன்னெடுத்தோதும் சிறப்பிலக்கணத்தான் முடித்தலான் அச்சிறப்பிலக்கண விதிப்படி வெண்பா தொல்காப்பியர் காலத்தில் நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாடல், அங்கதம், செய்யுள் என ஆறுவகையாக வழங்கிற்று.

கலிப்பாவும் அச்சிறப்பிலக்கண விதிப்படி ஒத்தாழிசைக்கலி கலிவெண்பாட்டு கொச்சகக்கலி உறழ்கலி என நான்கு வகையாக வழங்கியிருந்தது.

பிற்காலத்தார் இப் பா என்னும் உறுப்பைப் பாவும் இனமும் என்று இரண்டாக வகுத்துக்கொண்டு அவற்றுள் பா என்பது, வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி மருட்பாவென

ஐந்தாய் வருமென்றும், மருட்பா ஒழிந்தவற்றின் இனம் தாழிசை துறை விருத்தம் என மும்மூன்றாய் வரும் என்றும் கூறியுள்ளனர். மருட்பாவிற்கு இனம் இல்லை என்றனர். அவர் இவற்றையெல்லாம் செய்யுளியல் என்ற பெயருடைய இயல் வதத்து அதனுள் ஓதுகின்றார். பரிபாடலையும் உறழ்கலி யையும் இன்னும் சிலவற்றையும் கூறாது விட்டனர். கொச்சக ஒருபோகினையும், கொச்சகத்தையும் ஒன்றாகக் கொண்டனர். இவ்வாறு பல மாற்றத்தைப் பெற்றுள்ளன பிற்காலத்தாருடைய பாவியல்.

அளவியல் என்பது பன்னிரண்டாம் உறுப்பாகும். தொல் காப்பியர் இதனை இரண்டு பிரிவாகக் கூறியுள்ளார். முதற் பிரிவில் இதுவரை இலக்கணம் கூறப்பெற்ற பாக்களுக்கு அடி அளவைக் கூறினார்.

இரண்டாம் பிரிவில் மேற்கூறிய பாவொழிந்த நூல் உரை பிசி முதுமொழி மந்திரம் கூற்றிடை வைத்த குறிப்பு ஏன்னும் ஆறும் அடிவரையறை இல்லாதனவாய் வரும் என்றும், அவை ஒவ்வொன்றும் இன்ன இன்ன இலக்கணத்தனவாய் வரும் என்றும் கூறியுள்ளனர்.

இவ் அளவியலின் கடைசிப் பகுதியில் பண்ணத்தி என்னும் இசைப் பாடல்கள், பாட்டினுக்குரிய பொருளினையே பெற்றுப் பாக்கள் போல வரப்பெறும் என்றும், (செய்.173) அவை பிசிச் செய்யுள் போல் அடிநிமிராமலும், அவ்வாறு வருதலின்றி அடிநிமிர்ந்தும் இருவகையாய் வரும் என்றும், அடி நிமிர்ந்து வருவன பன்னிரண்டாகு மென்றும் கூறியுள்ளனர்.

பிற்காலத்தார் அளவியலைத் தனி உறுப்பாகக் கொண்டிலர். அதனை அடியதிகாரத்திலேயே அடக்கி ஓதிவிட்டனர். தொல் காப்பியர் கூறியுள்ள அடிவரையறை இல்லாத நூல் முதலான வற்றைக் கூறாது விட்டனர்.

திணை முதலிய உறுப்பு

அளவியலின் பின் திணை, கைகோள், கூற்றுவகை, கேட் போர், களன், காலவகை, பயன், மெய்ப்பாடு, எச்ச வகை,

முன்னம், பொருள், துறைவகை, மாட்டு, வண்ணம் என்பவை முறையே பதின்மூன்று முதல் இருபத்தாறு ஈறான உறுப்புகளாக ஓதப் பெற்றுள்ளன. பிற்காலத்தார் இவற்றுள் பெரும்பாலான வற்றை யாப்பிலக்கண நூலுள் உறுப்பென்று கருதிக் கூறாமல் ஒதுக்கிவிட்டனர். யாப்பிலக்கண நூலுள் இவை ஒதுக்கப் பட்டாலும் அகப்பொருள் இலக்கணங் கூறும் நம்பியகப்பொருள். திணை முதல் துறை யீறான பன்னிரண்டினை "அகப்பாட்டு றுப்பே" (நம்பி.211) என்று தேற்றேகார மிட்டுக் கூறுகின்றது.

நம்பியகப் பொருட்கு முற்பட்ட இறையனார் களவியல் மேற்கூறிய பன்னிரண்டுள் துறை, முன்னம் என்ற இரண்டினை நீக்கிவிட்டு எஞ்சிய "பத்தும் அகனைந்திணையும் உரைத்த லாறே" (இறை.கள.56) என்று உம்மையிட்டுக் கூறுகின்றது.

புறப் பொருட் பாடற்றொகுப்பாகிய புறநானூற்றுப் பாடல்கட்குத் திணையும் துறையும் கூறப்பட்டுள்ளன. பதிற்றுப் பத்துப் பாடல்கட்குத் துறையும் வண்ணமும் தூக்கும் கூறப் பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் கருதினால் திணை முதலிய உறுப்புகள் பண்டு அகப்பொருள் புறப்பொருள் பாடல்கட்கெல்லாம் கொள்ளப்பட்டு வந்தமை புலனாம்.

அம்மை முதலியன

மாத்திரை முதலான யாப்பியல்வகை உறுப்புக்களால் செய்யுள்களைச் செய்துகொண்டால் அச் செய்யுளின் தனிப்பண்பு எவ்வெவ்வாறு அமையும் என்பதைக் கூறவந்ததே அம்மை முதலிய எட்டுமாம். இளம்பூரணரும் யாப்பருங்கல விருத்தி யாசிரியரும் காரிகை உரையாசிரியரும் அம்மை முதலிய பண்பு தனிப்பாடலுக்கே உரிய தென்பர். பேராசிரியர் முதலியோர் பெரும்பாலும் தொடர்நிலைப் பாடலுக்கே என்பர்.

பிற்கால யாப்பிலக்கண நூலார் இவற்றை உறுப்பென்று கூறித் தனித்தனி எடுத்து விளக்காமல் ஒழிபியலில் வனப்பென்று கூறியொழிந்தனர். உரைகாரர் யாப்புக்கால் யாப்பு வனப்பு என்று பொதுவாகக் கூறியுள்ளனர்.

என் கருத்து

தொல்காப்பியர் செய்யுள் இயலில் செய்யுளுறுப்பின் இலக்கணங்களைக் கூறி முடித்தவுடன் ஈற்றில் தொகுத்துணர்த்தும் நூற்பாவைக் கூறும் வழக்கமுடையவ ரென்பது "தூக்கியல் வகையே ஆங்கென மொழிப" (83) என்பனபோன்ற நூற்பாக்களால் தெரிகிறது.

இத்தகைய நூற்பாக்கள் யாப்பியல் உறுப்பு இருபத்தாறுக்கும் இல்லை. தூக்கு (செய்.83) தொடைநிலை (99) அளவியல் (156, 176) கைகோள் (180) வண்ணம் (226) என்னும் ஐந்திற்கே உள்ளன. ஏனைய உறுப்புகட்கும் இவற்றை ஒத்த நூற்பாக்கள் இருந்து சிதைந்துபோயிருக்க வேண்டும்.

பா அதிகாரத்தில் வெண்பாவிற்கும் கலிப்பாவிற்கும் சிறப்பிலக்கண நூற்பாக்கள் உள்ளன; ஆசிரியப் பாவிற்கும் வஞ்சிப் பாவிற்கும் இல்லை என்பது, "நான்கு பாவினும் வெண்பாவும் கலிப்பாவும் முன் எடுத்து ஓதுகின்றா ராதலானும், ஆசிரியப் பாவும் வஞ்சிப்பாவும் இத்துணையும் ஓதிய இலக்கணத்தான் முடித்தலானும்" என்று (செய்.113) இளம்பூரணர் எழுதுவதால் தெரிகிறது. **இச் சிறப்பிலக்கண நூற்பாக்களும் இருந்து சிதைந்திருக்கவேண்டும்.**

இவற்றையெல்லாங் கருதினால் இறையனார் களவியல் எழுதற்குச் சிறிது காலத்திற்குமுன் தொல்காப்பியப் பொருளதிகாரப் பயிற்சி குறையத் தொடங்கிப் பின்னர் சிதைவுற்றுக் கிடைத்த ஓர் சுவடியிலிருந்து செப்பஞ் செய்யப்பெற்று வழங்கத் தொடங்கியதே இப்பொழுதுள்ள பொருளதிகாரச் சுவடி என்பது தெரிகின்றது.

ஒரு நூற்பாவின் வடிவம்

"கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை யென்றிவை
தொகைநிலை மரபின் அடியில வென்ப
முடிபொரு ளில்லா தடியள விலவே"

(செய். 153)

என்னும் நூற்பா, இளம்பூரணர் உரைப்படி மேலே உள்ளவாறு நான்கடி நூற்பாவாகவே இருத்தல் வேண்டும். அவ்வாறில் லாமல் பேராசிரியர் நச்சினார்க்கினியர் உரைப் பிரதியில் இருப்பது போலவே இளம்பூரணர் உரையிலும் மூன்றடி நூற்பாவாக அது உள்ளது. யா. க. விருத்தியுரை (கழ.பக்.132), இளம்பூரணர் உரை (செய். 153) இவற்றின் துணை கொண்டு மேற்கண்டவாறு அமைத்துக் கொண்டேன்.

பாட வேறுபாடு

செய்யுளியல் முதல் நூற்பாவுள் ஐந்தாம் அடியினை "திணையே கைகோள் **பொருள்வகை யெனாஅ**" என்ற பாடம் உடையதாக வ.உ.சி. பதிப்பும் கழகப் பதிப்பும் பதிப்பித் துள்ளன.

ஆனால், தொல்காப்பியர் இவற்றைச் சிறப்புச் சூத்திரங் களால் பின்னர்க் கூறும்பொழுது கைகோளின் பின் கூற்றுவகை யினையே கூறுதலானும், பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அவ்வாறே பாடங்கொண்டிருத்தலானும் "திணையே கைகோள் **கூற்றுவகை யெனாஅ**" என்றே நானும் பாடங்கொண்டேன்.

மேற்படி நூற்பாவில் பத்தாவது அடியின் பாடம் வ.உ.சி. பதிப்பில் "ஆறுதலை யிட்ட **வைந்நா லைந்தும்**" என்று உள்ளது. இப்பாடப்படி "வைந்நா லைந்தும்" என்றாலும், "ஐந்நா லைந்தும்" என்றாலும் பொருள் பொருந்துமா றில்லை. அதனால் "வைந்நா லைந்து" என்பதில் இருசுழிக்கொம்பு இரு சுழி னகரமாக இருக்கவேண்டும் என்று உய்த்துணர்ந்து "**ஆறுதலை யிட்டன வந்நா லைந்தும்**" எனப்பாடங் கொண்டேன்.

இச்செய்யுளியலில் நேரசை நிரையசைகளைக் கூறும் நூற்பா,

> "குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்
> ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
> நேரும் நிரையும் என்றிசிற் பெயரே".

என்ற பாடத்துடன் இளம்பூரணர் முதலான மூவர் உரைப்பதிப்

பிலும் காணப்படுகிறது. இந்நூற்பாவின் ஈற்றிலுள்ள 'என்றிசின்' என்னும் சொல் 'நுவன்றிசின்' என்றாற் போலத் தன்மை ஒருமை வினை முற்றாகும். என்றேன் என்று பொருள் படும்.

தொல்காப்பியர் என்ப, என்மனார், மொழிப, மொழிமனார் என்னும் படர்க்கைச் சொற்களைத் தந்து புலவர் கூற்றாகவே இலக்கண விதிகளைக் கூறிச் செல்பவராதலாலும், இதன் பின்னர் நேர்பு நிரைபு அசைகளைக் கூறும் நூற்பாவும்,

"இருவகை உகரமொ டியைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் ஆகும் என்ப"

எனப் புலவர் கூற்றாகவே இருத்தலானும் அந்நூற்பாவிற்கு வேறு பாடம் இருக்கவேண்டும் என்று கருதி எல்லாப் பிரதி களையும் நோக்கினேன். நோக்கிய பொழுது **தொன்னூல் விளக் கத்தில் மட்டும், "நேரும் நிரையும் என்றிசி னோரே'** எனப் படர்க் கைப் பாட மிருக்கக் கண்டேன். இதுவே பொருந்து மென்பது என் கருத்து.

மொழி சிதைந்தா? மொழி சிதைத்தா?

"தனிக்குறின் முதலசை மொழிசிதைந் தாகாது" (செய்.6) என்னும் நூற்பாவின் இளம்பூரணர் பாடம், மொழி சிதைந்து என்பதே. அவர் உரையும் மொழிசிதைந்து என்றே உள்ளது.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் மொழிசிதைந்து எனப் பாடங்கொண்டு அவ்வாறே உரை எழுதியுள்ளனர்.

இதனை ஒத்த எட்டாவது நூற்பா, "முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ" எனப் பாடம் ஓதப்பட்டு "முற்றியலுகரமும் மொழிசிதைந்து நேர்பு நிரைபு அசையெனக் காட்டப்படாது" என வேறுபட எழுதப்பட்டுள்ளது. எனவே எட்டாவது நூற்பாவிற்கு, முன் நூற்பாவின்படியும், இந்நூற்பா உரைப்படியும் "மொழிசிதைந்து கொளாஅ" என்று பாடங் கொள்வதே பொருந்துமென்று கருதுகிறேன். மேற்காட்டிய வற்றைப் போன்ற பாட வேறுபாடுகள் ஆங்காங்கே குறிக்கப் பட்டுள்ளன.

உரையாசிரியர் தம் மாறுபட்ட கருத்து

நூலாசிரியர் கருத்து எதுவாக இருக்கும் என்பதைத் தெரிந்து உரை எழுதும் வழக்கத்தைச் சில இடத்தில் உரையாசிரியர்கள் விட்டு விட்டனர். எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியர் வெண்பாவைக் கூறும் பொழுது, ''நெடுவெண் பாட்டும் குறுவெண் பாட்டும் கைக்கிளையும் பரிபாடலும் அங்கதமும் செய்யுளும் என்ற ஆறும் வெண்பா யாப்பின'' (செய்.114) என்றனர்.

மேற்கூறியவற்றுள் பொருளானும் இனத்தானும் வேறுபடுக்கப்படாமல், அடியால் வேறுபடுக்கப்படுவன குறுவெண் பாட்டும் நெடுவெண்பாட்டும் செய்யுள் வெண்பாட்டும் என மூன்றாம்.

இவை அடியால் வேறுபடுக்கப்படுவன ஆதலால் ஆசிரியர் அளவியலைக் கூறுமிடத்துக் குறுவெண் பாட்டளவு ஏழ்சீர் (இரண்டடி) என்றும், நெடுவெண்பாட்டளவு மூன்றடியிலிருந்து பன்னிரண்டடிவரை என்றும் (செய்.151) செய்யுள் வெண் பாட்டளவு பன்னிரண்டடிக்குமேல் பொருள் முடியுங்காறும் வேண்டிய அடி பெற்றுவரும் (செய்.153) என்றும் கூறியுள்ளனர்.

ஆனால், இளம்பூரணர் முதலியோர் அளவியல் கூறும் விதியைக் கருத்திற் கொள்ளாமல் பிற்கால யாப்பிலக்கண நூல்களைக் கருத்திற்கொண்டு, ''குறுவெண் பாட்டாவது இரண்டடியானும் மூன்றடியானும் வரும் என்றும், சமனிலை வெண்பா நான்கடியால் வரும் என்றும், பஃறொடை வெண்பா ஐந்தடி முதற் பன்னிரண்டடி காறும் வரும் என்றும் கூறிப் பன்னிரண்டடிக்குமேல் வரும் செய்யுள் வெண்பாட்டைக் கொள்ளாது விட்டனர்.

இவற்றுள் சிந்தியல் வெண்பா சமனிலை வெண்பா என்பனவற்றைத் தொல்காப்பியர் பிரித்துணர்த்தவில்லை. இவையெல்லாம் தொல்காப்பியர்க்கு நெடுவெண்பாட்டுள் அடங்கும்.

உரையாசிரியர்கள் இவ்வாறு வேறுபடுவதால், நூலாசிரியர் கருத்து உணர முடியாமற் போகின்றது.

தொல்காப்பியர் பாக்களின் ஈற்றுறுப்பைப் பொதுவாகச் செய்யுளியல் 65ஆம் நூற்பாவிலிருந்து 73ஆம் நூற்பாவரை கூறியுள்ளனர். பின், பரிபாடல் சுரிதகத்தையும் (செய். 117), முதனிலை ஒத்தாழிசைக்கலியும் அதன் இழிபாகிய கொச்சகக் கலியும் போக்கியல் வைப்பையும் (செய். 132, 148), தெய்வத்தை முன்னிலைப்படுத்திப் பரவும் வண்ணகமும் கொச்சக ஒரு போகும் அம்போதரங்க ஒருபோகும் அடக்கியல் வாரத்தையும் ஈற்றுறுப்பாகப் பெற்று வரும் என்று (செய். 138, 143, 146) சிறப்பிலக்கணமாக ஆசிரியர் பிரித்துப் பிரித்துக் கூறியிருக்கவும், பிற்கால இலக்கண விதியை மனத்திற்கொண்ட இளம்பூரணர் முதலான உரையாசிரிய ரெல்லோரும் சுரிதகமும் போக்கியல் வைப்பும், அடக்கியல் வாரமும் ஒன்றென்றே கருதிவிட்டனர்.

மேற்கூறியவற்றைப் போலப் பல குழப்பங்கள் செய்யுளியல் உரையில் உள்ளன. இக் குழப்பங்களையெல்லாம் களைந்து விட்டுத் தொல்காப்பியரின் கருத்தை மட்டும் உணர்ந்து கொண் டால் அவ்வுணர்ச்சி, தொல்காப்பியர் காலத்து யாப்பு எப்படி இருந்ததென்பதைப் புலப்படுத்தி, அவர் வாழ்ந்த காலத்தை உணர்வதற்கும் வழிசெய்யும்.

உரையிலும் சிதைவு

செய்யுளியல் நூற்பாக்களில் பல சிதைந்திருக்க வேண்டும் என்று முன்னர்க் கூறினேன். அதனைப் போலவே இளம் பூரணர் உரையும் சிதைந்து பிறழ்ந்து காணப்படுகிறது.

செய்யுளியல் இரண்டாம் நூற்பா உரையில்:—

"குற்றிய லிகரமாவது இவ்வுகரம் (குற்றியலுகரம்) திரிந்து, மகரம் ஊர்ந்து, மகரமோ டியைந்து வரும். நாகியாது உகரந் திரிந்தது; கேண்மியா மகர மூர்ந்தது" என்று வ. உ. சி. பதிப் பும், கழகப்பதிப்பும் கூறுகின்றன.

இப்பகுதியைப் படித்துப் பார்த்தபொழுது "குற்றிய லிகர மாவது இவ்வுகரந் திரிந்தும் மகரம் ஊர்ந்தும் யகரமோ டியைந்து வரும்" என்றிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந் தேன். இங்கே காட்டப்பட்ட உதாரணம் இரண்டும் யகரமோ

டியைதற்குப் பொருந்தும். ஆனால் உகரந் திரிதற்கு நாகியாது என்பதும், மகரம் ஊர்தற்குக் கேண்மியா என்பதும் பொருந்தும். ஆனால்,

> ''யகரம் வரும்வழி இகரம் குறுகும்
> உகரக் கிளவி துவரத் தோன்றாது''
>
> (எழுத்.குற்.5)

என்னும் நூற்பாவிற்கு ''யகர முதன்மொழி வருமிடத்து நிலை மொழி உகரம் (குற்றியலுகரம்) முற்றத் தோன்றாது; ஆண்டு ஓர் இகரம் வந்து குறுகும்'' என்று இளம்பூரணர் உரை எழுது வதால், அவர் ''குற்றியலுகரம் திரியாமல் சிறிது நிற்க, ஓர் இகரம் தோன்றிநின்று குறுகும்'' என்னும் கொள்கையினர் ஆவார் என்பது தெரிகின்றது. ஏடு எழுதியவர் ''குற்றியலுகரம் யகரமுதன் மொழி வந்தால் திரியும்'' என்று கூறும் பிறர் கருத்தை வைத்துக்கொண்டு 'இவ்வுகரந் திரிந்தும்' எனப் பிறழ எழுதினர் போலும்.

> ''ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்'' (செய்.7)

என்னும் நூற்பா அசைக்குரியதோர் மரபினைக் கூறவந்ததாக இளம்பூரணர் கருதுகின்றார். இந்நூற்பாவின் உரை சிதைந் துள்ளது. ஈற்றில் உதாரணத்தை எடுத்துக்காட்டி இதனுட் **குற்றியலுகரம் அலகுபெறாதவாறு** காண்க என்று பிழையாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இந்நூற்பா குற்றியலிகரம் பற்றிய தாதலால், **குற்றியலிகரம் அலகு பெறாதவாறு** காண்க என்றே இருத்தல் வேண்டும். உதாரணத்தில் நான்காவது அடி ''முயற் கோ டுண்டெனக் கேட்டது தெளிதல்'' என்ற பாடத்துடன் மணிமேகலையில் (30-54) வருகின்றது. இப்பாடமே பொருட் பொருத்தமுமாம். ஆனால், இங்கே இவ்வடி 'கண்டது தெளி தல்' என்ற பாடத்துடன் உள்ளது.

இடைச்செருகல்

தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரையில் நச்சினார்க்கினியர் உரை இடைச்செருகலாக வந்துள்ளது. சொல்லதிகார இளம்பூரணர் உரையில் சேனாவரையர் உரை

இடைச்செருகலாக வந்துள்ளது. இச்செய்யுளியல் உரையில் பேராசிரியர் உரை இடைச்செருகலாக வந்திருக்கிறது. இதனை என் குறிப்பில் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளேன்.

எனக்குக் கிடைத்த எழுத்ததிகார இளம்பூரணர் உரைச் சுவடி இரண்டில் ஒன்று நல்ல சுவடியாகும். அதனால் எனக்கு நல்ல பாடங்கள் கிடைத்தன. அதனைப் போல ஏனைய அதி காரங்கட்கும் சுவடிகள் கிடைத்தால் நல்ல பாடங்களைக் கண்டு பிடிக்கலாம்.

பிழை, சிதைவு, இடைச்செருகல் என்னும் இவற்றால் இளம்பூரணர் உரை குழம்பியுள்ளது என்பதை மேலே எடுத்துக் காட்டினேன். எனக்குத் தெரிந்தவரையில் அவற்றைச் செப்பஞ் செய்துள்ளேன். வேண்டும் விளக்கங்களையும் எழுதிச் சேர்த் துள்ளேன். **இது இப்பொழுது தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடாக வருகின்றது.**

நன்றியுரை

சிறந்த தமிழ்த்தொண்டினைச் செய்யக் கருதிய **நம் தமிழக அரசு**, எந்தவகையான தொண்டு நிலைத்து நின்று பயன் தரும் என்பதை நன்கு எண்ணித் துணிந்த துணிவினாலே தஞ்சாவூரில் தமிழ்ப்பல்கலைக் கழகம் தோன்றியுள்ளது. இது தமிழுலகத் திற்குச் செய்த மாபெருந் தொண்டாகும். இதனை எண்ணும் பொழுதெல்லாம் என் உள்ளம் உவக்கும்; மெய் சிலிர்க்கும். இவ்வாறு செயற்கருஞ்செயல் பல புரிந்துவரும் **தமிழக அரசினை முதற்கண் வாயார வாழ்த்தி என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.**

எங்கள் மாண்புமிகு **துணைவேந்தர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள்**, தமிழக அரசு தோற்றுவித்த இப்பல்கலைக் கழகத்தில், தன் தூய உணர்வினையே அடியாக வைத்துச் சிறந்த பல செயல்களைச் செய்துவருகின்றார்கள். அவர்களிடம் 8-3-1982 இல் இளம்பூரணர் உரையினை ஆராய்ந்து பதிப்பிக்க ஆணை கேட்டேன். அவர்கள், ''**செய்க. ஆனால், பதிப்புமுறை மிகச் சிறப்பாக இருக்க வேண்டும்; இல்லையெனில், நாம் குறைக்கு**

ஆளாவோம். ஏடு, கையெழுத்துப் பிரதிகளை முதலில் தொல்காப்பிய முழுமைக்கும் திரட்டுக; பாடபேதம் பார்க்க; மூலபாடம் நிர்ணயிக்க'' என்று அறிவுரை கூறி ஆணை தந்தார்கள். அவர்களை வாழ்த்தி என் ஆழ்ந்த நன்றியை அவர்கட்கு அறிவித்துக் கொள்ளுகின் றேன்.

எங்கள் புலத்தலைவர் உயர்திரு கே. எம். வேங்கடராமையா எம்.ஏ., அவர்கள் எங்கள் துறைத்தொண்டில் செய்யவேண்டிய வற்றைக் கருதி எங்கட்கு அறிவுரை வழங்குவார்கள். அவர் கட்கு என் நன்றி உரியது.

மற்றும், எங்கள் துறைத்தலைவராய் விளங்கும் உயர்திரு மு. சண்முகம் பிள்ளையவர்கள் என் ஆராய்ச்சிக்கு உறுதுணையா யிருந்து அவ்வப்பொழுது நிகழும் ஐயங்களைப் போக்கியதோடல்லாமல், இப்பதிப்பு எல்லாவகையாலும் நன்றாய் வருதற்குரிய நல்ல உதவி களைச் செய்தருளினார்கள். அவர்கட்கும் என் அன்பு நிறைந்த நன்றியை அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

என் செய்யுளியல் ஆய்வை நன்கு ஆராய்ந்து பல திருத்தங் களை அறிவித்தருளிய உயர்திரு டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர் கட்கும், உயர்திரு டாக்டர் தே. ஆண்டியப்பபிள்ளை அவர்கட்கும் அகங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

செய்யுளியல் அகராதித் தொகுப்பில் உதவிபுரிந்த திரு சி. இலட்சுமணன் எம்.ஏ., அவர்கட்கும், என் கையெழுத்துப் பிரதியை நன்கு தட்டச்சுச் செய்த திரு கு.ச. மகாலிங்கத்திற்கும் பணியாளர் திரு செ. தனபாலனுக்கும் என் நன்றி உரியது.

— திரு. அடிகளாசிரியர்

மேற்கோள் நூல் சுருக்க விளக்கம்

அக.
அகநா. } — அகநானூறு

அகத். — அகத்திணை இயல்

ஆய்ச்சி. — ஆய்ச்சியர் குரவை

இடை. — இடையியல்

இல. — இலக்கண விளக்கம்

இல. தொகை. — இலக்கணத் தொகை

இல. விள.
இலக். விள. } — இலக்கண விளக்கம்

இல. கொத்து — இலக்கணக் கொத்து

இ-ள் — இதன் பொருள்

இளம். — இளம்பூரணர்

இறை. அக. — இறையனார் அகப்பொருள்

இறை. கள. — இறையனார் களவியல்

ஊர் — ஊர்தேடு படலம்

எச். — எச்சவியல்

எழு. — எழுத்ததிகாரம்

எழுத். — எழுத்ததிகாரம்

என்-னின் — என் நுதலிற்றோ எனின்

ஐங். — ஐங்குறுநூறு

கடலாடு. — கடலாடு காதை

கடவுள். — கடவுள் வாழ்த்து

கம்பரா. — கம்பராமாயணம்

கல்யாண. — கல்யாணச் சருக்கம்

கலி.
கலித். } — கலித் தொகை

கழ. — கழகப் பதிப்பு

கழ. பக் — கழகப் பதிப்புப் பக்கம்

கற். — கற்பியல்

காஞ்சி. — காஞ்சிப்புராணம்

காரிகை. — யாப்பருங்கலக் காரிகை

கானல். — கானல்வரி

கிள. — கிளவியாக்கம்

குறள்.
திருக்கு. } — திருக்குறள்

குறுந். — குறுந்தொகை

கைக். — கைக்கிளை

சிலப். — சிலப்பதிகாரம்

சி. வை. தா. — சி. வை. தாமோதரம் பிள்ளை

சீயவதை. — சீயவதைச் சருக்கம்

சீவகசிந். — சீவக சிந்தாமணி

சுந்தர. — சுந்தர காண்டம்

சு. வே. — சுவடி வேறுபாடு

செய். — செய்யுளியல்

சொல். — சொல்லதிகாரம்

த. ச. பதி. — தமிழ்ச்சங்கப் பதிப்பு

திருமுரு. — திருமுருகாற்றுப்படை

தொல். — தொல்காப்பியம்

தொன். — தொன்னூல்

நகர. — நகரச்சருக்கம்

நச். — நச்சினார்க்கினியர்

நச்சர் உரை — நச்சினார்க்கினியர் உரை

நம்பி. அகம். — நம்பி அகப்பொருள்

நற். — நற்றிணை

நன். — நன்னூல்

நாலடி. — நாலடியார்

நூ. பா. வே. — நூற்பா வேறுபாடு

நூற். — நூற்பா

நூன். — நூன் மரபு

நெடுநல். — நெடுநல் வாடை

பக். — பக்கம்

பட்டி.
பட்டினப். } பட்டினப் பாலை

பதி. — பதிப்பு

பதிற். — பதிற்றுப்பத்து

பாயி. — பாயிரம்

பா. வே. — பாடவேறுபாடு

புற.
புறத். } புறத்திணை இயல்

புறநா. — புறநானூறு

புற. வெண். — புறப்பொருள் வெண்பாமாலை

பெரும்பா. — பெரும்பாணாற்றுப்படை

பேரா. — பேராசிரியர்

பொருள். — பொருளதிகாரம்

மணிமே. — மணிமேகலை

மதுரை. — மதுரைக் காஞ்சி

மலைபடு. — மலைபடுகடாம்

மாற. — மாறனலங்காரம்

முத். — முத்தொள்ளாயிரம்

முத்துவீ. — முத்துவீரியம்

மெய்ப். — மெய்ப்பாட்டியல்

யா. ஒழி. — யாப்பதிகார ஒழிபியல்

யா. க. — யாப்பருங்கலம்

யா. க. வி. — யாப்பருங்கல விருத்தி

யா. க. விருத்தியுரை — யாப்பருங்கல விருத்தியுரை

யா. காரி. — யாப்பருங்கலக் காரிகை

யா. வி. — யாப்பருங்கல விருத்தி

யாழ். பாயிர. — யாழ்நூல் பாயிரம்

ரா. ரா. — ரா. ராகவையங்கார்

வ. உ. சி. — வ. உ. சிதம்பரம் பிள்ளை

வாகை. — வாகைத்திணை

வீரசோ. — வீரசோழியம்

வீரசோ. கா.
வீரசோழி. காரி. } வீரசோழியம் காரிகை

வேற். — வேற்றுமை இயல்

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

செய்யுளியல்

இளம்பூரணர் உரை

செய்யுள் உறுப்பு

1. மாத்திரை யெழுத்திய லசைவகை யெனாஅ
யாத்த சீரே யடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை யெனாஅ
நோக்கே பாவே யளவிய லெனாஅ
திணையே கைகோள் கூற்றுவகை[1] யெனாஅ
கேட்போர் களனே காலவகை யெனாஅ
பயனே மெய்ப்பா டெச்சவகை யெனாஅ
முன்னம் பொருளே துறைவகை யெனாஅ
மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையின்
ஆறுதலை யிட்டன வந்நா[2] லைந்தும்
அம்மை யழகு தொன்மை தோலே
விருந்தே யியைபே புலனே யிழைபெனப்[3]
பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.

— என்பது சூத்திரம்

நூற்பா பாட வேறுபாடு

1. 'பொருள்வகை யெனாஅ' (வ.உ.சி.)
'கூற்றிவை யெனாஅ' (நச்.) கூறும் பாடம்.

2. 'ஆறுதலை யிட்ட வைந்நா லைந்தும், (வ.உ.சி.)
'ஆறுதலை யிட்ட வந்நா லைந்தும், (பேரா; நச்.)
வ.உ.சி பாடம் பொருள் தருமாறில்லை. அதனால் (வை) என்பதை 'ன, வ' என்று கருதி, 'ஆறுதலையிட்டன வந்நாலைந்தும்' என்று பாடங்கொள்க.

3. 'யிழைபெ னாஅப்,(பேரா; நச்.)

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், செய்யுளியல் என்னும் பெயர்த்து. செய்யுளிலக்கண முணர்த்தினமையாற் பெற்ற பெயர். மேலுணர்த்தப்பட்ட பொருண்மை யெல்லா வற்றிற்கும் இஃதிடமாதலின் அவற்றின்பின் கூறப்பட்டது.

இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், செய்யுள் உறுப்பெல்லாந் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

மாத்திரை முதலாச் சொல்லப்பட்ட முப்பத்துநான்கும் செய்யுட்கு உறுப்பென்றவாறு.

பிற்கூறிய எட்டு மேற்கூறிய இருபத்தாறினோடும் ஒரு நிகரன வன்மையின், வேறு தொகை கொடுக்கப்பட்டது. அவை யாமாறு தத்தஞ் சூத்திரத்துட் காட்டுதும். (க)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. நூற்பாவின் பொழிப்பு (ப. ஆ)

மாத்திரையும் எழுத்தியலும் அசைவகையும் யாத்த சீரும் அடியும் யாப்பும் மரபும் தூக்கும் தொடை வகையும் நோக்கும் பாவும் அளவியலும் திணையும் கைகோளும் கூற்றுவகையும் கேட்போரும் களனும் காலவகையும் பயனும் மெய்ப்பாடும் எச்சவகையும் முன்னமும் பொருளும் துறைவகையும் மாட்டும் வண்ணமும் ஆகிய யாப்பியல் வகை இருபத்தாறும் அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு எனக் கூறிய எட்டொடும் தொகுக்கப்பெற்று இம் முப்பத்து நான்கும் செய்யுள் உறுப்பென நல்லிசைப் புலவர் வகுத்து உரைத்தனர் என்றவாறு.

2. பேராசிரியர் உரை

"இக் கூறப்பட்ட முப்பத்து நான்கும் பேரிசைப்புலவர் செய்யப்படும் செய்யுட்கு உறுப்பாமென அவ்வாறு செய்தல் வன்மையாற் கூறினார் புலவர்" என்பது பேராசிரியர் பொழிப்பு.

அவர் தரும் விளக்கம்: **நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பெனக்**

கூறி வகுத்துரைத்தனர் என்று கூட்டிப் பொருள் உரையாமல், ''நல்லிசைப் புலவர் செய்யுள் என்பது இவ்வுறுப்பனைத்தும் குறையாமற் செய்யப்படுவன நல்லிசைப் புலவர் செய்யுஞ் செய்யுளெனப் படும் என்றவாறு''

''நல்லிசைப்புலவர் செய்யுள் எனவே, எழுநிலத்தெழுந்த செய்யுளுள்ளும் அடிவரையறை யுடையவற்றுக்கே இவ் விலக்கணம் என்பதூஉம், திணையே கைகோள் எனக் கூறும் உறுப்பு முதலாயின வெல்லாம் **ஏனை அறுவகைச்** செய்யுட்கும் உறுப்பாகா என்பதூஉம், அவை யொழிந்த உறுப்பினுள் ஏற் பன பெறுமாயினும் ஆண்டு வரையறையின்மையிற் கூறான் என்பதூஉம், அவை செய்தாரெல்லாம் அவற்றானே நல்லிசைப் புலவரெனப்படார் என்பதூஉம் பெற்றாம்''.

''இனி, நூலும் உரையும் செய்தார் நல்லிசையுடையர் என்பது அவற்றை நூலினான உரையினான என இதற்கு இடையின்றி வைத்தமையிற் பெறுதும்'' என்று கூறுகின்றார்.

3. உரைத் தொடக்கம்

செய்யுளியலுக்கு **இளம்பூரணர் உரை**, ''என்பது சூத்திரம் இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், செய்யுளியல் என்னும் பெயர்த்து. செய்யுளிலக்கணமுணர்த்தினமையாற் பெற்ற பெயர்'' என்று தொடங்குகின்றது.

பேராசிரியர் பெரும்பாலும் இளம்பூரணர் கூறும் உரைக்கு மாறுபாடாகவே கூறும் வழக்கமுடையவராயிருந்தும் உரைத் தொடக்கத்தினை இளம்பூரணர் உரைத்தொடக்கம்போலவே அமைத்துக் கொண்டுள்ளார். அவர், ''என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், செய்யுளியல் என்னும் பெயர்த்து; செய்யுளிலக்கணம் உணர்த்தினமையான் அப்பெயர்த்தாயிற்று'' என்று கூறுகிறார். இவ்வுரையுள் இறுதித் தொடரொழிய ஏனைய தொடர்களெல்லாம் இளம் பூரணர் உரைப்படியே உள்ளன. **நச்சினார்க்கினியர்** உரைத் தொடக்கம் இவ்வாறில்லை.

4. முதல் நூற்பாத் தொடக்கத்தில் பேராசிரியர் தரும் விளக்கம்

''மேற்பாயிரத்துள், 'வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும்' ஆராய்வல் என்று புகுந்தமை யால், எழுத்தினும் சொல்லினும் வழக்கிற்குஞ் செய்யுட்கும் வேண்டுவன விராய்க் கூறிப் பொருளதிகாரத்துள்ளும் இது காறும் பெரும்பான்மையும் வழக்கிற்கு வேண்டுவனவே கூறி வந்தான், அப்பொருள்பற்றிச் செய்யுள் கூறுமாகலின் இவ்வதி காரத்துட் செய்யுளிலக்கணமெல்லாம் தொகுத்துக் கூறுகின்றது இவ்வோத்து என்பது. எனவே, முற்கூறிய எழுவகை யோத்தும் வழக்கிற்கும் செய்யுட்கும் பொது வென்பதும், இது செய்யுட்கே உரித்தென்பதும் பெற்றாம்''.

''மற்றிதனை யாப்பதிகாரம் என வேறு ஓர் அதிகாரம் ஆக்கி உரைப்பாரும் உளர். அங்ஙனம் கூறின் வழக்கதிகாரம் எனவும் வேறு வேண்டுமென மறுக்க. அல்லதூஉம் எழுத்தும் சொல்லும் பொருளுமென மூன்றற்கும் மூன்றதிகாரம் ஆக்கி, அதிகாரம் ஒன்றற்கு ஒன்பது ஓத்தாகத் தந்திரம் செய்ததனோடு மாறுகோளாம் இதனை வேறு அதிகாரம் என்பார்க்கு'' என்பர்.

(1) மாத்திரை வகையும் (2) எழுத்தியல் வகையும்

2. அவற்றுள்
மாத்திரை வகையு[1] மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தனவே[2] யென்மனார் புலவர்.

என்-னின், மேற் சொல்லப்பட்டவற்றுள் மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும் மேல் எழுத்ததிகாரத்துச் சொல்லப்பட்டன என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

ஈண்டு வேறுபாடில்லை என்றவாறு. அவையாவன:- குற்றெழுத்தொரு மாத்திரை (எழு-3); நெட்டெழுத்து இரண்டு

பா. வே.- 1. 'மாத்திரை யளவும்' -பேரா; நச்.
2. 'மேற்கிளந் தன்ன' -பேரா; நச்.

மாத்திரை (எழு-4); உயிரளபெடை மூன்று மாத்திரை (எழு-5,6); குற்றிய லிகரமும் குற்றிய லுகரமும் ஆய்தமும் மெய்யும் ஒரோவொன்று அரை மாத்திரை (எழு-12,11); ஒற்றள பெடை ஒருமாத்திரை (எழு-33); ஐகாரக் குறுக்கம் ஒருமாத்திரை (எழு செய்யுளியல் 57); மகரக் குறுக்கம் கான் மாத்திரை (எழு-13); ஏறிய உயிரி னளவே உயிர்மெய்க்களவு (எழு-17).

எழுத்தியலாவது உயிரெழுத்து, மெய்யெழுத்து, சார் பெழுத்தென மூவகைப்படும். உயிரெழுத்து குற்றெழுத்து, நெட்டெழுத்து, அளபெடையென மூவகைப்படும் மெய்யெழுத்து வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும். சார்பெழுத்து குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தமென மூவகைப்படும். மெய்யினுட் சிலவும் ஆய்தமும் அளபெடுக்கப் பெறும்.

குற்றெழுத்து அ, இ, உ, எ, ஒ (எழு-3) நெட்டெழுத்து ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ (எழு-4) அளபெடை ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ (எழு-6).

வல்லினம் க, ச, ட, த, ப, ற (எழு-19). மெல்லினம் ங, ஞ, ண, ந, ம, ன (எழு-20). இடையினம் ய, ர, ல, வ, ழ, ள (எழு-21.)

குற்றியலுகரமாவது நெட்டெழுத்தின் பின்னரும், மூன் றெழுத்து முன்னை (தொடர்மொழி) மொழியினும் வல் லெழுத்தையூர்ந்து வந்த உகரம். நாகு, நாக்கு; காசு, காச்சு; காடு, காட்டு; காது, காத்து; காபு, காப்பு; காறு, காற்று என இந் நிகரன.

குற்றியலிகரமாவது இவ்வுகரந் திரிந்தும், மகரம் ஊர்ந்தும் யகரமோ டியைந்து வரும். நாகி யாது, உகரந் திரிந்தது; கேண்மியா, மகரம் ஊர்ந்தது. பிறவு மன்ன.

ஆய்தமாவது குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடை வரும். அஃதாவது எஃகு என வரும்.

ஒற்றளபெடையாவது மெல்லினமும், வயலளவும், ஆய்தமும் அளபெடுக்கும். அவை மங்ங்கலம், மஞ்ஞ்சு எனவரும்.

இனி, உயிரும் மெய்யுங் கூடி உயிர்மெய்யெழுத்தாம். அவைககரமுதல்னெளகாரமீறாகிய இருநூற்றொருபத்தாறாம்.

இன்னும் ஐகாரக் குறுக்கமும், மகரக் குறுக்கமும் என்பவும் உள.

ஐகாரக் குறுக்கம் அளபெடையும் தனியுமல்லாத வழிக் குறுகும்.

மகரக் குறுக்கம் னகர வொற்றின் பின் வரும். புணர் மொழிக்கண் வகரத்தின் மேனின்ற மகரங் குறுகும்.

இவையெல்லாம் **எழுத்ததிகாரத்துட்** காண்க. (உ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. உரைத்திருத்தம்

வ. உ. சி. பதிப்பிலும் கழகப் பதிப்பிலும் உரையுள் ''குற்றிய லிகரமாவது இவ்வுகரந் திரிந்து மகர மூர்ந்து மகரமோடி யைந்து வரும்'' என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காட்டிய பகுதி ''குற்றியலிகரமாவது இவ்வுகரம் (குற்றியலுகரம்) திரிந்தும், மகரம் ஊர்ந்தும் யகரமோ டியைந்து வரும்'' என்றிருத்தல் வேண்டும். குற்றியலுகரம் திரிந்ததற்கு நாகியாதும், மகரம் ஊர்ந்ததற்குக் கேண்மியாவும் எடுத்துக் காட்டாம். இவ்விரண்டும் யகரமோடியைந்து வரும்.

ஒரு மாறுபாடு

தொல். குற்றியலுகரப் புணரியலில் ''யகரம் வரும் வழி'' (5) என்னும் நூற்பாவுரையில் **இளம்பூரணர்** ''யகர முதன் மொழி வருமிடத்து நிலைமொழி உகரம் (குற்றியலுகரம்) முற்றத் தோன்றாது; ஆண்டு ஓர் இகரம் வந்து குறுகும்'' என்று உரைப்பர்; **நச்சினார்க்கினியரும்** இவ்வாறே உரை கூறுவர்.

அங்கு உரை கூறியதற்கு மாறாக இங்கே **'இவ்வுகரந்**

திரிந்தும்' என்று கூறப்படும் மாறுபாடு, யாரால் புகுந்தது என்னுஞ் செய்தி கருதத்தக்கது.

2. இனி உயிரும் மெய்யும் கூடி உயிர்மெய்யெழுத்தாம். அவை ககர முதல் னகர ஈறாகிய இருநூற்றொருபத்தாறு என்பது, ககரவருக்கம் முதல் னகரவருக்கம் ஈறாக இருநூற்றுப் பதினாறு என்பதைச் சுட்டியுரைத்தவாறு. அதாவது ககர முதல் னௌகார ஈறாகிய எழுத்துக்களின் தொகையாம்.

3. நூற்பா நுவல்பொருள்

இளம்பூரணர் உரையுள் இந்நூற்பாவிற்கு நுதலியதுரைத்தல் கிடைக்கவில்லை.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் "இது நிறுத்த முறை யானே முதற்கணின்ற மாத்திரையும் எழுத்தியலும் உணர்த்து தல் நுதலிற்று" என்று எழுதியுள்ளனர்.

எழுத்தியல் வகை விளக்கம்

"இனி அவற்றுட் குறிலும் நெடிலும் குற்றுகரமும் அசைக் குறுப்பாம். மற்று, 'ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி' (செய்.3) என்பதனான், ஒற்றும் அசைக்குறுப்பாகாவோ வெனின், அச்சூத்திரத்தா னன்றே அவை (மெய்கள்) குறிலும் நெடிலும் அடுத்து வந்தும் வேறுபடாது நேர் நிரை யாதல் எய்தியது நோக்கி அவை (மெய்கள்) அசைக்குறுப்பாகா என்ற தென்க. மற்று, இடைநின்று நிரையாதலை விலக்காவோ வெனின், அன்னவோர் விதியுண்டாயினன்றே இவை இடை புகுந்து விலக்க வேண்டுவதென மறுக்க".

"நெடிலும், அளபெடை யிரண்டும், உயிரும், உயிர்மெய்யும், வல்லினமும்,மெல்லினமும், இடையினமும், ஐகாரக் குறுக்கமும், ஔகாரக் குறுக்கமு மெனப் பத்தும் தொடைக் குறுப்பாம்".

"குறிலும் நெடிலும் அளபெடை யிரண்டும் இனம் மூன்றும் ஆய்தமும் வண்ணத்திற்கு உறுப்பாம். இங்ஙனமே வேறுபட

வந்த பயன் நோக்கி எழுத்தினை இயற்றிக் கோடலின் எழுத்தியல் வகை என்றானென்பது'' என்பர் பேராசிரியர். (செய்.2)

(3) அசைவகை

3. குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையு [1]மென்றிசிற் பெயரே.

என்பது, நிறுத்த முறையானே அசையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்) குறிலும் நெடிலுங் குறிலிணையுங் குறினெடிலுந் தனியே வரினும் ஒற்றொடு வரினும், ஆராயுங் காலத்து நேரசையு நிரையசையுமா மென்றவாறு.

இதுவு மொரு நிரனிறை; முந்துற்ற நான்கு மொருபொருளாய்ப் பின் இரண்டாகி வரினும் முற்பட்டவையும் இரண்டாகப் பகுத்தலான்.

உதாரணம்

கோழி வேந்தன் என நான்கு நேரசையும்
வெறி சுறா நிறம் குரால் என நான்கு நிரையசையும். (கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

அசைகளைக் கூறும் முறை

1. **இளம்பூரணர்** இந் நூற்பா உரையில், ''இதுவும் ஒரு நிரல் நிறை; முந்துற்ற நான்கும் ஒரு பொருளாய்ப் பின் இரண்டாகி வரினும், முற்பட்டவையும் இரண்டாகப் பகுத்தலான்'' என்னும் சொற்றொடரால் தொல்காப்பியர் நேரசை நிரைகளைக் கூறியுள்ள முறையை விளக்குவர்.

2. **யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர்** மேற்கண்ட தொல்காப்பிய நூற்பாவைப் பின்பற்றி,

> குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
> நெறியே வரினும் நிரைந்தொற் றடுப்பினும் நேர்நிரை

பா. வே. 1. மென்றிசி னோரே - தொன்னூல் விளக்கம்.

யென்றறி'' (5) என்பர்.

3. காரிகையாசிரியரும் யாப்பருங்கல ஆசிரியரும் ஒருவ ரென்றே அறிஞர் கருதுகின்றனர். **யாப்பருங்கல ஆசிரியர்** நேரசை நிரையசைகளைக் காரிகை ஆசிரியர் கூறும் முறையில் மேலும் விளங்கும்படி

''நெடில்குறில் தனியாய் நின்றும் ஒற்றடுத்தும்
நடைபெறும் நேரசை நால்வகை யானே'' (6)

என்றும்,

''குறிலிணை குறினெடில் தனித்துமொற் றடுத்தும்
நெறிமையின் நான்காய் வரும்நிரை யசையே'' (8)

என்றும் கூறுகிறார்.

4. **வீரசோழியம்** ''குற்றெழுத்துத்தான், நெட்டெழுத்துத் தான் தனியே வரின் நேரசையாம். **இவையிற்றின் முன்பு ஒரு குற்றெழுத்துப் பெற்றுக்** குறிலிணையாயும் குறினெடியாயும் வரின் நிரையசையாம். நேரசையின் பின்பும் நிரையசையின் பின்பும் ஒற்றெழுத்து வரவும் பெறும்; வாராதொழியவும் பெறும்'' (யாப்பு - 1) என்று கூறுகிறது.

நேரசை இரண்டின் முன், தனிக்குற்றெழுத்து வரின், அத னோடு இணைந்தொலித்து இரண்டும் நிரையசை என்னும் ஓரசையாய்விடும் என்னும் உண்மையை வீரசோழியம் புலப் படுத்துகிறது.

5. ஆனால், நேரசை இரண்டின்முன் நெடில் வந்தால், தனித்தனி நேரசைகள் ஆகுதலன்றி, நிரையசையாகாதென்பதை

''நெடிலொடு நெடிலும் நெடிலொடு குறிலும்
இணையசை ஆகுதல் இல்லென மொழிப''

என்பர் காக்கைபாடினியார் (யா. வி. கழ. பக். 52).

மேற்கோளாட்சி

1. யாப்பருங்கலக் காரிகை உறுப்பியலில் 'குறிலே நெடிலே' என்னும் காரிகை (5) உரையுள்ளும்

2. யாப்பருங்கலம் அசையோத்தில் 'குறிலிணை' என்று தொடங்கும் நான்காம் நூற்பா உரையிலும்,

3. தொன்னூல் விளக்க யாப்பதிகாரத்தில் 'அசையே' என்று தொடங்கும் மூன்றாம் நூற்பாவுரையிலும், 'குறிலே நெடிலே' என்னும் இத் தொல்காப்பிய நூற்பா மேற்கோளாக வந்துள்ளது.

4. தனிமை என்னும் பொருளில் 'நேர்' என்னும் சொல் வருதற்கு 'நேரசை' என்ற சொல்லை மேற்கோளாகக் காட்டுவர் (யா. வி. 58 உரை).

4. இருவகை யுகரமோ[1] டியைந்தவை வரினே
நேர்பு நிரைபு மாகு மென்ப
குறிலிணை[2] யுகர மல்வழி யான.

இதுவும் அது.

மேற் சொல்லப்பட்ட இரண்டசையும் குற்றியலுகரமும் அல்லாத முற்றியலுகரமும் பொருந்தி வரின், நேர்பசையும், நிரைபசையும் எனப் பெயராகும். அவ்வழிக் குற்றெழுத்தொடு பொருந்தின உகர மல்லாத விடத் தென்றவாறு.

உதாரணம்

காது, காற்று, கன்று; காவு, சார்வு, கல்லு
என்பன நேர்பசை.

வரகு அரக்கு, மலாடு, பனாட்டு; கதவு, புணர்வு, உருமு, வினாவு
என்பன நிரைபசை.

பா. வே. - 1. ''யுகர மொ, நச்.
2. 'குறிலிணை என்று தொடங்கும் அடியைப்' பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தனி நூற்பாவாகக் கொண்டனர்.

தொகுத்து நோக்குழி நேர், நிரை, நேர்பு, நிரைபு என்பன தாமே உதாரணமாம்.

அஃதேல் நேர்பசை நிரைபசையெனக் **காக்கைபாடினியார்** முதலாகிய ஒருசாராசிரியர் கொண்டிலரா லெனின்; அவர் அதனை இரண்டசை யாக்கி உரைத்தா ராயினும், அதனை முடிய நிறுத்தராது, வெண்பா வீற்றின்கண் வந்த குற்றுகர நேரீற் றியற்சீரைத் தேமா, புளிமா என்னும் உதாரணத்தால் ஓசை யூட்டிற் செப்பலோசை குன்று மென்றஞ்சிக் காசு, பிறப்பு என உகர வீற்றான் உதாரணங் காட்டினமை யானும், சீருந் தளையுங் கெடுவழிக் குற்றிய லுகரம் அலகுபெறா தென்றமை யானும், வெண்பா வீற்றினும் முற்றுகரமும் சிறுபான்மை வருமென உடன்பட்டமையானும், நேர்பசை, நிரைபசை யென்று வருதல் வலியுடைத் தென்று கொள்க.

அவை செய்யு ளீற்றின்கண் வருமாறு:—

''பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்'' —(திருக்குறள்-10.)

''வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில'' (,, 4.)

''இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு'' (,, 5.)

''தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.'' (,, 7.)

என வரும். பிறவும் அன்ன.

அலகிடுங்கால் நேரசை ஓரலகு, நிரையசை இரண்டலகு, நேர்பசை மூன்றலகு, நிரைபசை நான்கலகு பெறும். (சு)

பதிப்பாசிரியர் விளக்கம்

அசைவிளக்கம்

மூன்றாம் நூற்பா நான்காம் நூற்பாக்களின் கருத்தை யாப்பருங்கலவிருத்தி 95 ஆம் நூற்பா உரையுள் காணலாம்.

அவ்வுரை வருமாறு:—

"எழுத்தினால் ஆக்கப்படும் **அசை நான்கு வகைப்படும்.** நேரசையும், நிரையசையும், நேர்பு அசையும், நிரைபு அசையும் என. என்னை?

"நேரே நிரையே நேர்பே நிரைபென
ஈரிரண் டென்ப அசையின் பெயரே."

என்றாராகலின்.

அவற்றுள், **நேரசை நான்கு வகைப்படும்;** தனி நெடிலும், தனிக் குறிலும், நெட்டொற்றும், குற்றொற்றுமென.

என்னை?

'தனிநெடில் தனிக்குறில் ஒற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நேரசை யென்ப.'

என்பவாகலின். அதற்குதாரணம்:—

கா ரி சேந் தன்

என வரும்.

நிரையசை நான்கு வகைப்படும்; குறில் இணையும், குறில் நெடிலும், குறிலிணையொற்றும், குறில்நெடில் ஒற்றுமென.

என்னை?

"குறிவிணை குறினெடி லொற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நிரையசை யென்ப"

என்பவாகலின். அதற்குதாரணம்:—

பல, பலா, பலம், கிழான்

என வரும்.

நேர்பசை நிரைபசை ஆமாறு சொல்லுதும். நேர் முதலாகிய குற்றியலுகரம் நேர்பு அசையாம்; நிரை முதலாகிய குற்றிய லுகரம் நிரைபு அசையாம்.

என்னை?

"நேர்முத லாகிய குற்றிய லுகரம்
நேர்பென மொழிப நிரைமுதல் நிரைபே"

என்பவாகலின்.

நேர்பசைக் குதாரணம்:—
கோடு, தோன்று, குன்று
என வரும்

நிரைபசைக் குதாரணம்:—
மரபு, மயங்கு, மலாடு, மலாட்டு
என வரும்.

''முற்றிய லுகரம் வரினுமவை பெயரே''

முற்றியலுகரமாவது மெல்லெழுத்தும் இடையெழுத்தும் சார்ந்து வரும் உகரம்.

முற்றியலுகர நேர்பசைக்குதாரணம்:-
காணு, வேணு, மின்னு மண்ணு
என வரும்.

முற்றியலுகர நிரைபசைக்குதாரணம்:-
உருமு, அரவு, விரவு, செலவு
என வரும்.

(யா. வி. கழ. 443, 444, 445.)

மேற்கூறிய நான்கு அசைகளுக்கும் இலக்கணம் உணர்த்தும் காரிகை யொன்றினைக் கீழே காண்க.

''குறிலும் நெடிலும் குறிலிணை தானும் குறினெடிலும்
நெறிநின் றுயிர்ப்பினும் நேர்ந்தொற் றடுப்பினும் நேர்நிரையென்
றறிமுந்தை நேர்நிரை வைந்தீ ருகர மடுத்து வந்தால்
நெறிநுண் கருங்குழல் நேர்பும் நிரைபுமொற் றோடுமற்றே.''

(யா. வி. கழ. 445.)

பதிப்பாசிரியர் விளக்கம்

நூற்பா நுதலியது

இளம்பூரணர் இந்நூற்பா நுதலியதை ''இதுவும் அது''

என்றனர் (அசையாமாறு உணர்த்துதல்).

ஆனால் **பேராசிரியர்** ''இது சொல்லாத அசைக் கூறும் சொல்லுகின்றது'' என்பர்.

நச்சினார்க்கினியர் ''இது கூறாத அசைக் கூறும் கூறுகின்றது'' என்பர்,

இவ்வாறு இவ்விருவரும் கூறுதலின் கருத்து, பிறர் சொல்லாத, பிறர் கூறாத நேர்பு நிரைபு அசைகள் என்பது போலும்.

1. ஒருசாராசிரியர் நான்கசையை இரண்டசையாக்கிய முறை

'நேரசை யென்றா' (யா-க-5) என்னும் நூற்பா உரையில் ''நேரே நிரையே நேர்பே நிரைபென, ஈரிரண் டென்ப அசை யின் பெயரே'' என விரித்து உரைத்தாராயினும் தொகுத்து நோக்குங்கால் அசை, நேரசையும் நிரையசையும் என அவ் விரண்டாய் அடங்கும். எவ்வாறெனின்? **நேர்நேராய்** நேர்பு அடங்கும்; **நிரைநேராய்** நிரைபு அடங்கும் என்பர் (யா. வி. கழ. 47).

2. இயைந்தவை வரினே என்றதற்கு

நூற்பாவில் 'இயைந்தவை வரினே' என்ற தொடருக்கு ''ஒரு சொல் விழுக்காடுபட இயைந்துவரின் என்று பொருள் கூறி, இயைந்தென்றான், இருவகை உகரமும் இருபிளவு படாது ஒன்றாகி வரல் வேண்டும்; அங்ஙனம் அசையாங்கால் என்றதற்கு'' என்று சிறப்புரையும் எழுதினார் **பேராசிரியர்.**

3. அலகிடும் முறை சரியா

வடமொழியாளர் லகு, குரு என்ற இரண்டினை வகுத்து, அவற்றால் கணம் பதங்களை அமைத்துக் கொண்டு விருத்தங் களைப் படைப்பர். அவர் குறில் தனித்து வரின் லகு வென்றும், அக்குறில் ஒற்றடுப்பினும், நெடில் தனித்து வரினும், ஒற்றடுத்து வரினும் இம்மூன்றும் குரு என்றும் கூறி, லகு ஓரலகு பெறும்;

குரு ஈரலகு பெறும் என்பர். அவர் கூறும் லகு குரு நமக்கு நேரசை ஒன்றிலேயே அடங்கி விடுவதால், "அலகிடுங்கால் நேரசை ஓரலகு; நிரையசை ஈரலகு; நேர்பசை மூன்றலகு; நிரை பசை நான்கலகு பெறும்" என்றல், (இளம் செய்யு. 5. உரை) பொருந்தாதென்க. இது 'வடமொழிச் சார்பால் வந்த விளக்கம் போலும்.

5. இயலசை முதலிரண் டேனவை[1] யுரியசை

என்-னின், மேற் சொல்லப்பட்ட அசைக்குப் பிறிதோர் குறியிடுதல் நுதலிற்று.

(இ-ள்) முற்பட்ட நேரசையும் நிரையசையும் இயலசை எனக் குறிபெறும், நேர்பசையும் நிரைபசையும் உரியசை எனக் குறி பெறும் என்றவாறு. (நி)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. **பாடவிளக்கம்**

யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் 95ஆம் நூற்பாவுரையில் "நேரசையும் நிரைபசையும் இயலசை எனப்படும்; நேர்பசையும் நிரைபசையும் உரியசை எனப்படும்" என்னை, "**முதலிரண் டியலசை ஏனைய உரியசை**" என்பவாகலின் என்று எழுதியிருத்தலால் இங்குக் காட்டிய நூற்பா, தொல்காப்பிய நூற்பாவின் வேறு பாடம் போலும். (யா.வி.கழ.பக். 445)

2. **பேராசிரியர் தரும் இயலசை உரியசை விளக்கம்**

அவர்தம் உரையுள் "இது மேற்கூறிய அசை நான்கினையும் இரு கூறு செய்து அவற்றுக்கு எய்தாதது எய்துவிக்கின்றது. இனி, ஆட்சியுங் குணனுங் காரணமாக வேறு வேறு பெயர் கொடுக்கின்றது இச்சூத்திரமெனவும் அமையும்" என நுதலிய பொருளை முன்னே கூறிவிட்டுப் பின்னர் "முதற்கண் நின்ற

பா.வே. 1. 'டேனைய' பேரா; நச்.
'டேனையுரியசை' சு.வே.

நேரும் நிரையும் இயற்றிக் கொள்ளப்படாது, இயற்கை வகை யான் நின்றாங்கு நின்று தளைப்பனவாம். ஒழிந்தன இரண்டும் (நேர்பு, நிரைபு) இயற்றிக் கொள்ளப்பட்டு இயலசை யாதற்கு உரியவாம் என்றவாறு. எனவே, எய்தாதது எய்துவித்தது; தானே இயலசை உரியசை என்று ஆளுமாகலானும் இயற்கை யால் இயறலின் இயலசை எனவும், அவை செய்யுந்தொழில் செய்தற்கு உரியவாகலான் உரியசை எனவும் ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெயர் எய்துவித்ததூஉம் ஆயிற்று" என்பர்.

6. தனிக்குறின் முதலசை மொழிசிதைந்[1] தாகாது

குறிப்பு:- **தொன்னூல் விளக்கம் யாப்பதிகாரம்** 3ஆம் நூற்பா வுரையில் "தனிக்குறில் **முதலசை மொழிசிதைந்** தாகாது" என இளம்பூரணர் பாடமே காணப்படுகிறது.

என்-னின் இதுவும் அசைக்குரிய தோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தொடர் மொழிக்கண் மொழி சிதைந்து தனிக்குறில் நேரசை யாகாதென்றவாறு.

மொழிசிதைத்தலாவது:- ஒற்றுமைப் பட்டிருக்கின்றதனைப் பிரித்தல். அஃதாவது புளிமா என்றவழி, நிரை நேராக அலகிடாது முதனின்றதனை நேரசையாக்கி இடைநின்றதூஉம் இறுதி நின்றதூஉம் நிரையசையாதல். அவ்வழிப் புளியென்னுஞ் சொல்லைப் பிரிக்க வேண்டுதலின் நிரையசையாகவே கோடல் வேண்டுமென்றவாறு.

இனி மொழி சிதையாக்கால் நேரசையாம். அது **ஷிட்டி சைத்து**நிற்றல்.

"அஉ வறியா வறிவி விடைமகனே
நொஅலைய வின்னாட்டை நீ. (யா-வி கழ 153) எனவும்,
"அஆ இழந்தானென் றெண்ணப்படும்" (நாலடி—9) எனவும் வருவன

முதலெழுத்து நேரசையாம். (சூ)

பா.வே. 1. 'மொழிசிதைத்' பேரா;நச்.

பதிப்பாசிரியர் விளக்கம்

உரை மாறுபாடு

இளம்பூரணர் தனிக்குறில் முதலசை என்றதற்குத் தனிக் குறில் நேரசை (முதலசை - நேரசை) என்று பொருள் கூறியுள் ளார். இதனைப் பேராசிரியர் "முதலசை என்பது நேரசை என்பாரும் உளர்; அது விதந்தோதல் வேண்டா, தனிக்குறிலான் அசையாமெனப்பட்டது நேரசையே யென்பது பெறுதுமாக லான்" எனக் கூறி மறுப்பர். ஆனால் பல்காயனார் "முற்றத் தனிக்குறில் முதலசையாகா' என்பர் (யா. வி. கழ. 50).

ஒப்புமைப் பகுதி

1. "விட்டிசைத் தல்லான் முதற்கட் டனிக்குறில் நேரசையென் றொட்டப் படாது" (யா. காரி. 37)

2. "குறிப்பே ஏவல் தற்சுட் டல்வழித் தனிக்குறின் மொழிமுதல் தனியசை யிலவே" (யா.க. 7)

3. "தற்சுட் டேவல் குறிப்பிவை அல்வழி முற்றத் தனிக்குறில் முதலசை யாகா" - (பல்காயனார் யா. வி. கழ. 50)

இவ்வொப்புமைப் பகுதியுள் யாப்பருங்கல நூற்பாவின் இரண்டாவது அடி, தொல்காப்பிய நூற்பாவை ஒத்துள்ளது.

7. **ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.**

என்-னின் இதுவுமது.

(இ-ள்) குற்றிய லிகரம் ஒற்றெழுத் தியல்பிற்று என்றவா று.

அடியின திடைக்கண் ஒற்றுமைப்பட்ட சொல்லின்கண் நேரசை என்று ..... எனவே அலகு பெறா தென்றவாறாம்.

உதாரணம்:—

"பேதை யென்ப தியாதென வினவி
னோதிய விவற்றை யுணராது மயங்கி
யியற்படு பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கண்டது தெளிதல்." (மணிமே-30:50-54)

இதன்கண் குற்றிய லிகரம் அலகு பெறாதவாறு காண்க. (எ)

பதிப்பாசிரியர் விளக்கம்

நூற்பா விளக்கம்

இளம்பூரணர் இதற்கு முன் நூற்பா அசைக்குரியதோர் மரபு உணர்த்திற்று என்பர். இந்நூற்பாவும் அப்பொருள் உணர்த்தும் என்ற கருத்தால், 'இதுவும் அது' என்று நுதலியதுரைத்து, குற்றியலிகரம் ஒற்றியல்பிற்றாய் அலகு பெறாது என்றனர்.

ஆனால் **நச்சினார்க்கினியர்,** குற்றியலிகரம் அலகு பெற்றும் பெறாதும் வரும் என்று இந்நூற்பாவிற்கு உரை எழுதியுள்ளார்.

பேராசிரியர் மேற்கூறிய இருவர் கருத்திற்கும் மாறுபட்டு "இஃது எய்தாதது எய்துவித்து ஐயம் அறுத்தது" என்று நுதலிய துரைத்துப் பின்னர், "குற்றுக ரத்திற்குப் புள்ளிபெறுதலும் கூறினான் (தொல். எழுத். 105); அதுபோலக் குற்றிகரமும் புள்ளி பெற்று நிற்றல் உடைத்தெனவும், ஈண்டுக் குற்றுகரம் நேர்பும் நிரைபும் ஆகியவாறு போலத் தானும் ஓர் அசையாகுங்கொல் என்று ஐயுறுவது வேண்டா, ஒற்று நின்றாங்கு நின்று இயலசை உரியசைகளைச் சார்ந்து வருதலும் ஒற்றுப் போல எழுத் தெண்ணப் படாமையுமுடைத்து என்றவாறுமாயிற்று."

"எனவே, ஒற்றெழுத்தியற்றாயினும் குற்றுகரம் இகரக் குறுக்கம் போலாது செய்யுட்கு உபகாரப்பட்டதோர் அசை வேறுபாடு தோன்ற நிற்கும் என்றவாறாயிற்று" என்று நல்ல விளக்கம் தந்துள்ளார்.

8. முற்றிய லுகரமு மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்.

பாடம்:- இளம்பூரணர் உரையில் "மொழிசிதைந்து" என வருதலால் "மொழிசிதைந்து கொளாஅ" எனப் பாடங் கொள்ளல் வேண்டும் போலும்.

"தனிக்குறின் முதலசை மொழிசிதைந் தாகாது"
(செய்-6)

என்னும் நூற்பாப் பாடத்தையும் நோக்குக.

என்-னின் முற்றியலுகரத்திற்குரிய வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முற்றியலுகரமும் மொழி சிதைந்து நேர்பசை நிரைபசை என்றுரைக்கப் படாது; அஃது ஈற்றடி மருங்கில் தனியசையாகி நிற்றலும் இன்று என்றவாறு.

எனவே, அடியினிடைக்கண் ஒற்றுமைப்பட்ட சொல்லின் கண் நேர்பசை நிரைபசையெனக் காட்டப்படாது. அது "ஈற்றடி மருங்கிற் றனியசை யாகி நில்லா தென்பதூஉம்' (நூற்பா-8), ஒற்றுமைப்படாத சொல்லின்கண் தனியசையாமென்பதூஉம், ஈற்றடிக்கண் எவ்வழியானுந் தனியசையாகாதென்பதூஉம் உணர்த்தியவாறாம்.

"அங்கண் ஈதிய மரவுவாய்ப் பட்டென"

என்றவழி அரவுஎன்பது மொழி சிதையாமையின் நிரைபு அசை ஆயிற்று.

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்" (நாலடி-20)

என்றவழிப் பெரு முன்னர்க் குறித்துச் சீராக்க வேண்டுமாயின் ஈண்டு மொழிசிதைதலின் நிரைபு அசை ஆகாதாயிற்று.

"இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு" (யா.வி.கழ. 230)
"மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவாட் கருளு" (யா.வி.கழ. 230)

(என்பதனால் கொள்க;) இவை புல்லு, அருளு வென வருமாலெனின்: "நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்", என்பதனால் ஈற்றடி யிறுதியினும் இடையடி யிறுதியினும் முற்றியலுகரம் நில்லா தெனவும் பொருளாம்; இதனானே அவ்வாறு வருதலுங் கொள்க.

முற்றிய லுகரமு மென்ற வும்மை இறந்தது தழீஇய எச்ச உம்மை. (அ)

பதிப்பாசிரியர் விளக்கம்

உரை மேற்கோள் விளக்கம்

இலக்கியமாகிய 'அங்கண் மதியம்' என்ற பாடலில் இங்கே இளம்பூரணர் கொண்ட பாடம் ''அரவுவாய்ப் பட்டென'' என்பதாம். **அரவு வாய்** என்பது நிரைபு நேர் எனக் கருதப் பட்டு, இயற்சீருள் அடங்கும். இப்பாட்டின் இப்பகுதி யாப்பருங்கல விருத்தியிலும் காரிகை உரையிலும் **'அரவின் வாய்'** என்று பாடம் ஓதப்பட்டு 'நிரை நேர் நேர்' எனும் வெண்பா உரிச்சீராகக் கொண்டு அகவற் பாட்டில் வெண்சீர் விரவி வந்த தாகக் கொள்ளப்படுகிறது. தொல்பொருள்-3 நச்சினார்க்கினியர் உரையிலும், தொல் பொருள்-24 இளம்பூரணர் உரையிலும் இப்பாடல் 'அரவின்வாய்ப் பட்டென' என்ற பாடத்துடனேயே காணப்படுகிறது. இரண்டு பாடமும் இலக்கணத் தொடர் புடையன.

உம்மை விளக்கம்

தனிக் குறின் முதலசை மொழி சிதைந்தாகாதது போல (செய். நூற் 6) முற்றிய லுகரமும் மொழி சிதைந்தாகாது என்று கொள்க. முற்றியலுகரமும் என்ற உம்மை இறந்தது தழுவிற்று.

9. குற்றிய லுகரமு முற்றிய லுகரமு
மொற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே[1].

என்-னின் எய்தியது விலக்கல் நுதலிற்று.

(இ-ள்) இருவகை யுகரமும் ஒற்றொடு தோன்றித் தனி யசையாகி நிற்கவும் பெறும் என்றவாறு.

உம்மை இறந்தது தழீஇயிற்று.

பா. வே. ''குற்றிய லுகரம் முற்றிய லுகரம்
ஒற்றொடு தோன்றற் குரிய வாகும்'' என்று பாடம் உள்ளது.
(யா-வி-கழ. 445)

உதாரணம்:-

''படிகிளி[1] பாயும் பசுங்குர லேனல்
கடிதின்[2] மறப்பித்தா யாயி னினிநீ
நெடிதுள்ள லோம்புதல் வேண்டும்'' (கலித்-50)

இதன்கட் குற்றிய லுகரம் ஒற்றொடு வருதலான் நேரசை யாயிற்று.

''கண்ணும் படுமோ வென்றிகின் யானே'' (நற்-16)

இதன்கண் முற்றிய லுகரம் ஒற்றொடு வருதலான் நேரசை யாயிற்று. (கூ)

வேறு உரை

இந்நூற்பாவிற்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் வேறு உரை கூறு கின்றனர்.

பேராசிரியர் ''இயலசைகளை 'ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி' என்றான், உரியசைக்கு அது கூறாதான் ஈண்டுக் கூறுகின்றமையின். இஃது எய்தாதது எய்துவித்தது' என்பர்.

நச்சினார்க்கினியரும் அவ்வாறே கூறி, ''முற்கூறிய குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும் வருமொழி வல்லெழுத்து வரும் வழி வல்லொற்றொடுந் தோன்றி நிற்கவும் பெறும்'' என்று உரை கூறினர்.

யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் ''நேர் முதலாகிய இரு வகை உகரமும் ஒற்று அடுப்பினும் நேர்பசை யாகும்; நிரை முதலாகிய இருவகை உகரமும் ஒற்று அடுப்பினும் நிரைபசை யாகும். என்னை?

''குற்றிய லுகரம் முற்றிய லுகரம்
ஒற்றொடு தோன்றற் குரிய வாகும்''

உரை.சு.வே: 1. படுகிளியாவும்
2. கடிதின்

என்ப வாகலின்; அவற்றிற்குதாரணம்:- சேற்றுக் கால், ஆட்டுக் கால் எனவும், களிற்றுத் தாள், வெளிற்றுப்பனை எனவும் இவை குற்றிய லுகரம் ஒற்றொடு வந்த நேர்பசை, நிரைபசைகள்.

மின்னுப் பூண், மண்ணுச் சாந்து எனவும், உருமுத் தீ வெருவுப் பாம்பு, விரவுப் பூண், விழவுக் களம் எனவும் இவை முற்றிய லுகரம் ஒற்றொடு வந்த நேர்பசை நிரைபசைகள்'' என்பர்.

பேராசிரியர்

ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே என்றதனுள் உம்மை எதிர்மறையாகலான் ஒற்றின்றி வருதலே பெரும் பான்மை என்று உரைப்பர்.

மேலும் அவர் ''இங்ஙனம் வருமொழி யொற்று மிகின் அவை கொண்டு நேர்பும் நிரைபுமாம் எனவே உண்ணும் எனவும், நடக்கும் எனவும் நிலைமொழி ஒற்று நின்ற வழித் தேமாவும், புளிமாவும் ஆவதல்லது நேர்பு அசையும் நிரைபு அசையும் ஆகா தென்பதாம். விக்குள், கடவுள் என்பனவும் அவை'' என்பர்.

நேர்பும் நிரைபும் ஒற்றடுத்தல்

''அறிமுந்தை நேர்நிரை வைந்தீ ருகர மடுத்துநின்றால்
நெறிநுண் கருங்குழல் நேர்பு நிரைபுமொற் றோடுமற்றே''.

என்பதனாலும் அறிக. (யா.வி.கழ. பக். 445)

10. அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன ருணர்த்தல்[1] வல்லோ ராறே.

என்-னின் வகையுளி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அசையையுஞ் சீரையும் ஓசையொடு சேர்த்திப் பாகுபாடு ணர்த்தல் வல்லோர்கள் நெறி என்றவாறு.

அஃதாவது பொருளொடு சொல்லை அறுத்தவழித் தளை

நூ.பா.வே. 1 'உணர்த்தலும்' பேரா: நச்.

யுஞ் சீருஞ் சிதையின், அவ்வழி ஓசையை நோக்கி அதன்வழிச் சேர்த்துக என்றவாறு.

அதுவருமாறு:-

''மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்'' (குறள்-3)

என்ற வழி 'வாழ்வார்' எனப் பொருணோக்கிச் சீராமாயின் ஓசை கெடும். அதன்கண் 'வாழ்' என்பதனை முதனின்ற சீரோ டொட்டக் கெடாதாம். பிறவு மன்ன.

இத்துணையுங் கூறப்பட்டது அசைவகை. (கூ)

இந்நூற்பா சிங்க நோக்கு.

பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் இந்நூற்பாவைப் **புறனடை** என்று கருதுகின்றனர். **இளம்பூரணரும் இலக்கண விளக்கநூலாசிரியரும் வகையுளியை** உணர்த்தும் நூற்பா என்பர்.

பேராசிரியர் ''இது மேற்கூறப்பட்டனவற்றுக்கும், இனி வருஞ்சீர்க்குமெல்லாம் புறனடை'' என்று நுதலிய துரைத்து, ''அசைகளையும் சீர்களையும் ஓசையோடு சேர்த்தி வேறுபடுத் துணர்த்துதலும், அச்செய்யுளிலக்கணத் துறை போயினாரது நெறி'' என்று உரை வகுத்து, மேல் மாத்திரை (செய்)'என்ப தோர் உறுப்புரைத்தான் அதனால் அசை சீர்களது ஓசையை அளந்து கூறுபடுத்து இன்னோசையும் இன்னாவோசையும் உணர்த்துக. எழுத்தியல் வகைக்கும் இஃதொக்கும் ... **இவற்றைப் பிறநூலார் ''வகையுளி என்ப''** என்றனர்.

இலக்கண விளக்கம்,

''அசையும் சீரும் அடியும் எல்லாம்
இசைய வருபொருள் இயைபுநோக் காது
ஓசையே குறிக்கொண் டொருங்கவும் விரியவும்
அலகிடல் வகையுளி யாகும் என்ப'' (752)

என்று கூறும்.

தொல்காப்பியர் அசைகட்கும் சீர்கட்குமே இந்நூற்பாவில் விதி கூறினார். ஆனால் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் ''வழுக்கா மரபின் வகையுளி சேர்த்தலும் (யா.வி.கழ. 396) என்பது, அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் வண்ணமும் செய்யுட்கட் கழியாமை வகையுளி சேர்த்தலும் என்றவாறு.

வகையுளி என்பது முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழி அறிந்து குற்றப்படாமை வண்ணம் அறுத்தல்'' என்று கூறி ...

'அருள்நோக்கும் நீரார் அசைசீர் அடிக்கண்
பொருள்நோக்கா தோசையே நோக்கி - மருள்நீக்கிக்
கூம்பவுங் கூம்பா தலரவும் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு'

இதனை விரித்து உரைத்துக் கொள்க என்பர்.

பிறரும்

''எழுத்தல் கிளவியின் அசையோடு சீர்நிறைத்
தொழுக்கலும் அடியொடு தளைசிதை யாமை
வழுக்கில் வகையுளி சேர்ந்தலும் உரித்தே'' (அவிநயனார்)
(யா.வி.கழ.பக்.438)

என்றார் எனக் கொள்க என்றனர்.

வகையுளியைப் பற்றி யா.வி மேற்கோள்,

''தகைபெறு பொதியிலெந் தலைவ னாணையின்
தொகைவகை விரிபடச் சொற்ற நூல்களுள்
வகையுளி சேர்த்துதல் வகுப்பர் ஆதலால்
நகைபெற நாலசை நடப்ப தில்லையே'' (யா.வி.கழ.பக்.437)

என்று குறிப்பிடுகிறது.

4-சீர்

11. ஈரசை கொண்டு[1] மூவசை புணர்த்துஞ்[2]
சீரியைந் திற்றது சீரெனப் படுமே.

பா.வே. [1]'ஈரசை கொண்டும்' பேரா; நச்.
[2]'புணர்ந்தும்' பேரா.

என்-னின் நிறுத்த முறையானே சீராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இரண்டசை கொண்டு புணர்த்தும் மூன்றசை கொண்டு புணர்த்தும் ஓசை பொருந்தியிற்றது சீரெனப்படும் என்றவாறு.

'தாமரை புரையுங் காமர் சேவடி' (குறுந். கடவுள்.)

என்றவழி **நான்கு சொல்லாகி** ஓசைஇற்று நின்றவாறு கண்டு கொள்க.

''எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' (குறள். 110)

என்றவழி மூன்றசையினாற் சீராகிய வாறும், அவ்வளவினான் ஓசைஇற்று நின்றவாறும் கண்டு கொள்க. **(கக)**

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒப்புமைப் பகுதி

''இயலசையும் உரியசையுமாகிய அவ்வசை இரண்டு கூடியுஞ் சீராம்; மூன்று கூடியுஞ் சீராம். என்னை?

''ஈரசை கொண்டது சீரெனப் படுமே
மூவசை யிறத்த வில்லென மொழிப''

என்பவாகலின்'' (யா. வி. கழ. பக். 445, 446)

''அசையே யிரண்டும் மூன்றுந் தத்தமில்
இசைய வருவன சீரெனப் படுமே'' பல்காயம் (யா.வி.கழ.பக். 67)

உரைக்குறிப்பு

திருத்தம்

உரையுள் நான்கு சொல்லாகி என்பது, கீழே வரும் உரைப் பகுதியைக் கருதினால் நான்கு சொல்லாகி ஈரசையினாற் சீராகிய வாறும், அவ்வளவினால் ஓசைஇற்று நின்றவாறுங் கண்டு கொள்க என்றிருத்தல் வேண்டும்.

சீர் என்றது

இசைநரம்பிற்கும் 'சீர்' என்றொரு பெயருண்டு.

''மாயவன் சீருளார் பிஞ்ஞையும் தாரமும்''

என்ற சிலப்பதிகார அடியை நோக்குக (சிலப் 17, பக்கம் 444).

''சதியுஞ் சீரும் தாளவொற் றின் பெயர்'' என்பது திவாகரம்.

இளம்பூரணர், 'சீர் இயைந்து' என்பதற்கு 'ஓசை பொருந்தி' என்று உரை கூறுவர். பின் வரும் 'இன்சீர் வகையின்' (செய்-52) என்றதற்கு 'இனிய ஓசை வேறுபாட்டினையுடைய' என்று பொருள் உரைப்பர்.

பேராசிரியர்

'சீரியைந் திற்றது' என்ற பகுதிக்கு, 'சீரியைந்திறுவன' என்று உரை கூறி, மற்றுச் சீரென்ற தென்னையெனின், **பாணி** போன்று இலயம்பட நிற்றலான் அது **சீரெனத்** தொழிற் பெயராம். என்னை?

சொற்சீர்த்திறுதல் (செய். 119)

என்புழித் தொழிற்படுத்தோதினமையின் என்பர்.

விபுலானந்த அடிகளார் ''ஈரசை கொண்டு'' என்னுஞ் சூத்திரத்தினுள் 'சீரியைந் திற்றது' என்புழிப் பாணியுந் தூக்கும் சீரும் என்னும் **தாளக் கூறுபாடுகளுள்** ஒன்றாகிய சீர் கூறப்பட்டது என்பர். (யாழ் நூல். பக். 376)

மேலும் அவர், ''சீர் இயைந்திற்றது சீர்'' என்றபடி தாளத்தின் இறுதி இசைத்தமிழிலும் சீர் எனப்படும்; தாளத்தின் இடை நிகழுங் காலம் தூக்கு எனப்படும்; தாளத்தின் முதலெழுங் காலம் பாணி எனப்படும். செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என்னும் ஓசை விகற்பங்கள் தாளத்தினை அடிப்படையாகக் கொண்டன என்பர் (யாழ் நூல். பக். 12).

''பாணியும் தூக்கும் சீரும் என்றிவை
மாணிழை அரிவை காப்ப
ஆணமில் பொருள்எமக் கமர்ந்தனை ஆடி''

என்பது கலித்தொகைக் கடவுள் வாழ்த்துப்பாட்டின் சுரிதகம்.

"ஒரு தாளத்திற்குப் பாணி, தூக்கு, சீர் என்னும் மூன்றும் உளவேனும் ஒவ்வொன்று ஒவ்வோர் ஆடற்கு மிகுதி வகையால் சிறந்தமைபற்றி ஒரோ வொன்றையே கூறினார். தாழிசைகளில் சீர், தூக்கு, பாணி என நின்றன வேனும் அவை நிகழும் அடைவு பற்றிச் சுரிதகத்துள் பாணியும் தூக்கும் சீரும் என அடைவு கூறினார்" என்பது இப்பாடலில் நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் ஆகும்.

12. இயலசை மயக்க மியற்சீ ரேனை
யுரியசை மயக்க மாசிரிய வுரிச்சீர்.

என்-னின் ஈரசைச்சீர் பாகுபடுமாறு[1] உணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்) மேற்சொல்லப்பட்ட அசைகளில் இயலசை மயங்கிவந்தன இயற்சீர் எனப்படும். உரியசை மயங்கி வந்தன ஆசிரிய வுரிச்சீர் எனப்படும் என்றவாறு.

மயங்குதலாவது ஒருங்கு வருதல். நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நான்கினையுந் தம்மி னுறழப் **பதினாறு ஈரசைச்** சீராம்.[2] அவற்றுள் இயலசை யாகிய நேரும் நிரையும் தம்மின் உறழ நான்கு சீராம். அவை இயற்சீர் எனப்படும்.

உதாரணம்:- தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என வரும்.

இனி உரியசை யாகிய நேர்பும், நிரைபும் என்றவற்றைத் தம்மின் உறழ நான்கு சீராம். அவை ஆசிரிய வுரிச்சீர் எனப் படும்.

உதாரணம்:- ஆற்றுநோக்கு, ஆற்றுவரவு, வரகுசோறு, வரகுதவிடு என வரும்.

(கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

இரண்டு நூற்பாக்களின் முதலடி

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் "ஆகச்சீர் இரண்டு வகைப்

உரை.சு.வே. 1 பாகுபாடாமாறு
2 பதினாறு அசைச்சீராம்

படும்; இயற்சீரும் உரிச்சீரும் என'' என்று எழுதிவிட்டு (யா.வி.கழ.பக்.446) இயற்சீரையும் ஆசிரிய உரிச்சீரையும் விளக்க இரண்டு நூற்பாக்களை எழுதிக் காட்டுகிறார். அந்த நூற்பாக்களின் முதலடிகளைச் சேர்க்க. சேர்த்தால்

''இயலசை மயக்கம் இயற்சீர் ஆகும்
உரியசை மயக்கம் ஆசிரிய வுரிச்சீர்''.

என்ற நூற்பா கிடைக்கின்றது. அது ஏறக்குறைய மேலே உள்ள தொல்காப்பிய நூற்பாவை ஒத்திருக்கிறது.

13. முன்னிரை யிறினு[1] மன்ன வாகும்.

என்-னின் இதுவும் ஆசிரிய உரிச்சீர் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நேர்பு அசை நிரைபு அசைப்பின், நிரையிறுதியும் வுரிச்சீராம் என்றவாறு.

உதாரணம்:- யாற்றுமடை, குளத்துமடை என வரும். (கஙூ)

பதிப்பாசிரியர் விளக்கம்.

ஆசிரிய உரிச்சீர்

தொல்காப்பியர் ஈரசைச் சீர் பதினாறுள் **இயற்சீர் பத்து ஆசிரியஉரிச்சீர் ஆறு என்பர்.** ஆனால் **யாப்பருங்கல விருத்தி யுரை யாசிரியர் இயற்சீர் பத்து** வகைப் படும் என்று கூறித் தனிநிலை அளபெடைப் பின் நிரை வந்ததும் இறுதிநிலை அளபெடைப் பின் நிரை வந்ததும் என்னும் இரண்டையுங் கூட்டி **ஆசிரிய உரிச்சீர் எட்டு வகைப்படும் என்பர்.** (யா.வி.கழ.பக். 446-447)

14. நேரவ ணிற்பி னியற்சீர்ப் பால.

என்-னின் இது இயற்சீர்க்கு உரியதோர் வேறுபாடு

நூ. பா. வே. 1 'யுறினு' பேரா.
'வரினு' நச்.

உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உரியசைப் பின்னர் நேரசை வரின் அது இயற் சீரெனவரும் என்றவாறு.

உதாரணம்:- ஆற்றுக்கால், குளத்துக்கால் எனவரும். (கசு)

15. இயலசை யீற்றுமு னுரியசை வரினே
நிரையசை யியல வாகு மென்ப.

என்-னின் .....

(இ-ள்) இயலசைப் பின்னர் உரியசை வரின், நிரையசை வந்தாற்போலக் கொள்க என்றவாறு.

எனவே இவையும் இயற்சீர் என்றவாறாம்.

உதாரணம்:— மாங்காடு, களங்காடு, பாய்குரங்கு, கடிகுரங்கு என வரும்.

இத்துணையுங் கூறப்பட்டன ஈரசைச்சீர் பதினாறினும் இயற்சீர் பத்தும் ஆசிரியவுரிச்சீர் ஆறுமாம் என்றவாறு. (கடு)

பதிப்பாசிரியர் விளக்கம்

இந்நூற்பாவிற்கு நுதலியதில்லை.

பேராசிரியர் ''இது மேல்நின்ற இயற்சீரதிகாரத்தான், ஈரசைச் சீருள் இயலசை உரியசை மயக்கத்துள் ஒழிந்து நின்ற நான்கு இயற்சீரும் உணர்த்துதல் நுதலிற்று'' என்று **நுதலிய துரைப்பர்.**

16. அளபெடை யசைநிலை யாகலு முரித்தே.

என்-னின் சீர்க்கண் உயிரளபெடைக் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

உயிரளபெடை அசையாக நிற்கவும் பெறும் என்றவாறு.

உம்மை எதிர்மறை யாகலான் ஆகாமை. பெரும்பான்மை.

உதாரணம்:-

''கடாஅ வுருவொடு ..... வல்லதே யொற்று'' (குறள். 585)

இது அளபெடை அலகு பெற்றது.

''இடைநுடங்க வீர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து-கடைகடையின்
உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு'' (யா.வி.கழ.பக்.14)

இதன்கண் அளபெடை அசைநிலையாகி அலகு பெறாதாயிற்று.

(கசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. அளபெடையின் இருவகை நிலை

இளம்பூரணர் உயிரளபெடை அசைநிலையாகி அலகு பெறாதாயிற்று; எதிர்மறை உம்மையான் அசைநிலையாகாமல் அலகு பெற்றது என்பர்.

பேராசிரியர் ''மேல் எழுத்ததிகாரத்து ஓதப்பட்ட அள பெடையை ஆண்டு மொழியெனக் கூறினான்; அவ்வாற்றானே அவை பெரும்பான்மையும் ஈண்டும் ஈரசைச் சீராகலின் ஈண்டுச் சீர் கூறியவாற்றான் எய்திநின்ற அவற்றுக்கு எழுத்து நிலைமைப் படுத்து அசைநிலையும் வேண்டினமையின் இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி'' என்று நுதலியதுரைத்து **''அளபெடை மேற் கூறிய இயற்சீர் நிலைமையே யன்றி ஓரசையாய் நிற்றலும் உரித்து''** என்று உரைப்பர்

2. அசைக்குறுப்பாவனவற்றுள் அளபெடையும் ஒன்று

''குறிலும் நெடிலும் அளபெடையும் ஒற்றும்
அறிஞர் அசைக்குறுப்பா மென்பர்''
(யா. வி. கழ. பக். 34).

17. ஒற்றள பெடுப்பினு மற்றென மொழிப.

என்-னின் ஒற்றளபெடைக் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒற்று அளபெடுத்து வரினும் அசைநிலை யாகலு முரித்து என்றவாறு.

மாட்டேற்று வகையான் ஆகாமை பெரும்பான்மை.

உதாரணம்:— கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும் (மலைபடுகடாம். 352)

என வரும். (கஎ)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒற்றளபெடையின் இருவகைநிலை

பேராசிரியர் இந்நூற்பாவுரையில் ''வல்லெழுத்தாறும் ரகார ழகாரமும் ஒழித்து ஒழிந்த (ஆய்தத்துடன் கூடிய) **பதினோ ரொற்றும் குறிற் கீழும் குறிலிணைக் கீழும் அளபெய்தி நிற்கும்** வழிச் சீர் நிலையாதலே யன்றி, **அசை நிலை** யாதலும் உரித்துச் **சிறு பான்மை** என்றவாறு; அவை,

''கண்ண் டண்ண்ணெனக் கண்டும் கேட்டும்'' (மலைபடு.352)

என்ற வழி 'கண்ண்' என்பது சீர்நிலை யாகித் தேமா வாயிற்று. (அம் மலைபடுகடாம் அடியுள் வந்த) தண்ண்ணென என்ற வழித் தட்பத்துச் சிறப்பு உரைத்தற்கு ணகர வொற்றினை அளபேற்றிச் செய்யுள் செய்தான்; ஆண்டு அது 'மாசெல் சுரம்' என்னும் வஞ்சியுரிச்சீராவதனைப் 'பாதிரி' என்னுஞ் சீரே யாமென வழுவமைத்தவாறு'' என்றும்,

''மற்று வழக்கினுள் வரும் இயற்கை யளபெடையன்றே அசை நிலையாவன, ஒற்றளபெடை வழக்கினுள் வருமோ வெனின், அவையும் சிறுபான்மை வழக்கினுள் வருமென்பது. அவை சுள்ள் ளென்றது, புள்ள்ளென்றது, கள்ள்ளென்றது, துண்ண்ணென்றது, திண்ண்ணென்றது என வரும். பிறவு மன்ன. இவை செய்யுளகத்தல்லது பரவை வழக்கினுள் வாரா வென்பாரும் உளர். அவர் அறியார்; செய்யுட்குப் புலவர் செய்து கொண்ட அளபெடை பின்னர் அசைநிலையாதற்கு என்னை காரணமென மறுக்க'' என்றும் கூறுவர்.

18. இயற்சீ ரிறுதிமுன் னேரவ ணிற்பின்
உரிச்சீர் வெண்பா வாகு மென்ப.

என்-னின் வெண்பா வுரிச்சீர் ஆமா றுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஈரசைச்சீர் பதினாறோடு

நான்கசையுங் கூட்டி யுறழ அறுபத்து நான்கு மூவசைச் சீராம்; அவற்றுள் இயற்சீர் நான்கின்பின் நேரசை வந்த மூவசைச்சீர் நான்கும் வெண்பாவுரிச் சீராம் என்றவாறு.

உதாரணம்:- மாவாழ்கான், மாவருகான், புலிவாழ்கான், புலிவருகான் என்பன.

(கஅ)

பதிப்பாசிரியர் விளக்கம்

"'உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப' எனத் **தொல்காப்பியனார்** வெண்பா உரிச்சீர் என்றதனை மொழிமாற்றி உரிச்சீர் வெண்பா என்றார்; அது போலக் கொள்க" என்பர் (யா.வி கழ. பக். 63).

நச்சினார்க்கினியர் இந்நூற்பாவுரையுள் 'இயற்சீர்' என்பதற்கு 'இயலசையானாகிய இயற்சீர்' என்று பொருள் கூறி, "**வெண்பாவுரிச்சீர் என்னும் இ:து ஆட்சியுங் குணமுங் காரணமாகப் பெற்ற பெயர்; வெண்பாவிற்கும் அதன் பகுதியாகிய கலிப்பாவிற்கும் உரிமையின்.** இனிப் பொதுவாக இயற்சீர் என்றால் இயலசை மயக்கமாகிய இயற்சீர் நான்கினையும் பொதுவாக உரிச்சீர் என்றால் உரியசை மயக்கமாகிய உரிச்சீர் நான்கினையுமே கோடல் வேண்டினார் இத் தொல்காப்பியனார் என்பது, இச் சூத்திரத்தானும், "வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர் இன்பா நேரடிக்கு" (செய்.23) என்பதனாலும் பெறுதும். இதனால் ஆட்சியும் பெற்றாம்" என்பர்.

19. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை யென்ப[1].

என்-னின் வஞ்சியுரிச்சீர் ஆமா றுணர்த்துதல் நுதலிற்று. (இ-ள்) வஞ்சியுரிச்சீரெனப் பாகுபட்டன மேற்சொல்லப்பட்ட மூவசைச்சீர் அவ்வறுபத்து நான்கு சீரினும் வெண்சீரல்லாத அறுபதும் என்றவாறு.

பா-வே. 1. 'யான' பேரா; நச்.

உதாரணம்:

(1)-14	(2)-14
மா வாழ் நெறி	புலி வாழ் நெறி
மா வாழ் காடு	புலி வாழ் காடு
மா வாழ் பொருப்பு	புலி வாழ் பொருப்பு
மா வரு நெறி	புலி வரு நெறி
மா வரு காடு	புலி வரு காடு
மா வரு பொருப்பு	புலி வரு பொருப்பு
மா போகு கான்	புலி போகு கான்
மா போகு நெறி	புலி போகு நெறி
மா போகு காடு	புலி போகு காடு
மா போகு பொருப்பு	புலி போகு பொருப்பு
மா வழங்கு கான்	புலி வழங்கு கான்
மா வழங்கு நெறி	புலி வழங்கு நெறி
மா வழங்கு காடு	புலி வழங்கு காடு
மா வழங்கு பொருப்பு	புலி வழங்கு பொருப்பு

(3) - 16	(4) - 16
பாம்பு வாழ் கான்	களிறு வாழ் கான்
பாம்பு வாழ் நெறி	களிறு வாழ் நெறி
பாம்பு வாழ் காடு	களிறு வாழ் காடு
பாம்பு வாழ் பொருப்பு	களிறு வாழ் பொருப்பு
பாம்பு வரு கான்	களிறு வரு கான்
பாம்பு வரு நெறி	களிறு வரு நெறி
பாம்பு வரு காடு	களிறு வரு காடு
பாம்பு வரு பொருப்பு	களிறு வரு பொருப்பு
பாம்பு போகு கான்	களிறு போகு கான்
பாம்பு போகு நெறி	களிறு போகு நெறி
பாம்பு போகு காடு	களிறு போகு காடு
பாம்பு போகு பொருப்பு	களிறு போகு பொருப்பு
பாம்பு வழங்கு கான்	களிறு வழங்கு கான்
பாம்பு வழங்கு நெறி	களிறு வழங்கு நெறி
பாம்பு வழங்கு காடு	களிறு வழங்கு காடு
பாம்பு வழங்கு பொருப்பு	களிறு வழங்கு பொருப்பு

ஆக அறுபதாம். (கக)

பதிப்பாசிரியர் விளக்கம்

வஞ்சி உரிச்சீர்

நச்சினார்க்கினியர் "அவை வருமாறு:- நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கினையும் நிறுத்தி, ஒரு கால் நேர் முன்னாகவும், ஒருகால் நிரை முன்னாகவும், ஒரு கால் நேர்பு முன்னா

கவும், ஒரு கால் நிரைபு முன்னாகவும் எடுத்து, நேரீறாக முடிக்கப் பதினாறும், அவ்வாறெடுத்து நிரை ஈறாக முடிக்கப், பதினாறும், அவ்வாறெடுத்து நேர்பீறாக முடிக்கப் பதினாறும், அவ்வாறெடுத்து நிரை பீறாக முடிக்கப் பதினாறும் நான்கு முறைக்கும் நடுவு நேரும், நிரையும், நேர்பும், நிரைபுமாக நிற்குமாறும் உணர்க" என்பர்.

20. தன்பா வல்வழித் தானடை[1] யின்றே

என்-னின் வஞ்சி யுரிச்சீர்க் குரிய மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சி யுரிச்சீர் வஞ்சிப் பாவினுள் அல்லது நடை பெறாது என்றவாறு. **(உ.o)**

பதிப்பாசிரியர் விளக்கம்

வஞ்சி உரிச்சீர் பாவிற்கு உரிமை

நச்சினார்க்கினியர் "இஃது அவற்றைப் பாவிற்கு உரிமை கூறுகின்றது" என நுதலியதுரைத்து, "இவ்வறுபது வஞ்சிச் சீரும் தன் பாவல்லா ஆசிரியம், வெண்பா, கலியுள் வாரா என்றவாறு" என்று உரை கூறி, எனவே "சிறுபான்மையான் ஆவன மேற்கூறும்" என்று சிறப்புரை எழுதிப் பின் "இதன் பயன் ஆசிரிய உரிச்சீர் தூங்கலோசையை ஆக்குமாறு போல, இஃது அவ்வோசையை ஆக்காதென்பதாம்" என்பர்.

21. வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய

என்-னின் வஞ்சிப்பாவிற் குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சிப் பாவினுள் ஒழிந்த சீர்கள் வரப்பெறும் என்ற வாறு.

(உ க)

பதிப்பாசிரியர் விளக்கம்

உரையாசிரியர்களின் கருத்து மாறுபாடு

ஒழிந்த சீர்களைப் பற்றிப் பேராசிரியரும், நச்சினார்க்

பா.வே. 1 'தானடை வின்றே' நச்.

கினியரும் கருத்து வேறுபடுகின்றனர். **பேராசிரியர் "வஞ்சியுரிச் சீர் பிறபாக்களை ஆக்காதவாறு** போலாது, ஒழிந்த **ஆசிரிய உரிச்சீரும், வெண்பாவுரிச்சீரும் இவ்வஞ்சிப்பாவினை** ஆக்கும்; உரிச்சீர் மேலதிகாரமாகலான் எஞ்சிய எனக் கூறினமையின் இவ்விரண்டனையுமே கொண்டாம்" என்பர். எனவே, ஆசிரிய உரிச்சீர் ஆறும், வெண்பாவுரிச்சீர் நான்கும் வந்து வஞ்சிப் பாவினை யாக்கும் என்பது அவர் கருத்தாதல் புலனாம்.

நச்சினார்க்கினியர் "கட்டளை யல்லாத வஞ்சிப்பாவின்கண் ஈரசைச்சீர் பதினாறும் மூவசைச் சீர் அறுபத்து நான்கும் உரிய" என்பர்.

இளம்பூரணர் இந்நூற்பாவுரையில் **விளக்கவுரை கூறாவிடினும்** செய்யுளியல் 113ஆம் நூற்பா வுரையுள் "'வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய' என்றோதியவதனால், ஆசிரிய வடியோடும் வெண்பா வடியோடும் கலியடியோடும் மயங்கி வருவன கொள்க" என்று கூறுகின்றார்.

இளம்பூரணர் கருத்தினை **யாப்பருங்கலம் 31ஆம்** நூற்பாவி லும் அதன் உரையிலும் காணலாம்.

"வஞ்சியுள் அகவல் மயங்கினும் வரையார்" *(யா.க.31)* என்னும் நூற்பாவுரையுள் "வஞ்சிப்பாவினுள் ஆசிரிய அடி விரவவும் பெறும்" என்று உரை கூறி, "அகவல் மயங்கினும் வரையார் என்ற உம்மையால் கலியடியும் ஒருசார் வெள்ளடியும் மயங்கி வரவும் பெறும்" என்பர்.

22. வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீர்
இன்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே

என்-னின் வெண்பாவிற் குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்பா வுரிச்சீரும் ஆசிரிய வுரிச்சீரும் வெண்பா வினது நேரடிக்கண் ஒருங்கு நிற்றலில்லை என்றவாறு. (உ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இன்பா என்பதில் கருத்து மாறுபாடு

இளம்பூரணர் 'இன்பா' என்பதற்கு 'வெண்பா' என்று பொருள் கூறுகின்றார்.

பேராசிரியர் 'இன்பா நேரடி' என்பது ஆசிரிய அடி என்பர். 'நேரடிக்கென்பது கட்டளையடிக்கென்றவாறு' என்று எழுது வதை நோக்கினால் இந்நூற்பா விதி, கட்டளை ஆசிரியப்பா விற்கு என்று அவர் கருதுவது புலனாம்.

நச்சினார்க்கினியரும் இதே கருத்தினராவார்.

ஆசிரியத்திற்கு, "இன்பா" என்றொரு பெயர் இருத்தலைத் "தன்பால் உறுப்புத் தழுவிய மெல்லிய இன்பா அகவல்" என்னும் அவிநயத்தால் உணர்க. (யா.வி.கழ.பக்.267)

2. பேராசிரியர் உரைக்கருத்தை வலியுறுத்தும் நூற்பா

யாப்பருங்கல விருத்தியுள் வந்துள்ள,

"அகவலுள் தன்சீர் வெண்சீர் ஒருங்கு
புகலிற்; கலியுட் பொருந்து மென்ப"

என்னும் **பல்காயனார்** நூற்பா, 'வெண்பா வுரிச்சீர், கலித்தளை மருங்கில்' (செய். 22, 23) என்னும் தொல்காப்பிய நூற்பாக் களின் பொருளையும், இன்பா என்றதற்கு ஆசிரியப்பா என்று எழுதும் பேராசிரியர் கருத்தினையும் கொண்டிருத்தல் ஒப்பு நோக்கி உணரத்தக்கது.

3. சிறந்த ஆசிரிய உரிச்சீர்

பேராசிரியர், "இயலசை மயங்கினவே இயற்சீர் எனப்படுவன எனவும் உரியசை மயங்கினவே ஆசிரியவுரிச்சீர் எனப்படுவன எனவும் முன்னர்ச் சொல்லிப் போந்தானாகலின் ஈண்டு உரியசை மயக்கத்தினையே ஆசிரிய வுரிச்சீர் என்றான்" என்று இந்நூற்பாவில் எழுதுவது கொண்டு சிறந்த ஆசிரியவுரிச்சீர்

இவை என்று உணர்ந்து கொள்க. மேலும் அவர் இவ்வாறு கூறியதால் நீடுகொடி, குளிறு புலி என்னும் இரண்டு ஆசிரிய உரிச்சீரும் ஆசிரியத்து வந்து அடியுறழும் என்பது ஈண்டுக் கொள்ளப்படும்'' என்பர்.

23. கலித்தளை மருங்கிற் கடியவும் பெறாஅ[1].

என்-னின் கலிப்பாவிற் குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கலித்தளை வரும்வழி மேற் சொல்லப்பட்ட இருவகைச்சீரும் ஒருங்கு நிற்கவும் பெறும் என்றவாறு. (உ.கூ)

24. கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே.

என்-னின் இதுவுமது.

(இ-ள்) கலிப்பாவிற்குரிய கலித்தளைக்கண் நேரீற் றியற் சீர் நிற்றற் குரித்தன்று ஆராய்வார்க்கு என்றவாறு. (உ.ச)

25. வஞ்சி மருங்கினு மிறுதிநில் லாது.

என்-னின் வஞ்சிக்குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சிப் **பாவினும்[1] அடியி னீற்றின்கண் நில்லாது[2]** நேரீற்றியற்சீர் என்றவாறு.

எனவே, அடிமுதற்கண் நிறகப்பெறும் என்றவாறாம். (உ.நி)

பா. வே. 1 'படா' பேரா
'படாஅ' பேரா; நச்; சி.வை.தா;கன.

பா.வே. 1 ''நில்லா'' பேரா; நச்.

உரை.சு.வே:- 1. வஞ்சிப்பாவினுள் — ரா. ரா.
2. அடியீற்றினில்லாது — ரா.ரா.

பதிப்பாசிரியர் விளக்கம்

வஞ்சிப்பாவினுள் இயற்சீர்

பேராசிரியர் ''மேற்கூறிய தேமா புளிமா என்னும் இயற்சீர் இரண்டும் இறுதலோடு நில்லா வஞ்சிப்பாவினுள்; எனவே தூங்க லோசைப்பட முதற்கண் வாரா என்றவாறாம்'' என்பர். (இரு சீரினுள் வருஞ்சீரோடு தொடருங்கால் இறுதற்றொழில் பெறுவது முற்பட நின்ற சீராகலின்.)

எனவே, **நேரீற் றியற்சீர் வஞ்சிப்பாவின் அடியுள் முதலிலே இறுதலோடு நில்லா** என்பது பேராசிரியர் கருத்தாம். முதலிலே நின்ற சீராக இருந்தாற்றான் இறும் என்பது அவர் கருத்து; எனவே, கருவிளம் கூவிளம் என்னும் இயற்சீர் முதற்கண் இறுத லோடு நிற்கும் என்று அவர் கருதுகிறார்.

பேராசிரியர் இந்நூற்பாவுரையில் வேறு இரண்டு உரையாசி ரியர்களைக் குறிப்பிடுகின்றார். ஒருவர் நேரீற்றியற்சீர் வஞ்சிப் பாவின் ஈற்றுக்கண் வருதல் சிறுபான்மை என்று உரைப்பாராம். மற்றொருவர் யாண்டும் இறுதிக்கண் நேரிற்றியற்சீர் வாரா என்று உரைப்பாராம். (இவர் இளம்பூரணராவார்) இவ்விரு வருரையையும் மறுத்துவிட்டு நேரீற்றியற்சீர் இறுதிக்கண் நிற்றல் பெரும்பான்மை என்பர்.

''மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும்''

என்னும் புறநானூற்றுப் பாடலில் வஞ்சியடிக்கண் நேரீற்றியற் சீர் பலவந்தன என்பர்.

ஆனால், பேராசிரியர் உரையை ஆராய்ந்து அச்சிட்ட **திரு. சி. கணேசையர் அவர்கள்** அடிக்குறிப்பில் ''இறுதி நில்லா என்பதற்கு இறுதலோடு நில்லா என்று பொருள் கோடற்குக் காரணம் கடைச்சங்க நூல்களை நோக்கியதாகலின், அது பொருந்தாது. இந்நூல் செய்த காலத்து இறுதியில் நில்லா

திருத்தல் வேண்டுமென்று கோடலே பொருத்தமாகும்'' என்று எழுதியுள்ளார்.

மேல் நூற்பாக்களுடன் ஒப்பு நோக்கத்தக்க நூற்பாக்கள்

''நேரீற் றியற்சீர் கலிவயின் இலவே
வஞ்சி மருங்கினும் இறுதியின் இலவே''

என்றார் நத்தத்தனார் (யா. வி. கழ. பக். 70).

''இயற்சீர் நேரிறல் தன்றளை உடைய
கலிக்கியல் பிலவே காணுங் காலை
வஞ்சி யுள்ளும் வந்த தாகா
ஆயினும் ஒரோவிடத் தாகும் என்ப,''

என்பது பல்காயம் (யா. வி. கழ. பக். 435).

''..... வஞ்சி கலியின்நேர் இற்ற
இயற்சீர் ஆகா என்மனார் புலவர்''

என்றார் அவிநயனார் (யா. வி. கழ. பக். 70).

நேரீற்று இயற்சீர்

நோற்றியற்சீர் ஒத்தாழிசைக் கலிப்பாவினுள் வாரா. இயற்சீராானே வஞ்சியுங் கலியும் பயின்று வாரா. ஆனால், கலிவெண்பாவினுள்ளும் வஞ்சியடி முதற்கண்ணும் கொச்சகக் கலியுள்ளும் வஞ்சியடி நடுவும், முச்சீரடி வஞ்சியுள்ளும் இருசீரடி வஞ்சியுள்ளும் நேரீற்றியற்சீர் சிறுபான்மை வரும் என்பர் (யா. வி. நூற்பா 15 உரை).

26. இசைநிலை நிறைய நிற்குவ தாயின்[1]
அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே[2].

என்-னின் ஓரசைச்சீர் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இசை நிற்கின்ற நிலை **நிரம்ப**[3] நிற்குமாயின் அசையும் **சீராந்தன்மை** போல வரையார் ஆசிரியர் என்றவாறு.

பா.வே. 1 '**நிற்குவ வாயின்** பேரா; நச்.
'நிற்குப' சு. வே.
2 'பெறலே' பேரா; நச்.
சு.வே. 3 நிரம்பா

உதாரணம்:- நாள், மலர், காசு, பிறப்பு எனவரும் (உசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஓரசைச்சீர்

இளம்பூரணர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் நான்கு அசையும் சீராக வரும் என்பர்.

ஆனால், **யாப்பருங்கலம்** ஓரசைச்சீர் பொதுச்சீர் என்றும் ஆகும்; அது நாள் மலர் என இரண்டே யாகும் என்ற கருத்தால்,

"ஓரசைச் சீருமஃது ஓரிரு வகைத்தே" (14)

என்று கூறும். அதன் உரையாசிரியர் "உதாரணம் நாள் மலர் என்பன. இவை ஓரசைச் சீர்க்கு உதாரணம் உரைத்தது, **வெண்பாவின் இறுதி ஓசை ஊட்டுதற் பொருட்டு" என்பர்.**

ஆனால், இங்கே காட்டப்பட்ட மேற்கோள் நூற்பாக்கள்

"நேர்நிரை வரினே சீர்நிலை எய்தலும்
பாவொடு பிறவும் ஆகும் ஒரோவழி" (அவிநயம்)

"நேரும் நிரையும் சீராய் வருதலும்
சீரும் தளையும் சிதைவுழிக் கொளலும்
யாவரும் உணர்வர் **யாவகைப் பாவினும்**" (மயேச்சுரம்)

என நேர், நிரை என்னும் இரண்டே ஓரசைச்சீர் என்று குறிப்பிட்டாலும், இவை எல்லாப் **பாவிற்கும் பிறவற்றிற்கும்** வரும் என்று கூறுகின்றன. விருத்தி ஆசிரியரும் பின்னே ஒழிபியலில் அசைச்சீர், பல பாக்கட்கு வரும் என்பர்.

மேற்கோள்

"இசைநிலை" என்னும் இந்நூற்பா பக். 68, 439 மேற் கோள் (யா. வி. கழ.).

27. இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே
தளைவகை சிதையாத் தன்மை யான.

என்-னின் அவ் வோரசைச்சீரில் தளை ஆமாறு உணர்த்து தல் நுதலிற்று.

(இ-ள்) ஓரசைச் சீரைத் தளைவகை சிதையாத் தன்மை வேண்டு மிடத்து இயற்சீரின் ஈறு போலக்[1] கொள்க என்றவாறு. (உ௯)

பதிப்பாசிரியர் விளக்கம்

அசைச்சீர்க்குத் தளை கொள்ளுமாறு

இந்நூற்பா நான்கு அசைச்சீர்க்கும் தளை கொள்ளுமாற் றைக் கூற வந்ததாகக் கருதி **இளம்பூரணர்** உரை கூறுகின்றார். நேர்பு, நிரைபு என்னும் உரியசைச் சீர் இரண்டிற்கு மட்டுந் தளை கொள்ளுமாற்றைக் கூற வந்ததாகக் கருதிப் **பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்** உரை கூறுகின்றனர்.

இளம்பூரணர் கருதியவாறு **நான்கு அசைச் சீருக்கும் தளை கொள்ளுமாற்றை யாப்பருங்கல விருத்தி ஆசிரியர்,**

''இனி அசை சீராய் நின்ற விடத்துத் தளை வழங்கும் பொழுது நேரசைச் சீருக்கு மற்றும் ஓரலகு கொடுத்து நேர் நேர் ஆகவும், நிரையசைச் சிருக்கு மற்றும் ஓரலகு கொடுத்து நிரை நேர் ஆகவும் நேர்பு அசைச்சீருள் ஓரலகு களைந்து தேமாவாகவும் நிரைபு அசைச்சீருள் ஓரலகு களைந்து புளிமா ஆகவும் வைப்பர் எனக் கொள்க. என்னை?

> ''உரியசைச் சீர்ப்பின் உகரம் நேராய்த்
> திரியும் தளைவகை சேர்த லானே''

என்றார் நல்லாறனார்.

> ''சீரா கிடனும் உரியசை உடைய
> நேரீற் றியற்சீர் அவ்வயி னான''

என்றார் நற்றத்தனார்.

> ''இயற்சீர்ப் ..... தன்மை யான''

உரை-சு.வே: 1 'இயற்சீர் போலக்'

என்றார் **தொல்காப்பியனார்.**

''நேர்நேராம் நேரசையும் நேர்பும்; நிரைநேராம்
நிரையும் நிரைபும் எனல்''

இவற்றை விரித்து உரைத்துக் கொள்க'' என்பர்.

யாப்பருங்கலம் 21 ஆம் நூற்பாவுரையுள் விதப்பினால் **''ஓரசைப் பொதுச் சீரை இயற்சீரே போலக்** கொண்டு வருஞ்சீர் முதலசை யோடு ஒன்றியது ஆசிரியத் தளையாகவும், ஒன்றாதது வெண் டளையாகவும் கொண்டு வழங்கப்படும்'' என்று விருத்தி ஆசிரியர் கூறி,

''ஓரசைப் பொதுச்சீர்த் தளைவகை தெரியின்
ஈரசைச் சீர்த்தளைக் கெய்தும் பெயரே''

''ஓரசைப் பொதுச்சீர் ஒன்றா தாயின்
வெண்டளை; ஒன்றிய தாசிரியத் தளையே''

எனவும் சொன்னாரும் உளரெனக் கொள்க என்பர்.

இவையெல்லாம்

பேராசிரியர், நச்சினார்க்கினியர் கருத்திற்கு மாறுபட்டவையாம்.

28. வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே.

என்-னின் இதுவுந் தளைவழக்குந் திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்சீர் ஈற்றசை தளை வழங்குமிடத்து, இயற்சீர் அசை நிரையீறு போலும் என்றவாறு.

'இயற்சீர்' என்பது அதிகாரத்தான் வந்தது. **(உ-அ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

உரையாசிரியர்களின் உரை வேறுபாடு

பேராசிரியர் இந்நூற்பாவிற்கு ''இது வெண்சீராற் கலித்தளை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று'' என்று நுதலிய துரைத்து, 'கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ' (செய். 23) என்புழி, அவ்வாசிரிய ருரிச்சீராற் கலித்தளையாம் என்றார் அவ்வதி

காரம் இடையறாது நின்றமையின். இதுவும் கலித்தளைக்கே இலக்கணமாயிற்று என்றாற்கு, ''வஞ் சிமருங்கினும்'' (செய். 25) எனவும், ''இசைநிலை நிறைய'' (செய்.26) எனவும், ''இயற்சீர்ப் பாற்படுத்து'' (செய். 27) எனவும் இம்மூன்று சூத்திரமும் இடையிட்டனவாலெனின், அற்றன்று. கலிப்பாவிற்கு விலக்கப் பட்ட நேரீற்றியற்சீர் அதிகாரம் பற்றி இடைபுகுந்தவல்லது கலித்தளை அதிகாரம் விலக்கினவல்ல என்பது'' என்று தடையும் விடையும் கூறுவர். மேலும் ''வெண்சீர் பல தொடர்ந்து ஒரு கலியடியுள் நின்ற வழி, அவ்வெண்சீருள் ஈற்று நின்ற சீரின் முதல் வந்த நேரசை மற்ற நிரைமுதல் வெண்சீர் வந்து முன்னைய இரண்டும் கலித்தளையாயவாறு போலக் கலித் தளையாம் என்றவாறு'' என்று நூற்பாவிற்குப் பொருள் எழுதிவிட்டு.

''அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையான்''

என்பது வெண்சீர்கள் பகைத்து வந்து, ஈற்றுச் சீரின் முதற்கண் நின்ற நேரசை நிரையசை போலக் கலியோசை கொண் டமையின் அது கலித்தளை எனப்பட்டது என்று விளக்கமும் எழுதுவர். **நச்சினார்க்கினியரும்** இதே கருத்தினராவர்.

ஆனால் யாப்பருங்கல விருத்தி ஆசிரியர்,

''தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா'' என்றும், போதுபூ, போரேறு, பூமருது இவைகளைப் பாதிரியாகவும், விறகுதீ, கடியாறு, மழகளிறு இவைகளைக் கணவிரியாகவும், **வெண்சீரின் ஈற்றசை நிரையசையாகவும்** இயற்றித் **தொல்காப்பிய னாரும் நற்றத்தனாரும்** முதலாகிய ஆசிரியர் சொன்ன மதமெல் லாம் வல்லார்வாய்க் கேட்டுக் கொள்க என்று எழுதுவதைக் கருதினால் **இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையையே** அவர் கருது கின்றாரென்பது புலனாம்.

இளம்பூரணர் செய்யுளியல் 52ஆம் நூற்பாவுரையுள்,

''இனி வெண்சீர் வெண்டளையும், வெண்சீர் நிற்ப வருஞ் சீரும் வெண்சீராதல் இயற்சீராதல் வந்து வெண்டளையாக

வேண்டுதலின் நிலைமொழியாகிய வெண்சீரை "வெண்சீரீற் றசை நிரையசையியற்றே" (செய். 28) என ஓதுதலின், அதனை நிரையீற்றியற்சீர் ஆக்கினால் வருஞ்சீர் **நேர்முதலியற்சீராயின்** அதுவும் இயற்சீர் வெண்டளையாம்" என்று எழுதுவதை நோக்கினால் **இந்நூற்பா வெண்சீருக்கு முன் இயற்சீர் வருவதற்கே** விதி என்பது புலனாம்.

29. இன்சீ ரியைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய வடிக்கே.

என்-னின் ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இனிய ஓசை பொருந்தி வருகுவ தாயின், ஆசிரிய அடிக்கு வெண்பாவுரிச்சீர் வரையார் **ஆசிரியர்**[1] என்றவாறு. **(உக)**

பதிப்பாசிரியர் விளக்கம்

யா.க. விருத்தி. கழ. பக். 70 இல்

"ஓசையின் ஒன்றி வரினும்வெண் சீரும்
ஆசிரிய அடியுட் குறுகும் என்ப"

என்ற வடிவத்தில் ஒரு நூற்பா உள்ளது. இந்நூற்பாக் கருத்தும் தொல்காப்பிய நூற்பாக் கருத்தும் ஒத்துள்ளன. ஆனால் இந் நூற்பாவில் உள்ள 'இன்' 'உம்' என்பன நன்கு பொருள் தருமா றில்லை. அதனால்

"ஓசை ஒன்றி வரின்வெண் சீரும்
ஆசிரிய அடியுட் குறுகும் என்ப"

என்றிருப்பது நன்று.

ஆசிரிய அடியில் வருதலால், இன்சீர் இயைந்தால் வெண்சீர் வரும் என்பது தொல்காப்பியர் கருத்து. **காரிகை உரையாசிரியர்**

உரை. சு, வே. 1 'சிலர்'

30ஆம் காரிகை உரையில் வெண்சீர் விரவிய இயற்றளை, வெள்ளடி ஆசிரியப் பாவில் அருகி வரும் என்பர்.

30. அந்நிலை ருங்கின் வஞ்சி யுரிச்சீர்
ஒன்றுத லுடைய வொரோவொரு வழியே.

நச்சினார்க்கினியர் உரையுள் 'ஓரோ வோர்' என்று எழுது வதால் அதுவும் பாடமாகலாம்.

பேராசிரியர் 'ஒருவழி என்னாது' 'ஓரொரு வழி' என்றது என்னையெனின் என்று உரைத்தலால் அவர் பாடம் புலப்படும்.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) இன்சீர் இயைய வருகுவதாயின் (செய்.29) வஞ்சியுரிச்சீரும் ஒரோவழி[1] ஆசிரிய அடிக்கண் வரும் என்ற வாறு.

ஈரசை கொண்டு (செய்.11) என்பது முதலாக இத் துணையுஞ் சொல்லப்பட்டது:—

ஓரசைச் சீர் நான்கு, ஈரசைச்சீர் பதினாறு, மூவசைச்சீர் அறுபத்து நான்கு ஆகச் சீர் எண்பத்து நான்கில் ஓர் அசைச்சீர் நான்கெனவும், அது தளை வழங்கும் வழி இயற்சீரொக்கு மெனவும், ஈரசைச்சீர் பதினாறுள்[2] சிறப்புடைய இயற்சீர் நான்கும், சிறப்பில் இயற்சீர் ஆறும் எனப் பத்தாம் எனவும், ஆசிரியவுரிச்சீர் ஆறு எனவும், மூவசைச்சீர் அறுபத்து நான்கில் வெண்பாவுரிச்சீர் நான்கெனவும் ஏனைய வஞ்சியுரிச்சீர் எனவும் தொகை கூறியவாறு.[3] (சூ 0)

பதிப்பாசிரியர் விளக்கம்

பிறபாக்களில் வரும் வஞ்சி உரிச்சீர்

நூ. பா. வே: 1. 'வோ ரோர்' பேரா.
'வோ ரொரு' நச்.

உரை: சு.வே: 1. ஓரோ ஒருவழி
2. பதினாறும்
3. கூறியவாறு

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர்

''வஞ்சியுரிச்சீர் அறுபதும் வெண்பாவிற் புகபபெறா; **ஆசிரியத்துள்ளும்** கலியுள்ளும் மாசெல்சுரம், புலிசெல்சுரம், மாசெல்காடு, புலிசெல்காடு, மாசெல் கடறு, புலிசெல் கடறு, பாம்பு செல்வாய், பாம்பு படுவாய், களிறு செல்வாய், களிறு படுவாய் என்னும் **பத்து** வஞ்சியுரிச்சீரும் **புகப் பெறும் எனக் கொள்க. ஒழிந்த ஐம்பது வஞ்சியுரிச்சீரும் அகவலுட் புகப்பெறா** எனக் கொள்க'' என்பர்.

''நிரைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
கலியினோ டகவலிற் கடிவரை யிலவே'' (யா. க. நூற். 16)

''இணைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
இணையுள ஆசிரி யத்தன வாகா'' (காக்கைபாடினியார்)

''நடுவு நேரியல் வஞ்சி யுரிச்சீர்
உரிமை யுடைய ஆசிரியத் துள்ளே'' (சிறுகாக்கைபாடினியார்)

''நேர்நடு வியலும் வஞ்சி யுரிச்சீர்
ஆசிரி யத்தியல் உண்மையும் உடைய'' (அவிநயனார்)

''நிரைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
வருதல் வேண்டும் ஆசிரிய மருங்கின்'' (மயேச்சுரர்)

(யா. வி. கழ. பக். 84)

(5) அடி

31. நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே.

என்-னின் நிறுத்த முறையானே அடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நான்குசீர் ஒருங்கு தொடுத்து வருவதனை அடி என்று சொல்லப்படும் என்றவாறு.

இதன் வேறுபாடு முன்னர்க் கூறப்படும். (கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

நாற்சீர் கொண்ட அடியின் சிறப்பு

யா. க. 24 ஆம் நூற்பாவுரையுள் 'நிரனிறை வகையால் நிறுத்தனர் கொளலே' என்பது இல்லாவிடினும் நிரல்நிறைப் பொருள்கோளாம் 'ஐ ஔ...வாகும்' (தொல். எழு. 42) என்றாற் போல. பெயர்த்தும் அதனை எடுத்தோதல் வேண்டிய தென்னை எனின்; நாற்சீரடி சிறப்புடைத்து; அதனை நேரடி என்றும், அளவடி என்றும் வழங்குப என்பது அறிவித்தற்கு வேண்டப்பட்டதெனக் கொள்க.

''நாற்சீர் கொண்டது நேரடி அதுவே
தூக்கொடும் தொடையொடும் சிவணும் என்ப''

என்றார் நற்றத்தனாரும் எனக் கொள்க என்றனர்.

2. நாற்சீரடிக்கு 'முற்றடி' என்றொரு பெயரிருத்தலைச் செய்யுளியல் 119ஆம் நூற்பாவால் உணர்க.

3. செய்யுளியல் 175ஆம் நூற்பா உரையில் 'அடிநிமிர் கிளவி' என்ற பகுதிக்கு, 'நாற் சீரடியின் மிக்குவரும் பாட்டு' என்று உரை எழுதப்புகுந்தவர், முன்னே, ''நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே என்றமையான் அடி என்பது நாற்சீரான் வருவதென்று கொள்க'' என்று **இளம்பூரணர்** எழுதுகின்றார்.

4. **சேனாவரையர்,** அளவடி யல்லாதன விகார அடியாகலிற் பட்டாங் கமைந்தில வாகலிற் பட்டாங்கமைந்த ஈரடி எனவே அளவடியாதல் பெறப்படும் என்பர். (தொல்.சொல்.406)

5. **பேராசிரியர்** ''அடியென்று சிறப்பித்துக் சொல்லப் படுவன நாற்சீரடி என்றவாறு. எனவே, இருசீரானும் முச் சீரானும் ஐஞ்சீரானும் அறுசீர் முதலியவற்றானும் வருமாயினும் அவை சிறப்பில என்றவாறாம்'' என்பர்.

6. **இளம்பூரணர்** இறுதியில் ''இதன் வேறுபாடு முன்னர்க்

கூறப்படும்'' என்றது போல் **பேராசிரியரும்** உரை இறுதியில் ''இவற்றது விகற்பமெல்லாம் முன்னர்ச் சொல்லுதும்'' என்பர்.

32. அடியுள் எனவே தளையொடு தொடையே.

என்-னின் தளைக்கும் தொடைக்கும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தளையும் தொடையும் அடியின்கண் என்றவாறு. (கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. செய்யுளியல் 88ஆம் நூற்பா 'அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை' என்பதாகும். அந்நூற்பாவுரையுள் **இளம் பூரணர்** அஃதேல் '''அடியுள் எனவே தளையொடு தொடையே' என வோதி, ஈண்டு மற்றையடியினும் வருமென்றல் பொருந்தா தெனின், ஆண்டு மற்றையடியில் வாரா தென்றாரல்லர். அடிவரையறையில்லாத உரை முதலான வற்றில் தளையொடு தொடை இல்லை என்பார் அடியுள்ளெனவே தளையொடு தொடை என்றார்'' என்று எழுதியதைக் காண்க.

2. அடி என்றதன் காரணம்

1. யா. விருத்தி ஆசிரியர்

23 ஆம் நூற்பாவுரையுள் ''பலவும் சிலவுமாகிய தளையொடு பொருந்திய சீர்களால் அடுத்து நடத்தலின் அடி என்பது காரணக் குறி. என்னை?

''தடுத்தனர் தட்ட தளைபல தழுவியும்
அடுத்த சீரின் அடியெனப் படுமே''

என்றார் ஆகலின்'' என்பர்.

3 நாற் சீரடியில் தொடை

சீரிரண் டிடைவிடத் தொடுப்ப தொரூஉத் தொடை–44

என்னும் யாப்பருங்கல நூற்பாவுரையுள் "**சீரிரண்டிடைவிடின் ஒருஉவென மொழிப**" என்றார் **பல்காயனார்** ஆகலானும், அவ்வாறு ஓதாமல் பெயர்த்தும் தொடை என்று சொல்ல வேண்டிய தென்னையெனின் **தொடை விகற்ப மெல்லாம் நாற்சீர் அடியுள்ளே வழங்கப்படும் என்பது எல்லா ஆசிரியர்க்கும்** துணிவென்பது அறிவித்தற்கு ஒரு தோற்றம் உணர்த்திய தென்க என்பர் (கழ. பக். 174).

4. "பாட்டான நல்ல தொடையாய் போற்றி"

திருநாவுக்கரசர்.

33. அடியிறந்து வருத லில்லென மொழிப.

என்-னின் மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தளையுந் தொடையும் நான்கு சீரடியில் வருதலன்றி அடியினீங்கி வருதல் இல்லை என்றவாறு.

அடிவரையறை யில்லாதன வற்றிற் கொள்ளப்படாது என்றவாறாம். (கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1 தளையும் தொடையும் வரும்இடமும் வாரா இடமும்

தளையொடு தொடை அடியுள்ளனவே யன்றி அடி வரை யறை யில்லாத உரை முதலாயினவற்றில் அவை வாரா என்பது கருத்து.

32 ஆம் நூற்பாப் பதிப்பாசிரியர் விளக்கத்தினை நோக்குக.

34. அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.

என்-னின் இதுவும் அடிக்குரிய தோர் சிறப்புணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடியின் சிறப்பினானே பாட்டென்று சொல்லப் படும் என்றவாறு. எனவே, பாட்டென்னுஞ் செய்யுட்கு அடி இன்றியமையா தென்றுகொள்க. பாட்டாவன வெண்பா

ஆசிரியம் கலி வஞ்சி என்பன.

இனி, அவ்வடியினை எழுத்தளவினாற் குறியிடுகின்றார். (கூச)

பதிப்பாசிரியர் விளக்கம்

பாட்டிற்கு இன்றியமையாதது நாற்சீரடி

பேராசிரியர் "இது நாற்சீரடியையே விசேடித்துக் கூறி, அத னது இடத்தானே பாட்டென்பதோர் முதற்பொருள் தோன்று மென்பது உணர்த்தியவாறு. 'எனப்படும்' என்றதனான் இவ் வடிகளான் வந்த செய்யுளே சிறப்புடைய என்பதூஉம் சொல் லியவாறு. மாத்திரை முதலிய உறுப்புக்களான், இத்துணை மாத்திரை கொண்டது செய்யுளென்றானும், இத்துணை அசை யுஞ்சீரும் தொடையுங் கொண்டது செய்யுளென்றானும் அளவி யல் கூறி, அவ்வுறுப்புக்களான் வரையறுக்கப்படா. அடியளவே கூறச் செய்யுட் புலப்பாடா மென்பது. 'எனப்படும்' என்ற தனான் ஒழிந்த அடிகளானும் அவ்வாறு வருமாயினும் அவை சிறப்பில என்பது".

"அடியின் சிறப்பென்பது அடி இரண்டும் பலவும் அடுத்து வந்த தொடையே பாட்டு என்றவாறு. தலை இடை கடைச் சங்கத்தாரும் பிற சான்றோரும் நாற்சீரடியான் வரும் ஆசிரிய மும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையும் செய்தார். வஞ்சிப்பாச் சிறுவரவீற்றெனக் கொள்க" என்பர்.

நச்சினார்க்கினியர்

தாம் உரை கொள்ளும் பழக்கம் பற்றி "அடியின் பாட்டே சிறப்பெனப் படுமே" என மொழி மாற்றி உரை கூறுவர்.

35. நாலெழுத் தாதி[1] யாக வாறெழுத்
தேறிய நிலத்தே[2] குறளடி பென்ப.

நூ. பா. வே: 1. நாலெழுத் தாதி ஆறெழுத் தெல்லை
2. நிலத்த யா-க.
2. 'நிலைத்தே' தொல்லூல்

என்-னின் குறளடி வரையறை உணர்த்துதல் நுதலிற்று,

(இ-ள்) நாலெழுத்து முதலாக ஆறெழுத் தீறாக ஏறிய மூன்று நிலத்தை உடைத்து குறளடி என்று சொல்லுவர் என்றவாறு. எனவே குறளடிக்கு நிலம் நாலெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்துமாம்

இதற்குரிய எழுத்து முன்னர்க் காட்டுதும்.[1] (கூடு)

பதிப்பாசிரியர் விளக்கம்

பாட்டிற்கு நாலெழுத்திலிருந்தே ஓசை வரும்.

> "நாலெழுத்து முதலாக ஆறெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியும் குறளடி" (யா.வி.கழ. பக். 111).

வீரசோழியம், "ஒன்றாதி யென்ப ரொருசா ரவரொரு நான்கு முன்னாம் என்றா லினிது சந்தத்தின்" (131) என்னும் காரிகையையும் விருத்த அடிகள் ஓரெழுத்து முதலாக வரும் என்பர் ஒரு சாரார்;

> 'நான்கெழுத்து முதலாக வந்தாலல்லது ஓசையுண்டாகா'

என்னும் அதன் உரையையும் நோக்கினால் **நாலெழுத்தி லிருந்தே பாட்டிற்குரிய ஓசையுண்டாகும்** என்பது அறியப்படும்.

36. ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
யீரெழுத் தேற்ற மல்வழி யான.[1]

என்-னின் சிந்தடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஏழெழுத் தென்று சொல்லுவர் சிந்தடிக்கு அளவு; ஒன்பதெழுத்து ஏற்றம் அல்லாத விடத்து என்றவாறு.

எனவே ஏழும், எட்டும், ஒன்பதுமாகிய எழுத்தினாற் சிந்தடி யாம் என்றவாறாம். (கூசு)

உரை.சு.வே: 1 காட்டுப
நூ.சு.வே: 1. 'இல்வழி யான' யா.வி. கழகம் பக். 112
''அவ்வழி யான'' ,, பழைய

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒப்பு

ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் சிந்தடி. (யா.வி.கழ.பக் 111).

37. பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே.[1]

என்-னின் அளவடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

*அளவடி எனினும் நேரடி எனினும் ஒக்கும்.

(இ-ள்) பத்தெழுத்து முதலாகப் பதினான் கெழுத்தளவும் அளவடியாம் என்றவாறு.

எனவே பத்தும் பதினொன்றும் பன்னிரண்டும் பதின் மூன்றும் பதினாலுமென ஐந்து நிலம் பெறும். (கூ.67)

பதிப்பாசிரியர் விளக்கம்

நச்சினார்க்கினியத்தில் நூற்பாவும் உரையும் பொருந்தவில்லை.

நச்சினார்க்கினியர் அளவடிக் கெல்லை பத்தெழுத் தொன்றுமே என்று கூறுவர்; அதனோ டொத்த பதினொன்றும் பன்னிரண்டும் பதின்மூன்றும் பதினான்கு மாகிய நான்கெழுத் தானாகிய நான்கு நிலனும் **ஏற்றமாய் வாராத வழி** என்றவாறு என்று உரை கூறுவதைக் கருதினால் **''ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே''** என்ற பாடமே அவர் கொண்டதாகத் தெரிகிறது. ஆனால், அவர் பதிப்பில் உள்ள பாடம் **''ஒத்த நாலெழுத் தொற் றலங் கடையே''** என்பதாகும்.

38. மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப.[2]

என்-னின் நெடிலடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நூ.பா.வே: 1 'நாலெழுத் தேற்றலங் கடையே' இள;பேரா.
'நாலெழுத்தொற்றலங்கடையே' யா.வி;நச்; தொன்.
சு.வே: 2. 'மிகுத லிவடமபறு மென்றே'

(இ-ள்) பதினைந் தெழுத்து முதலாகப் பதினே ழெழுத் தளவும் நெடிலடியாம் என்றவாறு.

எனவே, பதினைந்தும் பதினாறும் பதினேழும் என மூன்று நிலம் பெறும் என்றவாறாம். (கூ அ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. **சொல்லிற்கேற்ற உரை**

நச்சினார்க்கினியர் "நெடிலடிக் கெல்லை பதினைந்தெழுத் தொன்றுமே என்று கூறுவர்; அதற்குப் பதினாறும் பதினேழு மாகிய இரண்டெழுத்து மிக்கு வரும் நிலம் இரண்டும் இயல் பென்று கூறுவர்" என்று எழுதுவது நூற்பாவின் சொல்லிற்கு ஏற்ற உரையாகும்.

2. இளம்பூரணர் கூறுவது கருத்துரையாகும்.

39. மூவா றெழுத்தே[1] கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலு மியல்பென[2] மொழிப

என்-னின் கழிநெடிலடி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பதினெட்டெழுத்து முதலாக இருபதெழுத்தளவுங் கழிநெடிலடியாம் என்றவாறு.

எனவே, பதினெட்டும் பத்தொன்பதும் இருபதும் என மூன்று நிலம் பெறும். (கூ கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. **நாற்சீரடியை ஐந்தாக வகுத்தமைக்குக் காரணம்**

பேராசிரியர் "குறளடி நிலங்களை வகுத் தொழியாது ஒழிந் தனவும் வகுத்துரைத்தான், அவை முதல் இடை கடையென மூன்று கூற்றான் ஒன்றொன்றனிற் சிறப்பு இழிபுடையன வென்று கொள்ளினும் கொள்ளலாம் என்பது. .....

நூ. பா. வே: 1. 'றெழுத்து' யா. வி.
2. 'மிவட்பெறு மென்ப' பேரா; நச்; யா. வி.

குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி யென நாற் சீரடிதானே ஐவகைப்படும் என்று அவற்றது பெயரும் முறையும் தொகையும் கூறினான்.

தொகை பதினேழ் நிலத்து ஐவகை யடி என்பது.

இப்பெயரெல்லாம் காரணப் பெயர். மக்களுள் தீரக் குறியானைக் குறளன் என்றும், அவனில் நெடியானைச் சிந்தன் என்றும், ஒப்பமைந்தானை அளவிற்பட்டானென்றும், அவனின் நெடியானை நெடியானென்றும், அவனின் நெடியானைக் கழிய நெடியான் என்றும் சொல்லுப. அவை போற் கொள்க இப் பெயர் என்பது" என்பர்.

2. நச்சினார்க்கினியர் கூறும் சீர்வகை அடி

"இவை சீர்வகை அடிக்கும் ஒக்கும். என்னை, சுருங்கிய எழுத்தானும் (4, 5, 6,) இருசீரானும் வருவன குறளடி எனவும், ஏறிய எழுத்தானும் (7, 8, 9) மூச்சீரானும் வருவன சிந்தடி எனவும், இடைநிகரன எழுத்தானும் (10, 11, 12, 13, 14) நாற்சீரானும் வருவன அளவடி எனவும், மிக்க எழுத்தானும் (15, 16, 17) ஐஞ்சீரானும் வருவன நெடிலடி எனவும், அவற்றின் மிக்க எழுத்தானும் (18, 19, 20) அறுசீர் முதலிய சீரானும் வருவன கழிநெடிலடி எனவும் இங்ஙனம் **இருவகை யடிக்கும்** ஒரு பெயரே கொள்க. அவை.

'ஒங்குதலை வியன்பரப்பின்' (மதுரைக்காஞ்சி)
'வலமா திரத்தான் வளிகொட்ப' (மதுரைக்காஞ்சி)
'சிறியகட் பெறினே யெமக்கியு மன்னே' (புறநா. 235)
'சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே' (புறநா. 235)
'நெறியறி செறிகுறி புரிதிரி பிரியா வறிவனை முந்துறீஇ'

(குறிஞ்சிக்கலி. 3)

'கவிரிதழ் கதுவிய துவரித ழரிவையர்
கலிமயிற் கணத்தொடு விளையாட'

'மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரு நாண
முழுதுலகு மூடி முளைவயிர நாறி'

என இவற்றை முறையே குறளடி, சிந்தடி, அளவடி, நெடி

லடி, கழிநெடிலடி எனப் பெயர் கூறுப. எண்சீரின் மிக்கன சிறப்பில" என்பர் நச்சினார்க்கினியர்.

(தொல். செய். 40 உரை)

40. சீர்நிலை தானே யைந்தெழுத் திறவாது
நேர்நிரை[1] வஞ்சிக் கடை மாகும்.

என்-னின் சீர்க்கு எழுத்து வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சீர்நிலை ஐந்தெழுத்தின் மிகாது நேர் இறுதியாங் காலத்து; நிரையீறாகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்தும் ஆகும் என்றவாறு.

எனவே, இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடி இல்லை என்ற வாறாம்; வஞ்சியுரிச்சீர் முச்சீரடியின்கண் வருதலின். **(சூ0)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இளம்பூரணர் கூறும் உரை

இளம்பூரணர் சீர்நிலை, 'நேர்நிரை என்று தொடங்கும் இரண்டு அடிகளையும் ஒரு நூற்பாவாகக் கொண்டு, "நேரசை இறுதியாங் காலத்துச் சீரது நிலைமைதான் ஐந்தெழுத்தின் மிகாது வரும்; நிரையசை ஈறாகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்தும் ஆகும்" என்று உரை கூறுகின்றார்.

இவர் கருவிளங்காய் போன்ற நேரீற்றுச் சீர் ஐந்தெழுத் திறவாது, கருவிளங்கனி போன்ற நிரையீறாகிய வஞ்சியுரிச் சீராயின் ஆறெழுத்தும் ஆகும் என்று கருதியுள்ளார் போலும்.

இவர் உரையில் எழும் ஐயம்

இவர் கருதுகின்றாற் போல் கருதாமல், 'மூவசைச் சீரில் நேரீறு என்று கருதினால் 'நிரைபு நிரைபு நேர்' என வருஞ்சீர் முற்றுகர ஈறாயின் ஏழு எழுத்தினைப் பெற்று வருமே!

நூ. பா. வே. பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் மேற் காட்டிய நூற்பாவை இரண்டு நூற்பாவாகக் கொள்வர்.
1. 'நேர்நிலை' பேரா; நச்.

நேரீறு நிரையீறு என்ற இரண்டு ஈற்றினை மட்டும் கொண்டால் நேர்பு, நிரைபு ஈறாகிய சீர் இத்தனை எழுத்தால் வ்ரும் என்று ஆசிரியர் கூறாததென்? என ஐயங்கள் எழுகின்றன.

2. பேராசிரியர் கூறும் உரை (இரண்டு நூற்பா)

அவர் "சீர்நிலை தானே ஐந்தெழுத் திறவாது" என்று முதலடியைத் தனி நூற்பாவாகவும், இரண்டாவது அடியை 'நேர்நிலை' என்று பாடங் கொண்டு "நேர்நிலை வஞ்சிக்காறு மாகும்" என்று மற்றொரு நூற்பாவாகவும் அமைத்துக் கொள்ளு கின்றார்.

முதல் நூற்பாவிற்கு

"இது மேல் எழுத்தெண்ணி அடிவகுக்கப்பட்ட ஐவகையடிக்கும் சீரும் எழுத்தெண்ணியே வகுக்கின்றது" என்று கருத்துக்கூறி "சீரது நிலைமைதான் ஐந்தெழுத்து இறந்து வாராது என்ற வாறு" என்று உரைகூறிப், "பெருமைக்கு எல்லைகூறி வரை யறுக்கவே, சிறுமைக்கு எல்லை வரையறைப்படாது; ஒன்று முதலாக வரும் என்பதாம்' என்று விளக்கவுரையும் எழுதியுள் ளார்.

நேர்நிலை என்ற மற்றொரு நூற்பாவிற்கு

"ஃது, ஒழிந்த வஞ்சிப்பாவினுள் வருஞ்சீர் இத்துணை எழுத்து இறவாதென்கின்றது. நேர்நிலை வஞ்சி என்பது சம நிலை வஞ்சி; அஃது இருசீரான் வருதலிற் சமநிலை வஞ்சி யெனப்பட்டது. முச்சீரான் வருவதனை வியநிலை வஞ்சி என்ப வாகலின்" எனக் கருத்துக் கூறி,

"இருசீரடி வஞ்சியுள் ஒரு சீர் ஆறெழுத்தாகவும் பெறும் என்றவாறு" என்று உரை கூறியுள்ளார்.

3. பேராசிரியர் கருத்தை ஒட்டியது, யா.க. விருத்தியாசிரியர் உரை

விருத்தியாசிரியர், "வெண்பா ஆசிரியம் கலியுள் வருஞ்சீர்

ஐந்தெழுத்தின் மிகா; வஞ்சிப்பாவின் சீர் ஆறெழுத்தின் மிகா'' என்று கூறி,

''அளவியற்பா ஆன்றசீர் ஐந்தெழுத்திற் பல்கா
வளவஞ்சிக் காறுமாம் மாதோ''

என்று ஒரு மேற்கோளும் காட்டியுள்ளார்.

4. இளம்பூரணர் உரைக்கு அமைவு வேண்டும்

இளம்பூரணர் இந்நூற்பா உரையில், எனவே இருப தெழுத்தின் மிக்க நாற்சீரடியில்லை என்றவாறாம்; **வஞ்சி உரிச் சீர் முச்சீரடியின் வருதலின்** என்பர். இவ்வாறு கூறியவர், இவ் வியல் 48ஆம் நூற்பா உரையில், அறுநூற்றிருபத்தைந்து வேறு பாடுகளையுடைய நாற்சீரடிகளை ஆக்கிக் கொள்ளும்பொழுது, அசைச்சீர் இயற்சீர் ஆசிரியவுரிச்சீர் வெண்சீர் **வஞ்சியுரிச்சீர்** என்னும் ஐவகைச் சீர்களையும் வைத்து உறழ்ந்தே அவ்வடிகளை உண்டாக்கிக் கொள்ளுகின்றார். **இதற்கு அமைவு வேண்டும்.**

41. எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலு மில்லென மொழிப.

என்-னின் இதுவுஞ் சீர்க்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈண்டு ஓதப்பட்ட அடிகள் பல தொடுக்கும்வழி ஓரடிக் கோரடி எழுத்தளவு குறைந்து வரினும் சீர்நிலை நான்கின் இழிதலும் மிகுதலும் இல்லை என்றவாறு.

(சக)

42. உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ
உயிர்த்திற மியக்க[1] மின்மை யான.

என்-னின் மேற் சொல்லப்பட்ட அடிக்குரிய எழுத்து வரை யறை உணர்த்துதல் நுதலிற்று.

நூ.சு.வே:- 1. ''உயிர்த்திற மயக்க'' தொன்னூல்

(இ-ள்) உயிர் இல்லாத எழுத்தும் எண்ணப்படா; உயிர் போல இயக்கம் இன்மையான் என்றவாறு.

உம்மை எச்சவும்மை யாதலால் குறுகிய உயிர்த்தாகிய குற்றியலிகரமும் குற்றியலுகரமும் எண்ணப்படா என்று கொள்க.

எனவே, எண்ணப்படுவன உயிரும் உயிர்மெய்யுமாகி மாத்திரையிற் குறையாதன என்று கொள்ளப்படும். (சூஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. உயிர்த்திற இயக்கம் இல்லாதன

நச்சினார்க்கினியர் ''இஃது எய்தியது விலக்கிற்று'' என்று நுதலிய துரைத்து, ''ஒற்றும் ஆய்தமும் குற்றுகரமும் எழுத்தெனப் பெயர் கூறினாரேனும் எழுத்தாக எண்ணப்படா; என்னை? அவை தத்தம் ஓசை இனிது விளங்க ஒலித்தற்குக் கூறிய எண் வகை நிலத்தினும் விளங்க இயலாமையின் என்றவாறு'' என்று உரை கூறியுள்ளார்.

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் நாற்சீரடியுள் கொள்ளப்படும் குறளடி முதலாகிய ஐவகை அடிகளையும் எடுத்துக் கூறிவிட்டு, ''இவற்றுக்கு எழுத்து எண்ணுகின்றுழிக் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் ஒற்றும் ஆகிய இவை ஒழித்து எண்ணப்படும் எனக் கொள்க'' என்று கூறி,

> ''குற்றிகரம் குற்றுகரம் என்றிரண்டும் ஆய்தமும்
> ஒற்றும் எனவொரு நான்கொழித்துக்-கற்றோர்
> உயிரும் உயிர்மெய்யும் ஓதினார் எண்ணச்
> செயிரகன்ற செய்யு ளடிக்கு''

என்ற வெண்பாவை மேற்கோள் காட்டுவர்.

(யா.வி.கழ.பக்.113)

மேலும் அவ்வாசிரியர் யா.க. 36 ஆம் நூற்பாவுரையுள்

''அடிக்கு எழுத்து எண்ணுமாறு போலாது தொடைக்கு எல்லா எழுத்தும் கொள்ளப்படும்''

என்று வேறுபாடு கூறுவர்.

மேலே, ''ஒற்றெழுத் தியற்றே குற்றியலிகரம்'' (செய்.5) என ஒதிக் குற்றியலிகரத்தை விலக்கினமையின், **நச்சினார்க்கினியர்** ஒற்றும் ஆய்தமும் குற்றுகரமுமென இவற்றையே எடுத்தோதி விலக்கினர். எனவே, **உயிர்த்திறம் அமைந்த உயிரும், உயிர் மெய்யு மாகிய எழுத்துக்களே** எண்ணப்படுவனவாம் என்றுணர்க என்பர்.

2. உயிர்த்திற இயக்கம் உடையன

எழுத்துக்கள் இயக்கம் உடையன, இயக்கம் இல்லாதன என்று இருகூறுபடும். உயிர்த்திற இயக்கம் உடைய எழுத்துக்கள் அசை, சீர் முதலானவற்றை ஆக்கி நிற்கும். அவை **உயிரும் உயிர் மெய்யுமே.**

தொல்காப்பியர்

''அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்''

(நூற்.33) என்ற நூற்பாவில் உயிர் அளபிறந்து ஒலித்தலை 'உயிர்த்தலும்' என்றும், உயிர்மெய்யெழுத்து ஒலித்தலை, ''புள்ளியில்லா யெல்லா மெய்யும், உருவுரு வாகி அகரமொ டுயிர்த்தலும், ஏனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும், ஆயி ரியல உயிர்த்த லாறே'' (நூற்.17) (உயிர்த்தலும், உயிர்த்தலும், உயிர்த்த லாறே) என்றும் கூறுமாற்றால் உணரலாம்.

அவர், மெய் ஒலித்தலை, 'ஒற்றிசை நீடலும்' என, உயிர்த் தலின் வேறாகக் கூறியுள்ளார.

43. வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்.

என்-னின் வெண்பா ஆசிரியம் கலிக்குரித்தாகிய அடியிலக் கணம் கூறினார். இனி, வஞ்சிப்பாவிற்குரிய அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சிப்பாவிற்கு உரிய அடி இரண்டு சீரை உடைத்து எனறவாறு. (சூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

வஞ்சியடி

இந்நூற்பாவிற்குப் **பேராசிரியர்,**

இது, ''நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்', எனவும், 'தன் சீரெழுத்தின் சின்மை மூன்றே' எனவும் எழுத்தெண்ணி வரை யறுக்கப்பட்ட சீர் இரண்டு கொண்டது வஞ்சியடி என்பது ணர்த்துதல் நுதலிற்று. குறளடியே வரையறையுடைய வஞ்சியடி எனப்படுவது என்றவாறு.

ஏகாரம் பிரிநிலை; என்னை? சிறப்புடை வஞ்சியடியைப் பிரித்து வாங்கிக் கொண்டமையின்; எனவே, முச்சீரான் வரும் வஞ்சியடியும் உள; அவை கட்டளையடி யல்ல என்றானாயிற்று.

இங்ஙனம் கூறவே, வஞ்சியடியும் ஒருவாற்றான் உறழ்ந்து கொள்ள வழிகாட்டினானாயிற்று.

இவ்வாறு கூறாக்கால் மூன்று பாவிற்கும் கூறினான் இதற் குக் கூறியதிலன் எனக் குன்றக்கூறல் என்னும் குற்றமாம் என் பது. இதனை மேல் 'குறளடி முதலா அளவடி காறும், உறழ் நிலை இலவே வஞ்சிக் கென்ப' (செய்.54) என உறழ்நிலை ஒருவாற்றானே கூறுமென்பது.

அச்சூத்திரத்தான் முச்சீரும் உறழ்ப வென்று கொள்ப வெனின், அஃதே கருத்தாயின் இருசீரும் முச்சீரும் வஞ்சிக் கென்ப வென்று உடனோதுவன்மன் ஆசிரியனென மறுக்க'' என்பர்.

யாப்பருங்கல விருத்தி, 'சிந்தடி குறளடி என்றிரண்டடியான் வஞ்சி நடக்கும்' என்ற நூற்பாவுரையில் 'குறளடி சிந்தடி' என்னாது, 'சிந்தடி குறளடி' என்று முறை பிறழச் சொன்னமை யால் குறளடி வஞ்சிப்பாச் சிறப்புடைத்தெனக் கொள்க. தலை தடுமாற்றந் தந்து புணர்ந்துரைத்தல் தந்திர உத்தி ஆதலின். பிறரும் வஞ்சிப்பாவிற்கு அடி வகுத்து உரைத்தார் எனக் கொள்க; என்னை?

''சிந்தடி குறளடி என்றா யிரண்டும்
வஞ்சிக் கிழமை வகைப்பட் டனவே''
என்றார் **காக்கை பாடினியார்.**

''வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்
முச்சீ ரானும் வருமிடன் உடைத்தே''
என்றார் **தொல்காப்பியனார்.**

''இருசீர் அடியும் முச்சீர் அடியும்
வருதல் வேண்டும் வஞ்சி யுள்ளே''
என்றார் **மயேச்சுரர்** என்க'' என்று கூறும்.

யாப்பருங்கலக் காரிகை,

''வஞ்சி யென்னும் ஒண்பாவடி குறள் சிந்தென்றுரைப்ப''
என்று கூறும் (21).

''இருசீர் அடி வஞ்சிக்கு ஒன்பது நிலத்தோடு, முச்சீர் அடி வஞ்சி சிறப்பின்மையால் ஒரு நிலமேயாகக் கொண்டு, வஞ்சி எல்லாமாய்ப் பத்துநிலம் என்ப தொல்காப்பியனார் முதலாகிய தொல்லாசிரியர். அதுவே இந்நூலுள்ளும் துணிவு'' (யா.வி. கழ.பக். 358) என்றும்,

''இனி நாலெழுத்து முதலாகப் பன்னிரண்டு எழுத்தின் காறும் உயர்ந்த ஒன்பது நிலமும் பெற்ற இருசீரடி வஞ்சிப்பா வருமாறு'' (யா.வி.கழ.பக். 500) என்றும்,

''இனி எட்டெழுத்து முதலாகப் பதினே ழெழுத்தின் காறும் உயர்ந்த முச்சீரடி வஞ்சிப்பா வருமாறு'' (யா.வி.கழ.பக். 501) என்றும் கூறி, அவற்றிற்கு உதாரணமும் யாப்பருங்கலவிருத்தி காட்டும்.

44. தன்சீ ரெழுத்தின் சிறுமை[1] மூன்றே.

என்-னின் வஞ்சியுரிச்சீர் குறைந்த நிலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சியுரிச்சீரின் சிறுமை மூன்றெழுத்தென்று கொள்ளப்படும் என்றவாறு.

நூ.பா.வே: 1. 'இன்மை' பேரா;நச்; யா.க.வி.

எனவே மூன்றெழுத்தும் நான்கெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்தும் வஞ்சியுரிச்சீர் எழுத்து என்றவாறாகும். (சச)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பாட ஆய்வு

இளம்பூரணர் வஞ்சிச்சீரின் எழுத்துச் சிறுமையை உணர்த்தும் நூற்பாவினைத் ''தன்சீர் எழுத்தின் **சிறுமை** மூன்றே'' என்று பாடம் ஓதி, ''வஞ்சியுரிச்சீரின் **சிறுமை** மூன்றெழுத்தென்று கொள்ளப்படும்'' என்று உரை எழுதியுள்ளார். இவர் உரையில் நூற்பாப் பாடமும் உரையும் ஒத்துள்ளன.

பேராசிரியர் நச்சினார்க்கினியர் உரைப்பதிப்பில் ''தன் சீரெழுத்தின் **சின்மை** மூன்றே'' என்று பாடந்தரப்பட்டுள்ளது. ஆனால், **பேராசிரியர்** ''வஞ்சியடிச்சீர் மூன்றெழுத்துச் **சிறுமை** பெறும்'' என்பர். **நச்சினார்க்கினியர்** ''ஈண்டுச் சிறுமைக்கு எல்லை கூறுகின்றது'' என்று நுதலியதுரைத்து, ''வஞ்சிச்சீர்க்கு எழுத்தின் **சிறுமை** மூன்றே'' என்பர்.

யாப்பருங்கல விருத்தி ஆசிரியரும் 'வஞ்சிப்பாவின் சீர் ஆறெழுத்தின் மிகா; **சிறுமை** மூன்றெழுத்தாவது சிறப்புடைத்து' என்று எழுதி, ''தன்சீ ரெழுத்தின் **சின்மை** மூன்றே'' என்ற பாடத்தில் நூற்பாவைக் காட்டுகின்றார். இவாகள் உரையில் நூற்பாப் பாடமும் உரையும் ஒவ்வவில்லை.

சிறுமைக்கும், சின்மைக்கும் அடிப்படையில் வேறுபாடிருத் தலால், இந் நூற்பாவிற்குச் 'சிறுமை' என்று இளம்பூரணர் கொண்ட பாடமே நல்ல பாடம் என்க.

2. வஞ்சியுரிச்சீர் ஈரெழுத்தானும் வரும்

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் யாப்பருங்கல விருத்தி ஆசிரியரும் 'நுந்தை காடு' என ஈரெழுத்தானும் வஞ்சியுரிச்சீர் வரும் என்ப.

45. முச்சீ ரானும் வருமிட னுடைத்தே.

என்-னின் இதுவும் வஞ்சியடி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சியடி மூன்று சீரானும் வரும் இடனுடைத்து என்றவாறு,

எனவே, வஞ்சியடி இருசீரடியானும் முச்சீரடி யானும் வரும் என்றவாறாம்.

உதாரணம்:- ''தூங்குகையா னோங்குநடைய
உறழ்மணியா னுயர்மருப்பின'' (புறநா.22)

இதனுள் மூன்றெழுத்து முதலாக ஆறெழுத்துக்காறும் சீர் வந்தவாறும், இருசீர் அடி ஆயினவாறும் காண்க.

''தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோள்மேல்''
(யா.வி.கழ.பக்.355)

எனவும் வரும். (சுநி)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒற்றும் குற்றுகரமும் நீக்கி எண்ணின் ''தூங்கு கையான்' என்பது மூன்றெழுத்து; ''ஓங்கு நடைய'' என்பது நான் கெழுத்து; ''உறழ்மணியான்'' என்பது ஐந்தெழுத்து; ''உயர் மருப்பின'' என்பது ஆறெழுத்தாகும்.

46. அசைகூ னாகு மவ்வயி னான.

என்-னின் மேற்சொல்லப்பட்ட வஞ்சிஅடிக்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட இருவகை அடியினும் அசை கூனாகி வரும் என்றவாறு. (சசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

வஞ்சி அடியுள் கூன்

1. நூற்பாவுள், 'அசை' என்றது நான்கசைகளையுங் குறிக்கு மென்பர் (பேரா; நச்.).

2 ''அடிமுதற் பொருள்பெற வருவது தனிச்சொலஃ
திறுதியும் வஞ்சியு ளியலும் என்ப'' (யா. க. ஒழிபியல். நூ.1)

என்னும் நூற்பாவிற்கு யாப்பருங்கல உரைகாரர் "அடிமுதற் கண் செய்யுளகத்துப் பொருளைத் தழீஇத் தனியே நிற்பது தனிச்சொல் எனப்படும். அது வஞ்சிப்பாவின் ஈற்றின்கண்ணும் வரப்பெறும் என்பர் புலவர் என்றவாறு" என்று உரை எழுதி, "இறுதியும் வஞ்சியுள் இயலும் என்ப என்னும் உம்மையால் தனிச்சொல் இடையும் வஞ்சியுள் நிற்கப் பெறும் எனக் கொள்க" என்பர். மேலும் அவர், "தனிச் சொல்லைக் கூன் என்று வழங்குவாரும் உளர் எனக் கொள்க; என்னை?

"அடியினிற் பொருளைத் தானினிது கொண்டு
முடிய நிற்பது கூனென மொழிப"

"வஞ்சி இறுதியும் ஆகும் அதுவே"

"அசைகூ னாகு மென்மனார் புலவர்"

என்றார் பல்காயனார்" என்பர்.

ஈற்றிலுள்ள "அசைகூ னாகும்" என்ற நூற்பா, **தொல் காப்பிய நூற்பாவை ஒருபுடை ஒத்துள்ளது.**

3. வீரசோழியம், "பாமுதல் நிற்பது கூன்வஞ்சி யீற்றினும்
பாதத்துள்ளும் ஆம்"

என்று கூறும்.

47. சீர்கூ னுத னோடிக் குரித்தே.

என்-னின் இதுவும் கூன் ஆகுமிடன் உணர்த்துதல் நுத லிற்று.

(இ-ள்) சீர் முழுதுங கூன் ஆகிவருதல் அளவடிக் குரித்து என்றவாறு.

'நேரடி' என்றதனான், வெண்பாவினும் ஆசிரியத்தினும் கலி யினும்[1] கொள்ளப்படும்.

க.வே. 1. வெண்பா வாசிரியங் கலியினும்

''அவரே கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே'' (குறுந்.216)

இது ஆசிரியத்திற் கூன்.

''உதுக்காண், சுரந்தானா வண்மைச் சுவர்ணமாம்1 பூதன்
பரந்தானாப் பல்புகழ் பாடி-இரந்தார்மாட்
டின்மை யகல்வது போல இருணீங்க
மின்னும்2 அளிதோர்3 மழை''. (யா.வி.கழ.பக். 375)

இது வெண்பாவிற் கூன்.

''நீயே, வினைமாண் காழகம் விளங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே'' (கலி.7)

இது கலிப்பாவிற் கூன். (சஎ)

பதிப்பாசிரியர் விளக்கம்

கூனைப் பற்றிய செய்திகள்

''அடிமுதற் பொருள்பெற வருவது தனிச்சொல்; அஃது இறுதியும் வஞ்சியுள் இயலும் என்ப''

என்றாலும் கருதிய பொருளைப் பயக்கும்; 'அஃது' என்று மிகுத்துச் சொல்ல வேண்டியது என்னையோ வெனின்? நான்கு பாவின் அடி முதற்கண்ணும் சீர் கூனாய் வரப் பெறும் என்பாராயினும், வஞ்சியடியின் முதற்கண், அசை கூனாய் வருவதும், உகரவீறாகிய நேரீற்றியற்சீர் கூனாய் வருவதும் சிறப்புடைய; வஞ்சியடியின் இடையும், இறுதியும் அசை கூனாய் வருவதன்றிச்சீர் கூனாய் வாராது; ஆண்டு உகரவீறாகிய நேரீற்றியற்சீர் அருகிக் கூனாய்வரவும் பெறும்; அச் சீர், அல்லாப் பாவின் அடிமுதற்கண் அருகியல்லது கூனாய் வாராது; கொச்சகக் கலியுள் ஓரடி கூனாய் வருமாயினும் சிறப் பில்லை; வெண்பா ஆசிரியம் கலி என்னும் இவற்றின் அடியுள் இடையும் இறுதியும் கூன் வரப்பெறாது என்பது அறிவித்தற்கு வேண்டப்பட்டது'' என்பர் யாப்பருங்கலவிருத்தியாசிரியர் (யா.வி.கழ.பக். 367, 377).

---

1. சுவணமாம், சுவர்ணமாப்
2. மன்னும்
3. அளித்தோ, மணித்தேர்

ஒத்த நூற்பா

46, 47 என்னும் இரண்டு நூற்பாக்களின் கருத்தினை,

1 ''அடிமுதற்கண் நான்கிற்கும் சீர்கூனாம்; ஆகும்
இடைகடையும் வஞ்சிக் கசை'' (யா.வி.கழ.பக். 378)

என்னும் குறள் ஒருவகையாக எடுத்துக் காட்டும்.

2. மாறனலங்காரம் பொருளணி 89 ஆம் நூற்பாவில் 'அதுவே' என்னும் சீர் கூனாதலுக்கு, இந்நூற்பா விதியை மேற் கோள் காட்டுவர் உரையாசிரியர்.

48. ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்[1]
எழுபது வகையின்[2] வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே.

என்-னின் மேற் சொல்லப்பட்ட அடிக்கெல்லாம் விரி உணர்த்து தல் நுதலிற்று.

(இ-ள்) **ஐ வகை அடியும் விரிக்கும் காலை** என்பது, நாற் சீரடியை எழுத்தளவு பற்றி வகுக்கப்பட்ட குறளடி முதலாகிய ஐந்தடியினையும் விரித்துரைக்கும் காலத்து என்றவாறு. மெய் என்பது உடம்பு; அஃதாவது அசையும் சீரும் தோற்றுதற் கிடமாகிய எழுத்து.

'மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்' என்பது, எழுத்து வகை அமைந்த நாலெழுத்து முதலாக இருபதெழுத் தீறாகச் சொல்லப்பட்ட பதினேழ் நிலத்தும் என்றவாறு. **எழுபது வகையின் வழு இல வாகி** என்பது, எழுபது வகைப்பட்ட உறழ்ச்சியின் வழுவுதலின்றி என்றவாறு. எழுபது வகையாவது, இரண்டு சீர் தம்முட் புணரும் புணர்ச்சி எழுபது வகையாம் என்றவாறு.

நூ.பா.வே: 1. 'நிலத்தே' பேரா; நச்; யா.க.வி.
2. 'வகைமையின்' பேரா;
'தளையின்' யா.க.வி.

மேற் சொல்லப்பட்ட எண்பத்து நான்கு சீரினும் (செய். நூ. 30. உரை) இயற்சீரான் (ஒன்றி) வருவதனை இயற்சீரடி எனவும், ஆசிரிய வுரிச்சீரான் வருவதனை ஆசிரிய வுரிச்சீரடி எனவும், இயற்சீர் விகற்பித்து வருவதனை இயர்சீற் வெள்ளடி எனவும், வெண்சீரான் வருவதனை வெண்சீரடி[1] எனவும், நிரை யீற்று வஞ்சிச்சீரான் வருவதனை நிரையீற்று வஞ்சியடி எனவும், உரியசை யீற்றான் வருவதனை உரியசையீற்று வஞ்சியடி எனவும், ஓரசைச்சீரான் வருவதனை அசைச்சீரடி எனவும் வழங்கப்படும்.

அவற்றுள் **இயற்சீரடி** நேரீற் றியற்சீரடி எனவும், நிரையீற் றியற்சீரடி எனவும் இருவகைப்படும்.

நேரீற் றியற்சீரடியாவது நேரீறு நேர் முதலாகிய[2] இயற்சீர் வருதலும், நேர்புமுதல்[3] ஆசிரிய வுரிச்சீர் வருதலும், நேர்முதல் வெண்பாவுரிச் சீர் வருதலும், நேர் முதல் வஞ்சியுரிச் சீர் வரு தலும், நேர் முதல் ஓரசைச்சீர் வருதலுமென ஐந்து வகைப் படும். நிரையீற் றியற்சீரும் இவ்வாறே நிரைமுதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்துவகைப்படும்.

ஆசிரியவுரிச்சீரடியும் இருவகைப்படும். நேர்பு ஈறும் நிரைபு ஈறும் என. அவற்றுள் நேர்பு ஈற்றுச் சீரை நேர்பும் நேரும் முதலாகிய ஐந்து சீரோடும் உறழ ஐந்துவகைப்படும். நிரை யீற்றுச் சீரும் அவ்வாறே நிரைபும் நிரையும் முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகைப்படும்.

இயற்சீர் வெள்ளடியும், நேரீறும் நிரையீறுமென இருவகைப் படும். அவற்றுள் நேரீறு, நிரைபும் நிரையும் முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐவகையாம். நிரையீறும் அவ்வாறே நேர்பும் நேரும் முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐவகையாம்.

வெண்சீர் (அடியும்) நேர்முதலோடு உறழ்தலும் நிரைமுத லோடு உறழ்தலுமென இருவகைப்படும். அவற்றுள் (நேரீறு)

கு.வே: 1. வெண்சீர் வெள்ளடி
2. நேரியற்சீர் முதலாகிய
3. நேர்முதல்

நேர்பும் நேரும் முதலாகிய சீர்களொடு உறழ்தல் ஐந்துவகைப் படும். (நிரையீறும்) நிரைபும் நிரையும் முதலாகிய சீர்களொடு உறழ்தலும் ஐந்துவகைப்படும்.

நிரையீற்று வஞ்சியுரிச்சீர் (அடி) (வருஞ்சீர்) முதலசையோடு ஒன்றுவனவும் ஒன்றாதனவுமென இருவகைப்படும். அவற்றுள் ஒன்றி வருவது நிரைபும் நிரைபும் முதலாகிய சீரொடு உறழ ஐந்துவகைப்படும். ஒன்றாதது நேர்பும் நேரும்முதலிய சீரொடு உறழ ஐவகைப்படும்.

உரியசை யீற்று வஞ்சியடியும் அவ்வாறே உறழப் பத்து வகைப்படும்.

அசைச்சீரடியும் அவ்வாறே இருவகையாக்கி உறழப் பத்து வகைப்படும்.

இவ்வகையால்[1] தளை ஏழு பாகுபட்டன. இவை நேரொன் றாசிரியத்தளை, நிரையொன் றாசிரியத்தளை, இயற்சீர் வெண் டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித் தளை, ஒன்றாத வஞ்சித்தளை என எழுவகையாம்.

அவ்வழி, ஓரசைச்சீர் இயற்சீர்ப்பாற்படும்.

ஆசிரியவுரிச்சீரும் அதுவேயாம். மூவசைச்சீருள் வெண்பா வுரிச்சீர்[2] ஒழிந்தன வெல்லாம் வஞ்சியுரிச் சீராம்.

அவ்வழி இயற்சீர் நிற்ப, வருஞ்சீர் முதலசையோடு நேராய் ஒன்றுவது நேரொன் றாசிரியத் தளையாம்; நிரையாய் ஒன்றுவது நிரையொன் றாசிரியத் தளையாம்; மாறுபட்டு வருவது இயற்சீர் வெண்டளையாம்.

வெண்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாம்: நிரையாய் ஒன்றிற் கலித் தளையாம்.

சு.வே: 1. இவற்றால்
2. வெண்பாவுரிச்சீருமதுவேயாம். மூவசைச் சீருள் வெண்பாவுரிச் சீரொழிந்தனவெல்லாம் வஞ்சி.

வஞ்சியுரிச்சீர்[1] நிற்ப வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித் தளையாம்; ஒன்றாதது ஒன்றா வஞ்சித்தளை யாம்.

இவ்வகையால் தளை ஏழாயின. இவ்வாறாகி வருதல் வரு கின்ற சூத்திரங்களான் உணர்க.

இனி, அடி அறுநூற்றிருபத்தைந்தாமாறு:- அசைச்சீர் இயற்சீர் ஆசிரிய வுரிச்சீர் வெண்சீர் வஞ்சியுரிச்சீர் என்னும் ஐந்தினையும் நிறுத்தி, இவ் வைந்து சீரும் வருஞ் சீராக உறழும்வழி இருபத்தைந்து விகற்பமாம்; அவ் விருபத்தைந்தின் கண்ணும் மூன்றாவது ஐந்து சீரையும் உறழ நூற்றிருபத்தைந்து விகற்பமாகும்; அந்நூற்றிருபத்தைந்தின்கண்ணும் நான்காவது ஐந்து சீரையும் உறழ அறுநூற்றிருபத்தைந்தாம் என்றவாறு (சுஅ)

49. ஆங்கனம்[2] விரிப்பி[3] னளவிறந் தனவே
பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை.

என்-னின் அடி விரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈண்டு உறழ்ந்த முறையானே அஞ்சடி முதலாக மேன்மேலும் உறழ வரம்பிலவாம் என்றவாறு.

அஃதாவது, அறுநூற்றிருபத் தைந்தினோடும் ஐந்தாவது வரும் ஐஞ்சீரையும் உறழ மூவாயிரத் தொருநூற் றிருபத் தைந்து விகற்பமாம். அதன்கண் ஆறாவது இவ்வகை ஐந்து சீரையும் உறழப் பதினையாயிரத்து அறுநூற்றிருபத் தைந்து விகற்பமாம். அதன்கண் ஏழாவது வருஞ்சீர் ஐந்தினையும் உறழ எழுபத்தெண்ணாயிரத் தொருநூற்றிருபத் தைந்து விகற்பமாம். இவ் வகையினானுறழ[4] வரம்பிலவாய் விரியும்.

உரை சு-வே: 1. வஞ்சியுரிச்சீ ரீற்றசை
நூ.பா.வே: 2. 'ஆங்கனம்', நச்.
3. 'விரிப்ப' இளம்.செய்.நூ.64.உரை.
உரை சு.வே: 4. இவ்வகையில்

அன்றியும்[1] இச்சொல்லப்பட்ட அடியினை[2] அசையானும் எழுத்தானும் விரிக்க வரம்பிலவாம்[3]. (சகூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

உரையாசிரியர்கள் கருத்து

இந் நூறபாவிற்குப் பேராசிரியர் கருத்தும், நச்சினார்க் கினியர் கருத்தும் ஒன்றே.

1. **நச்சினார்க்கினியர்** கருத்து, சுருக்கமும் தெளிவும் உடையது.

"இஃது ஒழிந்த நான்கடியையும் (குறள், சிந்து, நெடில், கழிநெடில்) நாற்சீரடிபோல உறழ்க என்பார்க்கு அவை உறழா மைக்குக் காரணங் கூறுகின்றது" என்று நுதலியதுரைத்து,

"அந்நாற்சீரடி போல மற்றை நான்கடியினையும் விரிப்பின், அவை இலக்கணங் கூறுதற்கு வரையறைப்படாது எண்ணிறந் தனவாம்" என்று உரை கூறிவிட்டு,

"முதனூலாசிரியர் சிறப்புடையனவற்றிற்கும் சிறப்பில்லன வற்றிற்கும் ஒருங்கிலக்கணங் கூறின், அவை ஒத்த இலக்கணத் தவாம் என்று கருதி வரையறைப் படுவனவற்றிற்கே இலக் கணங்கூறி, வரையறையின்றிப் பரந்தவற்றிற்கு இலக்கணங் கூறிற்றிலர்; அவர் கருத்து நோக்கி இவ்வாசிரியரும் 'யானும் அவ்வாறே கூறினேம்' என்று கூறியதாயிற்று இதன் கருத்து" என்பர்.

2. **இளம்பூரணர்** 'ஆசிரிய மருங்கினும்' (செய். 64) என்னும் நூற்பாவுரையில் "இவ்வாசிரியரும் அடிக்குச் சீர் வரையறை யின்மை 'ஆங்கனம் விரிப்ப அளவிறந்தனவே பாங்குற வுணர்ந்

உரை சு.வே: 1. அன்றி
2. அடிவகையானும் எழுத்தானும்
3. வரம்பிலவாகும் எனவுமாம்

தோர் பன்னுங் காலை' என்றதனான் உணர்த்தினார் என்று கொள்க. ஈண்டு நாற்சீரடியை எடுத்தோதியது வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலிப்பாவும் அவ்வடியினால் வருதலின் என்று கொள்க'' என்பர்.

ஆங்கனம் — அத்தன்மை. இளம்பூரணர் 'ஆங்கனம்' என் பதற்கு 'ஈண்டு உறழ்ந்த முறையானே' என்று பொருள் உரைப்பர். இவ்வுரையே பொருந்துவதாம். பேராசிரியர் 'ஆங்கனம் விரிப்பின்' என்றதற்கு அந்நாற் சீரடிபோல மற்றைய அடிகளையும் விரிப்பின் என்பர். 'மற்றைய அடிகள்' என்பதை அதிகார இயைபின்றி வருவித்துக் கொள்ளுகின்றார்.

50. ஐவகை யடியு மாசிரியக் குரிய

என்-னின் ஆசிரியப்பா நாற்சீரான் வரும் என்பதுஉம் அதன்கண் விரிக்கப் பட்ட ஐவகை அடியும் உரித்தென்பதூ உம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நாற்சீரடிக்கண் வகுக்கப்பட்ட ஐவகையடியும் ஆசிரியப்பாவிற் குரிய என்றவாறு.

ஐவகை யடியும் உரிய என அவற்றிற்கு முதலாகிய நாற் சீரடியும் உரித்தாயிற்று.

உதாரணம்:—

''தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து
நேர்ந்து வாமனை நினையிற்
சேர்ந்த வல்வினை தேய்ந்தக லும்மே''

இதன்கண் முதலடி நாலெழுத்தான் வந்தவாறு காண்க.

''குன்று கொண்டு நின்ற மாடு
பொன்ற வந்த மாரி
சென்று காத்த திறலடி தொழுமே''

இதன்கண் முதலடி ஐந்தெழுத்தான் வந்தது.

''ஆறு சூடி நீறு பூசி
யேறு மேறு மிறைவனைக்
கூறு நெஞ்சே குறையிலை நினக்கே''

இதன்கண் முதலடி ஆறெழுத்தான் வந்தது.

''போது சாந்தம் பொற்ப வேந்தி
யாதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே'' (யா.வி.கழ.பக். 49, 265)

என்பது, முதலடி ஏழெழுத்தான் வந்தது.

''தன்றோ ணான்கி னொன்றுகைம் மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே''

இது, முதலடி எட்டெழுத்தான் வந்தது.

''கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி'' (குறுந்.1)

என்பது பத்தெழுத்தான் வந்தது.

''காமஞ் செப்பாது கண்டன மொழிமோ'' (குறு.2)

என்பது பத்தெழுத்தான் வந்தது.

''தாமரை புரையுங் காமர் சேவடி'' (குறு.கடவுள்)

என்பது பதினோ ரெழுத்தான் வந்தது.

''நாயுடை முதுநீர்க் கலித்த தாமரை'' (அகநா.11)

என்பது பன்னிரண் டெழுத்தான் வந்தது

''அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி'' (பெரும்பா)

என்பது பதின்மூன் றெழுத்தான் வந்தது.

''யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை'' (அகநா.16)

என்பது பதினா லெழுத்தான் வந்தது.

''ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை'' (புறநா.56)

என்பது பதினைந் தெழுத்தான் வந்தது.

''விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும் (குறுந்.101)

என்பது பதினாறெழுத்தான் வந்தது.

''தேன்றூங்கி யுயர் சிமைய மலைஞாறிய வியன்ஞாலம்'' (மதுரை.)

என்பது பதினே ழெழுத்தான் வந்தது.

''கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும் (புறநா.55)

என்பது பதினெட் டெழுத்தான் வந்தது.

''நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகன்மறவரும்'' (புறநா.55)

என்பது பத்தொன்ப தெழுத்தான் வந்தது.

''அமர்காணி னமர்கடந்தவர் படைவிலங்கி யெதிர்நிற்றலின் (புறநா.167)

என்பது இருபதெழுத்தான் வந்தது. (50)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. நூற்பாவில் 'ஆசிரியக்கு' என்பதைப் பற்றி

"ஆசிரியக் குரிய என்னுந் தொடரில் "ஆசிரியம் என்பது மகர ஈறு ஆதலின் 'மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை' (தொல். எழு. 185) என்பதனான் அத்துச் சாரியை பெறல் வேண்டும் எனின், அது செய்யுள் விகாரம் என்பாரும் உளர். அற்றன்று; ஆண்டு நின்றது நான்காம் உருபாயினன்றே அது கடாவாவது; அதனை ஏழாவதன் பொருண்மைக்கண் வந்த அக்குச் சாரியை என்றும், ஈறு திரியாது வந்தது என்றும் கொள்ளப்படும்" என்பர் **பேராசிரியர்**.

2. குறுந்தொகைப் பாட்டொன்றின் பாடம்

உரையில், உதாரணத்தில், ஆசிரியப்பா பத்தெழுத்தடியைப் பெற்று வரும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வேறுபாடத்துடன், "காமஞ் செப்பாது **கண்டன** மொழிமோ" (2) எனக் குறுந்தொகை அடியொன்றினை இளம்பூரணர் காட்டுகிறார். அவ்வடி இப்பொழுது 'கண்டது' என்ற பாடத்துடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அது குற்றியலுகர ஈறாதலின் அதனை அலகு பெறாதென்று களைய அது ஒன்பதெழுத்தடியாம்.

3. ஆசிரிய அடியின் எழுத்தளவு

''நான்கு முதலாக நாலைந் தெழுத்தளவும்
ஆன்ற அகவ லடிக்கெழுத்தாம்'' (யா.வி.கழ.பக். 46)

4. மேற்கோள்

பேராசிரியர், 'தன்சீர் வகையினும்' (செய். 54) என்னும் நூற்பா வுரையில் இயற்சீரால் கட்டளையடி யாதற்கு இந் நூற்பாவை மேற்கோள் காட்டுவர்.

51. விராஅய் வரினு மொரூஉநிலை யிலவே.

என்-னின் மேற் சொல்லப்பட்ட அடி விரவி வருமாறு வரை யறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட ஐந்தடியும் தனித்தனி ஆசிரியப்பாவிற் குரித்தாகி வருதலே யன்றி விரவி வரினும் நீக்கப்படாது என்றவாறு.

'ஒரூஉநிலை' என்றதனால் தனித்தனி வரினும், விரவி வரினும் ஒக்கும்[1] என்று கொள்க.

உதாரணம்:—

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட்டி யானைக்
கழறொடிச் சேய குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே,'' *(குறுந். 1)*

இதனுட் பல அடியும் வந்தவாறு காண்க. *(நிக)*

52. தன்சீர் வகையினுந் தளைநிலை வகையினும்
இன்சீர் வகையி னைந்தடிக்கு முரிய[2]
தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா.

என்-னின் இத்துணையும் அடியும் அடிக்குரிய எழுத்துக் களும் ஓதினார்; இனி அவ்வடிக்கண் ஓசை வேறுபாடும் தளை யிலக்கணமும் உணர்த்துவார் அத்தளைக்கண் வருவதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று[3].

(இ-ள்) தத்தஞ் சீர்நிலை வகையானும் தளைநிலை வகை யானும் இனிய ஓசை வேறுபாட்டினை உடைய ஐந்தடிக்குமுரிய தன்சீர் உள்வழித் தளை வேறுபாடு[4] கோடல் வேண்டா என்ற வாறு.

உரை சு.வே: 1. ஒழிக்கும்.
நூ. சு. வே: 2. ணைந்தடிக் குரிய
3. இனி, அவ்வடிக்கண் ஓசை வேறுபாடுணர்த்தும் தளையிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. (மதுரைத்தமிழ்ச்சங்கம். நச். செப்பு ளியல்) குறிப்பு
உரை.சு.வே: 4. தளைகள் வேறுபாடு

எனவே, சீர்தானே ஓசையைத் தரும் என்றவாறாம். 'உரிய தன்சீர்' என்றது ஐந்தடியினும் ஏற்றவழி நிலைபெறுந் தன்சீர் என்று கொள்க.

அஃதாவது குறளடியாகிய நாலெழுத்தினும் ஐந்தெழுத் தினும் ஆறெழுத்தினும் ஓரசைச் சீரும் ஈரசைச்சீரும் வருதலன்றி மூவசைச்சீர் வாராமை.

பிற ஆசிரியர் கொண்ட நேரொன்றாசிரியத்தளை, நிரை யொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றா வஞ்சித்தளை என ஏழுவகை யினும்; வஞ்சித்தளை நிலைமொழி, வஞ்சியுரிச்சீராக வருஞ்சீர் முதலசையோடு ஒன்றியது ஒன்றிய வஞ்சித்தளை எனவும், ஒன்றாதது ஒன்றா வஞ்சித்தளை எனவும் வழங்குப வாதலின், அவ் விருவாற்றானும் தளையாற் பயனின்றி நிலைமொழியாகிய வஞ்சியுரிச்சீர்தானே ஓசை யுணர்த்துதலின் வஞ்சித்தளை கோடல் வேண்டா ராயினார்.

இனி, வெண்சீர் வெண்டளையும், வெண்சீர்[1] நிற்ப, வருஞ் சீர்[2] வெண்சீராதல் இயற்சீராதல் வந்து வெண்டளையாக வேண்டுதலின், நிலைமொழியாகிய வெண்சீரை "வெண்சீ ரீற்றிசை நிரையசை யியற்றே" (செய். 28) என ஓதுதலின் அதனை நிரையீற்றியற்சீர் ஆக்கினால், வருஞ்சீர் நேர்முத லியற்சீராயின், அதுவும் இயற்சீர் வெண்டளையாம்.

அவ்வாறன்றி, வருமொழியும் வெண்சீராயின் "தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா" என்பதனான் அடங்கும்.

அதனான் இருவாற்றானும் வெண்சீர் வெண்டளை கொள் ளாராயினார்.

உரை.சு.வே: 1. வெண்சீரி னிறுதி வருஞ்சீரும் வெண்சீராதலின் இயற்சீராதல் வெண்டளையாக வேண்டுதலின்
2. வருஞ்சீர் வெள்ளையும்

இனி[1] ஒழிந்த நான்கு தளையும் கூறுகின்றாராயின் ஆசிரியத் தளையுங் கூறல் வேண்டா; அதுவும் இயற்சீரான் வருதலின் (எனின்), அதன்கண்ணே இயற்சீர் வெண்டளை கூற வேண்டுதலின் ஆசிரியத் தளையுங் கூறவேண்டுமென்க.

(நூ2)

பதிப்பாசிரியர் விளக்கம்

உரை வேறுபாடு

1. **இளம்பூரணர் உரைவிளக்கம்:** 'தன்சீர்வகையினும்' என்று தொடங்கும் இந்நூற்பாவை மூன்றடி நூற்பாவாகக் கொண்டு, மேற்கூறிய நாற்சீர் கொண்ட அடிக்கண் வரும் ஐவகை அடியும் தன்சீர் நிற்கும் வகையானும் தளைநிலை தட்கும் வகையானும் இனிய ஓசையைப் பொருந்தி வரும் என்றும், அவ்விரண்டுள் தன்சீர் உள்ளவழித் தளைதட்கும் ஓசை கொள்ளல் வேண்டா என்றும் இளம்பூரணர் உரையைப் பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

2. **இளம்பூரணர் உரைக் கருத்து**

தொல்காப்பியர் சீர்களை இயற்சீர், ஆசிரிய உரிச்சீர், வெண்பா உரிச்சீர், வஞ்சியுரிச்சீர், அசைச்சீர் என ஐவகைச் சீராகப் பிரித்துக் கொள்ளுகின்றார். அவற்றுள் ஆசிரிய உரிச்சீர் ஆசிரியத்திற்கும், வெண்பாவுரிச்சீர் வெண்பாவிற்கும், வஞ்சியுரிச்சீர் வஞ்சிக்கும் உரியனவாம். எஞ்சிய இயற்சீர் அசைச்சீர் என்னும் இரண்டில், அசைச்சீர் இயற்சீரை ஒக்கு மென்க.

எனவே, தன்சீர் வந்தவகையால் இன்சீர் பயப்பது ஆசிரிய உரிச்சீரும் வெண்பாவுரிச்சீரும் வஞ்சியுரிச்சீரும் ஆகும். தன்சீர் வராமல் தளைப்பது இயற்சீர் ஒன்றிய ஆசிரியத் தளைகளும், இயற்சீர் விகற்பித்த இயற்சீர் வெண்டளையும், கலித்தளையும்

உரை.சு.வே:1. இனி ஒழிந்த நான்கு தளையும் கூறவேண்டாவாம்; இயற்சீரான் வருதலின் எனின், அதன்கண்ணே இயற்சீர் வெண்டளை கூற வேண்டுதலின் ஆசிரியத் தளையும் கூறவேண்டு மென்க (ரா. ரா. பதிப்பு.

ஆகும். (பிற்காலத்தார் இயற்சீரை ஆசிரிய உரிச்சீர் என்பர்; அது தொல்காப்பியர் கருத்திற்கு மாறுபட்டதென்க)

3. பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் :— இளம்பூரணர் அமைத்துக் கொண்ட மூன்றடி நூற்பாவுள், முதல் இரண்டடிகளை ஒரு நூற்பாவாகவும், ஈற்றடியை மற்றொரு நூற்பாவாகவும் கொண்டு வேறு உரை எழுதுகின்றனர்.

> 'தன்சீர் வகையினும் தளைநிலை வகையினும்
> இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய'

என்னும் முதல் நூற்பாவிற்கு, ஆசிரியத்துள் ஆசிரிய உரிச்சீர் ஆறும் இயற்சீரோடு கூடிக் கட்டளையடியல்லாத ஐந்தடிக்கும் உரிய எனவும், அவற்றுள் நிரையீற்று ஆசிரிய உரிச்சீர் இரண்டும் தளைத்து வரும் எனவும் கூறுவர்.

'தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா' என்னும் இரண்டாவது நூற்பாவிற்கு, வெண்சீர்முன் வெண்சீர் வந்து ஒன்றிய வெண்டளை, வெண்பாவில் கட்டளையடிக்கு வாரா; சீர்வகை அடிக்கே வரும் என்று கூறுவர். இருவர் கருத்தும் இளம்பூரணர் உரைக்கு மாறுபட்டன.

4. ஆனால், யாப்பருங்கல விருத்தியாசிரியர் ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் பதினாறாம்; இயற்சீர் பத்தும் தன்சீர் ஆறும் என. அவற்றுள் தன்சீர் ஆறும் தளை வகுக்கப் படாமையின் ஆறும் கொள்ளப்படா; என்னை, **'தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா'** என்றாராகலின் என்று எழுதியுள்ளது இளம்பூரணர் கருத்திற்கு அரண்செய்கின்றது. (யா. வி. கழ. பக். 457).

53. சீரியன்[1] மருங்கி னேரசை[2] யொப்பின்
ஆசிரியத் தளையென் றறியல்[3] வேண்டும்.

என்-னின் ஆசிரியத்தளையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நூ. பா. வே: 1. 'சீரியை' பேரா. நச்.
2. 'ஈரசை' பேரா. உரையுள்.
3. அறையல்,
கூ. வே: அறைதல்.

(இ-ள்) சீர்கள் தம்முட் பொருந்தும்வழி நிலைமொழி யாகிய இயற்சீரின் ஈறும், வருமொழியாகிய சீரின் முதலசையும் நேராய் ஒன்றின் நேரொன்றாசிரியத் தளையாம்; நிரையாய் ஒன்றின் நிரையொன்றாசிரியத் தளையாம் என்றவாறு.

இரண்டசையும் ஆசிரியத்தளை என வேண்டுதலின் பொதுப்படக்[1] கூறினார். அவ்வழி, வருஞ்சீர் இயற்சீராயிற் சிறப்பின்றெனவுங் கொள்க. (நூசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. உரையாசிரியர்கள் உரைக்கும் உரை

ஆசிரியத்தளையைக் கூறும் நூற்பா இளம்பூரணர் உரை யில் 'சீர் இயல் மருங்கின்' என்ற பாடத்துடன் உள்ளது. ஆசிரியத்தளை இயற்சீரிடத்துக் கொள்ளப் பெறுவதாதலால், 'இயற்சீர் மருங்கின்' என்று நிற்கவேண்டிய சொல் 'சீர் இயல் மருங்கின்' என்று மாறிநின்றதென்று கருதி, 'இயற்சீர் மருங்கின்' என்று பொருள் கொள்ளலாம். ஆனால், இளம்பூரணர் அவ் வாறு பொருள் கூறாமல், 'சீர் இயல் மருங்கின்' என்பதற்குச் 'சீர்கள் தம்முட் பொருந்தும் வழி' என்று உரை கூறுகின்றார்.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் 'சீர்இயை மருங்கின்' எனப் பாடங்கொண்டு, ''இயற்சீர் பத்தும் பிறிதொன்றனோடு இயையுங்கால்'' என்று உரை கூறுவர். அங்ஙனமாயின் 'சீர்' என்னும் பொதுச்சொல் முன்பின் இயைபின்றி இயற்சீர் பத்தை எவ்வாறு குறிக்கும் என்ற வினா எழுகின்றது.

2. பேராசிரியர், ''ஒப்பின் ஆசிரியத்தளை, எனவே ஒவ்வா தொழியின் வெண்டளையென்று எதிர்மறுத்துக் கொள்ளப் படும். என்னை? 'எடுத்த மொழியினம் செப்பலு முரித்தே' (தொல். சொல். 61) என்றமையின்'' என்பர்.

3. ஆசிரிய உரிச்சீர்க்குத் தளை

ஆசிரிய வுரிச்சீருக்கும் இயற்சீர் போலத் தளை கொள்ள

உரை. சு. வே: 1. பொதுப்பெறக்

வேண்டும் என்பது இளம்பூரணர் கருத்து.

செய்யுளியல் 48ஆம் நூற்பாவுரையுள், "அவ்வழி ஓரசைச்சீர் இயற்சீர்ப் பாற்படும்; ஆசிரியவுரிச் சீரும் அதுவேயாம்" என்பர்.

4. பாடவேறுபாடு

இனி, "ஈரசை யொப்பின்" என்பது பாடமாயின் 'நேரும் நிரையும் ஒன்றின் என்றவாறுமாம்' என்பர் பேராசிரியர்.

5. ஒரு சொற்பொருள்

உரையுள் "அவ்வழி வருஞ்சீர் இயற்சீராயிற் சிறப்பின்று எனவும் கொள்க" என்பதிலுள்ள சிறப்பின்று என்னும் சொல்லின் பொருள் சிறப்பினையுடையது என்பதாம். இதனை "இருபாற் பட்ட ஒரு சிறப்பின்று" (புறத்திணை. நூ. 15) என்பதை நோக்கி அறிக.

54. குறளடி முதலா வளவடி காறும்
உறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப.

என்-னின் மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) குறளடி முதலாக அளவடி யளவும் வஞ்சியுரிச்சீர் வந்து உறழும் நிலையில; இவ்வடிகள் (இவ்வடிகளில்) இயற் சீரும் ஆசிரிய வுரிச்சீரு(மா)ம் என்றவாறு.

எனவே பதினைந்தெழுத்து முதலாக நெடிலடியினும் கழிநெடிலடியினுமே[1] உறழப் பெறுவ தென்றவாறாம்.

எடுத்தோத்துப் பெரும்பான்மை.

அளவடிக்கண் வஞ்சியுரிச்சீர் மயங்குப[2] வுளவேற் கொள்க.

(நிசை)

உரை.சு.வே: 1. கழிநெடில டியினு மெய்
2. மயங்குப வுளவெனக் கொள்க

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இளம்பூரணர் கருத்து

முன்னே செய்யுளியல் 29ஆம் நூற்பாவால் "இனிய ஓசை பொருந்தி வருமாயின் ஆசிரிய வடிக்கு வெண்பாவுரிச்சீரும் வரையாமற் கொள்ளப்படும்" என்றார்; பின்னர் அடுத்த நூற்பாவில் செய்.30) "இன்சீர் இயைய வருகுவதாயின் வஞ்சியுரிச்சீரும் ஆசிரிய அடிக்கண் வரும்" என்றார்.

இந்நூற்பாவில் (செய். 54) ஆசிரிய அடிக்கண் வரும் என்ற வஞ்சியுரிச்சீர் ஆசிரியத்தில் குறளடி முதலா அளவடிகாறும் வாரா; நெடிலடி கழிநெடிலடியின்கண்ணேதான் வரும் என்று கூறுகின்றார். இஃது இளம்பூரணர் கருத்து.

2. புறனடை என்றதன் விளக்கம்

குறளடி முதலாக அளவடியளவும் வஞ்சியுரிச்சீர் வந்து உறழா: இவ்வடிகளில் இயற்சீரும் ஆசிரியவுரிச்சீருமே வந்து உறழும் என்றமையால் புறனடையாயிற்று.

3. பேராசிரியர் உரை

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் கருதிய உரையைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் ஏற்றுக் கொள்ளாமல் வேறு உரை கூறுகின்றனர். பேராசிரியர் வஞ்சியடி உறழுமாறும் அதுபெறும் நிலனும் உணர்த்துதல் நுதலிற்று என்று கருத்துரைத்து,

"நாலெழுத்து முதலாகப் பதினான்கெழுத்தளவும் உறழும் நிலையில வஞ்சியடிக்கு" என்று பொருள் கூறி, "இனி, முதலும் ஈறும் யாதெனப்படுமோவெனின், 'தன்சீரெழுத்தின் சின்மை மூன்றே' என்றதனான் ஆறெழுத்தடி முதலாகவும், 'நேர்நிலை வஞ்சிக் காறுமாகும்' என்றதனான், பன்னிரண்டெழுத்தடி ஈறாகவும் உறழும் என்றவாறு. எனவே, வஞ்சியடிக்கு நிலன் ஏழென்பது சொல்லியவாறு; ஆண்டு வஞ்சியுரிச்சீர்க்கு எழுத்து

வரையறை கூறினான்; அவ்வடி இத்துணை நிலன் பெறும் என்றற்கு இது கூறல் வேண்டும் என்பது'' என்பர்.

4. இருவர் கொள்ளும் பொருள்

இளம்பூரணர் 'வஞ்சிக்கு' என்பதற்கு வஞ்சியுரிச்சீர்க்கு என்று பொருள் கருதுகின்றார். **பேராசிரியர்** வஞ்சியடிக்கு என்று உரை கூறுகின்றார்.

5. விருத்தியாசிரியர் கருத்து

யாப்பருங்கல விருத்தியாசிரியர் (*யா. வி. கழ. பக். 112*) ''நான் கெழுத்து முதலாகப் பன்னிரண்டெழுத்தின் காறும் இருசீரடி வஞ்சிப்பாவிற் குரிய'' என்று எழுதுவதை நோக்கினால், ''இரு சீரடி வஞ்சிப்பா குறளடி முதலாக அளவடி இறுதியாக வுள்ள நான்கெழுத்து முதலாகப் பதினான் கெழுத்தின் காறும் வராது; அளவடியுட் சில குறைந்து பன்னிரண்டெழுத்தின் காறும் வரப்பெறும்'' என்று இந்நூற்பாவிற்கு அவர் பொருள் கருதியிருப்பார் போலும்.

55. அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை யொன்றாத் தன்மை யான.

என்-னின் வெண்பாவிற்குரிய அடியும் தளையும் வரை யறுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற் குரிய; தளை வகை ஒன்றாத் தன்மைக்கண் என்றவாறு.

எனவே ஒன்றுந் தன்மைக்கண் நெடிலடியும் சிலவரும் என்று கொள்க.

இச்சூத்திரத்தால் வெண்பாவிற் குரியதோர் தளை உணர்த் தினாராம்.

சிந்தடியாவது ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகிய அடி. அளவடியாவது பத்தெழுத்து முதலாகப் பதினான்கெழுத் தீறாகிய அடி.

தளைவகை ஒன்றாமையாவது, நிலைமொழியும் வருமொழியும் ஆகிய இயற்சீர் நேரா யொன்றுவதும், நிரையா யொன்றுவது மன்றி, மாறுபட வருவது. அவ்வழி, நிரையீற் றியற்சீர் நிற்ப நேர் வரினும், நேரீற்றியற்சீர் நிற்ப நிரைவரினும் இயற்சீர் வெண்டளையாம்.

இனி ஒன்றுந் தன்மையாவது, வெண்சீர் நிற்க வருஞ்சீர் முதலசையோ டொன்றுவது வெண்டளையாம்.

இவ்விரண்டும் வெண்பாவிற்குத் தளையாம் என்று கொள்க.

உதாரணம்:—

''மட்டுத்தா னுண்டு மதஞ்சேர்ந்து விட்டுக்
களியானைக் கொண்டுவா வென்றா னளியார்முன்
யாரோ வெதிர்நிற் பவர்''. (யா.வி.கழ.பக்.495)

இஃது ஏழெழுத்தான் வந்த அடி.

''இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது'' (நாலடி.36)

இஃது எட்டெழுத்தான் வந்த அடி.

''சென்று முகந்து நுதல்சுட்டி மாறோர்த்து
வென்று வியர்த்தா ளென்கோ'' (யா.வி.கழ.பக். 495)

இஃது ஒன்ப தெழுத்தான் வந்த அடி.

''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு'' (குறள். 12)

இஃது பத்தெழுத்தான் வந்த அடி.

''ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்'' (குறள். 14)

இஃது பதினோ ரெழுத்தான் வந்த அடி.

''மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்'' (குறள். 3)

இஃது பன்னிரண் டெழுத்தான் வந்த அடி.

''இருள்சே ரிருவினையும் சேரா விறைவன்'' (குறள். 5)

இஃது பதின்மூன் றெழுத்தான் வந்த அடி.

''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்'' (குறள். 2)

இஃது பதினான் கெழுத்தான் வந்த அடி.

''முகமறியார் மூதுணர்ந்தார் முள்ளெயிற்றார் காமம்
அகமறைந்தான் வாழுமென் றார-மகமறையா
மன்னைநீ வார்குழை வையெயிற்றா யென்றோமற்
றென்னையும் வாழு மெனின்'' (யா.வி.கழ.பக். 456)

இஃது பதினைந்தெழுத்தான் வந்த அடி.

''படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்'' (குறள்.606)

இஃது பதினாறெழுத்தான் வந்த அடி.

இவையிரண்டும் நெடிலடி. (நூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

வெண்பா நிலம் பத்தென்பாரும் எட்டென்பாரும்

வெண்பாநிலம் பத்து என்பது இளம்பூரணர், யாப்பருங்கல விருத்தியாசிரியர் ஆகியோர் கொள்கை. எட்டு என்பது பேராசிரியர் கொள்கை.

அளவடி ஐந்து, சிந்தடி மூன்று ஆகிய எட்டுநிலத்திலும் வெண்பாவிற்குரிய தளைவகை ஒன்றாததன்மையான் இயற்சீர் வெண்டளை வரும்; நெடிலடியுள் சில (இரண்டு) நிலத்திலும் வெண்பாவிற்குரிய ஒன்றுந் தன்மையான் வெண்சீர் வெண்டளை வரும். ஆக வெண்பாவிற்கு வரும் நிலம் பத்தென்பது இளம்பூரணர் கருத்து. ''ஒன்றாத் தன்மைக்கண் வெண்பாவிற்கு அளவும் சிந்தும் உரிய'' என்று கூறியதனான், ஒன்றுந் தன்மைக்கண் நெடிலடியும் சில வரும் என்பது அவர் கருத்து.

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் ''சிந்தடியும் அளவடியும் நெடிலடியின் முதற்கண் இரண்டடியும் வெண்பாவிற்கு உரிய ..... என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்'' (யா.வி.கழ. பக். 112) என்று கூறுவதாலும், ஒழிபியலில் 'வெள்ளைநிலம் பத்தினுள்ளும் ஆசிரியத்தளை தட்பப் பத்தும், கலித்தளை தட்பப் பத்துமாய் வெண்பாவிற்கு இருபது தளைவழுவாம்' என்று எழுதி,

''சிந்தோ டளவு நெடிலீ றொழிய
வந்த வுரிமை ஈரைந்து நிலத்தும்

மென்றளை கலியொடு தட்டன வெள்ளைக் (கு)
ஒன்றிய தளைவழு இருப தென்ப''

என்ற நூற்பாவை எடுத்துக் காட்டலானும் அவர் கருத்து, புலனாகின்றது. (மென்றளை -ஆசிரியத்தளை).

பேராசிரியர் செய்யுளியல் 50.ஆம் நூற்பாவுரையுள், ''இனி 'அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய' என்னும் எடுத்தோத்துக் கிடப்ப, இலேசினான் இரண்டு நிலனேற்றி வெள்ளைநிலம் பத்தெனலுமாகாது; என்னை? 'அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி, இருநெடி லடியுங் கலியிற் குரிய' என ஓதினான்; இதனினுஞ் சிறந்த வெண்பாவிற்கு அங்ஙனம் ஓதுவன்மன் ஆசிரியன் அதுவே கருத்தாயி னென்பது'' என்றும்,

''இவற்றுக் கெல்லாம் பதினான்கெழுத்தின் ஏறியக்கால் செப்பலோசை திரிபுடைய வென்பது வல்லார்வாய்க் கேட்டு ணர்க; என்னை, 'அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி, வகுத்தன ருணர்த்தலும் வல்லோ ராறே' என்றமையின். 'அடியினுட்ப மறிவருங் குரைத்தே' எனப் பிறருஞ் சொல்லுப'' என்றும் கூறுவர்.

வெண்பாவரும் நிலத்திற்கு எடுத்துக்காட்டு

யாப்பருங்கலவிருத்தி ஆசிரியர் சிந்தடியாலும், அளவடி யாலும், நெடிலடியின் முதல் இரண்டடியாலும் ஏழெழுத்தடி வெண்பாவிலிருந்து பதினாறெழுத்தடி வெண்பாவரை பத்து வெண்பாக்களை எடுத்துக் காட்டாகக் காட்டுகிறார். அவற்றுள் சில வெண்பாக்கள் இளம்பூரணர் காட்டும் பாடல்களாக உள்ளன.

'மட்டுதா னுண்டு' - ஏழு எழுத்தடி
'சென்று முகந்து' – ஒன்பதெழுத்தடி
'முகமறிந்தார்' - பதினைந்தெழுத்தடி
'பஃடியுடையார்' - பதினா றெழுத்தடி

என்பனவாம்.

(யா.வி.கழ.பக். 493, 495)

56. அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
இருநெடி லடியுங் கலியிற் குரிய.

என்-னின் இது கலிப்பாவிற்கு அடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அளவடியின் மிக்க பதின்மூன்றெழுத்து முதலாக நெடிலடியும் கழிநெடிலடியும் ஆகிய இருபதெழுத்தின் காறும் வரும் அடி கலிப்பாவிற்கு அடியாம் என்றவாறு.

இவ்விலக்கணம் கலித்தளை வருமிடத்தே கொள்க.

(ஆண்டு) கலியடி[1] என்னாது 'கலித்தளையடி' (செய். 24) என்றதூஉம் இவ்வேறுபாடு குறித்தென்க.

உதாரணம்:—

''மரல்சாய மலைவெம்ப மந்தி யுயங்க'' (கலி. 13)

இது பதின்மூன்றெழுத்தான் வந்தது.

''வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட' (கலி. 66)

இது பதினான்கெழுத்தான் வந்த அடி.

''அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையால்'' (கலி. 11)

இது பதினைந்தெழுத்தான் வந்த அடி.

''அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்'' (கலி.11)

இது பதினாறெழுத்தான் வந்த அடி.

''முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையென'' (கலி.56)

இது பதினேழெழுத்தான் வந்த அடி.

''அறனின்ற விதையொழியான் அவலங்கொண்டது நினையான்
(யா. வி. கழ. பக்: 500)

இது பதினெட்டெழுத்தான் வந்த அடி

''உகுபனிகண் ணுறைப்பவுநீ யொழிபொல்லாய் செலவலித்தல்''
(யா.வி. கழ. பக். 500)

இது பத்தொன்பதெழுத்தான் வந்த அடி.

உரை. சு. வே: 1. கலித்தளை யடி யென்னாது கலியடி யென்றதூஉம் இவ் வேறுபாடு குறித்தென்க.

''நிலங்கிளையா நெடிதுயிரா நிறைதளரா நிரைதொடியாள்''
(யா. வி. கழ. பக். 500)

இது இருபதெழுத்தான் வந்த அடி. (நூசூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. கலிப்பா வரும் நிலத்திற்கு எடுத்துக்காட்டு

யாப்பருங்கல விருத்தியாசிரியர் ''இனிப் பதின்மூன் றெழுத்தடி முதலாகிய இலக்கணக்கலி எட்டும் வருமாறு'', என்று கூறி, எட்டிற்கும் உதாரணம் காட்டியுள்ளார். இவற்றுள் கழிநெடிலடிக்குக் காட்டிய மூன்றடியை இளம்பூரணரும் காட்டு கின்றார். ஈற்றில், ''இவையெல்லாம் குற்றிகர குற்றுகரங் களும் ஒற்றும் ஆய்தமும் நீக்கி எழுத்தெண்ணி முதலடியே கொள்க'' என்பர் (யா. வி. கழ. பக்.495-500).

2. பேராசிரியர் உரையும் பிறர் உரைக்கு மறுப்பும்

பேராசிரியர் இந்நூற்பாவுரையுள், ''ஐவகை யடியினும் அளவடி மிகுதியாகிய பதின்மூன்றெழுத்தும் பதினான்கெழுத் தும் நெடிலடி மூன்றும் கழிநெடிலடி மூன்றும் ஆகிய எட்டும் கலிக்குரிய'' என்று பொருள் எழுதி, ''எனவே அதுவும் தன் முதற்பாவாகிய வெண்பாப் போல எட்டுநிலம் பெறுவதாயிற்று. அளவடியுள்,' 'ஒழிந்த அடி, மூன்றனோடும் ஒவ்வாது மிக்க நிலம் இரண்டனையும் 'அளவடி மிகுதி' என்றான் என்பது'' என்று எழுதிவிட்டுப் பின்னர் 'இனி ஒத்த நாலெழுத்தேற்றலங் கடையே (செய்.38) என்பதே கொண்டு அளவடியுள் பதி னொன்றெழுத்து முதல் நான்கு நிலனும் அளவடி மிகுதி யெனப்படுமென்னவும், அவை கலிக்குரிய எனவும் கொள்வாரு முளர் என்று கூறி மறுக்கும் மறுப்பை ஆங்கே காண்க.

57. நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்டல்[1]
வரைநிலை யின்றே [2]யவ்வடிக் கென்ப.

நூ.பா. வே: 1. 'தட்பினும்' பேரா; நச்.
2. 'யளவடிக்' கு. வே.

என்-னின் கலித்தளை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் மேற்சொல்லப்பட்ட அடி கலித்தளை தட்ட வழியே கொள்ளப்படுவது என உணர்த்தியவாறாம். வெண்பா வுரிச் சீர் நிற்ப, நிரை முதல் வெண்சீர் வந்து அதன்கண் நிரையாய்த் தளைத்தல் கலியடிக்கு வரைநிலை யில்லை என்றவாறு.

'நிரைதட்டல்' என்றதனால் பிறிதாகி வருஞ்சீர் முதலாகிய நிரையோடு தளைப்பினும் கலித்தளையாம் என்று கொள்க.

'நிரைமுதல் வெண்சீர்' என்பது உய்த்துணர்ந்து கொள்ளப் பட்டது.

உதாரணம் மேற்காட்டிய அடிகளுட் காண்க. (நெ)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒத்த நூற்பா

"நிரையீ றில்லா உரிச்சீர் முன்னர்
நிரைவருங் காலைக் கலித்தளை யாகும்"
(யா. க. 20)

"வல்லோர் வகுத்த வெண்சீர் விகற்பம் கலித்தளை"
(யா. காரி. 10)

"கலித்தளை வெண்சீர் கலந்த விகற்பமே"
(தொன். 209)

உரையாசிரியர் கருத்து

1. **இளம்பூரணர்** வெண்பாவுரிச்சீர் நிலைச்சீராய் நிற்ப, அதன்முன் நிரைமுதல் வெண்சீர் வருஞ்சீராய் வரும் என்பது உய்த்துணர்ந்து கொள்ளப்பட்டது என்பர்.

2. **பேராசிரியர் நச்சினார்க்கினியர்** இருவரும் "நிரையீற்று இயற்சீரும் நிரையீற்று ஆசிரியவுரிச்சீரும் நிலைமொழிச் சீராய் நிற்ப, அவற்றின்முன் நிரைமுதல் வெண்சீர் வந்து நிரையாய் ஒன்றியக்காலும் **இது ஒருவகைக் கலித்தளையாம்**" என்பர்.

58. விராஅய தளையு மொருஉநிலை யிலவே[1].

என்-னின் இதுவும் கலியடிக் குரியதோர் தளை உணர்த்து தல் நுதலிற்று.

(இ-ள்) (கலியடியின்கண்) பிறவாகி[2] விரவிய தளையும் நீக்குதலில்லை என்றவாறு. அஃதாவது வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவுதல்.

> ''இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன்
> உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
> ஐயிரு தலையி னரக்கர் கோமான்'' (கலித். 38)

இதன்கண்[3] முந்துற்ற இரண்டு சீரும் வெண்சீர் வெண் டளை; இரண்டாஞ் சீரோடு மற்றையடி முதற்சீர் இயற்சீர் வெண்டளை; நாலாஞ் சீரோடு மற்றையடி முதற்சீர் நிரை யொன்றாசிரியத்தளை; 'அரக்கர் கோமான்' நேரொன்[4] றாசிரியத்தளை.

அஃதேல் நேரீற் றியற்சீர் கலிக்கண் வரப்பெறா தென்ற தென்னை? ஈண்டுக் 'கோமான்' வந்ததால் எனின், அவ்விலக் கணம்[5] கலித்தளையால் வரும் அடிக்கென்க.

(கலியடிக்கண்) சிறுபான்மை வஞ்சித்தளை வருதலும் கொள்க. (நி.சூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

கலியடியில் வரும் பிறசீர்

மேற்காட்டிய பாட்டில் 'இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை

நூ. பா. வே: 1. 'யின்றே' பேரா; நச்.

உரை. சு. வே:
2. பிறவாகிய
3. என்பதின்
4. நேரொன்றாசிரியத்தளை வந்தவாறு காண்க
5. அவ்விலக்கணங்க ளத்தன்மையான்

யந்தணன்' என்னும் அடியிலுள்ள 'இமையவில்' என்ற சீரும், 'வாங்கிய' என்ற சீரும் தம்முள் இயைந்தது வெண்சீர் வெண்டளையாம் என்ற கருத்தால், இளம்பூரணர் ''இதன்கண் முந்துற்ற இரண்டு சீரும்வெண்சீர் வெண்டளை'' என்று கூறுகிறார். 'இமைய வில் என்ற சீரில் 'இமைய' என்ற இடத்தில் ஓசை யறுதலால், அது 'நிரை நேர் நேர்' என்று கொள்ளப்படும். 'வாங்கிய' என்பது இயற்சீ ராயினும் வெண்சீருடன் நேராய் ஒன்றினமையால் வெண்சீர் வெண்டளை யாயிற்று.

பேராசிரியர் சீர்வகையான் வரும் கலியடிக்கு வெண்சீர் ஒன்றி வரும் என்பர்.

நச்சினார்க்கினியர் சீர்வகையான் வரும் கலியடி வெண் சீரோடும் ஒழிந்த சீரோடும் விரவித் தட்கும் எனபர்.

59. இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபி னிற்பவு[1] முளவே.

என்-னின் இஃது ஆசிரியப்பாவின்கண் வெண்பாவடி மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இயற்சீர் வெண்டளையா னாகிய வெண்பாவடி ஆசிரியப்பாவின்கண் நிற்றற்குரிய மரபினான் நிற்பவுமுள என்றவாறு.

'உள' என்றதனாற் பல அடியும் வரப்பெறும் என்று கொள்க. 'வெண்டளை என்னாது', 'வெள்ளடி'[2] என்றதனால் தளை விரவுதல் பெரும்பான்மை, அடி விரவுதல் சிறுபான்மை என்று கொள்க.

உதாரணம்:-

''நெடுங்கயிறு வலந்த'' என்னும் பாட்டினுள் (அக. 30)
''கடல்பா டொழிய வினமீன் முகந்து''

நூ. பா. வே:- 1. 'நிற்கவும் பெறுமே' பேரா; நச்; யா. வி.

உரை. பா. வே:- 2. 'அடி'

என்பது, இயற்சீர் வெண்டளை யடி. பிறவு மன்ன. (நிகூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஆசிரியப்பாவில் வரும் அடி

தொல்காப்பியர் சீரைப்பற்றிக் கூறும் அதிகாரத்தே "இன்சீர் இயைய வருகுவ தாயின் வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே" என்றும், "அந்நிலை மருங்கின் வஞ்சி யுரிச்சீர் ஒன்றுத லுடைய ஓரோவொரு வழியே" என்றும் (செய். 29,30) கூறியுள்ளார். ஈண்டு, **அடியதிகாரத்தே** "இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின், நிலைக்குரி மரபி னிற்பவு முளவே" என்று கூறியுள்ளார். **பிற்காலத்தார்** வஞ்சியடியையும் சேர்த்துக்கொண்டு "இயற்சீர் வெள்ளடி வஞ்சியடியிவை அகப்பட வரூஉம் அகவலு முளவே" (யா. க. 29) என்பாராயினர்.

60. வெண்டளை[1] விரவியு மாசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியு முளவென மொழிப.

என்-னின் இதுவும் ஆசிரியப்பாவிற் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இயற்சீர் வெண்டளை விரவியும் ஆசிரியத்தளை விரவியும் ஐஞ்சீரடியும் ஆசிரியப்பாவின்கண் வருவன உள என்றவாறு.

'உண்டு' என்னாது, 'உள' என்றதனான், ஒரு பாட்டிற் பல வருதலுங் கொள்க.

'ஆசிரியம்' என்பது அதிகாரத்தான் வந்தது.

உதாரணம் : முன்னார்க் காட்டுதும். (கூ0)

பதிப்பாசிரியர் விளக்கம்

இந்நூற்பாவிற்கு ஆசிரிய அதிகாரத்தால் உரை

1. **இளம்பூரணர்** இந்நூற்பாவிற்கு "ஆசிரியப்பாவிற் குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று" என்று நுதலியதுரைத்து,

---

நூ. பா. வே: 1 'வெள்ளை' யா. க. வி. 93.

"இயற்சீர் வெண்டளை விரவியும் ஆசிரியத்தளை விரவியும் ஐஞ்சீரடியும் ஆசிரியப்பாவின்கண் வருவன உள" என்று பொருள் எழுதி, "ஆசிரிய மென்பது **அதிகாரத்தான்** வந்தது" (செய். 59) என்றனர்.

இந்நூற்பாவிற்குக் கலிப்பா அதிகாரத்தால் உரை

2. **பேராசிரியர்** "மேல் நின்ற அதிகாரத்தால் (செய். 57, 58) கலிப்பாவிற்கு ஐஞ்சீரடியும் உள" என்பர். இவர் இளம்பூரண ரைப் போல் ஆசிரிய அதிகாரம் கொள்ளாமல் **கலிப்பா அதிகாரம்** கொள்ளுகின்றார்.

நச்சினார்க்கினியர் கூறும் வேறு உரை

3. **நச்சினார்க்கினியர்** இது வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா என்னும் மூன்று பாவிற்கும் ஐஞ்சீரடியும் வருமாறு கூறுகின்றது என்பர்.

இந்நூற்பாவிற்கு ஆசிரியம் கலி என்னும் இரண்டு அதிகாரத்தால் உரை

4. ஆனால் **யாப்பருங்கல விருத்தி ஆசிரியர்** மேற்கண்ட மூவரினும் வேறுபட்டு முன் நூற்பாக்களைக் கருத்தில் வைத்துக் கொண்டு ஆசிரியம் (செய். 59) கலி (57, 58) என்னும் அதிகாரம் வருவித்து உரை எழுதுகின்றார்.

அவ்வுரை வருமாறு :— யாப்பருங்கலத்தில்

> "கலியொடு வெண்பா அகவல் கூறிய
> அளவடி தன்னால் நடக்குமன் னவையே" (27)

என்ற நூற்பாவுரையில், "அவை என்று மிகுத்துச் சொல்லிய அதனால் ஒருசார் ஆசிரிய அடியும் கலியடியும் ஐஞ்சீரான் அருகி வருவனவும் உளவெனக் கொள்க. அவை போக்கி 'மிக்குங் குறைந்தும்' (யா. க. 93) என்னும் சூத்திரத்துட் காட்டுதும்" என்று தொடங்கி, அந்நூற்பா உரையில்,

> "சிறியகட் பெறினே" (புறநா. 235)

என்னும் இணைக்குறளாசிரியப் பாவினுள் ஐஞ்சீர் அடியும் அருகிவந்தன எனக்கொள்க.

'அணிகிளர் சிறுபொறி அவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுன்னீர் தொட்டுழந்து மயங்கினையே'

இக் கலியடியில் ஐஞ்சீரடியும் அருகி வந்தது எனக்கொள்க. 'கலியொடு ..... னவையே' (யா. க. 27) என்ற சூத்திரத்தில் 'அவை' என்ற விதப்பினாலும், இச்சூத்திரத்தாலும் இவற்றையும் குற்றம் இல்லை என்று கொண்டு வழங்குப; புராண கவிஞரான் சொல்லப்பட்டன வாதலின்.

''நிலம்பாஅய்ப் பாஅய்ப் பட்டன்று நீலமா மென்றோள்
கலம்போஓய்க் கௌவை தரும்

இவ் வெண்பாவுள் ஐஞ்சீரடியும் வந்ததெனின், அளபெடை, சீரும் தளையும் அடியும் தொடையும் கெடாமைப் பொருட்டு வேண்டுவதல்லது, அளபெழுந்து கெடநின்ற விடத்து வேண்டப்படாது. என்னை?

''மாத்திரை வகையாற் றளைதபக் கெடாநிலை
யாப்பழி யாமைநின் றளபெடை வேண்டும்''

என்றாராகலின்.

அதனுள் முதற்சீரைப் புளிமாங்காயாகவும், இரண்டாஞ் சீரைத் தேமாங்காயாகவும் (அளபெடையைநீக்கி) அலகிட்டு நாற்சீரேயாகக் கொள்க. ஐஞ்சீர் வெள்ளையுட் புகாமை எற்றாற் பெறுதுமெனின்

''ஐஞ்சீர் அடுத்தலும் மண்டிலம் ஆக்கலும்
வெண்பா யாப்பிற் குரிய வல்ல''

என்று நக்கீரனார் அடிநூலுள் ஓதப்பட்டமையாற் பெறுதும்; பிறநூல் முடிந்தது தானுடம்படுதல் என்பது தந்திரஉத்தி ஆதலின்.

(குறிப்பு:- நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் வெண்பாவினுள் அருகி ஐஞ்சீரடி வரும் என்பர்.)

இனி ஆசிரியத்துள்ளும் கலியுள்ளும் ஐஞ்சீரடி வரும் என்பது எற்றாற் பெறுதுமெனின்,

"வெண்டளை.....மொழிப" (செய். 60)

என்று **தொல்காப்பியனார்** எடுத்து ஓதினமையாற் பெறுதும்.

இப்பாட்டுகளும் செய்யுளியலுட் காட்டின எனக் கொள்க" என்றனர்.

விருத்தி ஆசிரியரே மற்றோரிடத்தில் செய்யுளில் ஐஞ்சீரடி வரும் என்று கொண்டால் நாலசைச்சீர் கொள்ளவேண்டுவதில்லை என்ற கருத்தினைக் கூறுமிடத்து,

'சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே' (புறநா. 235)

என்றித் தொடக்கத்தன ஆசிரிய அடிகளுள்ளும்

'கண்டல் வண்டற் கழிபிணங்கிக் கருநீல மதுவிம்மவும்
கொண்டல் கொண்ட பணைமுன்றிற் பண்ணையாயம் குடிகெழுவவும்'

என்றித் தொடக்கத்துக் கொச்சக அடிகளுள்ளும் முன்சொன்ன பெற்றியன்றி நாலசைச்சீர் வந்தனவெனின், அவைதாம் நாற்சீர் அல்ல என்று ஐஞ்சீர் அடியாக வைப்ப நாலசைச்சீர் அல்லவாம்.

தொல்காப்பியனாரும் கீரனாரும் முதலாகவுள்ளார் ஒருசார் ஆசிரியத்துள்ளும் கலியுள்ளும் ஐஞ்சீரடியும் அருகிவரப் பெறுமென்று,

'என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே (புறநா.235)

என்னும் ஆசிரிய அடிகளும்

'அணிகிளர் சிறுபொறி அவிர்துத்தி மாநாகத் தெருத்தேறி'

என்னுங் கலியடியும் காட்டுவாராகலின் என்பது.
அவர் சொல்லுமாறு:

'வெண்டளை ..... உளவென மொழிப' (செய்.60)

என்பது தொல்காப்பியம். 'ஆசிரியம் கலியென்று' அதிகாரம் வருவித்து உரைக்கப்பட்டது இச்சூத்திரம்.

'ஐஞ்சீர் அடுக்கலும் ..... உரியவல்ல'

என நக்கீரர் அடிநூலுள் வெண்பாயாப்பிற் குரியவல்ல என்றமையால் ஆசிரியத்துக்கும் கலிக்கும் ஐஞ்சீரடி புகுதலும், மண்டிலம் ஆதலும் உரிய என்று விரித்துரைத்தார் எனக் கொள்க.

'சேரும் நேரடிப் பாவிலைஞ் சீரடி
ஏரும் வெள்ளையல் லாவழி யென்பது
சோர்வி லாததொல் காப்பியத் துள்ளும்நக்
கீர னாரடி நூலுள்ளும் கேட்கவே'

இதனை விரித்துரைத்துக் கொள்க'' என்பர்.

மேலனவற்றைக் கருதினால் இளம்பூரணர் முதலான மூவர் உரையிலும் விருத்தியாசிரியர் உரை வேறுபட்ட தென்று தெரிகின்றது.

5. கருத்தொற்றுமை

விருத்தியாசிரியர் கருத்து, ''அருகிக் கலியோ டகவன் மருங்கி னைஞ் சீரடியும், வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர்'' என்னும் காரிகைக் கருத்துடன் ஒத்து நிற்றலைக் காண்க.

6. வேறு உரை

தொல். செய்யுளியலுக்கு வேறு உரை உண்மை இதனாற் புலப்படும்.

61. அறுசீ ரடியே யாசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) அறுசீரடி, ஆசிரியத்தளையொடு பொருந்தி நடை பெற்று வரூஉம் நேரடிக்கு முன்னாக, ஆசிரியப்பாவின்கண் என்றவாறு.

ஆசிரியப்பா என்பது அதிகாரத்தான் வந்தது.

''சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே''
(புற.235)

என்பதன்கண் முதலடி நாற்சீரான் (நேரடி) வந்தது; இரண்டாமடி ஆசிரியத்தளையோடு பொருந்தி அறுசீரடியாகி வந்தது.

'பொருந்தி' என்றதனான் அத் தளை சில வருதல் கொள்க.

ஏனையன, புணருஞ் சீரான் வந்தன. (சூ.கி)

பதிப்பாசிரியர் விளக்கம்

இளம்பூரணர் கருத்து

இளம்பூரணர் இந்நூற்பா ஆசிரியப்பாவிற்குரிய மரபினை உணர்த்தியதாகக் கருதி, 'சிறியகட் பெறினே' என்னும் ஆசிரியப்பாவின் பகுதியை உதாரணமாகக் காட்டியுள்ளார்.

இளம்பூரணர் முச்சீரடி முதலாக அறுசீரடி ஈறாக மயங்கிய ஆசிரியத்தினை அடிமயங்காசிரியம் என வழங்கலாம் என்று ரைத்து, நேரடிமுன் அறுசீரடி வரும் என்று கூறற்கு 'அறுசீரடியே' என்ற நூற்பாவினை மேற்கோளாக அமைத்துக் கொள்ளுகிறார் (தொல்.செய். 113).

பேராசிரியர் கருத்து

பேராசிரியர் ''முறையானே அறுசீரடியும் கலிப்பாவிற்கு உரித்தென்று'' நுதலியதுரைத்து, ''நாற்சீரடி முன்னும் பின்னும் அறுசீரடியும் வருதலும் உண்டு; அன்னது வருங்கால் தனக்குரிய வெண்டளையே யன்றி ஆசிரியத்தளையொடும் வழக்குப் பெற்று நடக்கும் கலிப்பாவினுள் என்றவாறு'' என்று பொருள் கூறி, 'முன்னைத்தம்' என்ற பாடலையும், 'கரைபொரு கான் யாற்றங்' என்ற பாடலையும் மேற்கோள் காட்டியுள்ளார். ஆனால் இவற்றைப் பிறர் ஆசிரியப்பாவின் இனம் என்பர். 'முன்னைத்தம்' என்ற பாட்டில் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் மூன்றாவது அடியைத் ''தன்மை மடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தம்'' என்று நேரடியாகக் காட்டுவர். பிறர் 'தகைசால் கானல்' என்ற இரண்டு சீர்களைச் சேர்த்து ஆசிரிய விருத்தம் ஆக்குவர்.

62. எழுசீ ரடியே முடுகிய னடக்கும்.

என்-னின் எழுசீரடிக் குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எழுசீரால் வரும் முடுகியலடி என்றவாறு.
உதாரணம்: முன்னர்க் காட்டுதும். **(சூ2)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. முடுகியலும் அராகமும் வெவ்வேறு

முடுகியல் வேறு; அராகம் வேறு என்பது **தொல்காப்பியர்** *கருத்து. அவர் வண்ணங்களைக் கூறுமிடத்து, 'உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்' என்றும், 'முடுகு வண்ணம் முடிவறியாமல், அடியிறந் தொழுகி அதனோ ரற்றே' (செய். 224, 225) என்றும் கூறுகின்றார்.*

இவற்றைக் **''கொச்சகம் அராகம்''** *என்றும் (செய். 117),* **''சொற்சீரடியும் முடுகியலடியும்''** *என்றும் (செய். 118)* வேறு வேறாகக் கூறியுள்ளார்.

இளம்பூரணர் *''அராகம் என்பது ஈரடியானும் பலவடியானும் குற்றெழுத்து நெருங்கிவரத் தொடுப்பது; பெருமைக்கெல்லை ஆறடி.'' என்பர் (செய்.117. உரை). ''முடுகியலடியாவது ஐந்தடியானும், ஆறடியானும் ஏழடியானும் குற்றெழுத்துப் பயிலத் தொடுப்பது'' (செய். 118) என்பர்.*

2. பிற்காலத்தார் அராகம், முடுகியல் இரண்டும் ஒன்றே என்று கருதுகின்றனர். **யாப்பருங்கலம்** *'முடுகியல் அடியுடை அராகம்' (84) என்று கூறுகின்றது.* **பிங்கல நிகண்டு** *''அராகம் முடுகியல் வண்ணகமாகும்'' என்று கூறுகின்றது.* **யா. க. விருத்தியுரை** *அராகம் எனினும் வண்ணகம் எனினும் அடுக்கியல் எனினும் முடுகியல் எனினும் ஒக்கும் என்று கூறுகின்றது. (நூ.84.உரை)*

3. வேறுபாடு

நச்சினார்க்கினியர் *அராகத்திற்கும் முடுகியலுக்கும் உள்ள வேறுபாட்டினை ''அராகமாவது பிறிதொன்றனோடு கூட்டி*

ஆற்றுவியாமல் தானே போய் அற்று நிற்பதாம். அது பரிபாடற் செய்யுள் உறுப்பு என்பர். இது (முடுகியல்) பிறி தொன்றனோடு கூட்டி ஆற்றுவித்துக் கோடற்கு உரித்தாம். இவ் வேறுபாடு அறிக'' (செய். 67) என்பர்.

63. முடுகியல் வரையார் முதலிரண் டடிக்கும்[1].

என்-னின் எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஐஞ்சீரடிக்கும் (செய். 60) அறுசீரடிக்கும் (செய். 61) முடுகியல் நீக்கப்படா தென்றவாறு. உதாரணம்:— முன்னர்க் காட்டுதும். (சுசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒவ்வாத கருத்து

1. யாப்பருங்கல விருத்தி மேற்கோள் நூற்பா, வேறுபட்ட கருத்தை உணர்த்துகிறது; அதனைக் கீழே காண்க.

> ''அளவடி முதலா அனைத்தினும் நான்கடி
> முதலா இரட்டியும் முடுகியல் நடக்கும்'' (கழ.பக்.313)

2. பேராசிரியர் கூறும் உரை

''இஃது எய்தாதது எய்துவித்தது; எழுசீரடியே யன்றி ஐஞ் சீரடியும் அறுசீரடியும் அராகம் தொடுக்கும் என்றமையின்'' என்று நுதலியதுரைத்து ''எழுசீரடிக்கு முன்னர் இடைநின்ற ஐஞ் சீரடியும் அறுசீரடியும் முடுகியல் நீக்கார்'' என்று பொருள் கூறியுள்ளார்.

இவர் அராகமும் முடுகியலும் ஒன்றென்று கருதுவர்.

64. ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை யடியு முன்னுத லிலவே.

என்-னின் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ-ள்) முடுகியலாகி வரும் மூவகை அடியும்[2] ஆசிரியப்பா வினும் வெண்பாவினும் நிற்றல் இல என்றவாறு.

நூ. பா. வே: 1. 'முதலீ ரடிக்கும்' பேரா; நச்.
உரை. சு. வே: 2. முடுகியலாகிய மூவகை அடியும்

எனவே, கலிப்பாவினுள்[1] நிற்கப்பெறும் என்றவாறாயிற்று.

உதாரணம்:— முன்னர்க் காட்டுதும்.

'நாற்சீர் கொண்டடதடி' (செய்.31) என ஓதிப் பின்னும் இருசீரடி முச்சீரடி வஞ்சிக்கண் உரித்தென (செய். 43, 45) ஓதி ஐஞ்சீரடியும் அறு சீரடியும் எழுசீரடியும் உள (செய்.60,61,62) என ஓதினமையான் அடியாவது[2] இரண்டு (சீர்) முதலாக வருமெனவும், அவற்றுள் இருசீரடி குறளடி எனவும், முச்சீரடி சிந்தடி எனவும், நாற்சீரடி அளவடி எனவும், ஐஞ்சீரடி நெடிலடி எனவும், அறுசீர்[3] முதலாக வரும் அடியெல்லாம் கழிநெடிலடியாமெனவும் பிற நூலாசிரியர் கூறிய இலக்கணமும் இவ்வாசிரியர்க்கு உடம்பாடென்று கொள்க.

அறுசீர்[4] முதலான அடிகளுள்[5] எழுசீர்[6] எண்சீர் சிறப்புடையன எனவும், எண்சீரின் மிக்கன சிறப்பில்லன எனவும் அவ்வாசிரிய ருரைப்ப.

இவ்வாசிரியரும் அடிக்குச் சீர்வரையறையின்மை,

''ஆங்கனம் விரிப்ப வளவிறந் தனவே
பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை'' (செய். 49)

என்றதனான் உணர்த்தினார் என்று கொள்க.

ஈண்டு நாற்சீரடியை எடுத்தோதியது வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலிப்பாவும் அவ்வடியினான் வருதலின் என்று கொள்க. (சூசி)

நச்சினார்க்கினியர்

முடுகியல் பெறாத பா; பெறும் பா.

''முடுகியல் இன்ன பாவிற்கு உரித்தென்கின்றது'' என்று

உரை. சு. வே: 1. கலிப்பாவின் அறியப் பெறுமாயிற்று (கலிப்பாவின் முன்னுதல்உண்டு என்று கருத்து)
2. அடியாவதற்கு முடுகியல் நீக்கப்படா தென்றவாறு; எனவே, கலிப்பாவிற்கு அடியாவது இரண்டசை.
3. அறுசீரடி
4. ,,
5. அடிகளின்
6. எண்சீரிறுதி சிறப்புடைத் தெனவும்

கருத்துக் கூறி, **'தனியே வரும் ஆசிரியப் பாவினும் வெண்பாவினும் முடுகியலடி மூன்றும் வரப் பெறா'** என்று பொருள் உரைத்து,

மூன்றென்றது **நாற்சீரடியும்** ஐஞ்சீரடியும் அறுசீரடியுமான அடிகளை. எழுசீரடி, **'முன்னுதலில்'** என்றதனான் முற்கூறிய மூன்றடியானும் வரும் முடுகியலோடு விராய்த் தொடர்ந்து ஒன்றாய்க் கலிக்குறுப்பாய் வரும் ஆசிரியமும் வெண்பாவுமுள என்று கொள்க'' என்பர் **(67).**

65. ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற்
றோற்ற முச்சீர்த் தாகு மென்ப.

என்-னின் இதுவும்[1] ஆசிரியப்பாவிற் குரியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஆசிரியப்பாவின் ஈற்றயலடி தோன்றுமிடத்து முச்சீர்த்தாகவும்[2] பெறும் என்றவாறு.

உதாரணம் :—

''முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந்த தனளே'' *(யா.வி.கழ.பக்.130)*

இதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது[3]. **(கூறி)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பாக்களின் ஈறு

தொல்காப்பியர் பாக்களின் இறுதிப்பகுதி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைச் செய்யுளியல் 65 ஆம் நூற்பாவிலிருந்து கூறுகிறார். அவர் ஆசிரியப் பாவினையே முதற்பாவாகக் கருதுபவர் ஆதலால், பாக்களின் இறுதிப் பகுதியைக் கூறத் தொடங்கிய அவர் ஆசிரியப்பாவிலிருந்தே அவ்விதியைக் கூறத் தொடங்குகிறார்.

2. பாக்களின் இறுதியோசை இரண்டுவகை

பாக்களை அமைக்கும்பொழுது ஈற்றயல் அடியை முச்சீராக

உரை. சு. வே: 1. இதுவுமது
2. முச்சீர்த்தாகும் என்றவாறு
3. வந்தவாறு கண்டு கொள்க.

வைத்து ஈற்றடியை நாற்சீராக வைப்பது ஒன்று. இவ்வாறு வருதல் ஆசிரியப்பாவிற்கு உரியது. இதிலிருந்து அகவலோசை ஈற்றயல் குறைந்து இறுதி மிகுந்தொலிக்கும் என்பது புலனாகிறது. மற்றொன்று ஏனைய அடிகளெல்லாம் நாற்சீராகி நிற்ப இறுதியடி மட்டும் மூச்சீராகி வருவதாகும். இவ்வாறு வருதல் வெண்பாவிற் குரியதாகும். இதிலிருந்து வெண்பா ஓசை முன்னே மிகுந்தொலித்து இறுதி குறைந்தொலிக்கும் என்பது புலனாகின்றது.

இந்த இரண்டு இறுதியோசைகளில் அகவல் இறுதி ஓசை வஞ்சிப்பாவிற்கு இறுதியோசையாகியும் வரும்; கலிப்பாவிற்கு இறுதியோசையாகியும் வரும்.

வெண்பா இறுதி ஓசை, கலிப்பாவிற்கு மட்டும் இறுதி ஓசையாகி வரும். இச் செய்திகளைத் **தொல்காப்பியர்,**

ஆசிரியப்பாவிற்கு,

> ''ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கின்
> தோற்றம் முச்சீர்த் தாகும் என்ப'' (செய். 65)

என்றும்

வஞ்சிப்பாவிற்கு,

> ''வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே'' (செய். 68)

என்றும்

வெண்பாவிற்கு,

> ''வெண்பா யீற்றடி முச்சீர்த் தாகும்
> அசைச்சீ ராகும் அவ்வயி னான'' (செய். 69)

> ''நேரீற் றியற்சீர் நிரையும் நிரையும்
> சீரேற் றிறுஉம் இயற்கையே என்ப'' (செய். 70)

> ''நிரையவ ணிற்பின் நேரும் நேர்பும்
> வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்'' (செய். 71)

என்றும்

கலிப்பாவிற்கு,

''எழுசீ ரிறுதி ஆசிரியம் கலியே'' (செய். 72)

''முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்'' (செய். 67)

''வெண்பா வியலினும் பண்புற முடியும்'' (செய். 73)

என்றும் கூறுகின்றார்.

66. இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட முச்சீரடி, ஆசிரியப்பாவினுள்[1] இடையும் வரப்பெறும் என்றவாறு.

உதாரணம்:- ''நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீருஞ்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே''[2] (யா.வி.கழ.பக்.271)

இதனுள் மூன்றாமடியும் நான்காமடியும் முச்சீரான் வந்தவாறு கண்டு கொள்க. (சூசூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. **தொல்காப்பியர்** இதன் முன் நூற்பாவால், ஆசிரியப்பாவின் இறுதி உறுப்பினை ''ஆசிரிய மருங்கின் ஈற்றயலடி முச்சீராய் வரும்'' என்று கூறிவிட்டு, முச்சீர் அதிகாரப் பட்டமையால் அம் முச்சீர் 'இடையும் வரையார்' (66) என்று கூறுகிறார்.

2. **நீரின் தண்மையும் என்ற பாட்டின் அமைப்பு**

இந் நூற்பாவிற்கு **இளம்பூரணர்**, ''மேற்சொல்லப்பட்ட முச்சீரடி ஆசிரியப்பாவினுள் இடையும் வரப்பெறும்'' என்று உரை கூறி, ''**நீரின் றண்மையும்**'' என்ற **அரிய ஆசிரியப் பாவினை** மேற் கோள் காட்டினர். அப் பாட்டு இளம்பூரணர் மேற்கோளில்

உரை. சு.வே: 1. பாவினிடையடியும்
2. லாதே.

ஐந்தடிப்பாடலாகவும், முதல் இரண்டடியும் ஈற்றடியும் நாற்சீர் கொண்ட அடியாகவும், ஈற்றயலடியும் அதற்கு மேலுள்ள அடியும் முச்சீரடியாகவும் அமைந்துள்ளது.

பேராசிரியர் 'ஈற்றய லடியே', 'இடையும் வரையார்' என்னும் இரண்டு நூற்பாக்களையும் உடனெழுதி, 'ஆசிரியத்துள் எருத்தடி யொன்றும், இடையடி இரண்டுமாகி முச்சீரடி வரும்' என்று உரைகூறிவிட்டு முதல் நூற்பாவில் '''முச்சீர்த்து' என்று ஒருமை கூறினமையின் அஃது ஒன்றாகலும், 'தொடையுணர்வோர்' என்றமையின் இடை வருவன இரண்டாகலும் கூறினானென்பது'' என்று சிறப்புரை கூறிவிட்டு, 'நீரின் றண்மை' என்ற பாட்டினை இளம்பூரணரைப் போலவே ஐந்தடிப்பாடலாகக் காட்டி

> ''சார னாடன் கேண்மை' எனவும்,
> 'சாரச் சாரச் சார்ந்து' எனவும்

முச்சீரடி இரண்டு வந்தன என்பர். நச்சினார்க்கினியரும் இதே கருத்தினராவார்.

இலக்கண விளக்க ஆசிரியரும் இளம்பூரணர் பேராசிரியரைப் போலவே இப் பாடலை ஐந்தடியாகக் கொண்டு, ''ஈற்றயலடி யிரண்டும் சிந்தடியான் வந்த இணைக்குறள் ஆசிரியப்பா'' என்றனர்.

யாப்பருங்கல விருத்தி ஆசிரியரும் 'இணைக்குறள் இடைபல குறைந்திறல் இயல்பே' **(72)** என்ற நூற்பாவுரையில், '''இயல்பே' என்ற விதப்பால் முதலடியும் ஈற்றடியும் ஒழிந்து ஏனையடி ஒரோவொன்றுஒருசீரும் இருசீரும் குறைந்து வரும் என்க'' என்று பொதுவாக எழுதிவிட்டு, 'நீரின்றண்மையும்' என்ற பாட்டை எடுத்துக்காட்டி, ''இது சிறப்புடை நேரொன்றாசிரியத்தளையான் வந்து, ஈற்றயலடி யிரண்டும் முச்சீரான் வந்த இணைக்குறளாசிரியப்பா'' என்று விளக்கமும் எழுதினார். அதனால், இளம்பூரணர் பேராசிரியர் நச்சினார்க்கினியர் முதலியோர் போல 'நீரின் றண்மையும்' என்ற பாட்டினை ஐந்தடிப் பாட்டாகவே விருத்தியாசிரியரும் கொண்டிருந்தனர் என்பது புலனாகும்.

இப் பாட்டமைப்பில் வேறுபாடு

ஆனால் யா. வி. கழகப் பதிப்பில் இப் பாட்டு ஆறடிப்

பாட்டாக உள்ளது. யாப்பருங்கலக் காரிகை உரையில் (28) ''சாரச் சாரந்து தீரத் தீரும்'' என்னும் நான்குசீரடி ''சாரச் சார்ந்து'' ''தீரத் தீரும்'' என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அதனால் ஆறடி உடையதாக இப்பாட்டுக் காட்டப்பட்டு, ''இது முதலடியும் ஈற்றடியும் நாற்சீராய் இடையடி இருசீரானும் முச்சீரானும் வந்தமையால் இணைக்குறளாசிரியப்பா'' என்று விளக்கமும் எழுதப்பட்டுள்ளது.

இப் பகுதிகளை ஒப்பிட்டுப் படித்துப் பார்த்தால், யாப்பிலக்கண விதிகளெல்லாம், எழுதுகின்ற சிலரால் மாற்றம் பெற்றுள்ளமை புலனாகும்.

4. இணைக்குறளாசிரியம் எவ்வாறு வரும்

இளம்பூரணர் செய்.112ஆம் நூற்பா உரையுள் ''இடை இடை முச்சீர்வரின் இணைக்குறளாசிரியம் என்ப'' என்பர். அதனால் இருசீரடி, ஆசிரியப்பாவில் வருதலை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது புலனாகும்.

பேராசிரியரும் இதே கருத்தினர் என்பது 'இடையும் வரையார்' என்னும் நூற்பாவிற்கு அவர் எழுதிய உரையால் விளங்கும். **நச்சினார்க்கினியர்** இந்நூற்பாவுரையுள் ''சிறியகட் பெறினே' என்னும் புறநானூற்றுப் பாடலை எடுத்துக்காட்டி, 'இதனுள் பெரியகட் பெறினே' என்பது சொற்சீரடி; இதனைக் குறளடியாக்கிக் குறளடியும் வருமென்பர், பின்பு நூல் செய்த ஆசிரியர் என்பர். இதனால் ஆசிரியப்பாவில் குறளடி வருவது பழைமையன்று என்பது புலனாகும்.

5. வெண்பா முதலானவற்றில் முச்சீரடி

'வெண்பா ஈற்றயலடி முச்சீர்த் தாகும்' (செய்.60) என்னும் விதிப்படியும், 'ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கின் தோற்றம் முச்சீர்த் தாகு மென்ப' (செய்.65) என்னும் விதிப்படியும், 'இடையும் வரையார் தொடையுணர்ந்தோரே'' (செய்.66) என்னும் விதிப்படியும், வெண்பாவின் ஈற்றிலும், ஆசிரியப்பாவின் ஈற்றயலிலும் இடையிலும் முச்சீரடி வரும் என்றறிக. ''எழுசீ ரிறுதி ஆசிரியங் கலியே'' (செய்.72) என்னும் விதிப்

படியும், ''வெண்பா இயலினும் பண்புற முடியும்'' (செய்.73) என்னும் விதிப்படியும் கலிப்பாவின் ஈற்றயலினும் ஈற்றினும் முச்சீரடி வரும் என்றறிக. இவ்விதிகளை யெல்லாம் ஒருங்கு திரட்டி மயேச்சுரர்,

''அல்லாப் பாவின் அடிவகை தெரியின்
எல்லாம் நாற்சீரடி அல்லடி இயலா
இறுதியும் அயலும் இடையும் முச்சீர்
பெறுதியும் வரையார் வெள்ளைமுதல் மூன்றும்''

என்பர்.

(யா. வி. கழ. பக். 117)

6. எட்டுத்தொகையுள் ஆசிரியப்பா

எட்டுத்தொகையுள் நிலைமண்டில ஆசிரியப்பா குறைவு. இணைக்குறளாசிரியப்பா இதைவிடக் குறைவு. நேரிசை ஆசிரியப் பாவே மிகுதி.

67. முச்சீர் முரற்கையு ணிறையவு நிற்கும்.

என்-னின் கலிப்பாவிற்கு ஈற்று வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈற்றயலடி முச்சீரென ஓதப்பட்டது, கலிப்பாவின் கண் நாற்சீரடி ஆகியும் வரும்[1] என்றவாறு.

இச் சூத்திரம் எதிரது நோக்கிக்[2] கூறப்பட்டது, ''எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே'' எனப் (பின்) ஓதுகின்றா ராதலின்.

உதாரணம்:—

''அரிமா னிடித்தன்ன'' என்னும் பாலைக் கலியுள், சுரிதகம்

''முளைநிரை முறுவ லாயத்து ளெடுத்தாய்ந்த
இளமையுந் தருவதோ விறந்த பின்னே'' (கலி.15)

என ஈற்றயலடி நாற்சீரால் வந்தது (கூ)

உரை. சு. வே: 1. வரப்பெறும்
2. எதிர்நோக்கிக்

பதிப்பாசிரியர் விளக்கம்

1. முரற்கை என்ற சொல்

மேல் நூற்பாவில் (செய். 67) கலிப்பாவிற்கு 'முரற்கை' என்றொரு பெயர் வழங்கப்பட்டுள்ளது. செய்யுளியல் உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் என்னும் மூவரும் 'முரற்கை' என்றே பாடங்கொண்டு, இச் சொல் கலிப்பாவிற்கொரு பெயராகும் என்றனர்.

"துள்ள லோசை கலியென மொழிப" (செய். 83) என்னும் நூற்பாவுரையில் பேராசிரியர் "துள்ளலோசை யென்பது வழக்கியலாற் சொல்லாது முரற்கைப் படுமாற்றால் துள்ளச் சொல்லும் ஓசை; அது கலிப்பா (கலித்த ஓசை) எனப்படும்" என்பர்.

யாப்பருங்கல விருத்தியாசிரியரும் (கழ.பக். 219) "வெண்பாவினை 'வன்பா' எனறும், ஆசிரியப் பாவினை 'மென்பா' என்றும், கலிப்பாவினை 'முரற்கை' என்றும் வழங்குப" என்பர்.

ஆனால், திவாகர நிகண்டு 'முரட்கைக் கலிப்பா' என்று கூறுகின்றது. இந் நூற்பாவிற்கு 'முரற்கைக் கலிப்பா' என்ற பாடமும் உண்டு.

பிங்கல நிகண்டு, பாக்களின் பெயர்களைக் கூறும்பொழுது, 'முதற்பா வெண்பா' என்று வெண்பாவின் பெயரைக் கூறி விட்டு, அடுத்து 'விகற்பம் கலிப்பா' என்று கலிப்பாவிற்குப் பெயர் கூறியுள்ளதைக் கருதினால், "முரட்கைக் கலிப்பா' என்ற பாடத்தைக் கூறும் திவாகர நூற்பா, 'முரண்' என்னுஞ் சொல் மாறுபட்டது, விகற்பம் என்ற பொருளில் வருமாதலால், வெண்பாவில் மாறுபட்டது கலிப்பா என்ற பொருளைத் தருவதாக அமையும்.

ஆனால், தொல்காப்பிய உரையாசிரியர் மூவரும், யாப்பருங்கல விருத்தியாசிரியரும் கலிப்பாவின் பெயரை 'முரற்கை' என்றே கொள்வதால் நாமும் அவ்வாறே கொள்வது நன்று.

2. முரல்வும் முரற்றலும்

பிங்கல நிகண்டு 'முரல்வு' என்பது எடுத்தலோசைக்கும்

முரற்றல் என்பது தொனித்தலுக்கும் உரியவாக வரும் என்று கூறிவிட்டு,

''அரற்றலும் முரற்றலும் அழைத்தலும் கத்தலும்
கதற லென்னுங் கட்டுரை யாகும்'' (357)

என்று கூறுவதைக் கருதினால் முரற்கை என்பது பல்வேறு ஓசைகளைக் குறிக்க வரும் என்பது புலனாகும்.

3. கலியோசை

யா.க. விருத்தியாசிரியர் ''சீர் பொருள் இசைகளால், எழுச்சியும் பொலிவும் கடுப்பும் உடைத்தாகலின் 'கலி' என்பதும் காரணக்குறி.

''கலித்தல் கன்றல் கனறல் பம்மல்
எழுச்சியும் பொலிவும் எய்து மென்ப''

எனவும்,

''கம்பலை சும்மை அழுங்கல் கலிமுழக்
கென்றிவை யெல்லாம் அரவப் பெயரே''

எனவும் சொன்னாராகலின்'' எனவும் எழுதுவதை நோக்கினால் எழுச்சியும் பொலிவும் கடுப்புமான ஓசை, முரற்கை யோசையாக வேண்டும்.

4. முரற்கையின் பல பொருள்

மூவகை இசையோசைகளில் வண்டின் ஓசையாக முரற்சி என்னும் ஓசை குறிப்பிடப்படுகிறது.

''ஆங்கரி முரற்சி யென்ன அருங்குயி லோசை யென்ன
வாங்கிருங் கடலுள் வாழும் வலம்புரி முழக்க மென்ன
ஓங்கிய சராச ரங்க ளுருகிடப் பாடு நீதி
தூங்குமூ விசையைக் கண்டு துதித்தன ரிருந்தோர் யாரும்''

(திருவாலவாயுடையார் திருவிளையாடல். 57-28)

என்னும் பாட்டால் அதனை அறிக.

யாழ் நரம்போசைக்கு 'முரற்கை' என்றொரு பெயருண்டு.

''புதல்வற் கவைஇய தாய்புற முயங்கி
நசையினன் வதிந்த கிடக்கை பாணர்
நரம்புளர் முரற்கை போல
இனிதா லம்ம பண்புமா ருடைத்தே (ஐங். 402)

தவத்திரு. விபுலானந்த அடிகளார் சங்கின் ஓசை முரற்சி, முழக்க மென இருவகைப்படும் என்பர் (யாழ். பாயிர. 9)

''சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை'' என்பது திருவாசகம்.

5. உரை வேறுபாடு

பேராசிரியர் ''இந்நூற்பா, கலிப்பாவிற்கு அளவடியும் நெடிலடியும் அதனின் இறந்த அடியும் (வரும் என்று) உரிமைகூறி, இனிச் சிந்தடியும் உரித்தென்கின்றது'' என நுதலியதுரைத்து, ''கலிப்பாவினுள் முச்சீரடி நிரம்பவும் நிற்கும் என்றவாறு'' என்று பொருள் எழுதி, ''நிறைய நிற்றல் என்பது அச்செய்யுள் முழுதும் அவ் வடியே வருதலாம். உம்மையான் ஒரு செய்யுள் நிறைய வாராது ஒன்றும் இரண்டும் பலவுமாகி அம்முச்சீரடி வருதல் பெருவரவிற்றென்பது'' என்று சிறப்புரை எழுதுவர்.

முச்சீரடி நாற்சீரடியாய் நிறைந்து கலிப்பாவின் ஈற்றயலடி நிற்கும் என்பது **இளம்பூரணர்** உரை. கலிப்பாவில் முச்சீரடி பாட்டு முழுதும் நிறைய நிற்கும் என்பது **பேராசிரியர்** உரை.

68. வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.

என்-னின் வஞ்சிப்பாவிற்கு ஈறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் இயல்பிற்று என்றவாறு.

தூக்கெனினும், இறுதியெனினும் ஒக்கும்.

செந்தூக்கெனினும், ஆசிரிய ஈறு எனினும் ஒக்கும்.

'செந்தூக்கியற்று' என்றமையால் ஈற்றயலடி முச்சீரான் வருதலும் நாற்சீரான் வருதலும் கொள்க.

உதாரணம்:—

''தொடியுடைய தோண்மணந்தனன்'' என்னும் பாட்டுள்

''இடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் றலையே'' (புற. 239)

இதனுள் ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.

''பூந்தாமரைப் போதலமர'' என்னும் பாட்டுள்

'' மகிழு மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே'' (யா.வி.கழ.பக்:62)

இதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது. (சூ அ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. வஞ்சிப்பாவின் இறுதி

யா-கலம், 'தூங்க லிசையன வஞ்சி மற்றவை
ஆய்ந்த தனிச்சொல்லோ(டு) அகவலின் இறுமே'
(யா. க. 50)

என்று கூறும்.

யா.காரிகை 'மறைதலில் வாரத்தினாலிறும் வஞ்சி' என்று கூறும். அதன் உரையாசிரியர் '''மறைதலில வாரம்' என்று சிறப்பித்ததால் வஞ்சிப்பா ஆசிரியச் சுரிதகத்தால் இறுவதல்லது வெள்ளைச் சுரிதகத்தால் இறப்பெறாது'' என்பர்.

வஞ்சிப்பாவின் இறுதி, ஆசிரியப்பாவின் இறுதியைப்போல முடியும் (68) என்பது இந் நூற்பாக் கருத்தாகும். 'ஆசிரியப் பாவின் இறுதியைப்போல' என்றதனான் ஈற்றயலடி முச்சீரான் வருதலும் நாற்சீரான் வருதலும் கொள்க என்பர் **இளம்பூரணர்.**

வஞ்சிப்பாவின் இவ் விறுதியுறுப்பைப் பிற்காலத்தார் சுரிதகம் என்று பெயர்கூறிச் சுரிதகத்திற்கு முன்னர்த் தனிச்சொல் வரும் என்று இலக்கணம் செய்தனர். இதனைப் **பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்** மறுத்துள்ளனர்.

''ஈண்டுத் தனிச்சொல் வேண்டுமென்று பிற்காலத்து நூல் செய்தாரும் உளர். அது சான்றோர் செய்யுள் எல்லாவற் றோடும் பொருந்தாமையாலும் பிற்காலத்திற் செய்த நூற்பற்றி முற்காலத்துச் செய்யுட் கெல்லாம் இலக்கணம் சேர்த்துதல் பயமின்றாதலாலும் அஃதமையா தென்பது'' என்பர் **பேராசிரியர்** (செய். 71).

2. வஞ்சிப்பாவின் இடை

மேலும் அவர் ''வஞ்சிப்பாவின் ஈற்றடி வரைந்தோதவே இடையாயின எல்லாவடியும் வரப்பெறு மென்பதாம்.

''நேரிழை மகளி ருணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை''

எனப் பட்டினப்பாலை யென்னும் வஞ்சிநெடும் பாட்டினுள் ஆசிரிய அடியும் வெண்பாவடியும் இடைவந்தன'' என்பர் (செய்.71).

யா. க. விருத்தி ''பட்டினப்பாலை என்னும் வஞ்சி நெடும் பாட்டு, ஆசிரிய அடி விரவிவந்த ஏந்திசைத் தூங்கல் விரவியற் குறளடி வஞ்சிப்பா'' என்று கூறும்.

3. தனிச்சொல்

வஞ்சிப்பா தனிச்சொல் பெற்று வரும் என்பதை யாப்பருங் கலம், காரிகை, காக்கை பாடினியம், அவிநயம், மயேச்சுரம் என்னும் இவற்றால் உணரலாம். தனிச்சொல் பெறுவது பிற்கால வழக்கு.

4. வஞ்சித் தூக்கு என்றதன் பொருள்

தூக்கு என்பதைச் செய்யுள் உறுப்புள் ஒன்றாக ஆசிரியர் ஓதியுள்ளார். ''செந்தூக்கியல என்மனார் புலவர்'' (செய்.113) என்பதற்கு 'அகவலோசை இயல' என்று இளம்பூரணர் பொருள் உரைப்பர். அதனால் இந்நூற்பாவிற்கு 'வஞ்சிப்பாவின் இறுதி ஓசை, ஆசிரியப்பாவின் இறுதி ஓசை போன்ற தென்று' உரை கூறுதலே நன்று.

69. வெண்பா வீற்றடி[1] முச்சீர்த் தாகும்
அசைச்சீ ராகு[2] மவ்வழி யான[3].

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் மேற்கண்ட நூற்பாவை இரண்டு நூற்பா வாகக் கொள்வர்.

நூ. பா. வே:
1. 'வெண்பாட் டீற்றடி' - பேரா; நச்.
2. 'அசைச்சீர்த்தாகும' - பேரா; நச்.
3. 'மவ்வயினான' - பேரா; நச்.

என்-னின் வெண்பாவிற்கு இறுதியடியும், இறுதிச்சீரும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்பாவின் ஈற்றடி மூன்று சீரையுடைத்தாகும்; அதன்கண் இறுதிச்சீர் அசைச்சீரான் வரும் என்றவாறு.

உதாரணம்:— முன்னர்க் காட்டுதும். (சூகூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

பாடவேறுபாட்டின் குறிப்பு: மதுரைத் தமிழ்ச்சங்க நச்சினார்க் கினியர் பதிப்பின் அடிக்குறிப்பில் 'அசைச்சீராகும்' என்றும், வ.உ. சி. பதிப்பின் அடிக்குறிப்பில் 'அசைச்சீராகு மவ்வயினான' என்றும் பாடவேறுபாடு குறிக்கப்பட்டுள்ளன. இளம்பூரணர் உரையை நோக்கினால் 'அசைச்சீராகும்' என்ற பாடமே கொள்ளத் தக்கதாம்.

1. நூற்பாப் பொருள்

வெண்பாவின் ஈற்றடி மூன்று சீரை உடையது. அவ்வழி அசையாலான சீர் வரும் என்பது நேர்பொருள். 'அசைச் சீர்த்து' என்ற பாடத்திற்கு அசையாலாகும் சீர்த்தன்மை உடையது என்று உரை கூறவேண்டும்.

2. பேராசிரியர் கூறும் உரை

பேராசிரியர் ''வெண்பாவின் இறுதியடி யொன்றும் மூச் சீரான் அன்றி வாராது என்றவாறு. அவை முன்னர்க் காட்டுதும்; அஃதேல்,

''அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்''

என மூச்சீரடி இடையும் வந்ததால் வெண்பாவினுள் எனின்:- முச்சீர்த்தென்னாது 'ஆகும்' என்று ஆக்கங் கொடுத்தமையான்

அத்துணை ஆக்கமின்றி இடையும் சிறுபான்மை வருமெனக் கொள்க. அல்லாதார் அதனை வெண்பா அன்றென்ப'' என்பர்.

3. பேராசிரியர் கருத்தினை உட்கொண்டு மாறனலங்கார உரையாசிரியர்

'வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்' என்ற செய்யுளியற் சூத்திரத்துள், வெண்பாவிற்கு ஈறுணர்த்தலைப் புகுந்து, '''முச்சீர்த்து' என்னாது 'ஆகும்' என ஆக்கங் கொடுத்த மையான், அத்துணை ஆக்கமின்றி, இடையினும் முச்சீராய், அவ்வீற்றுச்சீர் அசைச்சீ ராகாது வரும் என்று உட்கொண்டு உணர்த்தினார் தொல்லாசிரியர்.

அங்ஙனம் வருவது தனிச் சொல்லுமின்றி வந்ததோர் வெண்பாவின் விகற்பமாம். இங்ஙனம் வருவதனைப் பின்னர் வரும் ஒரு சாராசிரியர் சவலை வெண்பாட்டென்றும் பெயரிட்டு வழங்குவர்; என்னை,

> ''நனியிரு குறளாய் நான்கடி யுடைத்தாய்த்
> தனிவர வில்லது சவலைவெண் பாட்டே''

என்பதனானும் உணர்க'' என்பர் (செய். 455) மாறனலங்கார உரையாசிரியர்.

4. நூற்பாக்களின் கருத்து

மேற்காட்டிய பேராசிரியர் முதலியோர் கருத்தை நோக்கினால், ஆசிரியப்பா வெண்பா முதலியவற்றிற்கு ஈற்றுறுப்பைக் கூறவந்தன 'ஈற்றயலடியே' (செய். 65) முதலிய நூற்பாக்கள் என்பது புலனாம்.

70. நேரீற் றியற்சீர் நிரையும் நிரைபுஞ்
சீரேற் றிறூஉ மியற்கைய வென்ப.

என்-னின் மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்பாவின் இறுதிச்சீரின் அயற்சீர் நேரீற்றியற்

சீர் ஆயின் நிரையசையும், நிரைபு அசையும் சீராந் தன்மையைப் பெற்று முடியும்[1] இயற்கையை உடைய என்றவாறு.

உதாரணம்:-

''கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை (குறள்.9)

''தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது'' (குறள்.7)

என வரும். (எ0)

பதிப்பாசிரியர் விளக்கம்

நூற்பாவிற்கு உரை

நேரீற்றியற்சீர் - ஈண்டு தேமா புளிமாவே.

பேராசிரியர்

''நேர் இறுதிவந்த நிரையும் நிரைபுமே இறுதிச் சீராய் நிற்பன'' என்று உரைகூறுவர்.

அதற்கு ''நேரிறுதி வந்த' என்றது, இரண்டாஞ் சீராகிய நேரீற்றியற்சீருக்குப் பின்னே நிரையும் நிரைபும் இறுதிச்சீராய் வந்து தளைத்து முடியும் என்றபடி'' என்பர் திரு. **கணேசய்யர்** அவர்கள்.

நச்சினார்க்கினியர் ''நிரையும் நிரைபும் நேரீற்றியற்சீர்ப் பின்னே தளை கொண்டிறும் இயல்பின' என்று உரை எழுதுவர்.

71. நிரையவ ணிற்பி னேரும் நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) வெண்பாவி னீற்றயற்சீர் (வெண்பாவின் இறுதிச் சீரின் அயற்சீர்) நிரையீற் றியற்சீராயின் நேரசையும் நேர்பு அசையும் (சீராந் தன்மையைப் பெற்று) முடிபாம் என்றவாறு.

உரை. சு. வே: 1. பெறு முடிபாகும்

உதாரணம்:-

''பாலொடுதேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்'' (குறள். 1021)

''நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று'' (குறள். 108)

என வரும்.

''வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே'' (செய். 28)

என்பதனான் ஈற்றயற்சீர் முதலசையான் வரினும் நேரும், நேர்பும் முடிபாகக் கொள்ளப்படும்.[1]

உதாரணம்:-

''பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்'' (குறள். 10)

''இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு'' (குறள். 5)

என வரும். (எக)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. உரையுள் முதலசையான் வரினும் என்பதற்கு

நேரீற்றவாய் வரினும் என்பது பொருள். வெண்பாவுரிச் சீராய் வரினும் என்பது கருத்து.

2. இளம்பூரணர் உரைக்கு மறுப்பு

பேராசிரியர் ''முன்னர் 'நேரீற் றியற்சீர் நிரையும் நிரைபும்' எனக்கூறி, ஈண்டு 'நிரையவண் ணிற்பின்' எனச் சுட்டிக் கூறியவதனானே, அதுவும் நிரையீற் றியற்சீர் என்பதூஉம், அஃது இரண்டாஞ்சீர் என்பதூஉங் கொள்க. அல்லாதார் அதனை வெண்சீர்க்கும் பொதுவெனக் கூறி, ''வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே'' (செய்-28) என்றதனான் வெண்சீரிறுதி நிரையாக இயற்றி அதன் பின் நேர்பசை கொடுப்ப, ''எய்போற் கிடந்தானென் னேறு'' (புற.வெ.வாகை.22) என்புழி, 'கிடந்தா

உரை. சு. வே: 1. கொள்ளப்படும் என்றவாறு.

னென். என நின்ற புலிசெல்வாயினைக் கணவிரியாக இயற்றி, 'நிரையவண் ணிற்பின் நேரும் நேர்பும்' என்றதனால் 'ஏறு' என்னும் நேர்பசை கொடுப்பர். அஃது ஈண்டு ஆராய்ச்சியின்று என்பது.....என்னை? இது கட்டளையடி யன்மையின்" என்பர். இஃது இளம்பூரணரை மறுத்தது. (செய்.75.பேரா)

3. யாப்பருங்கலம் உரைப்பது

தொல்காப்பியர் 'வெண்பா வீற்றடி முச்சீர்த் தாகும், அசைச்சீ ராகும் அவ்வழி யான' (செய்.69) என்று கூறினாற் போல, **யாப்பருங்கலமும்** 'செப்ப லிசையன வெண்பா மற்றவை, அந்தடி சிந்தடி யாகலும் அவ்வடி, அந்தம் அசைச்சீ ராகலும் பெறுமே' (57) என்று கூறுகின்றது.

தொல்காப்பியர் கூறிய 'அசைச்சீர்த்தாகும் அவ்வழி யான' என்பதும், யாப்பருங்கலம் கூறும் 'அந்தம் அசைச்சீ ராகலும் பெறுமே' என்பதும் ஒத்த கருத்துடையனவாகும்.

4. விருத்தியாசிரியர் கருத்து

ஆனால் யா.க. **விருத்தியாசிரியர்** 'அந்தம் அசைச்சீ ராகலும் பெறுமே' என்றதற்கு "அவ்வீற்றடியுள் இறுதி அசைச்சீராகியும் சீர்ச்சீராகியும் நிற்கப் பெறும் என்றுரைத்துப் பின்னர் "அசைச் சீராய் வருகின்றுழி தனிக்குறில் நேரசையும் நெடிலுடைய நிரையசையும் வருதல் சிறப்பில்லை; அல்லது சீர்ச்சீராய் வருகின்றுழி ஆண்டு இயற்சீரன்றி வாரா; அவைதாம் உகரவீறாய் அன்றி வாரா; அவற்றுட் குற்றியலுகரம் ஈறாய் வருவது சிறப்புடைத்து. முற்றிய லுகர வீறாய் வருவன பெரியதோர் சிறப்பில; அவைதாம் அருகியன்றி வாரா வெனக் கொள்க; அவற்றிற்கு உதாரணம் காசு, பிறப்பு என்ப" என்பர். அவர் காசு பிறப்பினைப் பிற்கால முறைப்படித் தேமா, புளிமாவாகக் கருதுகிறார்.

நூற்பா 69, 70, 71 - இவற்றின் குறிப்பு

வெண்பாவின் இறுதி உறுப்பு

"அந்தடி சிந்தடி யாகலும் அவ்வடி
அந்தம் அசைச்சீ ராகலும் பெறுமே" (57)

என்று **யாப்பருங்கலம்** வெண்பாவிற்கு இறுதி உறுப்பை ஒரு நூற்பாவால் கூறிற்று. ஆனால், **தொல்காப்பியர்** வெண்பாவின் இறுதி உறுப்பினை "வெண்பா வீற்றடி (69)" "நேரீற்றியற்சீர்" (70) "நிரையவண் ணிற்பின்" (71) என்னும் மூன்று நூற்பாக்களால் கூறியுள்ளார்.

பிறரெல்லாம் வெண்பாவின் இறுதி உறுப்பிற்கு அந்தடி சிந்தடியாதல், அவ்வடி அந்தம் அசைச்சீராதல் என்னும் இரண்டு இலக்கணமே கூறியுள்ளனர். தொல்காப்பியர் அவ்விரண்டிலக்கணத்திற்கு மேலும் ஓர் இலக்கணத்தைச் சேர்த்துக் கூறியுள்ளார்.

1. அவர் கூறும் இலக்கணம் வருமாறு

1. வெண்பாவின் ஈற்றடி முச்சீரை (சிந்தடி) உடைத்தாகுமென்றும், 2. அவ்வடியின்கண் இறுதிச்சீர் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் அசைச்சீரான் வருமென்றும், 3. ஈற்றயற்சீர் நேரீற்றியற் சீராயின், நிரை அசை அல்லது நிரைபு அசையும், நிரையீற் றியற் சீராயின், நேர் அசை அல்லது நேர்பு அசையும் வரல் வேண்டுமென்றும் கூறுகின்றார்.

இவ்வாறு அவர் கூறுவதைக் கூர்ந்து நோக்கினால் வெண்பாவின் ஈற்றடி முச்சீர்த்தாகியும் இறுதி அசைச்சீர்த்தாகியும் வருதலன்றி, ஈற்றயற்சீரும் இயற்சீராகவே வருதல் வேண்டும் என்னும் உண்மை புலனாகின்றது.

இவ்வாறு அவர் கருதுவதற்குக் காரணம், வெண்பாவின் இறுதி ஓசை வரவரக் குறைந்து வரல்வேண்டும் என்பதுதான். செப்பலோசை அவ்வாறுதான் வரும்.

இவ்வாறு வராமல் ஈற்றயற்சீர் முச்சீராய் வருமாயின், ஓசை சுருங்கி வராமல் மிக்கொலிக்கும் என்க. அவ்வாறு வருதல் வெண்பாவின் இறுதி ஓசைக்குச் சிறப்பில்லை.

தமிழ்ப் பாக்களின் இறுதியெல்லாம் ஈற்றயலடி சுருங்கி, இறுதியடி மிக்கொலித்தலும், ஈற்றயலடி சுருங்காமல் இறுதியடி குறைந்தொலித்தலும் என்ற இருவகையான் நடக்குமென்க.

தொல்காப்பியர் கூறும் இவ்வெண்பா இலக்கணத்தில்

''இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு''

''பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்''

என்னும் திருக்குறள் முதலான கீழ்க்கணக்கு நூல்கள் பிறழ்ந்து வருதலை அறிஞர் கருதுக.

72. எழுசீ[1] ரிறுதி யாசிரியங் கலியே.

என்-னின் கலிப்பாவிற்கு முடிபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கலிப்பாவிற்கு[1] ஈற்றயலடி முச்சீரான் வரும் ஆசிரியம் முடிபாகும் என்றவாறு.

உதாரணம்:—

'தொடங்கற்கட் டோன்றிய' என்னும் கலியுள் சுரிதகம்

''தொல்கவின் றொலைத லஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே'' (கலி. 2)

என வந்தது.

ஈற்றயலடி நாற்சீரான் வருமென்பது மேற்கூறப்பட்டது. (எஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. உரைக்குறிப்பு

முன்னே 'முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்' (67) என்ற நூற்பாவினையும், அதற்கு இளம்பூரணர் எழுதியுள்ள உரையினையும் நோக்குக.

2. நூற்பாவுரை

இந்நூற்பாவிற்கு (72) ஈற்றயலடி முச்சீராகவும் ஈற்றடி நாற்சீராகவும் வருகின்ற எழுசீர் இறுதியாகிய ஆசிரியப்பா கலிப்பாவிற்கு முடிபாகும் என்று பொருள் கூறுக.

நூ. சூ. வே: 1. ''முச்சீ''
உரை.சூ.வே: கலிப்பாவின்

73. வெண்பா வியலினும் பண்புற முடியும்.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) கலிப்பா வெண்பாச் சுரிதகமாகி முடியவும்[1] பெறும் என்றவாறு.

உதாரணம்:-

'அறனின்றி யயறூற்றும்' என்னும் கலியுள் (3) சுரிதகம்

''யாநிற் கூறவு மெமகொள்ளா யாயினை
யானா திவள்போ லருள்வந் தவைகாட்டி
மேனின்று மெய்கூறுங் கேளிர்போ னீசெல்லுங்
கானந் தகைப்ப செலவு''

என வெண்பாவி னியலான் இற்றவாறு காண்க.

இத்துணையும் அடியிலக்கணம். (எஈ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் உரைப்பன

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எழுசீரிறுதி, வெண்பா வியலினும் என்ற இரண்டு நூற்பாக்களை உரை இயைபு பற்றி ஒருங்கு எழுதி உரை கூறுகின்றனர். **நச்சினார்க்கினியர்** 'கலிப்பா எழுசீ ரிறுதியாகிய ஆசிரியத்தாலும் வெண்பாவின் இறுதியா லும் முடியும்' என்று பொருள்கூறிவிட்டு, 'எழுசீ ரிறுதி யாசிரியம் எனவே, ஆசிரியவடி பலவும் வந்து எருத்தடி முச்சீரா கவே வருமென்பதூஉம், 'வெண்பா வியல' எனவே கட்டளை வெண்பாவானும் சீர்வகை வெண்பாவானும் வந்து ஈற்றடி முச்சீரான் வருமென்பதூஉம் பெற்றாம், என்பர்.

பேராசிரியர் ''பண்புற முடியும் என்பது விசேடம் மிக முடி யும் என்றவாறு. எனவே, ஈண்டுக் கூறாத இருசீரடியானும், நாற்சீரான்வந்த கலிப்பாவடியானும் ஐஞ்சீரடியானும் முடிவன கொச்சகக் கலியுள; அவை இத்துணை விசேட மில என்றவாறு.''

''ஈண்டு, விதந்து ஓதிய வெல்லாம் பெரும்பான்மையும் ஒத்தாழிசைக் கலிக்கென உணர்க.

உரை.சு.வே: 1. மாக முடியும்

'இயல' என்றதனாற் கட்டளை வெண்பாவே (இறுதி உறுப்பாக) வரல் வேண்டுவதில்லை எனக்கொள்க.

'பண்புற' என்றதனான் மூன்றடியின் இழியிற் பண்புபட வாரா வெள்ளைச் சுரிதக மெனவுங் கொள்க" என்பர்.

2. யாப்பருங்கல நூற்பா கலிப்பாவின் இறுதியைப் பற்றி

"துள்ள லிசையன கலிப்பா மற்றவை
வெள்ளையு மகவலு மாய்விளைந் திறுமே" (78)

என்று கூறும்.

இந் நூற்பா வுரையுள்

"பிறிதின் நடப்பினும் வஞ்சியும் கலியும்
இறுதி மருங்கில் ஆசிரி யம்மே"

"கலியே வெண்பா வாயினும் வரையார்"

என்று இரண்டு நூற்பாக்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

3. அடியிலக்கணம்

தொல்காப்பியர் இச்செய்யுளியலில் 'நாற்சீர் கொண்ட' (31) என்னும் நூற்பாவிற்றொடங்கி, 'வெண்பா வியலினும்' (செய்.73) என்னும் இந்நூற்பாவரை யுள்ள **நாற்பத்து மூன்று நூற்பாக்களால் அடி யிலக்கணங்** கூறி முடித்தார். அடியிலக்கணத்தை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டு கூறும் **நக்கீரர் அடிநூல்** முதலியன உண்மையை யாப்பருங்கல விருத்தியால் உணர்ந்து கொள்ள லாம். அடியின் நுட்பம் அறிதல் அரிது என்று யாப்பருங்கல விருத்தியாசிரியரும் பேராசிரியரும் கருதுவர்.

"அடியி னுட்ப மறிவருங் குரைத்தே எனப் பிறருங் சொல்லுப" (செய்.50)

என்று பேராசிரியர் கூறுவதாலும்,

"எண்ணெழுத்திற் றிண்ணியராய் எஃகு செவியராய்
நுண்ணுணர்விற் சேர்ந்த நுழைவினராய்-மண்மேல்
நடையறிந்து கட்டுரைக்கும் நாவினோர்க் கல்லால்
அடியறியுந் தன்மை அரிது"

என்று **யாப்பருங்கல விருத்தியாசிரியர்** கூறுவதாலும் அடி பற்றிய இலக்கணம் நுட்பமாக ஆராயத் தக்கதென்று தெரிகின்றது.

(6) யாப்பு

74. எழுத்து முதலா வீண்டிய வடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்[1]
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

என்-னின் யாப்பு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எழுத்து முதலாக அசை, சீர், அடியென ஈட்டப் பட்ட[2] அடியினால், தான் குறித்த பொருளை இறுதியடியளவும் முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

இது சொல்லவேண்டிய தென்னை? செய்யுட்பாடுவார்க்கு இயல்பன்றோ வெனின், ஈண்டுச் செய்யுளுறுப் போத்துள்[3] ஒது கின்றாராதலின், யாதானுமொரு பொருட்கட் பல சொல் தொடுத்து[4] வழங்குங்கால், குறித்த பொருளை முடிக்கவேண்டுஞ் சொல்லே சேர்த்துக்[5] கூறல்வேண்டு மெனவும், அது மிகாமற் குறையாமற் கூறல் வேண்டு மெனவும் இலக்கணங் கூறல் வேண்டு மென்க.

அதன் வகை முன்னர்க் காட்டுதும். (எச)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. நூற்பாப் பொருள்

இந் நூற்பாவிற்கு, எழுத்தால் அசையும், அசையால் சீரும், சீரால் அடியுமாய் ஈண்டிய அடியினால் தான் கருதிய அறம் முதலான பொருள்களை முதலடியிலிருந்து இறுதியடி யளவும் முற்றுப்பெற நிறுத்துதலை யாப்பென்று சொல்லுவர் புலவர் என்பதைப் பொருளாகக் கூறுகிறார் **இளம்பூரணர்.**

இளம்பூரணர் கருத்தின்படி பார்த்தால், முதலடியிலிருந்து

நூ.பா.வே: 1. 'நாட்டில்', 'யாத்தல்' 4. தொடுப்பது
உரை.சு.வே: 2. ஈண்டோதப்பட்ட 5. சொல்லோடு சேர்த்தி
3., செய்யுளுறுப்புள்

இறுதியடிக்குள் குறித்த பொருள் முடிந்துவிடவேண்டும். அதுவே யாப்பு என்னும் உறுப்பாம் என்பது.

நூற்பாவிற்கு (சூத்திரத்திற்கு) ஒரு வரையறையுண்டு. 'ஒரு பொருணுதலிய சூத்திரத்தானும்' என்று கூறப்பெறுவதால், அது ஒரு பொருளைக் கருதித்தான் வரல் வேண்டும்; இரண்டு முதலான பொருள்களைக் கருதி வரக்கூடாது என்பதாம்.

அஃதேபோல், இங்கே நூற்பாவொழிந்த செய்யுட்கு ஓதும் யாப்பானது அச் செய்யுளின் முதலடியிலிருந்து இறுதியடிக்குள் குறித்த பொருள் முடிய நாட்டிவிட வேண்டும் என்பதாம். இவ்வுரை, நூற்பாவுக்கு உண்மையுரையானால், எடுத்துக் கொண்ட பொருளை முதலடியில் தொடங்கி இறுதியடியில் முடித்து நிற்கும் தனிப்பாடற்கே இவ்விலக்கணம் உரியதாகல் வேண்டும். எனவே, இவ்வாறு கூறும் இவ்விலக்கணத்திற்கு மாறுபட்ட குளகம், தொடர்நிலை என்னும் இலக்கியங்கள் எழுந்த காலத்திற்குத் தொல்காப்பியர் முந்தியவராதல் வேண்டும் என்க.

''யாப்பெனப் படுவ தியாதென வினவின்
தூக்கும் தொடையும் அடியுமிம் மூன்றும்
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே''

என்னும் **நற்றத்தனார்** நூற்பாவின்படி (யா. வி. கழ. பக்.16) இங்கே தொல்காப்பியர் கூறிய யாப்பு, அடியை நோக்கியதாம்.

மேற்கண்ட தொல்காப்பிய நூற்பாவிற்குக் 'குறித்த பொருளை முடிய யாத்தல்' என்றொரு பாடமும் உண்டு. யாத்தல், யாப்பாம்.

2. பேராசிரியர் உரை

பேராசிரியர், இளம்பூரணரைப் போல் 'அடியில்' என்பதற்கு 'அடியினால்' என்று பொருள் கூறாமல் 'அடிக்கண்ணே' என்று பொருள் கூறுவர். அவர், ''அடிக்கண்ணே (குறித்த பொருள்) முடியுமெனவே இருசீரும் முச்சீரும் கிடப்ப முடிய நாட்டினும், நாற்சீர் கொண்டு முடிய நாட்டினும் அமையுமென்பது'' என்பர்.

மேலும் அவர் ''மாத்திரை முதலாக என்னாது 'எழுத்து முதலாக' என்றது என்னையெனின், எழுத்தும் அசையும் சீரும் கொண்டியன்ற ஒரோவடிக்கண்ணே இன்பம் செய்யும். அது, பொருட்காய் இன்றியமையாமையின் எழுத்து முதலாக என்றான் என்பது.

'ஈண்டியவடி' என்பது அவை மூன்றும் ஒன்றாகத் தொடர்ந்து ஈண்டிய அடி என்றவாறு. எனவே, இவற்றைப் பொருளன்றி வேறு வேறு செய்யாது பொருட்டொடர்படச் செய்ய வேண்டும் என்பதூஉங் கூறியவாறாயிற்று.

'குறித்த பொருள்' என்றது, அவ்வடியில் தான் வைக்கக் கருதிய பொருளைப் பிறிதோர் அடியுங் கொண்டு கூட்டாது அமைந்து மாறச் செய்தல்.

''மாயோன் மார்பி லாரம் போல
மணிவரை யிழிதரு மணிகிள ரருவி
நன்பொன் வரன்று நாடன்
அன்புபெரி துடையன் இன்சொல் வினனே''

என, இது குறித்த பொருளை நாற்சீரடி தோறும் முடிய நாட்டியது.

''மண்டில மமுங்க மலைநிறங் கிளர
வண்டினம் மலர்பாய்ந் தூத மீமிசைக்
கண்டற் கானற் குருகின மொலிப்ப''

என்றவழி இருசீரானும் முச்சீரானும் நாற்சீரானும் குறித்த பொருளை முடிய நாட்டியவாறு கண்டு கொள்க'' என்பர்.

3. நச்சினார்க்கினியர் உரை

நச்சினார்க்கினியர் ''எழுத்து முதலாக அசையும் சீரும் ஒன்றாகத் தொடர்ந்தீண்டிய அடியிலே, தான் வைப்பக் கருதிய பொருளைப் பிறிதோரடியுங் கொண்டு கூட்டாதமைந்து மாறச் செய்தல் யாப்பென்று சொல்லுவர் அவ்வாறு யாத்தலை வல்ல புலவர்'' என்று பொருள்கூறி,

''யாப்பறி புலவர்' என்றதனான் இருசீரானும் முச்சீரானும் குறித்த பொருளை முடிப்பனவும், அங்ஙனம் முடிப்பதொழிந்து

அச்சீரை மேல் வருகின்ற அடியோடு பொருண்முடியச் செய்வனவும் சிறுபான்மை யாப்பென்று கொள்க'' என்பர்.

75. பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கத முதுசொ[1] லவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை[2] யகத்தவர் வழங்கும்
யாப்பின் மொழிய[3] தென்மனார் புலவர்.

என்-னின் இதுவும்[4] அதன் பகுதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பாட்டு முதலாக முதுசொல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழுநிலத்தினும் வளவிய புகழையுடைய சேரன் பாண்டியன் சோழன் என்னும் மூவரது தமிழ்நாட்டகத்தவர் வழங்கும் தொடர்வழிக்கண்[5] வரும் மொழி யாப்பாவது என்றவாறு.

எனவே, யாப்பாவது :— பாட்டியாப்பு. உரையாப்பு, நூலியாப்பு, மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, பழமொழியாப்பு என எழுவகைப்படும்.

மேலைச் சூத்திரத்துள் குறித்த பொருளை முடிய நாட்டல் என்றமையானும், இச்சூத்திரத்துள் நாற்பேரெல்லை யகத்தவர் வழங்கும் யாப்பின் மொழியது[6] என்றோதினமையானும், குறித்தபொருள் முடியுமாறு சொற்றொடுத்தல் (யாப்பு) என்று கொள்ளப்படும்.

உதாரணம்:—

'தாமரை புரையுங் காமர் சேவடி
பவளத் தன்ன மேனித் திகழொளி
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைக லெய்தின்றா லுலகே'' (குறுந். கடவுள்)

நூ. பா. வே: 1. முதுசொலோடவ்வேழ்
2. நாற்பெய ரெல்லை
3. யாப்பின் வழியது

உரை. சு. வே: 4. 'மேற் சொல்லப்பட்ட யாப்பு பாகுபடுமாறும் அதன் இயல்பும் உணர்த்துதல் நுதலிற்று'
5. 'தொடர் மொழிக்கண்'
6. 'மொழியது'

இதனுட் குறித்த பொருள் 'முருகவேள் காப்ப உலகம் காவற்பட்டது[1]', என்னும் பொருள்.

இதனை முடித்தற் பொருட்டு, எழுத்து முதலாக வந்து ஈண்டிய அடிகளெல்லாவற்றானும்[2] நாட்டியவாறு கண்டு கொள்க. (எஞ்)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. நூற்பாப் பாட ஆய்வு

இளம்பூரணர் "தமிழ் நாட்டகத்தவர் வழங்கும் தொடர்வழிக் கண் வரும் மொழி யாப்பாவது" என்று பொருள்கூறி, "மேலைச் சூத்திரத்துள் 'குறித்த பொருளை முடிய நாட்டல்' என்றமையானும், இச்சூத்திரத்துள், நாற்பேரெல்லை யகத்தவர் வழங்கும் யாப்பின் மொழியது என்று ஓதினமையானும், குறித்த பொருள் முடியுமாறு சொற்றொடுத்தல் என்று கொள்ளப்படும்" எனச் சிறப்புரை வகுத்துள்ளதாலும் 'நாற்பே ரெல்லை யகத் தவர் வழங்கும் யாப்பின் மொழியது' என்று பாடங்கூறலே அவர் கருத்தாகும்.

பேராசிரியர் "இந்நூற்பா அரிமா நோக்கு; மேற்கூறிய யாப்பிற்கும் வருகின்ற மரபிற்கும் அப்பகுதி யுரிமை கூறினமை யின்" என்று நுதலிய துரைத்து, "பாட்டும் உரையும் நூலும் வாய்மொழியும் பிசியும் அங்கதமும் முது சொல்லுமென்று சொல்லப்பட்ட அவ்வேழ்நிலத்தும் வடவேங்கடந் தென்குமரி யாயிடை நாட்டார் நடத்துகின்ற செய்யுளின் பெயரே தனக்குப் பெயராகவுமுடைத்து மேற்கூறிய யாப்பு என்றவாறு" என்று பொருள் எழுதுவர்.

மேலும் அவர், சிறப்புரையில் "யாப்பின் வழிய தென்பது இவ்வெழுவகைப்பட்ட யாப்பின் பெயரது மரபாகும் யாப்பாகிய உறுப்பென்றவாறு" என்று எழுதுவதால் "யாப்பின் வழியது என்மனார் புலவர்" என்ற பாடம் பேராசிரியரது என்று தெரிகிறது.

---

1. காக்கப்பட்டது
2. அடிகள் பலவற்றானும்

T 4669

2. நச்சர் உரை

நச்சினார்க்கினியர் 'நாற்பெயரெல்லை யகத்தவர்' என் பதற்கு "வட வேங்கடந் தென்குமரியிடத்து மலை மண்டிலம், சோழ மண்டிலம், பாண்டிய மண்டிலம், தொண்டை மண்டிலம் என்னும் நான்கு பெயரையுடைய தமிழ்நாட்டார்" என்பர்.

பின்னர்ச் சிறப்புரையில், "என்றது, 'குறித்த பொருளை முடிய நாட்டுதலேயன்றி பாட்டு உரை நூல் முதலிய பகுதிபடச் செய்தலும் யாப்புறுப்பாம் என்றதாம்" என்று எழுதுவர்.

3. யாப்பு

அவர் செய்யுளியல் முதல் நூற்பாவுரையில் 'யாப்பு என்றது அவ்வடிதோறும் பொருள் ஏற்று நிற்பச் செய்வதோர் செய்கையை' என்பர்.

பேராசிரியர், 'யாப்பென்பது அவ்வடிதோறும் பொருள்பெறச் செய்வதோர் செய்கை' என்பர். தொல்காப்பியர் யாப்பினை, ஏழாகப் பகுத்தார். பிற்காலத்தே **இலக்கணக் கொத்தின் ஆசிரியர்**

"இலக்கணம் இலக்கியம் உரையெனப் பெயர்பட்டு
இருக்குமென் றெண்ணுக செய்யுளி னியல்பே"

என்று மூன்றாகப் பகுப்பர்.

தொல்காப்பியப் பாயிரவுரையுள் நச்சினார்க்கினியர் "செய்யுளாவது 'பாட்டுரை நூலே' என்னும் செய்யுளியற் சூத்திரத்தாற் கூறிய ஏழுநிலமும் அறம் முதலிய மூன்று பொருளும் பயப்ப நிகழ்வது" என்பர்.

4. வாய்மொழி

நூற்பாவுள் வந்துள்ள வாய்மொழி என்பது மந்திரம் ஆகும். "தூய னாகி வாய்மொழி பயிற்றி" என (பெருங்கதை. வத்தவ. 6:80) வந்தவாறு உணர்க.

(7) மரபு

76. மரபே தானும்
நாற்சொல் லியலான் யாப்புவழிப்[1] பட்டன்று

நூ.பா.வே:1 "பட்டன" பேரா; நச்.

என்-னின் மரபு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மரபாவது தான் 'இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்றனைத்தே செய்யுள் ஈட்டச்சொல்' (சொல்-எச்.1) என்றமையின் அவற்றின்[1] இயற்கையானே யாப்பின் வழிப்பட்டது என்றவாறு.

குறித்த[2] ஒருபொருளை முடியச் சொற் றொடுக்குங்கால் (செய்.74) இயற் சொல்லாகிய பெயர் வினை இடை உரியானும் ஏனைத் திரிசொல் திசைச்சொல் வட சொல்லானும் எழுவகை[3] வழுவும் படாமற் புணர்ப்பது என்றவாறாம்.

அவற்றுள், இயற்சொல் மரபாவது சொல்லதிகார இலக்கணத்தோடு பொருந்துதல்.

திரிசொல் மரபாவது, தமிழ் நாட்டகத்தும் பலவகை நாட்டினும் தத்தமக் குரித்தாக (த்திரித்து) வழங்கும் மரபு.

திசைச்சொல் மரபாவது செந்தமிழ் சூழ்ந்த பன்னிரு நிலத்தினும் வழங்கும் மரபு.

வடசொன் மரபாவது திரிந்தவகையாகிய சொன்மரபு.

யாதானும் ஒரு செய்யுட் செய்யுங் காலத்துப் பொருள் உணர்த்துஞ் சொற்கள் இவையாதலின் இவை ஒருபொருட்குரித்தாகிய ஆண் பெயரும் பெண் பெயரும் குழவிப் பெயரும் முதலாயின பிறபொருட்கண் வாராமையான் அவற்றை அவ்வம் மரபினாற் கூறுதலும் ஒருமைப் பன்மை மயங்காமைப்[4] பெயரும் வினையும் முடிவுபெறக் கூறுதலும் வேண்டுதலின் இவ்விலக்கணமும் கூறல் வேண்டிற்று. (எசு)

(8) துரக்கு

77. அகவ லென்ப தாசிரி யம்மே.

உரை.சு.வே: 1. எவ்னும் நாற்சொல்லின் இயற்கையானே.
2. குறித்த பொருள் மேற் வழுப்படாமற்
3. எழுவகையானும் எழுவகை
4. மயங்காமையும்

என்-னின், இனித்[1] தூக்காமாறு உணர்த்துவார், அவற்றுள் ஆசிரியத்திற்குரிய ஓசை (தூக்கு) உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அகவல் என்னும் ஓசை ஆசிரியத்திற்கு என்றவாறு.

'தூக்கு' எனினும், 'ஓசை' எனினும் ஒக்கும்.

அகவல் என்பது ஆசிரியன் இட்டதோர் குறி.

அது வருமாறு:

''செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானை
கழறொடிச் சேய குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே'' (குறுந். 1)

இதனுள், எழுத்தளவு மிகாமற் குறையாமல் உச்சரிக்க[2] அவ்வழி நின்ற (அகவல்) ஓசையால் ஆசிரியம் வந்தவாறு காண்க.[3] (எஎ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. தூக்கு

செய்யுளியல் முதல் நூற்பாவில் ''மரபே தூக்கே தொடை வகை யெனாஅ'' என்று நிறுத்த முறையானே மரபினைக் கூறி விட்டு, இந் நூற்பாவிலிருந்து தூக்கினைக் கூறத்தொடங்கி யுள்ளார்.

தூக்கு என்பது பலபொருள் ஒருசொல்.

கொட்டு, அசை, தூக்கு, அளவு என்னும் தாள வுறுப்பு நான் கில் ஒன்று தூக்கு ஆகும். அதன் செயல் தாக்கித் தூக்குதலாகும். ஒருசீர் இருசீர் முச்சீர் நாற்சீர் ஐஞ்சீர் அறுசீர் எழுசீர் பெற்று வருவனவற்றை **இசை நூலார்** முறையே செந்தூக்கு, மதலைத் தூக்கு, துணிவுத் தூக்கு, கோயிற் றூக்கு, நிவப்புத் தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு என்று பெயர் கூறுவர்.

வெண்பா மாலையில், 'பாணியும் தூக்கும் நடையும் பெய ராமை' (361) என்ற பாட்டில் தூக்கு என்பதற்கு இசை என்று பொருள் காண்பர் அதன் உரையாசிரியர்.

உரை.சு.வே: 1. 'இது தூக்காமாறு உணர்த்துவார்'
2. உச்சரிக்கப் பட்டது.
3. கண்டு கொள்க.

பிங்கல நிகண்டு

"துலாமும் உறியும் கூத்தும் பாட்டும்
உசாவுத லும்இவை தூக்கெனப் படுமே"

என்று கூறுகிறது. மேலே கூறியவற்றையெல்லாம் கருதினால் தூக்கு என்னும் பலபொருள் ஒருசொல், தாளவுறுப்பில் ஒன்று, இசைச்சீர்வகை, இசை, துலாம், உறி, கூத்து, பாட்டு, உசாவுதல் முதலியவற்றில் வரும் என்பது தெரிகின்றது.

2. இளம்பூரணர் கருத்து

இளம்பூரணர் இந்நூற்பா உரையில் தூக்கெனினும் ஓசை யெனினும் ஒக்கும் என்பர். 'மண்டிலம் குட்டம்' (தொல். செய். 112) என்னும் நூற்பாவுரையில் 'செந்தூக்கு இயல' என்பதற்கு, 'அகவலோசை இயல' என்று பொருள் கூறுகின்றார். மேலும் அவர் இச்செய்யுளில் 77,78,79,80,81 என்னும் எண் உள்ள நூற்பாக்கள், ஓசையைக், கூறவந்தனவென்றே கருதுகிறார். **இலக்கண விளக்கம்** செப்பல் முதலிய ஓசையைத் தூக்கு என்று ஓர் உறுப்பாக்கி மேல் கூறுவாரும் உளர் என்னும் (செய்.17).

3. பேராசிரியர் நச்சினார்க்கினியர் கருத்து

தூக்கு என்னும் சொல் நிறுக்கும் கருவிக்கும் வழங்கும். மேலே 101 ஆம் நூற்பாவிலிருந்து கூறப்படுவது பா என்னும் உறுப் பென்றும், அது பரந்துபட்ட ஓசை என்றும், அவ்வோசையை அடிகளால் துணித்துத் தூக்கி ஓசைவேறுபாடு உணர்த்துதலே தூக்கு என்னும் உறுப்பு ஆகும் என்றும் மேற்கண்ட இருவரும் கூறுகின்றனர்.

இருவரும் நிறுக்கப்படும் பொன் வெள்ளி முதலிய பொருள் தனைப் பெற்ற வழியன்றிக் கழஞ்சு, தொடி, துலாம் எனத் துலாக்கோல் தூக்கி அளக்குமாறில்லை; அதுபோலப் பரந்த பாவினை அடிகளால் துணித்துத் தூக்கி ஓசை வேறுபாடு உணர்த்துதலால் தூக்கு எல்லாப் பாவிற்கும் பொதுவாயிற்று என்பர்.

4. தொகுப்புரை

எனவே **இளம்பூரணர்** பாக்களின் அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் என்னும் ஓசைகளே தூக்கு என்பர். **பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்** மேல் கூறப்படும் பா என்னும் பரந்துபட்ட ஓசையைத் தூக்கி நிறுத்துத் துணித்தலே தூக்கு என்பர். ஆனால், காரிகை தூக்கை ஒலி என்று கூறி, "ஒலிமுறையே திண்பா மலிசெப்பல் சீர்சா லகவல் சென்றோங்கு துள்ளல் நண்பா அமைந்த நலமிகு தூங்கல்" என்று கூறும். (21)

5. அகவல்

இளம்பூரணர், அகவல் என்பது ஆசிரியன் இட்டதோர் குறி என்பர். ஆனால், அகவல் என்னுஞ் சொல் இலக்கியங்களில் 'அகவினம் பாடுவாம்' என்றும், 'அகவன் மகளே' என்றும் பயின்று வருதலானும், பிங்கலம், 'அகவ லென்பதும் அழைத்த லாகும்' என்று கூறுதலானும் அவர் கருத்து ஏற்புடைத்தாய்த் தெரியவில்லை.

பேராசிரியர் அகவிக் கூறுதலான் அகவல் எனக் கூறப்பட்டது. அஃதாவது கூற்றும் மாற்றமும் ஆகி ஒருவன் கேட்ப, அவற்கு ஒன்று செப்பிக் கூறாது தாங்கருதியவாறெல்லாம் வரையாது சொல்லுவதோர் ஆறும் உண்டு. அதனை வழக்கினுள்ளார் அழைத்தல் என்றுஞ் சொல்லுப. அங்ஙனம் சொல்லுவார் சொல்லின்கண் எல்லாம் தொடர்ந்து கிடந்த ஓசை **அகவல்** எனப்படும் என்பர்.

6. பிற குறிப்பு

1. பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அகவலும் செப் பலும் வழக்கின்கண் நிகழுமென்றும், துள்ளலும் தூங்கலும் செய்யுட்கண் நிகழுமென்றும் கூறுவர்.

2. ஆசிரிய உரிச்சீராலும் இயற்சீராலும் அகவல் ஓசை தோன்றும் என்பது தொல்காப்பியர் கருத்து. விருத்தியாசிரியர் "இயற்சீரால் தோன்றும் அகவல்" எனபர்.

7. மேற்கோள்

யாப்பருங்கலம் 57ஆம் நூற்பா உரையில் இந்நூற்பா மேற்கோள்.

78. அஃதன் றென்ப[1] வெண்பா யாப்பே.

என்-னின் வெண்பாவிற்குரிய ஓசை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்பாவாக[2] (யாக்க)ப் பட்டது அகவலோசை யன்று என்றவாறு. எனவே, அகவுத லில்லாத ஓசையாம்.

இதனைப் பிற நூலாசிரியர் செப்ப லோசை என்பர். அகவுதல் என்பது ஒரு தொழில்.

அத் தொழில் இதன்கண் இல்லாமையின் 'அஃதன்று' என்றார்.

உதாரணம்:-

''பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற்-கன்னோ
மனனொடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனனாடன் பேரே வரும்'' (யா.வி.கழ.பக்.61)

இது மேற் சொல்லப்பட்டது போல இசை குறித்து வருதலன்றிச் செப்புதலாகிய வாக்கியம்[3] போன்ற ஓசைத்தாகி வந்தவாறு காண்க.[4] (எஅ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. அகவலோசையல்லாதது

தொல்காப்பியர் வெண்பா ஓசையை அகவலோசையன்று என்பர். **இளம்பூரணர்** செய்யுளியல் 101ஆம் நூற்பாவுரையில் வேறுபட்ட ஓசை என்று குறிப்பிட்டு, இந்நூற்பாவுரையில் ''இதனைப் பிற நூலாசிரியர் செப்பலோசை என்ப'' என்று எழுதுகிறார். இதனால் வெண்பா ஓசையைச் செப்பல் என்ற பெயரால் தொல்காப்பியர் வழங்கவில்லை என்பது தெரிகின்றது.

நூ.பா.வே: 1 'அஃதான் றென்ப' பேரா
'அதாஅன் றென்ப' நச்.

உரை.சு.வே:
2. வெண்பா யாக்கப்பட்டது. ரா.ரா.
3. வாச்சியம் போன்றறிவோசைத்தாக்கி
4. கண்டு கொள்க

2. பாடவேறுபாடு

நச்சினார்க்கினியர் இந் நூற்பாவினை ''அதாஅன் றென்ப வெண்பா யாப்பே'' எனப் பாடங் கொண்டனர். அவர் இந் நூற்பாவை 'அது அன்று' என்னும் நிலைமொழி வருமொழி 'அதாஅன்று' என்று புணர்ந்து வருவதற்கு மேற்கோள் காட்டுவர். தொல். எழுத்து. நூ. 358

3. பேராசிரியர் கருத்து

''யாப்பென்றதனான் அப் பாக்கள் (ஓசைகள்) செய்யுள் முழுதும் ஒருங்கு தழீஇக் கிடக்கு மென்பது கொள்க. அகவிக் கூறாது ஒருவற்கொருவன் இயல்பு வகையானே ஒரு பொருண்மை கட்டுரைக்குங்கால் எழும் ஓசை செப்பலோசை எனப்படும். இவ்விரண்டு மல்லது வழக்கினுள் இன்மையான் அஃதான் றெனவே அதனிலக்கணம் பெறுவதாயிற்று'' என்பர்.

4. 'அஃதன்றென்பு' என்று கூறிய கருத்து

'இயற்சீருள் தோன்றும அகவல்' (யா. க. வி. கழ.ப. 492) என்று கூறலால் இயற்சீர் நேராய் ஒன்றின் நேரொன்றாசிரிய மாம்; நிரையாய் ஒன்றின் நிரையொன்றாசிரியமாம். இவை ஒன்றாது வருவது வெண்டளை யாதலால் ''அஃதன்றென்ப வெண்பா யாப்பே'' என்றார்.

5. மேற்கோள்

யாப்பருங்கலம் 57ஆம் நூற்பாவுரையுள் இந் நூற்பா மேற்கோள்.

79. துள்ள லோசை கலியென மொழிப.

என்-னின் கலிப்பாவிற்கு ஓசையாமாறு உணர்த்துதல். நுதலிற்று.

(இ-ள்) துள்ள லோசை கலிப்பாவிற்காம் என்றவாறு.

துள்ளுதலாவது ஒழுகுநடைத்தின்றி இடைஇடை உயர்ந்து வருதல்; 'கன்று துள்ளிற்று' என்றாற் போலக் கொள்க.

உதாரணம்:

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி" (சுலி. 11)

என்றவழி 'அரிதாய வறன்' என நின்றவழிச் செப்பலோசைத்தாகிய வெண்சீர்ப் பின்னும் வெண்டளைக் கேற்ற சொல்லோடு புணராது ஆண்டெழுந்த ஓசை துள்ளி[1] வந்தமையால் துள்ளலோசை யாயிற்று. (எசு)

80. தூங்க லோசை வஞ்சி யாகும்.

என்-னின் வஞ்சிப்பாவிற்குரிய ஓசை உணர்த்துதல் நுதலிற்று

(இ-ள்) தூங்கலாவது[2] அறுதியற்ற வோசைத் (அவ்வோசைத்) தாகி வரும் வஞ்சி என்றவாறு.

உதாரணம்:—

சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்றாழ்வன பொழிலெல்லாம்
எனத்
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே (யா.வி.சுழ.பக். 62)

இதனுட் சீர்தோறும் ஓசை யற்ற[3] வாறு கண்டுகொள்க. (அ0)

பதிப்பாசிரியர் விளக்கம்

உரைப்பாட ஆய்வு

வ.உ.சி. பதிப்பில் (செய். 80) இந்நூற்பாவிற்குத் "தூங்கலாவது அறுதியற்ற ஓசைத்தாகிவரும் வஞ்சி" என்று உரையெழுதப்பட்டுப் பின், 'சுறமறிவன' என்ற பாட்டை எடுத்துக் காட்டி, "இதனுட் சீர்தொறும் ஓசை அற்றவாறு கண்டு

உரை.சு.வே: 1. துள்ளித் துள்ளி;
2. இறுதி யற்ற 3. யறாத வாறு.

கொள்க'' என்று எழுதப்பட்டுள்ளது. இதனுள் முன் உள்ள உரைத்தொடரும், பின்னுள்ள விளக்கத்தொடரும் பொருளால் ஒன்றவில்லை.

மதுரைத் தமிழ்ச் சங்கப்பதிப்பில் (செய். 80) ''தூங்கலாவது சீர் தொறும் ஓசையறாதவஞ்சி'' என்று உரை எழுதப்பட்டு, 'சுறமறிவன' என்ற பாட்டை எடுத்துக்காட்டி, ''இதனுட் சீர் தொறும் ஓசையறாதவாறு கண்டு கொள்க'' என்று எழுதப்பட்டுள்ளது. இதனுள் முன் உள்ள உரைத்தொடரும் பின்னுள்ள விளக்கத்தொடரும் ஒன்றி உள்ளன.

இவ்விரண்டு உரைகளையும் கருதினால் சீர் தொறும் ஓசை அறுவது வஞ்சியா? ஓசையறாதது வஞ்சியா? என்ற ஐயம் நமக்கு உண்டாகின்றது.

பேராசிரியர் ''அடியில் தூங்காது சீர்தொறும் தூங்குமோசை தூங்கலோசை எனப்படும்'' என்றும், **நச்சினார்க்கினியர்** ''அடியிறுதியில் தூங்காது சீர்தொறும் தூங்குமோசை தூங்கல் எனப்படும்'' என்றும் எழுதுவதை நோக்கினால், தூங்கலாவது **''அறுதியற்ற ஓசைத்தாகிவரும் வஞ்சி''** என்று உரையும், **''சீர்தொறும் ஓசையற்றவாறு கண்டு கொள்க''** என்று விளக்கமும் இருத்தலே பொருந்தும். **நாட்டுப்பாடல்களில்** இருசீர் வஞ்சி ஓசையற்றே வருகின்றது.

81. மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தன்மை[1] யின்றே.

என்-னின் மருட்பாவிற்கு ஓசை இதுவென உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மருட்பாவிற்கு ஓசை இது வென்னுந் தன்மை இல்லை; அதற்கு வெண்பாவும் ஆசிரியப்பாவும் உறுப்பாக இவ்விரண்டின் ஓசையே அதற்கு ஓசை என்றவாறு.

உதாரணம்:—

''திருநுதல் வேரரும்பும் தேங்கோதை வாடும்
இருநிலனுஞ் சேவடி யெய்து-மரிபரத்த

நூ. பா. வே: 1. 'தனிநிலை' பேரா; நச்

போகித முண்க ணிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே'', (புற. வெண். கைக். 3)

என்பதனுட்[1] கண்டு கொள்க. (அக)

பதிப்பாசிரியர் விளக்கம்

மருட்பா

1. இளம்பூரணர் கருத்து

செய்யுளியல் 115ஆம் நூற்பா ''கைக்கிளை தானே வெண்பாவாகி, ஆசிரிய வியலான் முடியவும் பெறுமே'' என்ப தாகும். இந்நூற்பா வுரையில் **இளம்பூரணர்** கைக்கிளை வெண் பாவினால் வருதலன்றி, முதலிரண்டடியும் வெண்பாவாகிக் கடையிரண்டடியும் ஆசிரியமாகி வரும். இவ்வாறு வருவதனை மருட்பா என்ப. இக் கருத்தினான் ''மருட்பா ..... தன்மை யின்றே'' என ஓதினார் என்று கொள்க என்பர்.

''புறநிலை வாயுறை ..... பாவின வென்ப'' (செய், 154)

என்ற நூற்பாவுரையில் இளம்பூரணர், ''மருட்பா கைக்கிளை, புறநிலை, வாயுறை, செவியறிவுறூஉ என்னும் நான்கு பொருளி னல்லது வேறு பொருளில் வரப் பெறாதாயிற்று'' என்பர்.

2. காரிகைக் கருத்து

யாப்பருங்கலக் காரிகை செய்யுளியலின் ஈற்றில் நான்கு பாக் களையும் சொல்லி முடித்த பின்னர்

''பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்
வண்பான் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகமே''

என்று மருட்பாவைக் கூறுகின்றது.

3. யா. க. விருத்தியாசிரியர் கருத்து

யாப்பருங்கலம் மருட்பாவைக் கூறவில்லை. ஆனால் அதன் உரையாசிரியர்,

---

உரை. சு. வே: 1. என்றதனுட்

"வெண்பா வாசிரியம்" (551) என்னும் நூற்பாவில், "வெண்பா வாசிரியம் கலியே வஞ்சியெனப் பா நான்காகும்" என்னாது, 'பண்பாய்ந்துரைத்த பா நான்காகும்' என்று சிறப் பித்துச் சொல்ல வேண்டிய தென்னையெனின்? "வெண்பா முதல் வந்து ஆசிரியமாய் இறுவன சிறப்பின்மையால் மருட்பா என்பது அறிவித்தற்கு வேண்டப்பட்டது; என்னை,

"வெள்ளை முதலா வாசிரியம் இறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்"

என்றாராகலின். அவ்வாறு வருவனதாம் புறநிலை வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூஉம் என இவை" என்று கூறி 'புறநிலை' (செய் 154) என்ற இந்நூற்பாவை மேற்கோள் காட்டுவர்.

மற்றும் அவர், "**கங்கை யமுனைகளது சங்கமம் போலவும், சங்கர நாராயணரது சட்டகக் கலவியே போலவும் வெண்பாவும் ஆசிரியமுமாய் விராய்ப் புறநிலை** வாழ்த்து முதலிய பொருள்கண் மேல் யாப்புற்று மருட்சி யுடைத்தாகப் பாவி நடத்தலின் மருட்பா என்று வழங்கப்படும் என்பாருமுளர்" என்பர்.

4. இலக்கண விளக்கம்

"வெள்ளை முதலா ஆசிரிய மிறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்"

என்று மருட்பா விலக்கணத்தைக் கூறுகின்றது. (இலக். விள. செய். நூ. 40)

5. தொன்னூல் விளக்கம் கூறும் கருத்து

"மருட்பா வெள்ளை வந்தபின் னகவல்
சற்றின் மருளும் இயல்புடைத் தென்ப" (238)

என்று கூறும். "வெண்பா பலவடியாக முதற்கண் வந்தபின் அகவ லிறுதியாக மருண்டு தொடுப்பது மருட்பா வெனப்படும்" என்பது அந் நூற்பாவுரை.

6. மருட்பா என்ற காரணம்

யாப்பருங்கல விருத்தியாசிரியர் "மருட்சி யுடைத்தாகப் பாவி

நடத்தலின் மருட்பா என்று வழங்கப்படும்'' என்று எழுதுவதும் ஒத்த கருத்துடையன. ஆனால், மருட்சி, மயக்கம் என்பன ஒரு பொருட் சொல்லாதலால், வெண்பாவும் ஆசிரியப்பாவும் மயங்கி (கலந்து) வந்தது மருட்பா என்க.

82. அவ்வியல் பல்லது[1] பாட்டாங்குக்[2] கிளவார்.

என்-னின் பாக்கள் எல்லாவற்றிற்கும் உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஓசை வகையானல்லது பாட்டாங்குக்[3] கூறார் என்றவாறு.

பாட்டாங்குக்[4] கூறுதலாவது, ஓசை ஒழித்துச் சீருந் தளையும் அடியும்படக் கூறுதல். அவ்வாறு படக்[5] கூறுதலால் (அது) பாட்டாங்கு ஆகா தென்பதூஉம், அடியுந் தொடையும் பெற[6] வந்ததாயினும் நூலின்பாற்படுதல் உரையின்பாற் படுதல் (ஆகும்) என்பதூஉம் கூறியவாறாம். அது வருமாறு:

''ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்து
மெழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே'' (செய்.48)

என்பது ஆசிரியப்பாவிற்குரிய இலக்கண முடைத்தாயினும் ஓசையின்மையான் ஆசிரியம் எனப்படாது, நூல் எனப்படும் என்று கொள்க. (அ)

பதிப்பாசிரியர் விளக்கம்

வரையறை

பேராசிரியர், ''மேலே கூறிய பாக்களுக்கு ஓர் வரையறை கூறுகின்றது'' என்று நுதலியதுரைத்துவிட்டு,

---

நூ.பவே: 1. 'அவ்வியல் லல்லது' பேரா.
2. 'பட்டாங்கு' சு.வே.
உரை.சு.வே: 3. பட்டாங்குக் 4. பட்டாங்குக்
5. அவ்வாறு சொல்லுதலால் 6. பெற்று வந்த தாயினும்.

மேற்கூறிய நான்கு பா இலக்கணத்தானல்லது பாட்டின் கண் வேறு பாக் கூறப்படாது என்று பொருளுரைப்பர்.

"இது கூறிப் பயந்த தென்னை யெனின், மேற்கூறிய பாக்களாற் பெயர் கூறாத செய்யுட்களும் (அகவல் முதலிய) அவை பாவாக வினல்லது வேறு தமக்குப் பாவில வென்பதூஉம்,

"மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தனிநிலை யின்று"

எனவே, அவ்விரண்டன் கூட்டத்தின் கண்ணும் வேறோர் பாப் பிறக்குமென்று கொள்ளினும் கொள்ளற்க எனவும், பிற் காலத்து நூல் செய்யும் ஆசிரியர் பிறவகையாற் பாவுறுப்பினை மயக்கம்பட வேண்டுவா ருளராயின் அவரை விலக்கியும் கூறியவாறு".

"அல்லதூஉம், மாணாக்கன் இதன் முதனூல் செய்த ஆசிரியன் பண்ணுந் திறனும் பகுத்தானைக் கண்டு இவற்றை யும் பாவும் இனமுமெனப் பகுத்தான்கொல் என்று ஐயுறாமை விலக்கி இயல்நூலுள் அவ்வாறு கூறிற்றிலன் எனச் சொல்லி னான் என்பது".

"நான்கு பாவினையும் நோக்கி 'ஆங்கு' என்றான்; ஐந்து செய்யுளை நோக்கி 'அவ்வியல்' என்றா னென்பது" என்று சிறப்புரை எழுதுவர். (செய். 86. பேரா.)

நச்சினார்க்கினியரும் இவ்வாறே கூறுவர்.

83. தூக்கியல் வகையே யாங்கென மொழிப.

பேராசிரியர் சின்னம் என்பதற்குச் சின்ன எண் என்றே பொருள் கொண்டு, 'முற் கூறிய எண்களின்றி வருதல் செய்யுட்கு ஏதமின்றிச் சின்ன எண் ஒன்றும் ஒழிந்து நில்லா விடத்து' என்று பொருள்கூறி, எனவே, சின்ன எண் ஒழியாது மூவகை எண்ணும் ஒழிதலினும், சின்ன எண் ஒழிய மூவகை எண்ணும் பெறுதல் பெரிதும் சுவையுடைத்தென்றவாறா யிற்று என்பர்.

5. விருத்தியாசிரியர் கருத்து

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் நால்வகை எண்ணுள் முச்சீ ரடியால் எட்டும் இருசீர் அடியாற் பதினாறும் என்று சொல்லப் பட்டன குறைந்து வரவும் பெறும் என்பர். (யா.வி.கழ.பக்.302)

6. வண்ணகம் என்றதன் காரணம்

தொல்காப்பியர் வண்ணக வொத்தாழிசை என்று கூறு வதைப் பிற்காலத்தார் அம்போதரங்க ஒத்தாழிசை என்பர். 'எண்' என்னும் உறுப்பு, தெய்வத்தை நன்கு வண்ணிக்க வந்த தாகலின் வண்ணக ஒத்தாழிசை யாயிற்று. அல்லது வண்ணம் என்பது பாக்களின் இசைவகைக்கெல்லாம் உரிய பொதுப்பெய ராகும். அது போல் இசைவகையமைந்த இப்பாடலை வண்ணக மென்றார் என்றலுமாம். இசை நூலார் இதனைத் தேவபாணி என்பர்.

141. ஒருபோ கியற்கையு மிருவகைத் தாகும்.

என்-னின் ஒருபோகு பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒரு போகு என்னும் கலி இரண்டு வகைப்படும் என்றவாறு. **(கசக)**

பேராசிரியர் 'ஒத்தாழிசை இரண்டனுள் ஏனையொன்றினை வண்ணக வொத்தாழிசை, ஒருபோகென இருவகைத்தென்றான்; அவற்றுள் ஒருபோகும் இருவகைத்தாகும் என்று கூறியுள்ளதால் உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை.

இதனது பயம், ஒருறுப்பு இழத்தலின் ஒருபோகாதல் ஒக்குமாயினும், நிகழ்கின்ற வுறுப்புத் தம்மின் வேறாதல் அறிவித்தலென்பது' என்பர். (தொல்.செய். பேரா.147 உரை)

142. கொச்சக வொருபோ கம்போ தரங்கமென்
றொப்ப நாடி[1] யுணர்தல் வேண்டும்.

என்-னின் என்பதும் அது.

(இ-ள்) ஒருபோகு என்னும் கலி, கொச்சக வொருபோகு எனவும், அம்போதரங்கம் எனவும் பொருந்த நாடி[2] அறிதல் வேண்டும் என்றவாறு. **(கசஉ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அம்போதரங்க ஒருபோகு என்பர். இளம்பூரணர் அம்போதரங்கம் என்றே கூறுகிறார்.

பேராசிரியர் ஒருபோகு என்பது ஒன்றாகிய போகுதலையுடைய கலிப்பா எனப் பொருள் தருதலின் அதனைப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்பர்.

உலகத்தவர் இடையீடாகிய ஒன்று போகிய நிலத்தை ஒருபோகு என்பர். அது போன்றதாதலின் இது ஒப்பினாகிய பெயர் என்பர்.

143. தரவின் றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னம் குன்றியும்

நூ.பா.வே: 1. 'நாட்டி' ரா.ரா. பதி.
உரை.சு.வே: 2. 'நாட்டி' ரா.ரா. பதி.

அடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகு மென்ப.

என்-னின் நிறுத்த முறையானே கொச்சக ஒருபோகு உணர்த்துதல் நுதலிற்று.

(இ–ள்) தரவின் றாகித் தாழிசை பெற்றும் என்பது தரவு முதலாயின உறுப்புக்களுள் தரவு[1] ஒழியத் தாழிசை[2] முதலாயின உறுப்புக்கள் பெற்றும் என்றவாறு.

தாழிசை பெற்றும் என்றதனால் தரவு தாமே வரினும் கொச்சக ஒருபோகு ஆகுமென்று கொள்க.

தாழிசை யின்றித் தரவுடைத்தாகியும் என்பது தாழிசை[3] யாகிய உறுப்பின்றித் தரவு[4] முதலாயின உடைத்தாகியும் என்றவாறு.

தரவுடைத்தாகியும் என்றதனால் தாழிசை தானே வரினும் என்று கொள்க.

எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றியும் என்பது எண்ணாகிய உறுப்புக்களை இடையிட்டுத் தனிச்சொல் வாரா தொழியினும் என்றவாறு.

'சின்னம்' என்றதனால் எண்ணின்கண் இடையெண், சிற்றெண் என்பன குறையினும் என்றுமாம்.

அடக்கிய லின்றி அடி நிமிர்ந் தொழுகியும் என்பது சுரிதகமின்றித் தரவுதானே நிமிர்ந்தொழுகி முடியினும் என்றவாறு.

யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது என்பது ஒத்தாழிசையின் யாக்கப்பட்ட யாப்பினும் அதற்குரித்தாக ஓதப்பட்ட கடவுள் வாழ்த்துப் பொருண்மையின்றிக் காமப் பொருளாக வரினும் என்றவாறு.

உரை. சு.வே: 1. தர வின்றி
2. தாழிசை முதலியன
3. தாழிசை யின்றி
4. தரவு முதலியன

குறிப்பு;— மதுரை—த. பதிப்பின்படி மேலே பாடங்கொள்ளப்பட்டது.

கொச்சக ஒருபோகு ஆகும் என்ப-என்பது இவ்வகையினாற் சொல்லப்பட்டன கொச்சகஒருபோகு எனக் குறிபெறும் என்றவாறு.

எனவே, ஒத்தாழிசைக்கு உறுப்பாகியவற்றுள் ஒன்றும் இரண்டும் குறைந்து வருவன கொச்சகவொருபோகெனப் பெயர்பெறும் என்று கொள்க.

அவற்றுள் தரவின்றாகித் தாழிசை பெற்று வந்ததற்குச் செய்யுள்:

"நிரைதிமில் களிறாகத் திரையொலி பறையாகக்
கரைசேர் புள்ளினத் தஞ்சிறை படையாக
வரைசுகால் கிளர்ந்தன்ன வுரவுநீர்ச் சேர்ப்பகேள்;

இது நான்கடியாகி வாராமையிற் றாழிசை யாயிற்று.

கற்பித்தா னெஞ்சமுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கட்
டப்பித்தான் பொருளேபோற் றமியவே தேயுமா
லொற்கத்து ளுதவியார்க் குதவாதான் மற்றதன்
எச்சத்து ளாயினுமஃ தெறியாது விடாதேகாண்

கேளிர்க ணெஞ்சமுங்கக் கெழுவுற்ற செல்வங்க
டாளிலான் குடியேபோற் றமியவே தேயுமாற்
சூள்வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின் மற்றவன்
வாள்வாய்நன் றாயினுமஃ தெறியாது விடாதேகாண்;

இவையிரண்டும் தாழிசை.

ஆங்கு.

தனிச்சொல்.

அனைத்தினிப் பெரும வதனிலை நினைத்துக்காண்
சினைஇய வேந்த னெயிற்புறத் திறுத்த
வினைவரு பருவரல் போலத்
துனைவரு நெஞ்சமொடு வருந்தினள் பெரிதே. (கலி.149)

இது சுரிதகம்.

என வரும்.

தாழிசை தாமேயும் வரும்.

தாழிசையின்றித் தரவு முதலாயின வந்ததற்குச் செய்யுள்:-

''செவ்விய திவ்விய சொல்வி யவற்றொடு
பைய முயங்கிய வஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைஇய
வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சுர முள்ள லறிந்தேன்
மகனல்ல மன்ற வினி;

இது தரவு.

செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
யன்பற மாறியா முள்ளத் துறந்தவள்
பண்பு மறிதிரோ வென்று வருவாரை
யென்றிறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றாமை யாண்டோ
ரவலம் படுதலு முண்டு''. (கலி.19)

இது சுரிதகம்.

தாழிசையுந் தனிச்சொல்லு மில்லை.

எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றியவதற்குச் செய்யுள்:—

''மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த வுயர்மண லெக்கர்மேற்
சீர்மிகு சிறப்பினோன் மரமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு மூடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவகேள்;

இது தரவு.

ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
யறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வெளவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்;

இவை எண்.

ஆங்கறிந் தொழுகினை யாயினென் றோழி
நன்னுத லலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பா லுண்பவர் கொள்கலம் வரைத
னின்றலை வருந்தியா டுயரஞ்
சென்றனை களைமோ பூண்கநின் றேரே'' (கலி.33)

இது சுரிதகம்.

அடக்கிய லின்றி யடிநிமிர்ந்தொழுகல் வருமாறு:—

''பான்மருண் மருப்பி னுரல்புரை பாவடி
யீர்நறுங் கமழ்கடாஅத் தினம்பிரி யொருத்த
லாறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து
பொருள்வயிற் பிரிதல் வேண்டு மென்னு
மருளில் சொல்லு நீசொல் வினையே
நன்னர் நறுநுத னயந்தனை நீவி
நின்னிற் பிரியலெ னஞ்சலோம் பென்னு
நன்னர் மொழியு நீமொழிந் தனையே
அவற்றுள், யாவோ வாயின மாஅன் மகனே
கிழவ ரின்னோ ரென்னாது பொருடான்
பழவினை மருங்கிற் பெயர்பெயர் புறையு
மன்ன பொருள்வயிற் பிரிவோய் நின்னின்
றமைப்புவரை வாழாண் மடவோ
ளமைக்கவின் கொண்ட தோளிணை மறந்தே'' (கலி.21)

எனவரும். (கசசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. 'தரவின்றாகி' (செய். 143) என்னும் நூற்பாவிற்குக் கொள்ள வேண்டிய உரை வருமாறு:-

ஒத்தாழிசைக்கலி இருவகைத்தாகும் என்ற கலிப்பாக்களுள் ஏனை ஒன்று முன்னிலைக்கண் தேவரைப் பராவும் பொருண்மைத்தாகிவரும் என்றும், அது வண்ணகம் என, ஒருபோகு என இருகூறாகும் என்றும், அவற்றுள் ஒரு கூறாகிய வண்ணகம் என்பது தரவு, தாழிசை, எண், வாரம் என்றும், அந்நால் வகை உறுப்பால் தோன்றும் என்றும், மற்றொரு கூறாகிய

ஒருபோகு கொச்சக ஒருபோகு அம்போதரங்கமென்று இரண்டு வகையாக வருமென்றும், அவற்றுள் கொச்சக ஒருபோகு என்னும் ஒன்று ''தரவின்றாகி'' (செய். 143) என்னும் இந் நூற்பாவிலக்கணத்தால் வருவதாகும் என்றும், இங்ஙனம் முன் வரலாற்றினைத் தெரிந்து கொண்டு இந்நூற்பாவிற்கு உரை காண முயல்வோம்.

ஒருபோகு என்றால் ஓர் உறுப்பு இழந்து வருவது என்று பொருள். அது 'அந்நால்வகையில் தோன்றும்' என்று கூறப் படுவதால் தனக்கு முதலாகிய வண்ணக வொத்தாழிசை உறுப்பு நான்கில், ஓர் உறுப்புப் போக வருவதே ஒருபோகாகும் என்க.

எனவே, ''தரவு என்னும் உறுப்பு போகத் தாழிசை, எண், வாரம் பெற்றுவருதலொன்றும், தாழிசை என்னும் உறுப்பு போகத் தரவு, எண், வாரம் பெற்று வருதலொன்றும், சிற் றெண் என்னும் உறுப்பு போகத் தரவு தாழிசை பேரெண் வாரம் பெற்று வருதலொன்றும், அடக்கியலுறுப்பு இல்லாது போகத் தரவு தாழிசை எண் பெற்று அடிநிமிர்ந்து வருத லொன்றும் என நான்குவகையாகி, யாப்பினும் பொருளினும் வேறுபட்டு மேற்கூறிய கொச்சக ஒருபோகுவரும்'' என்று இந் நூற்பாவிற்குச் செம்பொருள் கொள்க.

இந்நூற்பாவில் உள்ள ''அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகியும்'' என்னும் அடி, ''வாரம் என்று அந்நால் வகையில் தோன்றும்'' (செய். 135) என்றும், ''அடக்கியல் வாரந் தரவோ டொக்கும்'' (செய். 138) என்றும் மேலே வண்ணக ஒத்தாழி சைக்குக் கூறிய உறுப்பினை நினைவுபடுத்தி, அதன் இழி பாய் வண்ணக உறுப்பு நான்கில் ஒன்று போகியதே கொச்சக ஒருபோகாகும் என்னும் செய்தியை நமக்குப் புலப்படுத்துகிறது.

இளம்பூரணர் இந்நூற்பா (செய். 143) உரையில் ''யாப் பினும் பொருளினும் வேற்றுமை யுடையது'' என்னும் பகுதிக்கு ''ஒத்தாழிசையின் யாக்கப்பட்ட யாப்பினும், அதற்குரித்தாக ஓதப்பட்ட முன்னிலைக்கண் தேவரைப் பரவுதலாகிய கடவுள்

வாழ்த்துப் பொருண்மையின்றிக் காமப் பொருளாக வரினும்'' (இங்கே தொடர் சரியாக அமையவில்லை) என்று பொருள் கூறிக் கலித்தொகையிலிருந்து காமப்பொருளாகிய பாடல் களையே எடுத்துக்காட்டாகக் காட்டுகிறார்.

இவரே முன்னர்,

''அதுவே
வண்ணகம் ஒருபோ கெனவிரு வகைத்தே'' (134)

என்னும் நூற்பாவிற்கு ''மேற்சொல்லப்பட்ட முன்னிலைப் பரவலாமாறு உணர்த்துதல் நுதலிற்று'' என்று நுதலிய துரைத்து, ''தேவரிடத்து முன்னிலைப் பரவலாகிய அதுதான் வண்ணகம் எனவும் ஒருபோகு எனவும் இருவகைப்படும்'' என்று உரை கூறியுள்ளதால், தேவரை முன்னிலைக்கண் பரவுத லாகிய பொருண்மை ஒருபோகுக்கும் உண்டு என்பதைக் கருதி யுள்ளார் என்பது புலனாம். ஈண்டு அதனை மறந்து வேறு உரைகூறி, கலித்தொகையிலிருந்து காமப் பொருள் பற்றிய பாடல்களையே எடுத்துக்காட்டாகக் காட்டுவது பொருந்தாது என்றே கருதுகிறேன்.

2. பிற்காலத்தார் கருத்து

பிற்காலத்தார் கொச்சக ஒருபோகினையும் கொச்சகக் கலி யினையும் ஒன்றாகவே கருதியுள்ளனர் என்பதை 'இனி ஒருசார்க் கொச்சகங்களை ஒரு போகு என்று வழங்குவாரும் உளர்' என்று கூறி, 'மயேச்சுரரால் சொல்லப் பட்ட அம்போதரங்கமும் வண்ணகமும் என்றிரண்டு தேவபாணியும் திரிந்து 1. தரவு ஒழிந்து அல்லா உறுப்புப் பெறினும், 2. தாழிசை ஒழிந்து அல்லா வுறுப்புப் பெறினும், 3. அம்போதரங்கத்திற்கு ஓதப்பட்ட மூவகை எண்ணும் நீங்கினும், வண்ணகத்திற்கு ஓதிய இருவகை எண்ணும் நீங்கினும், நீங்கிய உறுப்பு ஒழியத் தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்று வருவன ஒருபோகெனப்படும். அவை அம் போதரங்க உறுப்புத் தழீஇயின வண்ணக ஒருபோகு எனவும் படும். என்னை?

''கூறிய உறுப்பிற் குறைபா டின்றித்
தேறிய இரண்டு தேவ பாணியும்
தரவே குறையினும் தாழிசை ஒழியினும்
இருவகை முத்திறத் தெண்ணே நீங்கினும்
ஒருபோ கென்ப உணர்ந்திசி னோரே''

என்றார் மயேச்சுரர், (யா.வி.கழ.பக்.343) என்பர். இப்பகுதி தொல்காப்பிய நூற்பாவுடன் வைத்துக் கருதத்தக்கது. இதனுள் அடக்கியல் கூறப்படவில்லை.

3. இடைச்செருகல்

இளம்பூரணர் உரையில் இளம்பூரணர் கருத்திற்கு மாறுபட்ட பேராசிரியர் கருத்தையும் ஏடு எழுதியோர் சில இடங்களில் இடையே புகுத்திவிட்டதாகக் கருதுகிறேன்.

இந்நூற்பா உரையில், 'தாழிசை பெற்றும்' என்றதனால் தரவு தாமே வரினும் கொச்சக ஒரு போகு என்று ஆகும் கொள்க என்பதும்,

'தரவுடைத்தாகியும்' என்றதனால் ''தாழிசைதானே வரினும் என்று கொள்க'' என்று எழுதுதல் போன்றவை யெல்லாம் அவையாகுமென்க.

எழுத்ததிகார இளம்பூரணர் உரையில் நச்சினார்க்கினியர் உரைக் கருத்தும் அவ்வாறு கலந்துள்ளது.

144. ஒருபான் சிறுமை யிரட்டியத னுயர்பே.

என்-னின் மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட கொச்சக வொருபோகு பத்தடிச் சிறுமையாகவும் இருபதடிப் பெருமையாகவும் வரும் என்றவாறு.

(சூசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

முன் உரைக்கேற்பப் பின் உரையை அமைத்துக் கொள்ளல்

இந்நூற்பா உரையில் இளம்பூரணர் 'தரவின்றாகி' என்ற நூற்பாவால் கூறப்பட்ட கொச்சக ஒருபோகின் வகைகளெல்லாம் பத்தடிச் சிறுமையாகவும், இருபதடிப் பெருமையாகவும், இடையிலுள்ள எலலா அடியாலும் வரும் என்பர். ஆனால்,

பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் 'தரவின்றாகித் தாழிசை பெற்றும்' என்பதற்குப் பரணியில் வரும் ஈரடித்தாழிசை, நான்கடியால் வரும் பதிகப்பாட்டு முதலியனவற்றை யெல்லாம் கொள்வதாலும், 'தாழிசை யின்றித் தரவுடைத்தாகியும்' என்பதற்கு, நான்கடியால் வரும் தரவு கொச்சகப்பா முதலியவற்றைக் கொள்வதாலும் இந்நூற்பாவிற் கூறிய பத்தடிச் சிறுமை இருபதடிப் பெருமையை அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகியதற்கே கொள்வர். தாம் மேல் நூற்பாவிற்குச் செய்த உரை இந்நூற்பாவினால் மாறிவிடும் என்று கருதிக் கொண்டு தாம் முன் உரைத்த உரைக்கேற்பப் பின் உரையை அமைத்துக் கொள்ளும் முறையைப் பின்பற்றியுள்ளனர். இதனை அறிஞர் கருதுக.

145. அம்போ தரங்க மறுபதிற் றடித்தே
செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை.

என்-னின் அம்போதரங்க ஒருபோகுக்கு[1] அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அம்போதரங்க ஒரு போகுக்கு அறுபதடி பெருமைக் கெல்லையாம்; நடுவாகிய நிலை சிறுமைக் கெல்லையாம் என்றவாறு.

செம்பால் வாரம் என்பது, செம்பாதி எனவுமாம். முப்பத்தடிச் சிறுமை என்றவாறு. (சூத்)

பதிப்பாசிரியர் விளக்கம்

அம்போதரங்கம் என்றதன் பொருள்

அம்போதரங்கம் என்பது 'அம்பு' என்ற பெயராலும் கூறப்படும். 'அம்பு வண்ணக மிருமூன் றடியின' (யா.வி.பக்.397).

உரை.சு.வே: 1. 'அம்போதரங்க வொருபோகு'.

பேராசிரியர் 'அம்போதரங்க ஒருபோகுத் தன் உறுப்பெல்லாங் கூடி அறுபதடித்தாகியும், அதன் செம்பாலாகிய முப்பதடித்தாகியும், அதன் வாரமாகிய பதினைந்தடியாகியும் சிற்றெல்லை பெறும்' என்பர்.

'அம்பு தரங்கம்' என்னும் சொல் மருவியல் வகையால் அம்போதரங்கம் என்றாயிற்று. அம்பு-அழகு; தரங்கம்-அலை· அழகிய அலை என்பது பொருள்.

எருத்தும், கொச்சகமும், அராகமும், சிற்றெண்ணும், வாரமும் பெற்று அறுபதடி முதலானவையால் வரும் இக்கலிப்பா **அழகிய அலைபோல, அழகிய இசை அலைகளைத் தரும் என்க.**

146. எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெண்
அடக்கியல் வாரமொ[1] டங்நிலைக் குரித்தே.

என்-னின் அம்போதரங்கத்திற்கு உறுப்பாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் பொழிப்புரை கிடைக்கவில்லை) ஈண்டு எருத்து என்பது தரவு. கொச்சகமும் அராகமும் மேற் சொல்லப்பட்டன. (செய்.117 உரை) பேரெண்ணிற் சிற்றெண் வரப் பெறும். ஆயினும், இச் சொல்லப்பட்ட உறுப்பு முறையான் வருதலும், அம்முறை மயங்கி வருதலும் கொள்க.

பரிபாடற்கும் இவைதாமே உறுப்பாயின் அதனோ டிதனிடை வேறுபாடு என்னை யெனின், அறுபதடியிற் குறைந்து பரிபாடல் வருமாயின் உறுப்பு முறை பிறழ்ந்து வரும் எனவும், உறுப்பு ஒத்துவரின் அறுபதடியின் மிக்கு வரும் எனவுங் கொள்க.

உதாரணம்:—

கண்ணக னிருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற
தண்ணறும் பிடவமுந் தவழ்கொடித் தளவமும்

நூ.பா.வே: 1. ''வாரமொ டைந்நிலைக்'' பேரா.
''வாரமோ டைந்நிலைக்'' நச்.

வண்ணவண் டோன்றியும் வயங்கிணர்க் கொன்றையும்
அன்னவை பிறவும் பன்மலர் துதையத்
தழையுங் கோதையு மிழையு மென்றிவை
தைஇனர் மகிழ்ந்து திளைஇ விளையாடு
மடமொழி யாயத் தவரு ளிவள்யார்
உடம்போ டென்னுயிர் புக்கவ ளின்று;

இது தரவு,

ஒஒ யிவள்,
பொருபுகர் நல்லேறு கொள்பவ ரல்லாற்
றிருமாமெய் தீண்டல ரென்று கருமமா
வெல்லாருங் கேட்ப வறைந்தறைந் தெப்பொழுதுஞ்
சொல்லாற் றரப்பட் டவள்;

சொல்லுக,
பாணியே மென்றா ரறைகென்றார் பாரித்தார்
மாணிழை யாறாகச் சாறு;

சாற்றுள்,
பெடையன்னார் கண்பூத்து நோக்குவா யெல்லாம்
இடைபெறி னேராத் தகைத்து;

இவை கொச்சகம்.

தகைவகை மிசைமிசைப் பாய்மா ரார்த்துடன்
எதிரெதிர் சென்றார் பலர்;

கொலைமலி சிலைசெறி செயிரயர் சினஞ்சிறந்
துருத்தெழுந் தோடின்று மேல்;

இவை அராகம்.

எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்பு
கலங்கினர் பலர்;

இவை சிற்றெண்.

அவருள்
மலர்மலி புகலெழ வலர்மலி மணிபுரை நிமிர்தோள் பிணைஇ
எருத்தோ டிமிலிடைத் தோன்றினன் றோன்றி
வருத்தினான் மன்றவவ் வேறு;

இது முடுகியலடி வந்த கொச்சகம்.

ஏறெவ்வங் காணா வெழுந்தா ரெவன் கொலோ
வேறுடை நல்லார் பகை;

மடவரே நல்லாயர் மக்க ணெருநல்
அடலேற் றெருத்திறுத்தார்க் கண்டுமற் றின்றும்
உடலேறு கோட்சாற்று வார்;

இவையும் கொச்சகம்.

ஆங்கினி.

இது தனிச் சொல்.

தண்ணுமைப் பாணி தளரா தெழூஉக
பண்ணமை யின்சீர்க் குரவையுட் டெண்கண்ணித்
திண்டோட் டிறலொளி மாயப்போர் மாமேனி
அந்துவ ராடைப் பொதுவனோ டாய்ந்த
முறுவலாண் மென்றோள்பா ராட்டிச் சிறுகுடி
மன்றம் பரந்த துரை.'' (கலி.102)

இது சுரிதகம்.

பிறவும் இந்நிகரன கொள்க.

யாப்பினும் பொருளினும் வேறுபட்ட கொச்சகவொரு போகை[1] (செய். 143) இதன்முன் ஓதினமையால் இதற்குங் காமப் பொருளே பெறப்பட்டது. (சுசு)

147. ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி[2] முடிவது கலிவெண் பாட்டே.

என்-னின் கலிவெண்பா ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை.சு.வே: 1. கொச்சக வொருபோகை யதன்பின் னோதினமையால்.

நூ. பா. வே: 2 தொல். செய். பேரா. உரைப்பதிப்பில் 'திரிபின்றி வருவது' என்றும், நச். உரைப்பதிப்பில் 'திரிவின்றி வருவது என்றும், யாப்பருங்கல விருத்தி கழகப்பதிப்பில் திரிவின்றி நடப்பது (1) வழுவின்றி நடப்பது (2) என்றும் காணப்படுகின்றன. ஆனால், பேராசிரியர் இந்நூற்பா வுரையில் 'திரிபின்றி முடியும்' என்றதனானே என்றெழுதுவதை நோக்கினால் 'திரிபின்றி முடிவது' (3) என்ற பாடமே கொண்டார் போலும்.
இதுவே இளம்பூரணர் பாடம்.

(இ-ள்) ஈற்றடி யளவும் ஒருபொருளைக் குறித்த[1] வெள்ளடி யியலாற் றிரிபின்றி முடிவது கலிவெண்பாட்டாம் என்றவாறு.

கலிவெண்பாட்டெனினும், வெண்கலிப் பாட்டெனினும் ஒக்கும்.

'வெள்ளடி யியலான்' என்றமையான் வெண்டளையான் வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவும், பிறதளையான் வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவும் கொள்க.

உதாரணம்:—

''மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையேர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றால்
என்னீர் அறியாதீர் போல வினைகூறல்
நின்னீர வல்ல நெடுந்தகாய் எம்மையும்
அன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
நன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு''. (கலி. 6)

என வரும். இதுவெண்டளையால் வந்த வெண் கலிப்பா.

அஃதேல் இது நெடுவெண்பாட்டிற்கு ஓதிய விலக்கணத் தான் வருதலிற் பஃறொடை வெண்பாவாம்; வெண்கலிப்பா வென்ற தென்னை யெனின்;

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனவும் கைக்கிளை பெருந்திணை யெனவும் சொல்லப்பட்ட பொருள் ஏழனுள்ளும் யாதானும் ஒருபொருளைக் குறித்து ஏனைக் கலிப்பாக்கள் போலத் தரவுந் தாழிசையும் தனித்தனி பொரு ளாகிச்[2] சுரிதகத்தாற் றொகுத்து வரும் நிலைமைத்தன்றித்[3] திரிபின்றி முடிவதனைக் கலிவெண்பா வெனவும்[4],

---

உரை.சு.வே: 1. 'குறித்த'
2. 'பொருளாகச்'
3. 'நிலைமைக்கன்றி'
4. 'முடிவது அக்கலிவெண்பா'

புறப்பொருட்கண் வரும் வெண்பாக்களைப் பஃறொடை வெண்பா எனவும், பரிபாடற்கு உறுப்பாய் வரும் பஃறொடை வெண்பாக்களைப் பரிபாடல் எனவும்,

கொச்சகக் கலிப்பாவிற்கு உறுப்பாய் வரும் பஃறொடை வெண்பாவைக் கொச்சகக் கலிப்பா எனவும் கூறுதல்[1] இவ் வாசிரியர்[2] கருத்தென்று கொள்க.

அன்னதாதல்[3] 'நெடுவெண்பாட்டே குறுவெண்பாட்டே என (செய்.114) யாப்பினாலே வேறுபடுத்தாராகிக் 'கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுள்' எனப் (செய்.114) பொருளானும் இனத்தானும் வேறுபடுத் தோதினமையானுங் கொள்க.

''தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப்
பாங்கருமுல் லையுந்தாய பாட்டங்காற் றோழிநம்
புல்லினத் தாயர் மகளிரோ டெல்லாம்
ஒருங்கு விளையாட வவ்வழி வந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்மற் றென்னை
முற்றிழை யோர் மடநல்லாய் நீயாடுஞ்
சிற்றில் புனைகோ சிறிதென்றா னெல்லாநீ
பெற்றேம்யா மென்று பிறர்செய்த வில்லிருப்பாய்
கற்ற திலைமன்ற காணென்றேன் முற்றிழாய்
தாதுசூழ் கூந்தற் றகைபெறத் தைஇய
கோதை புனைகோ நினக்கென்றா னெல்லாநீ
ஏதிலார் தந்தபூக் கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றேன் ஆயிழாய்
ஐய பிதிர்ந்த சுணங்கணி மென்முலைமேல்
தொய்யி லெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்
செய்புற நோக்கி யிருத்துமோ நீபெரிது
மையலை மாதோ விடுகென்றேன் றையலாய்
சொல்லியவா றெல்லா மாறுமா றியான் பெயர்ப்ப
அல்லாந்தான் போலப் பெயர்ந்தா னவனைநீ
ஆயர் மகளி ரியல்புரைத் தெந்தையும்

உரை.சு.வே: 1. கூறுதலின்
2. அது ஆசிரியர்
3. அன்னதாகல்

யாயு மறிய வுரைத்தீயின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்'' (கலி.111)

என்னும் முல்லைக்கலி அயற்றளையான்[1] வந்த கலிவெண்பா. (கசஎ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. ஒத்த செய்தி

இந்நூற்பாவில் ஒருபொருள் நுதலிய வெள்ளடி என்றாற் போலப் பின்னர், ஒருபொருள் நுதலிய சூத்திரம் என்பர்.

2. இளம்பூரணர் கருத்து

கலிவெண்பாட்டிற்கு இலக்கணம் ''ஒருபொருணுதலிய வெள்ளடியியலாற் றிரிபின்றி முடிவது கலிவெண்பாட்டே'' (செய்.147) என ஒதினமையின் புணர்தல் முதலாகிய பொருள்களுள் யாதானும் ஒருபொருளைக் குறித்துத் திரிபின்றி முடியும் பஃறொடை வெண்பாவினைக் கலிவெண்பா எனவும், குறள் வெண்பா முதலாகிய எல்லா வெண்பாக்களும் கொச்சகக் கலிக்கு உறுப்பாய் வரின் கொச்சகம் எனவும், பரிபாடற்கு உறுப்பாய் வரின் பரிபாடலெனவும் கொள்ளப்படும் என்பர் இளம்பூரணர் (செய்.115)

3. நச்சினார்க்கினியர் கருத்து

நச்சினார்க்கினியர், பேராசிரியர் உரைக்கருத்தைத் தழுவிக் கொண்டு இந்நூற்பாவிற்கு 'இது முறையே கலிவெண்பாக் கூறுகின்றது' என்று நுதலியதுரைத்து, 'ஒரு பொருளைக் கருதி வாராநிற்ப, வேறுமொரு பொருளே படவும் சொற்றொடர்ந்து கிடப்பத் தொடுக்கப்பட்ட வெள்ளையடியால் திரிவின்றி வருவது கலிவெண்பாட்டாம்' என்று உரைகூறி, 'இயல்' என்ற தனால், கட்டளையடியாய் வருதலும், தனக்குரிய வெண்டளையான் வருதலும், பன்னீரடியான் வருதலும் பிறவுமாகிய இலக்கணம் சிதையாதனவற்றுக்கே ஒருபொருணுதலி வரவேண்டுவது. அவ்வாறன்றித் திரிந்து வருவன ஒருபொருணுதலாக் கலிவெண்பாவாம் என்பர்.

உரை.சு.வே: 1. வெண்பாவினும் பிறதளை வருதலிற் பிறதளையானும் வந்த.

4. பல நூற்பாக்களின் கருத்து

''ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சக முறழொடு கலிநால் வகைத்தே'' [தொல்.செய்.126]

''ஒத்தா ழிசைக்கலி வெண்கலி கொச்சகமென
முத்திறத் தான்வருங் கலிப்பா வென்ப'' [அவிநயம்]

''வெண்கலி ஒத்தா ழிசைக்கலி கொச்சகம்
என்றொரு மூன்றே கலியென மொழிப'' [காக்கைபாடினியம்]

''கொச்சகம் வெண்கலி ஒத்தா ழிசையென
முத்திற மாகுங் கலியென மொழிப'' [சங்கயாப்புடையார்]

''ஒத்தா ழிசைக்கலி வெண்கலி கொச்சகம்
முத்திறத் தடங்கும் எல்லாக் கலியும்'' [மயேச்சுரனார்]

''ஒத்தா ழிசைக்கலி வெண்கலிப் பாவே
கொச்சகக் கலியொடு கலிமூன் றாகும்'' [அமிதசாகரம்]

''ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகக் கலியொடு கலிமூன் றாகும்'' [நத்தத்தனார்]

என வரும் மேற்காட்டிய நூற்பாக்களை நோக்கினால், தொல் காப்பியர் ஒருவரே கலிப்பாவை நானகென்று கூறுகின்றார் என்பதும், ஏனையா ரெல்லோரும் கலிப்பாவை மூனறென்றே கூறுகின்றாரென்பதும், எட்டுத்தொகையுள் ஒன்றாகிய கலித் தொகையுள் உறழ்கலி என்றோதும் நான்காவது கலிப்பா இருக்கவும் அவர்களெல்லோரும் அதனைக் கருதவில்லை என்ப தும், பல நூற்பாக்களில் ஒத்தாழிசைக்கலியை முன்வைத்தும் சில நூற்பாக்களில் கொச்சகம் வெண்கலியை முன்வைத்தும் ஓதப்பட்டுள்ளன என்பதும், தொல்காப்பியரும் நற்றத்தரும் கலிவெண் பாட்டு என்று கூற, ஏனையோ ரெல்லோரும் வெண் கலிப்பா என்றே கூறுகின்றாரென்பதும் அறிந்து கொள்ளலாம்.

5. யாப்பருங்கல விருத்தியாசிரியர் கருத்து

'ஈற்றடி வெண்பா இயலது' (நூற்பா 85) என்றுவிதப்பித்த அதனால், ஈற்றடி வெள்ளோசை கொண்டும், கொள்ளாதும் முச்சீர் அடியால் இறுவதே கொள்ளப்படும் என்றும்,

வெண்கலிப்பா எனினும் கலிவெண்பா எனினும் ஒக்கும் என்றும் பலவகைக் கலிவெண்பாவை எடுத்துக்காட்டி இது சிறப்புடைக் கலித்தளையால் வந்த கலிவெண்பா, இஃது உரிச்சீர் வெண்டளையால் வந்த கலிவெண்பா, இது சிறப்பில் ஆசிரிய நிரைத்தளையால் வந்த கலிவெண்பா, இது சிறப்பில் வஞ்சித்தளையால் வந்த கலிவெண்பா, ஒழிந்த தளை தட்ட வெண்கலிப்பாவும் வந்த வழிக் கண்டுகொள்க என்றும் (யா.வீ.கழ.பக்.325,326) எழுதுவதை நோக்கினால், கலித்தளை தட்டுக் கலியோசை தழுவி ஈற்றடி வெள்ளோசை கொண்டும், கொள்ளாதும் முச்சீர் அடியால் இறவேண்டுமென்றும், வெண் கலிப்பாவும் கலிவெண்பாவும் ஒன்றே என்றும் அது சிறப் புடையது சிறப்பில்லாதது என இருபகுப்பாய் வரும் என்றும் கருதுவது புலனாம்.

அவரே 'கலிவெண்பாவே' என்ற வழி, ஏகார விதப்பினால் வெள்ளோசையினால் வருவதனைக் கலிவெண்பா என்றும் பிறவாற்றால் வருவனவற்றை வெண்கலிப்பா என்றும் வேறு படுத்துச் சொல்வாரும் உளர் என்பர்.

6. பாட்டியல் கருத்து

சிதம்பரப் பாட்டியல் ஆசிரியர் கலிவெண்பாவை **வெண் பாவுடன் சேர்த்து,**

''பலவடியா யளவிலவாய் ஒருஉவெதுகை யிரண்டாம்
பாதங்க டொறும்பெற்றும் வெள்ளடிகுன் றாவாம் கலிவெண்பா''

என்றும், வெண்கலிப்பாவைக் **கலிப்பாவுடன் சேர்த்து,**

''பேசியவெண் பாவியைந்து சிந்தடியீற் றடியாய்ப்
பிறதளைதன் றளையோசை பெறுவதுவெண் கலிப்பா''

என்றும் கூறுவர்.

148. தாவும் போக்கு மிடையிடை[1] மிடைந்தும்
ஐஞ்சீ ரடுக்கியும் ஆறுமெய் பெற்றும்

நூ.பா.வே: 1. 'பாட்டிடை மிடைந்தும்' பேரா; நச்.
குறிப்பு: பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இந்நூற்பாவின் முதல் மூன்றடியைத் தனி நூற்பாவாகவும் அடுத்த இரண்டடியைத் தனி நூற்பாவாகவும் கொள்வர்.

வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே.

என்-னின் கொச்சகக் கலியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) 'தரவும் போக்கும் இடைஇடை மிடைந்தும்' என்பது தரவாகிய உறுப்பும் சுரிதகம் (போக்கியல்) ஆகிய உறுப்பும் முதலும் முடிவும் வருதலின்றி இடையிடை[1] வந்து தோன்றியும் என்றவாறு.

உம்மையால்[2] இயற்கை வழாமற் றோன்றியும் என்று கொள்ளப்படும்.

'ஐஞ்சீர் அடுக்கியும்' என்பது, ஐஞ்சீரடி பல வந்தும் என்றவாறு. உம்மையால் வாராதும் என்று கொள்க.

'ஆறு மெய் பெற்றும்' என்பது தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், சொற்சீரடி, முடுகியலடி என்னும் ஆறு உறுப்பினையும் பெற்றும் என்றவாறு.

உம்மையாற் பெறாதும் என்று கொள்க.

'வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும் பாநிலை வகை' என்பது, மேற் சொல்லப்பட்ட உறுப்புக்களை யுடைத் தாகியும் இலதாகியும் வெண்பாவின் இயல்பினாற் புலப்படத் தோன்றும் பாநிலைவகை என்றவாறு.

புலப்படத் தோன்றுதலாவது, ஏனையுறுப்புக்களில் வெண்பா மிகுதல்.

இன்னும் அதனானே, பிற பாவடிகளும் வந்து வெண்பா வியலான் முடிதலும் கொள்க.

'கொச்சகக் கலியென நூல்நவில் புலவர் நுவன்று அறைந் தனரே' என்பது கொச்சகக் கலிப்பாவென்று இலக்கணம் அறிந்த புலவர் கூறினார் என்றவாறு.

உரை.சு.வே: 1. இடை வந்து தோன்றியும்
2. உம்மையால் வாராதும் என்று கொள்க.

'ஆறு மெய் பெற்றும்' என்பதற்கு அராகமென்னும் உறுப்பைக் கூட்டி முடுகியல் என்னும் உறுப்பைக் கழித்து உரைப்பது மொன்று.

உதாரணம்:— குறிஞ்சிக் கலியுள்

''காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக் கண்புதைத் தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலான்
நீணாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போத்தந்தா னகனகலம்
வருமுலை புணர்ந்தன வென்பதனா லென்றோழீ
அருமழை தரல்வேண்டிற்[1] றருகிற்கும் பெருமையளே.

இது தரவு.

இதனுள் இரண்டாமடி, ஐஞ்சீரான் வந்தது.

அவனுந்தான், ஏன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானோர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்.

இதனுள் முதற்க ணின்றது கூன்.

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளி கீழ்வீழா வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல்வாங்கி யீனா மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுக லான்.

இதன் முதல் ஆசிரிய அடி.

காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலாற் றம்மையருந்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல்;

இவை மூன்றும் கொச்சகம்.

என வாங்கு

இது தனிச்சொல்.

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்.

இது வெள்ளைச் சுரிதகமாகி யிடை வந்தது.

உரை.சு.வே: 1. தான் வேண்டித்

அவருந் தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லா முருத்தெழுந் தாறி
இருவர்கட் குற்றமு மில்லையா லென்று
தெருமந்து சாய்த்தார் தலை.

தெரியிழாய்! நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வ முவப்ப வுவந்து
குரவை தழீஇயா மாடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண்;

இவையிரண்டும் கொச்சகம்.

நல்லாய்

இது தனிச்சொல்.

நன்னா டலைவரு மெல்லை நமர்மலைத்
தந்நாண்டாந் தாங்குவா ரென்னோற் றனர்கொல்;

இது பேரெண்.

புனவேங்கைத் தாதுரைக்கும்1 பொன்னறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றோ;

விண்டோய்கன் னாடனு நீயும் வதுவையுட்
பண்டறியா தீர்போற் படர்கிற்பீர் மற்கொலோ
பண்டறியா தீர்போற் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போற் கரக்கிற்பென் மற்கொலோ;

இவையிரண்டும் தாழிசை.

மைதவழ் வெற்பன் மணவணி காணாமற்
கையாற் புதைபெறூஉங் கண்ணுங்கண் ணாகுமோ;

இது பேரெண்.

என்னைமன், நின் கண்ணாற் காண்பென்மன் யான்
நெய்த லிதழுண்கண் நின்கண்ணா கென்கண்மன

இதுவுங் கொச்சகம்.

உரை.சு.வே: 1. தாதுகுக்கும்

என வாங்கு

இது தனிச்சொல்.

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையு மம்பலும்
மாயப் புணர்ச்சியு மெல்லா முடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழி[1] லுண்கணும் பொலிகமா வினியே' (கலி. 39)

இது சுரிதகம்.

இதனுள் (இச்சுரிதகத்துள்) முதலடி அறுசீர் முடுகியல்; இரண்டாவது ஐஞ்சீர் முடுகியல்.

இவ்வாறு வருவன கொச்சகக் கலிப்பா எனப்படும்.

ஒத்தாழிசைக்குத் தாழிசையாகிய உறுப்புமிக்கு வந்தாற் போலக் கொச்சகக் கலிக்கும் வெண்பாவாகிய உறுப்பு மிக்கு வரும் என்று கொள்க.

இனி, ஈண்டோதப்பட்ட உறுப்புக்கள் குறைந்தும் மயங்கியும் மிக்தும் வரப்பெறும்; அவை கலித்தொகையுட் கண்டு கொள்க. (சுசுஅ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. கொச்சகக்கலி

''ஒத்தா ழிசைக்கலிக் கொவ்வா வுறுப்பின
கொச்சகக் கலிப்பா வாகு மென்ப'' (அவிநயம்)
(யா.வி.கழ.பக்.341.)

கொச்சகக் கலிப்பா என்பது, முதனிலை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குச் சொன்ன தரவு, இடைநிலைப்பாட்டு, தனிச்சொல், போக்கு என்னும் உறுப்பு மயங்கியும் சொல்லப் பெறாத உறுப்பு வந்து மிக்கும் குறைந்தும் வருவனவாம். கொச்சகக் கலிப்பாவைக் கூறும் நூற்பாவுள் 'தரவும் போக்கும்' என்று போக்கு கூறப்

உரை.சு.வே: 1. போதெழி

படுவதால், முதனிலை ஒத்தாழிசைக்கலிப்பாவின் இழிபென்றே இதனைக் கொள்க.

எனவே, முதனிலை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு இழிபாகக் கொச்சகக் கலிப்பாவையும், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு இழிபாகக் கொச்சக ஒரு போகு, அம்போதரங்கம் என்னும் இரண்டையும் கொள்க. விருத்தி ஆசிரியர் ''சிறப்பில்லாதன வற்றை ஒருசாரார் 'கொச்சை' என்றும், 'கொச்சகம்' என்றும் வழங்குவர் எனக்கொள்க'' (யா.வி.கழ.பக்.293) எனக் கூறுதலைக் கொண்டும், ''கொச்சகத் தன்மையிற் கொச்சக மாகும்'' என்று பன்னிரு பாட்டியல் பகர்தலைக் கொண்டும் கொச்சகம் என்ற சொல்லின் பொருள் உணரலாம். கொச்சகத் தன்மையாவது கலியுறுப்பு முதலியன குறைந்தும், மிக்கும், மயங்கியும் வருதல்.

2. பேராசிரியர் கருத்து

பேராசிரியர் மேல் நூற்பாவை இரண்டு பகுதியாக்கித் ''தரவும் போக்கும்.....வெளிப்படத்தோன்றும்'' என்ற முதற்பகுதிக்கு, 'மேல் வெளிப்படுபொருட்டு எனப்பட்ட வெண்கலி விரவுறுப் பினைப் பெற்று வரும்' என்பர். அடுத்து 'பாநிலை வகையே கொச்சகக் கலியென நூனவில் புலவர் நுவன்றறைந்தனரே' என்ற இரண்டாம் பகுதிக்கு, ''மேலே ஒருபோகெனக் கூறப் பட்ட கொச்சகப் பாவினது நிலையும் வகையும் ஆகியவையே கொச்சகக் கலியாமென்று நூல்நவில் புலவர் கூறித் துணித்த னர்'' என்பர்.

பேராசிரியர் கருதிக்கூறும் இக் கொச்சகத்தில், பிற்கால யாப்பிலக்கணப் புலவர் கூறும் தாழிசை, துறை, விருத்தம் என்பனவற்றில் வரும் பல பாடல்களை அவர் அமைத்துக் கொள்ளுகின்றார்.

3. யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் கருத்து

இனிக் காக்கைபாடினியாரும் பாட்டியலுடையாரும் வாய்ப் பிய முடையாரும் முதலாகிய ஒருசார் ஆசிரியர் (சந்தம் தாண்டகம் என்னும்) இவற்றையும் இனத்தின் பாற்படுத்தி வழங்குவர்.

தொல்காப்பியனார் முதலாகிய ஒருசாராசிரியர் (சந்தம் தாண்டகம் என்னுள்) இவற்றையும், மேற்கூறப்பட்ட பாவினங் களையும் கொச்சகக் கலிப்பாற் படுத்தி வழங்குவர் எனக் கொள்க என்பர் (யா. வி. கழ. பக். 486). இவ்வாறு அவர் கூறுவது தொல்காப்பிய உரையாசிரியர் கொண்ட கருத்தையே யாகும்.

5. ஐஞ்சீர் ஆறுமெய்

'ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்' என்ற பகுதிக்குப் **பேராசிரியர்** வேறுநின்றதொரு அளவடியுடன் அடுக்கிச் சொல்ல ஐஞ்சீராகியும் அவ்வாறே அளவடியுடன் இருசீரடுக்க ஆறுசீர் பெற்றும் கொச்சகக் கலிப்பா வரும் என்பர் (பேரா. 154). ஆனால் 'ஆறு மெய்' என்றதில் மெய் என்பது சீர் என்னும் பொருளில் எங்கும் வரவில்லை. **இளம்பூரணர்** தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் சொற்சீரடி முடுகியலடி என்னும் ஆறு உறுப்பினையும் பெற்றும் வரும் என்பர். இவர் கூறிய ஆறில் தரவு, தாழிசை, தனிச்சொல் கலிப்பா உறுப்பாகும்; சரிதகம், சொற்சீரடி, முடுகியலடி என்னும் மூன்றும் பரிபாடல் உறுப் பாகும். இவ்வாறு இரண்டு பாக்களுக்குரிய உறுப்புக்களை எடுத்துக்கொண்டு ஆறு மெய் இவையென்று சொல்வதைக் காட்டிலும், பரிபாடலுக்கு ஒதிய கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்து சொற்சீரடி முடுகியலடி என்னும் ஆறு உறுப்பினைப் பெற்று வரும் என்றும் கூறலாம். அவ்வாறு கூறினால் முற்றிலும் பரிபாடல் இலக்கணமே ஆகிவிடும். அதனால் கலி யுறுப்பு மூன்றும் பரிபாடலுறுப்பு மூன்றும் விரவிவரின் கொச்சகக் கலிப்பா ஆகும் என்று கருதுகின்றார் போலும்.

149. கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்து
போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே.

இஃது உறழ்கலி[1] யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்)உறழ் கலிப்பாவிற்கு இலக்கணம் கூற்றும் மாற்றமும் விரவி வந்து சுரிதகம் (போக்கியல்) இன்றி முடிதல் என்றவாறு.

உரை.சு.வே: 1. 'உறழ் கலிப்பா' ரா.ரா.

இதனைக் கொச்சகக் கலியின் பின் வைத்தமையான் அக்கொச்சக உறுப்பின் ஒப்பன இதற்கு உறுப்பாகக் கொள்ளப் படும்.

உதாரணம்:—

''யாரிவ னெங்கூந்தல் கொள்வா னிதுவுமோர்
ஊராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை
வாரனீ வந்தாங்கே மாறு;

இது தலைமகள் கூற்று.

என்னிவை, ஓருயிர்ப் புள்ளி னீருதலை யுள்ளொன்று
போரெதிர்ந் தற்றாப் புலவனீ கூறினென்
ஆருயிர் நிற்குமா றியாது;

இது தலைவன் கூற்று.

ஏஎ, தெளிந்தேம்யாங் காயாதி யெல்லாம்வல் லேடா
பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு
வருந்தனின் வஞ்ச முரைத்து;

இது தலைமகள் கூற்று.

மருந்தின்று, மன்னவன் சீறிற் றவறுண்டோ நீநயந்த
இன்னகை தீதோ விலேன்;

இது தலைமகன் கூற்று.

மாலை மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே உறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎ மெனநெருங்கிற் றப்பினேன்
என்றடி சேர்தலு முண்டு''. (கலி. 89)

இப்பாட்டுச் சுரிதகம்[1] (போக்கியல்) இன்றி வந்தவாறு கண்டு கொள்க

உரை.சு.வே: 1. 'இப் பாட்டுச் சுரிதகம் வந்தவாறு' ரா. ரா.

எற்றிற்கு? இறுதியின்கண் வந்தது சுரிதகமாகாதோ வெனின், சுரிதகமாகாது; சுரிதகமாவது ஆதிப் பாட்டினும் இடைநிலைப்பாட்டினு முள்ள பொருளைத் தொகுத்து முடிப் பது. இஃது அன்னதன் றென்க. (கசகூ)

(12) அளவியல்

150. ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லை
ஆயிர மாகு மிழிபுமூன் றடியே[1]

என்-னின் ஆசிரியப்பாவிற்கு அளவு[2] கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) ஆசிரியப் பாவின் அளவிற்கு எல்லையாவது சுருங் கினது மூன்றடி; பெருமை ஆயிரமடியாக இடைப்பட்டன எல்லா அடியானும் வரப்பெறும் என்றவாறு.

சுருங்கின பாட்டிற்கு உதாரணம் மேற் காட்டப்பட்டது.

பெரிய பாட்டு பத்துப் பாட்டுள்ளும் சிலப்பதிகாரத் துள்ளும் மணிமேகலையுள்ளும் கண்டு கொள்க.

'ஆசிரிய நடைத்தே வஞ்சி' (செய்.108) என்றதனான் வஞ்சிப்பாவிற்கும் ஆயிரமடி பெருமையாகக் கொள்ளப்படும் என்றவாறு. (கநo)

பதிப்பாசிரியர் விளக்கம்

வஞ்சிப்பாவின் அடிஅளவு

வஞ்சிப்பாவும் ஆயிரம் அடிப் பெருமையாக வருதலைக் கீழ்வரும் நூற்பாக்களால் அறிக.

> ''ஐயிரு நூறடி ஆசிரியம் வஞ்சிச்
> செய்யுள் நடப்பினும் சிறப்புடைத் தென்ப''
>
> ''வஞ்சி யாசிரியம் என்றிரு பாட்டும்
> எஞ்சா மூவடி இழிபுயர் பாயிரம்''

என்பது பரிமாணம். (யா.வி.கழ.பக்.133)

நூ.பா.வே: 1. மூன்றடித்தே
உரை.சு.வே: 2. 'எல்லை கூறுதல்' 'அளவுணர்த்துதல்'

151. நெடுவெண் பாட்டே[1] முந்நான்[2] கடித்தே
குறுவெண் பாட்டிற்[3] களவேழ் சீரே.

என்-னின் வெண்பாவிற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

நெடுவெண் பாட்டிற்கு எல்லை பன்னிரண்டடி; குறுவெண் பாட்டிற்கு அடி அளவடியும் சிந்தடியுமாகிய இரண்டடியும் என்றவாறு.

எனவே, இடையுள்ள அடிகளெல்லாம் உரிய. உதாரணம் மேற்[4] காட்டப்பட்டது. **(கஙக)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. வெண்பாக்கள் பெற்றுவரும் அடிஅளவு

''ஈரடி முதலா ஒன்றுதலை சிறந்து
ஏழடி காறும் வெண்பாட் டுரிய'' (நத்தத்தம்)

''ஈரடி முதலா ஏழடி காறும்
திரிபில வெள்ளைக் கடித்தொகை தானே'' (பல்காயம்)

''ஏழடி யிறுதி யீரடி முதலா
ஏறிய வெள்ளைக் கியைந்தன அடியே''

''மிக்கடி வருவது செய்யுளுக் குரித்தே'' (சங்கயாப்பு)

மேலே காட்டியுள்ள நத்தத்தம், பல்காயம், சங்கயாப்பு நூற்பாக்களை நோக்கினால் வெண்பாவிற்கு ஈரடியே சிறுமை என்றும், அது ஈரடி முதலாக மூன்றடி, நான்கடி, ஐந்தடி, ஆறடி, ஏழடிகாறும் ஏறிவரும் என்றும், ஏழடிக்குமேல் வருவது செய்யுள் வெண்பா எனப்பெயர் பெறும் என்றும் அறிந்து கொள்கிறோம்.

நூ.பா.வே: 1. 'பாட்டு' நச்.
2. 'முந்நாலடித்தே' பேரா.
3. 'பாட்டி னளவெழு சீரே' பேரா.
உரை.சு.வே; 4. மேற்காட்டுதும்.

ஆனால், **தொல்காப்பியர்** அவ்வாறு கூறவில்லை. குறுவெண் பாட்டு இரண்டடியான் வரும் என்றும், நெடுவெண்பாட்டு மூன்றடி முதல் பன்னிரண்டடி வரை வரும் என்றும் கூறுகிறார்.

152. அங்கதப் பாட்டள வவற்றோ[1] டொக்கும்.

என்-னின் அங்கதப் பாட்டிற்கு அளவு உணர்த்துதல நுதலிற்று.

(இ-ள்) அங்கதப் பாட்டாகிய வெண்பாவிற்கு எல்லை சிறுமை இரண்டடி; பெருமை பன்னிரண்டடி என்றவாறு.

உதாரணம் சில (மேல்) காட்டப்பட்டன; ஏனைய வந்த வழிக் கண்டுகொள்க. (கநிஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. இளம்பூரணர் உரையில் அங்கதத்திற்கு உதாரணம் இல்லை.

இளம்பூரணர் இவ் அங்கதத்திற்கு உதாரணம் சில காட்டப் பட்டன என்பர். செய்யுளியல் நூற்பா 121, 122 இவற்றில் காட்டியிருக்க வேண்டும். ஆனால் அங்கே உதாரணம் காணப் படவில்லை. 120ஆம் நூற்பாவுரையிலும் முன்னர்க் காட்டுதும் என்பர். எனவே 121, 122 ஆம் நூற்பாக்களில் உதாரணம் காட்டப்பட்டிருந்து, அப் பாடல்கள் எழுதுவோரால் விடப் பட்டிருக்க வேண்டும்.

2. பேராசிரியர் காட்டுகிறார்.

''இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம் - மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள''

என்பது நான்கடியான் வந்த அங்கதம் என்பர்.

நூ.பா.வே: 1. 'பாட்டவற் றளவோ' பேரா.

153. கலிவெண் பாட்டே [1]கைக்கிளைச் செய்யுள்
செவியறி[2] வாயுறை புறநிலை யென்றிவை
தொகைநிலை[3] மரபி னடியில வென்ப
முடிபொரு ளல்லா தடியள விலவே.

என்-னின் அடியளவு வரையறை யில்லாத செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கலிவெண்பாட்டும் கைக்கிளைப்[4] பொருட் செய்யுளும் செவியுறையும் வாயுறை வாழ்த்தும் புறநிலை வாழ்த்தும் என்னும்[5] பொருண்மைக் கண் வரும் வெண்பாக்களும் அளவு வரையறுக்கப்படா; பொருள் முடியுங்காறும் வேண்டிய அடி வரப்பெறும் என்றவாறு. (கநிஈ)

பதிப்பாசிரியர் விளக்கம்[6]

1. கைக்கிளை, செய்யுள்

இந்நூற்பாவில் 'கைக்கிளைச் செய்யுள்' என வருவதைக் 'கைக்கிளை செய்யுள்' எனப்பாடம் ஓதி உம்மைத்தொகையாகக் கொண்டு, கைக்கிளையும் செய்யுளும் என உரைகூறி, இவற்றுள் செய்யுள் வெண்பாவும் அடிவரையறுக்கப்படா; பொருள் முடியுங்காறும் வேண்டிய அடி வரப்பெறும் என்று உரைத்துக் கொள்க. செய்யுள் வெண்பாப் பற்றிய விளக்கத்தைச் செய்யுளியல் 123ஆம் நூற்பாவிற்கு யான் எழுதியுள்ள விளக்கத்தால் உணர்ந்து கொள்க.

2. இந் நூற்பாவிற்கு இளம்பூரணர் பாடம்

யா. க. விருத்தியாசிரியர் *'ஈரடி வெண்பாச் சிறுமை' (32) என்னும் நூற்பா உரையில் பாக்களின் அடிப்பெருமை பற்றி அரிய கருத்தொன்றைக் கூறுகிறார்.*

நூ.பா.வே: 1. கைக்கிளை செய்யுள்
2. புறநிலை வாயுறை செவியறி வென்றிவை
3. 'தொகுநிலை யளவின' பேரா
தொகைநிலை வகையான் (கன)

உரை.சு.வே: 4. கைக்கிளைப் பொருளைப் பற்றிய பாவும்
5. செவியுறை வாழ்த்து வாயுறை வாழ்த்து புறநிலை வாழ்த்து என்ற

குறிப்பு: 6. இந் நூற்பாவின் ஈற்றடியை நீக்கிவிட்டு மூன்றடி நூற்பாவாகக் கொள்வர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்.

இந்நூற்பாவில், தலைதடுமாற்றம் தந்து புணர்ந்துரைத்தல் என்னும் உத்தியால் கிடைக்கும் செய்தியாவன:-

பாக்களின் அடிப்பெருமைக்கெல்லை பாடுவோனது பொருண் முடியுங் குறிப்பே; வரையறை யில்லை என்பாரும், அடிவரையறுத்துச் சொல்லுவாருமென இருதிறத்தார் ஆசிரியர் என்பதை அறிவித்தற்கு என்க. நூல் நயம் அறிவார் ஆயுங் கால், அவ்விரண்டும் தமக்குள் வேறுபாடு இல்லை என்பது அறிவித்தற்கு ஒரு தோற்றம் உணர்த்தியது.

யாதோ வேறுபாடிலாதவாறெனின்,

1. பெருமைக்கெல்லை பாடுவானது பொருண் முடிவுக் குறிப்பே; வரையறையில்லை என்பார், விளங்கக் கூறல் என்னும் நூல் மாண்பு கடைப்பிடித்து மயங்காமை கூறினார்.

2. அங்ஙன மின்றி, அடிவரையறுத்து ஓதினார் 'சிறப் புடைப் பொருளை எடுத்துக் கூறல்' என்னும் தந்திர உத்தி பற்றிச் சிறப்புடைமையை எடுத்தோதி, மிக்கனவும் உடன்பட்ட மையை உய்த்துணர வைத்தார். அதனால், அவ்வாறு கூறும் இரு வகையார்க்கும் பயன்படுமாறு இலக்கண ஆசிரியர் பாட்டிற்கு அடியளவு கூறுங்கால் இன்ன இன்ன பாட்டிற்கு அடிவரை யறையில்லை; பாடுவான் பொருண்முடிபே யென்றும்; இன்ன இன்ன பாட்டிற்கு அடிவரையறை இவ்வளவென்றும் ஓதியுள்ள னர். எடுத்துக்காட்டாக வெண்பாவிற்கு.

''ஏழடி யிறுதி ஈரடி முதலா
ஏறிய வெள்ளைக் கியைந்த அடியே'' (சங்கயாப்பு)

என்னும் நூற்பா அடிவரையறை கூறுகிறது.

'மிக்கடி வருவது செய்யுட் குரித்தே' (சங்கயாப்பு)

என்னும் நூற்பா, வெண்பாவுள் ஏழடிக்கு மேல் பொருள் முடியுந் துணையும் மிக்கடியாய் வருவது செய்யுள் என்னும் வெண்பாவகைக்கு உரியது என்று அடிவரையறை யில்லாதவற் றைக் கூறுகின்றது யா.வி.கழ.பக்.131).

இவ்வாறு கூறிய விருத்தியாசிரியர் தொல். செய்யுளியலில் அளவென்னும் உறுப்பினைக் கூறும் நூற்பாக்களில்

''ஆசிரியப் பாவின் அளவிற்கு'' (150) என்றும்

''ஆசிரிய நடைத்தே'' (104) என்றும்

''நெடுவெண் பாட்டே'' (151) என்றும்

''அங்கதப் பாட்டவற்'' (152) என்றும்

வரும் நூற்பாக்களை அடிவரையறைக்கும்

''கலிவெண் பாட்டே கைக்கிளை செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை யெனவிவை
தொகைநிலை வகையான் அளவில வென்ப'' (153) என்றும்

''முடிபொரு ளல்லா தடியள விலவே'' என்றும்

வரும் நூற்பாக்களை **அடிவரையறை யில்லாமைக்கும்** எடுத்துக் காட்டி, ''**என்றார் தொல்காப்பியர்**'' என்பர். இவர் கூற்றின்படி மேற்காட்டிய நூற்பாக்களெல்லாம் தொல்காப்பிய நூற்பாக்களாக வேண்டும்.

ஆனால், மேல் நூற்பாக்களில் ஈற்றில் வந்துள்ள 'முடிபொரு ளல்லா தடியள விலவே' என்னும் நூற்பா **இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் உரையிலுள்ள மூலங்கள்** ஒன்றிலும் காணப்படவில்லை.

பின்னர் அம்மூவர் உரையையும் கூர்ந்து பார்த்தஅளவில் அவ்வுரைகளில் **இளம்பூரணர் உரை,**

''கலிவெண் பாட்டே'' (153)

என்னும் மேற்கண்ட நூற்பாவிற்கு,

''கலிவெண்பாட்டும், கைக்கிளைப் பொருளைப் பற்றிய பாவும், செவியுறை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து என்ற பொருண்மைக்கண் வரும் வெண்பாக்களும். அளவு வரையறுக்கப்படா; **பொருண் முடியுங்காறும் வேண்டிய அடிவரப்பெறும்**'' என்று எழுதப்பட்டுள்ளது.

இவ்வுரையுள் 'அளவு வரையறுக்கப் படா' என்ற உரை, தொகைநிலை மரபி னடியில வென்ப' என்ற அடிக்கும் 'பொருண் முடியுங் காறும் வேண்டிய அடி வரப்பெறும்' என்ற உரை, 'முடிபொரு ளல்லா தடியள விலவே' என்ற அடிக்கும் பொருளாயிருத்தலை உணர்ந்தேன்.

இளம்பூரணர் அவ்வாறு உரையெழுதியுள்ளதால், அந் நூற் பாவிற்கு,

> ''கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
> செவியறி வாயுறை புறநிலை யென்றிவை
> தொகைநிலை மரபி னடியில வென்ப
> முடிபொரு ளல்லா தடியள விலவே''

என்ற நான்கடி நூற்பாவாக அவர் பாடங்கொண்டிருந்தார் என்பது தெளிவாகப் புலனாகின்றது.

ஆனால், பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் 'கலிவெண் பாட்டே' என்னும் இந் நூற்பாவின் மூன்றாவது அடியைத் **'தொகுநிலை யளவி னடியில வென்ப'** எனப் பாடங்கொண்டு மூன்றடி நூற்பாவாகவே அமைத்துக்கொண்டு அதற்கியைய உரை எழுதியுள்ளனர்.

இளம்பூரணர் உரைப்பிரதியில் மூலபாடம் மூன்றடியாகவே உள்ளது. ஆனால், உரை 'முடிபொருளல்லா தடியள விலவே' என்று மற்றொரு அடிக்கும் எழுதப்பட்டுள்ளது.

யா.க.வி. ஆசிரியர் 'முடிபொரு ளல்லாது' என்ற அடியைக் 'கலிவெண் பாட்டே' என்னும் நூற்பாவின் கீழ் எழுதி இதனைத் தொல்காப்பியம் என்றே குறிப்பிடுகிறார்.

இவற்றால் நாம் உணர்ந்து கொள்வன.

(1) 'கலிவெண் பாட்டே' என்ற நூற்பாவினை நான்கடி நூற்பாவாகவே கொண்டு, இளம்பூரணர் உரை எழுதியுள்ளாரென்பதும்

(2) யா.க.வி. ஆசிரியரும் இளம்பூரணரைப் போலவே பாடங் கொண்டிருந்தா ரென்பதும்

(3) ஏடு எழுதியவர், பேராசிரியர் நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் போல் மூன்றடி நூற்பாவாகவே எழுதிவிட்டனர் என்பதுமாம்.

3. ஒத்த நூற்பா

''வாயுறை வாழ்த்தே செவியறி வுறூஉவே
கைக்கிளை மயக்கம் கலிவெண் பாட்டே
தத்தங் குறிப்பின வளவென மொழிப'' (யா.வி.கழ.பக்.132)

154. புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்
வெண்பா வியலினு மாசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின வென்ப.

என்-னின் மேலனவற்றுட் சில பொருட்குரிய வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புறநிலை வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூவும் மருட்பாவினாலும்[1] வரப்பெறும் என்றவாறு.

எனவே மருட்பா நான்கு பொருளினல்லது வரப்பெறா[2] வென்றவாறாயிற்று. உதாரணம் வந்தவழிக் காண்க. (கருசெ)

பதிப்பாசிரியர் விளக்கம்

காரிகை உரையாசிரியர் (35) 'பண்பார் புறநிலை என்றும், ஒண்பாச் செவியறிவு என்றும் சிறப்பித்தவதனால் புறநிலை வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூவும் இவ்வாறன்றி, (மருட்பாவினால் வருதலன்றி) வெண்பாவே யாயும், ஆசிரியமேயாயும் வரப்பெறும்; கலியும் வஞ்சியுமாய் வரப்பெறா என்று கொள்க' என்று கூறுதலால், மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பிற் கண்ட 'மருட்பாவினாலும் வரும்' என்ற பாடமே நன்று.

இளம்பூரணர் புறத்திணைப்பாடாண்திணையில் (தொல். புறத். நூ. 29) புறநிலை வாழ்த்திற்குத் 'தென்றலிடைபோழ்ந்து'

உரை, சு. வே: 1. 'மருட்பாவினால்'
2. 'வரப்பெறாதாயிற்று;

என்ற மருட்பாவையும், செவியறிவுறூஉவிற்குக் 'காய் நெல்ல றுத்து' என்ற புறநானூற்றுப் பாடலையும் 'அந்தணர் சான்றோர்' என்ற வெண்பாமாலைப் பாட்டினையும் உதாரணம் காட்டியுள்ளார்.

155. பரிபா டல்லே[1]
நாலீ ரைம்ப துயர்படி[2] யாக
ஐயைந் தாகு மிழிபடிக்[3] கெல்லை

என்-னின் பரிபாடற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பரிபாடற் செய்யுள் நானூறடி உயர்பாக இருபத் தைந்தடி இழிபாக வரும் என்றவாறு.

எனவே, இடை எல்லா அடியானும் வரப்பெறும் என்ற வாறு.

கலிப்பாவினுள் ஒத்தாழிசைக்கு அளவு மேற்கூறப்பட்டது.

கலிவெண் பாட்டுக்கு வரையறை யில்லை எனப்பட்டது.

கொச்சகக் கலிக்கு வரையறை கூறாமையால் பொருண் முடியுங்காறும் வரப்பெறும் என்று கொள்க. அவ்வழிப் பல உறுப்பாகி வருதலின் அதற்குறுப்பாகிய செய்யுள் அளவிற்றாதல் வேண்டும்.

உறழ்கலியுங் கொச்சகக் கலிப்பாற் படும். (கருடு)

பதிப்பாசிரியர் விளக்கம்

அடிவரையறை உடைமையும் இன்மையும்

கலிப்பாவினுள் முதனிலை ஒத்தாழிசைக் கலிக்கும் தேவரைப் பரவும் வண்ணக ஒத்தாழிசைக் கலிக்கும் அவற்றில்

நூ.பா.வே: 1. 'பரிபாட் டெல்லை'
2. 'துயர்வடி'
3. மிழிவடிக்

வரும் தரவு முதலிய உறுப்புகட்கெல்லாம் அடிவரையறை கூறப்பட்டது. கொச்சக ஒருபோகிற்கு 'ஒருபான் சிறுமை யிரட்டியதன் உயர்பே' (செய். 144) என்ற நூற்பாவாலும், அம்போதரங்கத்திற்கு 'அம்போதரங்கம் அறுபதிற்றடித்தே' (செய். 145) என்ற நூற்பாவாலும் அடிவரையறை கூறப்பட்டது.

கொச்சகக் கலிக்கும் உறழ்கலிக்கும் அடிவரையறை கூறப் படவில்லை.

இளம்பூரணர் கொச்சகக் கலிக்கு வரையறை கூறாமையால் பொருள் முடியுங் காறும் வரப்பெறும் என்றனர்.

மயேச்சுரனார்,

''கொச்சகக் கலிவயிற் குறித்து பொருள் முடிவாந்
தாழிசை பலவாய் முடிவு முடிவுழி''

என்றும் கூறுவர். (யா. வி. கழ. பக். 133)

156. அளவியல் வகையே அனைவகைப் படுமே.

என்-னின் மேற்சொல்லப்பட்டவை தொகுத்து உணர்த்து தல் நுதலிற்று.

(இ-ள்) இவ்வதிகாரத்துள் ஈண்டு அதிகரிக்கப்பட்ட அள வியல், ஈண்டுச் சொன்ன வகை[1] பெறும் என்றவாறு. (கநிசூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. அளவியல் இருபகுப்பாக ஓதப்பட்டுள்ளன

இந்நூற்பா அடிவரையறையுள்ள பாட்டிற்கு அளவியலைக் கூறுகிறது. மேல்வரும்,

''கிளரியல் வகையிற் கிளந்தன தெரியின்
அளவியல் வகையே அனைவகைப் படுமே''

(செய்.176) என்னும் நூற்பா பாட்டல்லாத செய்யுளுக்கு அளவியல் கூறியுள்ளதைத் தொகுத்து உணர்த்த வந்துள்ளது. எனவே, அளவியல் இருபகுப்பாக ஓதப்பட்டுள்ளதென்று அறிக.

உரை.சு.வே: 1. வகைப்படும்.

2. பேராசிரியர் இந்நூற்பாவிற்கு "மேற்கூறிய அளவினை வரையறுக்கின்றது" என்று நுதலியதுரைத்து "இத்துணையும் அளவியலான் ஒரு கூறே சொல்லப்பட்டது" என்று பொருளுரை கூறுகின்றார்.

3. நச்சினார்க்கினியர் "இது பிறன்கோட் கூறல்" என நுதலியதுரைத்து "யான் கூறிய அளவியலின் கூறுபாடு அத் துணைப் பகுதிப்படும்" என்று பொருள் கூறிவிட்டு, "என்றது யான் சிறப்புடைத்தெனக் கூறிய பெருமைக் கெல்லை அத் துணைப்படுமெனவே பிறர் பெருமைக்கெல்லை கொள்ளாதது சிறப்பின்று என்றவாறாயிற்று" என்பர்.

157. எழுநிலத் தெழுந்த செய்யுட் டெரியின்
அடிவரை யில்லன் ஆறென மொழிப.

என்-னின் அடிவரையறை இல்லாதன வரையறுத்துணர்த் துதல் நுதலிற்று.

(இ-ள்) எழுநிலமாவன பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன; அவற்றுள் பாட்டெழிந்த ஆறும் அடிவரை[1] யில்லன என்றவாறு. **(கஞ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1 எழுநிலத்தெழுந்த செய்யுளும் அங்கதமும்

இந்நூற்பா (செய். 157) எழுநிலத்தெழுந்த செய்யுளில் அடிவரை இல்லன ஆறு என்று கூறுகின்றது.

இளம்பூரணர் "எழுநிலத்தெழுந்த செய்யுள்" (செய். 157) என்பதற்குப் "பாட்டுரை நூலே" (செய். 75) என முன் வந்த நூற்பாவைக் கருத்திற் கொண்டு பாட்டு, உரை, நூல், வாய் மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன அச்செய்யுள் என்பர்

பேராசிரியர் அவ்வாறு கூற விருப்பமின்றி அகத்திணை புறத்திணையாகிய எழுநிலம்; அவைபற்றி வரும் செய்யுள் என்பர்.

உரை.சு.வே: 1. 'அடிவரை யில'
'அடிவரை யில்லை'

நச்சினார்க்கினியர் பேராசிரியரைப் பின்பற்றி அகமும் புறமுமாகிய எழுதிணம் என்று முதற்கண் கூறிவிட்டுப் பின்னர் இளம்பூரணரைப் பின்பற்றிப் பாட்டு உரை நூல் முதலியனவும் ஆம் என்பர்.

அடிவரை இல்லனவாகிய ஆறினை இதன் அடுத்த நூற்பா (158) நூலும், உரையும், நொடியொடு புணர்ந்த பிசியும், ஏது நுதலிய முதுமொழியும், மறைமொழி கிளந்த மந்திரமும், கூற்றிடை வைத்த குறிப்பும் ஆம் இவையென்று கூறுகிறது. இங்குக் கூறுவது, முன்னே (செய்.75) சொன்ன முறைக்குச் சிறிது மாறுபாடாக உள்ளது. இங்குக் கூறியுள்ள 'கூற்றிடை வைத்த குறிப்பு' அங்கே கூறியுள்ள 'அங்கதமாம்' என்பது, இளம்பூரணர் கருத்து.

அங்ஙனம் ஆனால், அங்கதம் என்பதற்குக் குறிப்புமொழி என்று பொருள் இருத்தல் வேண்டும். இப்பொருள் இதுவரை அறிஞரால் அறியப்படாததாக உள்ளது. இவ் அங்கதம் அடிவரையில்லாத செய்யுளில் வருவதாகும். அடிவரையுள்ள பாட்டாகிய வெண்பாவில் வரும் அங்கதங்களும் உள்ளன. அவை செம்பொருளாகியும், கரந்த மொழியினாலும் வரும் (செய். 121, 122). இவ்விரண்டுமன்றிச் 'செய்யுள் தாமே இரண்டென மொழிப' (செய். 123) என்ற செய்யுள் வெண்பாவில், வசையொடும் நசையொடும் புணர்ந்த அங்கதமும் ஒன்று உண்டு.

2. வேறுபாடு

எனவே அடிவரையுள்ள பாட்டிலே கூறிய அங்கதம், வசைப் பொருளாக வருவதாம். அடிவரையில்லாத ஆறில் ஒன்றாகிய அங்கதம், குறிப்புப் பொருளில் வருவதாம். ஆனால், இளம்பூரணர் (செய். 158) 'அவைதாம் நூலினான' என்னும் நூற்பாவுரையில் "அங்கதமாவது செம்பொருள் கரந்ததென இருவகைத்தே" (செய். 120) என்றதனால் கரந்த அங்கதம் எனினும் (120) சொற்குறிப்பெனினும் (158) ஒக்கும் என்பர்.

அவர் முன்னது அடிவரையுள்ள பாட்டில் வரும் என்றும், பின்னது அடிவரையில்லாத செய்யுளில் வரும் என்றும் வேற்றுமை கருதவில்லை.

அடிவரையில்லாதவற்றில் இப்பொழுது அங்கதம் என்று வழங்குவது, 'இங்கிதம்' (குறிப்பு) என்றாற்போல, 'அங்கிதம்' என்று வழங்கியிருக்குமோ என்பதையும் அறிஞர் கருதுக.

158. அவைதாம்
நூலி னான வுரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி[1] யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை[2] வைத்த குறிப்பினான.

என்-னின் மேற்சொல்லப்பட்ட அறுவகையும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(பொழிப்புரை காணப்படவில்லை)

வாய்மொழியெனினும் மந்திரமெனினும் ஒக்கும்.

அங்கதமாவது, (மேல் நூற்பாவில் செய். 120) "செம்பொருள் கரந்தது என இருவகைத்தே" என்றதனாற் கரந்த அங்கதம் எனினும் (கூற்றிடை வைத்த குறிப்பாகிய) சொற்குறிப்பெனினும் ஒக்கும்.

அவை யாமாறு வருகின்ற சூத்திரத்தாற் காட்டுதும்.
(கநிஅ)

பதிப்பாசிரியர் விளக்கம்

பேராசிரியர் "அடிவரையில்லன ஆறெனப்பட்டவைதாம் நூலின் கண்ணவும், உரையின் கண்ணவும், நொடிதன் மாத்திரையாகிய பிசியின் கண்ணவும், ஒருமொழிக் கேதுவாகி வரும்

நூ. பா. வே: 1. 'மொழியி னான'
2. 'மறை யொடு'

முதுமொழிக்கண்ணவும், மறைத்துச் சொல்லும் சொல்லாற் கிளந்த மந்திரத்தின் கண்ணவும், சொல்லுகின்ற பொருளை இடை கரந்து சொல்லுங் குறிப்பின் கண்ணவுமென அறுவகைப் படும் என்றவாறு'' என்பர்.

159. அவற்றுள்[1]
நூலெனப் படுவது[2] நுவலுங் காலை
முதலு[3] முடிவு மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற வுரையொடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே.

என்-னின் நூலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நூலென்று சொல்லப்பட்டது எடுத்துக்கொண்ட பொருளொடு முடிக்கும் பொருண்மை மாறுபடாமற் கருதிய பொருளைத் தொகையானும் வகையானும் காட்டி, அதன் அகத்து நின்றும் விரிந்த[4] உரையொடு பொருத்த முடைத்தாகி நுண்ணியதாகி (விளக்குவது) நூற்கியல்பாம் என்றவாறு.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு தொல்.செய். நச்சினார்க் கினியர் உரையின் அடிக்குறிப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இளம்பூரணர் உரை:-

நூல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. நூலென்று சொல் லப்படுவது எடுத்துக் கோடற்படுவதும் அடுக்கும் பொருளும் மாறுபடாமற் கருதிய பொருளைத் தொகையானும் வகையா னும் காட்டி, அதன் அகத்து நின்றும் விரிந்த உரையோடு பொருத்த முடைத்தாகி[5] நுண்ணிதாகிய பொருள் விளக்கலாவது நூற்கு இயல்பாம் என்றவாறு.

நூ.பா.வே: 1. 'அவற்றுள்' என்ற சொற்சீரடி யா.வி. இல்லை.
2. 'அவற்றுள் நூலெனப் படுவது' நச். நுவலுங்காலை இல்லை என்ற தொடர் நச். இல்லை
3. முதனடுவிறுதி
உரை.சு.வே; 4. பிரித்தவுரையொடு
5. நுண்ணிதாகிய பொருள் விளக்கலாவது நூற்கியல்பாம்.

அகன்ற வுரையொடு பொருந்துதலாவது, சொல்லாத பொருண்மை யெல்லாம் விரிக்கவேண்டியவழி அதற்கெல்லாம் இடனுண்டாதல். (கநிகூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. நூலாவது,

''முதல்நடு இறுதி மறுதலைப் படாது
தொகைவகை விரியின் உட்பொருள் தோன்ற
உரையொடு புணர்ந்த ஒழுக்கிற் றாகிச்
சூத்திரம் ஒத்துப் படலம் பிண்டமென்(று)
யாப்புறுத் தமைத்த அவயவத் தாகி''

நடப்பது. (யா.வி.கழ.பக். 2)

இறையனார் களவியல் உரையாசிரியர் (முதன் நூற்பாஉரை)

அல்லதூஉம்,

''நூலெனப் படுவது நுதலிய பொருளை
ஆதிக் கண்ணே அறியச் சுட்டி
ஒத்துமுறை நிறுத்துச் சூத்திரம் நிரைஇ
முதல்வழி சார்பென மூவகை மரபின்
தொகைவகை விரியின் வசையறத் தெரிந்து
ஞாபகம் செம்பொருள் ஆயிரு வகையின்
பாவமைத் தொழுகும் பண்பிற் றாகிப்
புணர்ச்சியி னமைந்து பொருளகத் தடக்கித்
தனக்குவரம் பாகித் தான்முடி வதுவே''

எனவும் சொன்னாராகலின்.

அன்றியும் நூலெனப்படுவது நுதலிய பொருளை முதலிற் கூறி, முதல் நடு இறுதி மாறுகோளின்றித் தொகை வகை விரி படப் பொருள்வைத்து, பொழிப்பு அகலம் நுட்பம் நூலெச்சம் என்னும் உரையின் பொருள் விளங்கும் நுண்மைக்கு வரம்பாக நோக்குடையது. என்னை?

''நூலெனப் படுவது நுவலுங் காலை
நுதலிய பொருளை முதலிற் கூறி

முதல்நடு விறுதி மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றமைந்த வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே''

என்றாராகலின் என்பர். மேற்காட்டியவற்றுள் 'நூலெனப் படுவது நுவலுங் காலை' என்ற நூற்பா, தொல்காப்பிய நூற் பாவுடன் பெரிதும் ஒத்து, சிறிது வேறுபட்டுள்ளமையைக் காண்க.

மேலுள்ளவற்றில் இரண்டாம் நூற்பாவுள் 'புணர்ச்சியின மைந்து' என்பது தொல்காப்பியப் பாயிரவுரையுள் **இளம்பூரணர்** எடுத்துக்காட்டும் 'எண்வகைப் புணர்ப்பினதாகி' என்று குறிப்பிடுவது போலும்.

2. நூல் என்றதன் காரணம்

மேலும் களவியல் உரையாசிரியர் இவ்வாறு சொல்லப் பட்டது நூலென்ப. இனி நூலென்ற சொற்குப் பொருள் உரைக்கப்படும். நூல் போறலின் நூல் என்ப; பாவை போல் வாளைப் பாவை என்றாற் போல. நூல் போறல் என்பது, நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளான் கைவல் மகடூஉ தனது செய்கை மாண்பினால் ஓரிழைப் படுத்துதலாம் உலகத்து நூல் நூற்றலென்பது; அவ்வாறே, சுரந்து பரந்த சொற்பரவைகளால் பெரும் புலவன் தனது உணர்வு மாட்சியில் பிண்டம் படலம் ஒத்துச் சூத்திரம் என்னும் யாப்பு நடை கோத்தலாம் உலகத்து நூல்செய்தலாவது.

1. அவ்வகை நூற்கப்படுதலின் நூலெனப்பட்டது.

2. இனி, ஒருசாரார் நூல்போலச் செப்பஞ் செய்தலின் நூலென்ப என்பர் (இறை.கள. பக் 16).

''பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு''

1. இவ்வாறு நூற்கப்படுதலானும்

''உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூன் அஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்குநூன் மாண்பு''

2. இவ்வாறு நூலே போலச் செப்பஞ் செய்தலானும் நூலெனப்படும் என்பர். (நன்னூல். பாயிரம். 23-24)

நூல் என்பதற்குக் கைவல் மகடூஉ பஞ்சினால் நூல் நூற்றல் போல் புலவன் சொற்களால் நூல்களை இயற்றுகின்றான் என்று கூறுவது எழுவகைச் செய்யுளுக்கும் பொருந்தும்.

எற்று நூல்போலச் செப்பஞ் செய்தலால் நூல்எனப் பெயர் பெற்றது என்றல் இலக்கண நூலுக்கே பொருந்தும்.

செய்யுள் உறுப்பினைத் தொகுத்தோதிய முதல் நூற்பா (செய்.1) பதினைந்தாவது உறுப்பாகக் கூற்றினைக் கூறுகின்றது. அதனை உணர்த்தும் இந்நூற்பா (181) ''களவில் கிளவிக் குரியரென்ப'' என்று கூறும். இங்கே கிளவி என்பது கூற்றினை. வீரசோழியமும் கூற்றினைக் கிளவியென்றே கூறும். ''சட்டகமே திணைகைகோள் நடைசுட் டிடம்கிளவி'' (90) என்பது அக்காரிகை. அக்காரிகையில் இதன் உரையாசிரியர் ஆகிய **பெருந்தேவனார்,**

> ''இனிக் கிளவி என்பது கொள்க''

அது,

> ''நெஞ்சுக் குரைத்தல் கேட்டோர்க் குரைத்தல்
> அந்தர மருங்கின் அறிதரக் கூறலென
> வந்த வகையின மூவகைக் கூற்றே.''

என்பர்.

182. பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு[1] சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு[2] தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்.

என்-னின் கற்பின்கண் கூறத்தகுவாரை உணர்த்துதல் நுதலிற்று.

நூ. பா. வே: 1. 'பேணுஞ்' 'எண்டகு சிறப்பின்' சு. வே.
2. 'கிளவியொடு' பேரா; நச்.

(இ-ள்) பாணன் முதலாகச் சொல்லப்பட்ட அறுவரும் மேற் சொல்லப்பட்ட பார்ப்பார் முதலிய அறுவரும் கூடப் பன்னிரு வரும் கற்பின்கண் [1]கூறுதற்குரியர் என்றவாறு.

'தொன்னெறி மரபிற் கற்பு' என்றதனான், அவர் குலந் தோறும் தொன்றுபட்டு வருகின்ற நெறியையுடையார்[2] என்று கொள்க. (கஅஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

கற்பில் கூற்றிற்குரியர்

நம்பி அகப்பொருள்,

> ''நற்றாய் கண்டோர் பாணன் கூத்தர்
> விறலி பரத்தையர் அறிவரென் றெழுவரும்
> அறுவகை யவரு மாகிய அனைவரும்
> குறைவறு கற்பிற் கூற்றிற் குரியர்'' (214)

என்று கூறும். கற்பில் நற்றாயைச் சேர்த்து எழுவரும், களவிற் கூறிய அறுவரும் கூடப் பதின்மூவரும் கிளவிக்குரியர் என்பது கருத்து.

இலக்கண விளக்கம் தொல்காப்பியர் கூறியது போன்றே கூறும்.

183. ஊரும் அயலும் சேரி யோரும்
நோய்மருங் கறிநரும் தந்தையுந் தன்னையும்
கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது[3]
கூற்றவ ணின்மை யாப்புறத் தோன்றும்.

என்-னின் மேற்சொல்லப்பட்ட இருவகைக் கைகோளிற் கும் உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

உரை.சு.வே: 1. கூறற்
2. நெறியை யுடைத் தென்று
நூ.பா.வே: 3. 'படுவ தல்லதைக்' - நச்.

(இ-ள்) ஊரிலுள்ளாரும், சேரியிலுள்ளாரும், அயன்[1] மனையிலுள்ளாரும், நோய்ப்பக்கம் குறிப்பினா லறிவாரும், தந்தையும், தமையனும் இருவகைக் கைகோளினும் பட்டதனை உட்கொண்டு பிறிதொன்றை எடுத்து மொழியினல்லது (பிறரொருவரால் எடுத்து மொழியப்படுதலல்லது) பட்டாங்கு[2]க் கூறலின்மை வலியுற்றுத் தோன்றும் என்றவாறு. (வலி-யாப்பு)

எனவே வலி இல்வழிச் (யாப்புறத்தோன்றாதவழி) சிறுபான்மை நிகழவும் பெறும்.

உதாரணம்:—

''எந்தையும்,
நிலனுறப் **பொறாஅன்** சீறடி சிவப்ப
எவனில குறுமக ளியங்குதி யென்னும்'' [அகநா. 13]

இது, தந்தை (க்கிளவியை) உட்கொண்டு கூறியது. பிறவும் அன்ன. (கஅஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. ஒத்த நூற்பா

''பயந்தோன் றன்னை யுயங்குநோ யறிவோர்
ஊரவ ரயலோர் சேரியோ ரென்றிவர்
முகத்துரை நிகழா வகப்பொரு ளகத்தே''

(நம்பி. அகம். 215)

மேல் குறிப்பிட்ட (செய்.183) செய்யுளியல் நூற்பா, இங்கே உள்ள பாடப்படியே இலக்கண விளக்கத்தில் (563) எடுத்தமைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

2. தொல்காப்பிய நூற்பா இலக்கண விளக்கத்தில்

அந்த நூற்பா உரையில் 'யாப்புறத் தோன்றும்' என்பதற்கு 'வலியுறத் தோன்றும்' என்று உரை எழுதப்பட்டுள்ளது.

உரை: சு.வே: 1. அயன்முனையுள்ளாரும்
2. பட்டாங்குக் கூறுதலின்மை வலியுறுத்தத்தோன்றும்
(மேற்பாடம் தமிழ்ச்சங்கப் பதிப்புப் பாடம்)

கொண்டெடுத்து மொழிதல் - இவர்கூற்றாகப் பிறர்கூறுதல்.

'யாப்புறத் (வலியுற) தோன்றும்' என்றதனான் அகத்திணைக்கண் அவ்வாறு நிகழும் எனவும், புறத்திணைக்கண் அவர் கூறவும் பெறும் எனவும் கூறும். (இல. விள. 563)

184. கிழவன்[1] றன்னொடுங் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறன் முற்றத் தோன்றாது.

என்-னின் நற்றாய்க்[2] குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைமகன் றன்னொடும் தலைமகள் தன்னொடும்[3] நற்றாய் கூறில்லை என்றவாறு. எனவே, ஏனையோர்க்கே கூறும் என்றவாறாம்

உதாரணம், வந்தவழிக் காண்க. (இது த. சங்கப் பதிப்பில் இல்லை.) (கஅச)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. தொல்காப்பிய நூற்பா இலக்கண விளக்கத்தில்

இத் தொல்காப்பிய நூற்பா 'கிழவோன் றன்னொடும்' என்ற பாட பேதத்துடன் இலக்கண விளக்கத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. (564)

2. நச்சினார்க்கினியர் கருத்து

இந்நூற்பாவிற்கு 'இஃது எய்தாதது எய்துவித்தது' என்று கருத்துக்கூறி, 'கிழவனோடும் கிழத்தியோடும் இடையிட்டு நற்றாய் கூறுதல் நிரம்பத் தோன்றாது; எனவே, அல்லுழிக் கூறப்பெறும் நற்றாயும்' என்று பொருள்கூறி,

---

நூ.பா.வே: 1. 'கிழவோன்' இலக்கண விளக்கம்
உரை.சு.வே: 2. 'நற்றாய்க்குரிய மரபு'
3. தலைவ னொடுந் தலைவியொடும் —வ.உ.சி. பதிப்பு:
(மேலே பாடங் கொள்ளப்பட்டது தமிழ்ச்சங்கப் பதிப்பு)

''செறிந்த சேரிச் செம்மன் மூதூர்
அறிந்த மாக்கட் டாகுக இல்ல '' (அகநா. 65)

இது நற்றாய் அல்லுழிக் கூறியது.

தாய் என ஒருமையாற் கூறவே தலைவியுடைய நற்றாயாயிற்று. தந்தை தன்னையர்க்கும் இஃதொக்கும்.

'முற்ற' என்றதனால் தலைவன் தமர் யாவரும் கூறாரென உணர்க.

'தோன்றாது' என்றதனானே புறத்திணைக்கண் வரைவின்றி வழக்கிற்குப் பொருந்துமாறு கொள்க என்று சிறப்புரை எழுதியுள்ளார். இச் சிறப்புரை பேராசிரியர் கருத்தினைத் தழுவியது.

3. நம்பி அகப்பொருள் ஆசிரியர் கருத்து

மேற்கூறிய தொல்காப்பிய நூற்பாவின் கருத்தை உட்கொண்டு.

''தலைவன் தலைவியொடு நற்றாய் கூறாள்'' (218)

என்று நூற்பா செய்துவிட்டுப் பின்னர், நற்றாய் செவிலி கூற்றாக,

''புணர்ந்துடன் போய துணர்ந்த பின்னர்
அந்தணர் தெய்வ மயலோ ரறிஞர்
சிந்தைநோ யறிவோர் செவிலி பாங்கியொடு
கண்டோர்க் குரைக்கும் பண்புடை நற்றாய்'' (219)

என்றும்,

''தாயொடும் பாங்கி தான்முத லாரொடும்
சேயிழைச் செவிலியுஞ் செப்பு மாங்கே'' (220)

என்றும் நூற்பாச் செய்துள்ளார்.

தொல் அகத்திணையியலில்,

''தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும் (39)

என்று கூறுவதையும் சேர்த்துக் கருதுக.

185. ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.

என்-னின் கண்டோர்க்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒண்டொடி மாத ராவார் நற்றாயும், தோழியும், செவிலியும்; இவரொடும், தலைவனொடும், தலைவியொடும் கண்டோர் கூறுதல் காணப்பட்டது என்றவாறு.

எனவே ஏனையோர் கேட்பக் கூற்றில்லை[1] *என்றவாறாம்.*
(கஅஞ)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒண்டொடி மாதர் என்பது பற்றி

இளம்பூரணர் 'ஒண்டொடி மாதர்' என்றதற்கு நற்றாயும், தோழியும் செவிலியுமென விளக்கம் எழுதினர். இந்நூற்பாவை ஒத்த நூற்பா நம்பி அகப்பொருளில்

> ''தாயர் பாங்கியர் தலைவன் தலைவியோடு
> ஏயு மென்ப கண்டோர் கூற்றே'' (221)

என்று காணப்படுகின்றது. இங்கே தாயரும் பாங்கியரும் ஒண்டொடி மாதராவார்.

மேற்குறிப்பிட்ட 'தாயர் பாங்கியர்' என்ற நூற்பாவினையே இலக்கண விளக்கமுடையார் தம் நூலுள் எடுத்துவைத்துக் கொண்டு (566) ''தாயர் பாங்கியர்' என்ற பன்மைக்கு நற்றாயும், செவிலித்தாயும் அவள் உயிர்ப்பாங்கியும் ஏனைப்பாங்கியரும் என்று உரை கூறுகின்றார். இங்கே ஒண்டொடி மாதராவார் நால்வராகின்றனர்.

நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் 'ஒண்டொடி மாதர்' என்பதற்குவேறு உரை கூறுகின்றனர். அவற்றைக் கீழே காண்க.

---

[1] உரை.சு.வே: கூறிற்றில்லை

நச்சினார்க்கினியர் மேல் நூற்பா 'நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது' என்று வந்தமையால், 'ஒண்டொடிமாதர்' என்று இங்கே வந்துள்ளது நற்றாயில் வேறுபட்ட செவிலித்தாயா வாள் என்று கருதிக்கொண்டு 'ஒள்ளிய தொடியினையுடைய செவிலியோடும்' என்று பொருள் எழுதிவிட்டு, 'ஒண்டொடி மாதர்' என்றார் செல்வச் சிறப்புடைமை தோன்ற' என்பர்.

பேராசிரியர் 'ஒண்டொடி மாதர் கிழவன்' எனவே (ஒண் டொடி மாதராகிய தலைவியுடன் இடைச் சுரத்துக் கூடிய கிழவன்) அவ்விருவர் கூட்டத்துக் கண்ணுமன்றி அவ்விருவ ரோடும் தனித்துழிக் கூற்றில்லை என்றவாறு என்பர்.

186. இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய ஆணையிற் கிளத்தற்கு முரியன்.

என்-னின் இது தலைமகனுக்கு[1] உரியதோர் மரபு உணர்த் துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைமகளை[2] உடன்கொண்டு போகும் இடைச்சுரத் தின்கண், தலைமகன்,[3] தலைமகளொடு வழக்குநெறி ஆனை யானே கூறுதற்கும் உரியன் என்றவாறு.

உம்மை எதிர்மறை.

ஆணை என்பது ஆக்கினை; வடமொழித் திரிவு.

மெல்லியலொடு[4] காமம் நிகழுமிடத்து ஆக்கினை கூறப் பெறானாயினும், ஈண்டு[5] வேண்டுமென எடுத்தோதப்பட்டது.

உதாரணம்:—

''நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கி னிரும்புறம் பொருந்தி

உரை.சு.வே: 1. தலைவற் குரியதோர்
2. தலைவியை
3. தலைவியைத் தலைவன்
4. மெல்லிய காமம் நிகழுமிடத்து
5. அவ்விடத்து

அமர்வரி னஞ்சேன் பெயர்க்குவென்
நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே'' [நற்.362]

என்பதனுட் கண்டு கொள்க.

மெல்லியல் மகளிர் முன் வன்மை கூறலாகாமையின் இது வழுவமைத்தவாறு. (கஅசூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

இத் தொல்காப்பிய நூற்பாக் கருத்தினைப் பின்பற்றி நம்பி அகப்பொருள்,

''தமர்வரி னிடைச்சுரந் தன்னிற் கிழத்தியோ
டமர்தரு கிழவோ னாணையுங் கூறும்'' (216)

என்று கூறும்.

பேராசிரியர் 'இடைச்சுரத்து உடன் போகிய கிழத்தியொடும் கிழவன் நீதிநூல் வகையால் கிளத்தற்கும உரியன்' என்று நூற் பாவிற்குப் பொருள்கூறி 'நீதிநூல் வகையாற் கிளத்தலென்பது, கிழத்திதன் தமர் இடைச்சுரத்துக் கண்ணுறின் அவர் கேட்பத் தலைவிக்குச் சொல்லுவானாய் வழக்கியல் கூறுதலும் உரிய' னென்பர்.

'வழக்கியலாணை' என்றதனான், நீதிநூல் பிறழக் கூறின் அஃது இராக்கதம் போன்று காட்டும் எனபது.

உம்மையால் கிழத்தியொடு வழக்கிய லாணையானன்றி மருட்டிக் கூறவும் பெறுமென்பது என்பர்.

187. ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங்[1] குரியர் முன்னத்தி னெடுத்தே.

என்-னின் இது தலைவனும்[2] தலைவியு மல்லாதார்க்குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

நூ.சு.வே: 1. 'மொழிந்தாங்கு முரிய'
உரை.சு.வே: .2 தலைமகனுந் தலைமகளு

(இ-ள்) [1]தலைவனையுந் தலைவியையும் ஒழிந்த பதின்மரும் அத் தலைவனொடுந் தலைவியொடுஞ் சொல்லிப் போந்த மரபினாற் சொல்லப்பெறுவர்[2]; இடமுங் காலமுங் குறித்து என்றவாறு.

'மொழிந்தாங்கு' என்பதனை வழக்கியலாணை எனினும் அமையும். முன்னமாவது:-

''இவ்விடத் திம்மொழி யிவரிவர்க் குரித்தென்
றவ்விடத் தவரவர்க் குரைப்பது'' (செய்.99)

('எடுத்து' என்பது அறம்பொருள் இன்பங்கட்குத் தகாத சொற்களை எடுத்துக் கூறுதல்[3]).

அஃதாவது தலைவனைப் பார்ப்பானும் பாங்கனும் கழறலும், தோழி இயற்பழித்தலும், தலைவியைச் செவிலி அலைத்தலும், பாணர் கூத்தர் பாசறையிற் சென்று கூறுதலும், தோழி தலைமகனை வற்புறுத்தலும் முதலாயின. (கஅஎ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. ஒழிந்தோர் சாற்றா எழுவர், சாற்றா அனைவர்

இந்நூற்பாவில் ஒழிந்தோர் என்பதற்குக் கூற்றிற்குரிய பன்னிருவரில் தலைவனையும் தலைவியையும் ஒழிந்த பதின்மர் என்பர் இளம்பூரணர்.

நம்பி அகப்பொருள் ஆசிரியர்,

''சாற்றா எழுவரும் தலைவன் தலைவியோடு
ஏற்றன கூறுப இடந்தொறும் இடந்தொறும்'' (222)

என்று நூற்பாச் செய்து, சாற்றா எழுவராவர்: மேல் விதந்து கூறப்பெறாத பார்ப்பானும், பாங்கனும், பாணனும், கூத்தனும்

உரை.சு.வே: 1. தலைமகனையும் தலைமகளையும்
2. சொல்லுப் பெறுவர்
3. இப் பிறைக்குறியிட்டவை தமிழ்ச்சங்கப் பதிப்பில் இல்லை.

விறலியும், பரத்தையும், அறிவருமென்ற எழுவரும் தலை மகனோடும் தலைமகளோடும் இடந்தொறும் இடந்தொறும் பொருந்தியவற்றைக் கூறுவர் என்பர்.

இலக்கணவிளக்க நூலார் 'சாற்றா அனைவரும்' என்று பாடங் கொண்டு, பாங்கியையும் கூட்டி, இவ்வெண்மரும் சாற்றா அனைவர் என்பர்.

2. பேராசிரியர் கருத்து

மேலைச்சூத்திரத்துக் கூறிய (செய்.186) "தலைமகனையும் தலைமகளையும் ஒழித்து, ஒழிந்தோ ரெனப்படுவோர் கண்டோ ரெனப்படுப. அவர் கூற்றும் கிழவன் கிழத்தியொடு மொழிந் தாங்கு வழக்கியலாணையிற் கிளத்தற்கும் உரியரென்பான் முன்னத்தினெடுத்துக் கூறுப என்றான். 'முன்னத்தின் எடுத்தல்' என்பது, அதிகாரத்தான் அறநூற் கருத்தினான் எடுத்துரைப்ப என்றவாறு.

அவை,

> "பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
> மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
> நினையுங்கா னும்மக ணுமக்குமாங் கனையளே" (கலி.9)

என்றாற் போல்வன.

இவ்வாறு வழக்கியலாணையாற் கிளவாது வாளாதே அவரைக் (தலைவன் தலைவியரைக்) கண்டோ மெனவும் அவர் இன்னுழிப் புகுவரெனவும் சொல்லுவன "கண்டோர் மொழிதல் கண்ட தென்ப" (அகத்திணையியல்.40) என்புழிக் கூறினாம்" என்பர்.

(16) கேட்போர்

188. மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியும்
நினையுங் காலைக் கேட்குந ரவரே.

என்-னின் இதுவும் அது.

(இ-ள்) [1]தலைவியும், தலைவனும் கூறக் கேட்போர் மேற் சொல்லப்பட்ட பதின்மரும் என்றவாறு.

இது முதலாகக்[2] கேட்போரைக் கூறுகின்றது. (கஅஅ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பாட வேறுபாடு

உரைக்குறிப்பு வ. உ. சி. பதிப்பில் இந் நூற்பாவிற்கு நூற்பாவில் உள்ளவாறு தலைவியும் தலைவனும் என்று எழுதப் பட்டுள்ளது. மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பில் மாற்றித் 'தலைமகனும் தலைமகளும்' என்று எழுதப்பட்டுள்ளது. **பேராசிரியர்** "கேட்டற் குரியவர் தலைமகனும் தலைமகளும் ஒழித்து ஒழிந்த பதின்மர்" என்பர். **நச்சினார்க்கினியர்** "தலைவி கிளவியையும் தலைவன் கிளவியையும்" என்று உரை கூறுவர்.

2. கேட்போர் கேள்வி

இறையனார் அகப்பொருள் உரையாசிரியர்:

"இனிக் கேட்போர் என்பது இன்னார் கூற இன்னார் கேட்டார் என்றறிவது. தோழி கூறத் தலைமகள் கேட்டாள்; தலைமகள் கூறத் தோழி கேட்டாள்; தலைமகன் கூறத் தோழி, கேட்டாள்; தோழி கூறத் தலைமகன் கேட்டான் என்று இவ்வாறு அறிந்து உரைப்பது" என்பர். **வீரசோழியம்கேள்வி** என்பது

"உயர்திணை மருங்கி னிவர்நனி கேட்டோர்
அஃறிணை மருங்கி னிதுநனி கேட்டதெனச்
சொல்லுதல் கேள்வி யென்மனார் புலவர்" (96 காரிகையுரை)

என்று கூறும்.

3. ஒத்த நூற்பா

"கிழவோன் கூற்றுங் கிழத்தி கூற்றும்
மறையோன் முதலாப் பதின்மருங் கேட்ப" (நம்பி. அகம். 225)

உரை.சு.வே: 1. தலைமகனும் தலைமகளும்
2. இதுவுமுதலாகக்

4. கேட்போர்

பேராசிரியர் 'கேட்போர் என்பது இன்னார்க்குச் சொல்லுகின்றது இதுவெனத் தெரித்தல்' (செய். 1 உரை) என்பர்.

189. பார்ப்பா ரறிவ ரென்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்த்தே[1].

என்-னின் பார்ப்பாரும் அறிவரும் கூறுங் கூற்றுக் கேட்போரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பார்ப்பார் அறிவரென்று சொல்லப்பட்ட இருவர் கூற்றும் எல்லாருங் கேட்கப்பெறுவர் என்றவாறு. (கஅக)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. ஒத்த நூற்பா

''மறையோர் கூற்று மறிவர் கூற்றும்
இறையோன் முதலா வெனைவருங் கேட்ப'' (நம்பி.அகம்.226)

2. இரண்டு நூற்பாவை ஒரு நூற்பா ஆக்குவர்

இலக்கணவிளக்க நூலாசிரியர் மேல் நூற்பா (செய். 188) இந்நூற்பா (செய்.189) என்னும் இரண்டு நூற்பாக் கருத்துக்களை எடுத்துக்கொண்டு

''இறையோன் கூற்றும் இறைவி கூற்றும்
மறையோன் முதலாப் பதின்மரும் முறையான்
மறையோன் கூற்றும் அறிஞர் கூற்றும்
இறையோன் முதலா எனைவருங் கேட்ப'' (இல.573)

என்று ஒரு நூற்பாவாகச் செய்துள்ளார். ஒருபொருள் நுதலிய சூத்திரத்தானும் என்னும் விதியை மறந்தார் போலும்.

3. பார்ப்பார் அறிவர்

மேற்கண்ட தொல்காப்பிய நூற்பாவிற்குப் 'பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி யார்க்கும் வரையார்' என்றது, அகத்திணையோர்க்கும் புறத்திணையோர்க்கும் என்றவாறு.

நூ. பா. வே: 1. 'புணர்ந்தே' பேரா; நச்.

யார்க்கும் வரையார் என்பதனை, எச்சப்படுத்துச் சிலர்க்கு வரையப்படுமென்பது கொள்க. என்னை? பார்ப்பார் கூற்று தலைமகனும் செவிலியும் நற்றாயும் கேட்பினல்லது பிறர் கேட்டற் கேலா. அறிவர் கூற்று (தலைமகனே யன்றி) தலைமக ளும் தோழியும் செவிலியும் நற்றாயும் கேட்டற் குரியர்.

புறத்திணைக் கண்ணும் பொதுவியற் கரந்தையோர்க்குப் பார்ப்பார் கிளவி ஏலாவெனவும், அறிவர் கிளவி ஏற்கு மெனவும் பிறவும் இன்னோரன்ன கொள்க.

"யாப்பொடு புணர்ந்து" என்பது, அகப்பொருளும் புறப்பொருளுமாக யாக்கப்படும் செய்யுள் எல்லாவற்றோடும் பொருந்தும் என்றவாறு.

இவர் கிளவி வரையப்படா தெனவே, அவர் வாயிலாகிய வழித் தலைமகள் வாயின் மறுத்தலிலள் என்பதூஉம், புறத்தி ணைத் தலைவர்க்கும் அவ்வாறே வழிநிற்றல் வேண்டு மென்ப தூஉங் கூறியவாறாயிற்று. என்னை? அறிவரெனப்படுவார் மூன்று காலமுந் தோன்ற நன்குணர்ந்தோரும், புலனன் குணர்ந் தோரும், புலமையோரு மாகலானும்; இனிப் பார்ப்பாரும் அவ்வாறே, சிறப்புடையராகலானும், அவர்வழி நிற்றல் அவர்க்குக் கடனா மாகலானு மென்பது என்பர் பேராசிரியர்.

190. பரத்தை வாயி லெனவிரு வீற்றுங்[1]
கிழத்தியைச் சுட்டாக்[2] கிளப்புப் பயனிலவே[3].

என்-னின் என்பதுவும்[4] ஒரு சார் கூற்றிற்கு உரியார் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பரத்தை[5] யென்றும், வாயிலென்றும் சொல்லப்படும் (இரு) வேறுபாட்டினும், தலைமகளைச் சுட்டாத கூற்றுப் பய னில்லை என்றவாறு. (கூ0)

நூ.பா.வே: 1. 'கூற்றும்' பேரா.
2. 'கிழவோட் சுட்டா' திருக்கோ.371
3. 'பயமிலவே' - பேரா; நச்.
உரை.சு.வே: 4. இதுவும் 5. பரத்தையென்று சொல்லப்படும் வேறுபாட்டினும் வாயிலென்று சொல்லப்படும் வேறுபாட்டினும் (வ.உ.சி. பதிப்பு)
மேற்கண்டவை தமிழ்ச்சங்கப் பதிப்புப்பாடம்.

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பாட வேறுபாடு

பேராசிரியர் உரைப்பதிப்பில் 'என விரு கூற்றும்' என்று நூற்பாப் பாடம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர் அங்கே ''பரத்தையும் வாயில்களும் என்னும் இரண்டு வேறுபாட்டின் கண்ணும்' என்று உரை எழுதுவதால் 'எனவிரு வீற்றும்' என்ற பாடமே தக்கது. ஏனைய உரையாசிரியர் பாடமும் இதுவே.

2. வாயில்களாவார் இவர் என்பதை,

''தோழி தாயே பார்ப்பார் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்க ளென்ப''

தொல்.கற்பியல் 52ஆம் நூற்பாவால் அறிக. பாட்டி-விறலி.

3. பேராசிரியர் கருத்து

பேராசிரியர், 'கிழத்தியைச் சுட்டாக்கிளவி' என்பதற்குக் 'கிழத்தி கேட்பாளாகக் கருதிச் சொல்லாத சொல்' என்று பொருள் காண்பர்.

'கிழத்தியைச் சுட்டா' எனவே பரத்தை பாங்காயினார் கேட்பச் சொல்லினும் அமையும் என்பதாயிற்று.

''செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதிவண்
உலமந்து வருகஞ் சென்மோ தோழி'' (அகநா. 106)

என்றக்கால் தலைவிக்குப் பாங்காயினார் கேட்பக் கூறல் வேண்டுமென்பது.

வாயில்களும் தலைமகளை ஊடல் காப்ப (போக்க) அல்லது சொல்லாராகலான் தலைமகள் கேட்பாளாகச் சொல்லவேண்டு மென்பது. சுட்டாக் கிளப்புப் பயமில என்றதனான், வாயில்கள் கூறுவனவும் கிழத்திக்குப் பாங்காயின தோழி கேட்பச் சொல் லினும் அமையும். அவற்றுக்குச் செய்யுள்,

''ஒருயிர் மாத ராகலி னிவளுந்
தேரா துடன்றனண் மன்னே''

என்பது கிழத்தி கேட்ப வாயில்கள் கூறியது. இது தோழி கேட்பச் சொல்லியதுமாம் என்பர்.

4. நூற்பாக் கருத்து

மேல்நூற்பாவின் கருத்து பரத்தையோ வாயில்களோ கூற்று நிகழ்த்தின் அது தலைவியைக் கருதியதாக இருக்கவேண்டும் என்பதாம்.

வேறுபட்டு வருதலைத் திருக்கோவையார் 371ஆம் பாட்டு உரையிற் காண்க.

191. வாயி லுசாவே தம்முளு[1] முரிய.

என்-னின் வாயில்கட்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வாயில்களும்[2] உசாவு மிடத்துக் கிழத்தியை விடாது[3] தத்தம்முள் உசாவுதலும்[4] உரித்து.

உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க. (கஙக)

பதிப்பாசிரியர் விளக்கம்

வாயில்கள் உசாவுதல்

பேராசிரியர் ''மேனின்ற அதிகாரத்தால் தலைமகளைச் சுட்டி, ஒருவர் ஒருவர்க் குரைப்பார் போல் வாயில்கள் தம்முட் கூறவும் பெறும்; அவையும் தலைமகள் கேட்பன என்றவாறு. அதற்குச் செய்யுள்:

''தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணாணிக் கரப்பா டும்மே'' (குறுந்.9)

என்பது பாடினி பாணர்க்குரைத்தது.

நூ.பா. வே: 1. 'தம்மு ளுரிய' நச்;வ.உ.சி.பதி.
'தாங்களும்' மர்ரே.
உரை.சு.வே: 2. வாயில்கள். 3. சுட்டாது 4. தம்முள் உசாவுதல்
குறிப்பு: தமிழ்ச்சங்கப் பதிப்பின்படி மேலே பாடந்தரப்பட்டுள்ளது.

'தம்முளும்' என்ற உம்மை எதிர்மறையாகலான் கேட்குநர் அவரெனப் பட்டவாறன்றித் தம்முள் தாம் கேட்டல் சிறு பான்மை எனக்கொள்க" என்பர்.

நச்சினார்க்கினியர் முல்லைப்பாட்டு உரையுள் இப்பாட்டுத் தலைவி ஆற்றியிருந்தவழித் தலைவன் அக் காலத்தே வந்தது கண்டு வாயில்கள் தம்முட் கூறியது. இது "வாயிலுசாவே", "எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்", "புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப" (கற். 37) என்பனவற்றாற் கூறினர் என்பர்.

192. ஞாயிறு திங்க ளறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவு நுதலிய[1] நெறியாற்
சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ்
சொல்லியாங் கமையு மென்மனார் புலவர்.

என்-னின் கழிபடர்ப் பொருண்மைக்கு வருவதோர் மரபு வழு உணர்த்துதல் நுதலிற்று. (மதுரைத் த.ச. பதிப்பு)

இதுவும் கேட்டற் பொருண்மைக்கண் வருவதோர் மரபு வழு அமைத்தலை உணர்த்துதல் நுதலிற்று. (வ.உ.சி. பதிப்பு)

(இ-ள்) ஞாயிறு முதலாக நெஞ்சு ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் அத்தன்மைய பிறவுமாகிய மக்களல்லாத பொருள்கள்[2] தாங்கருதிய நெறியினானே சொல்லுவன போலவும் கேட்குநபோலவும் சொல்லி அமையப் பெறும் என்றவாறு.

ஆங்கு, அசை.

உதாரணம்:-

"பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவேன் வந்தேனென் நெஞ்ச
மழியத் துறந்தானைச் சீறுங்கா லென்னை
ஒழிய விடாதீமோ வென்று" (கலித். 143) எனவும்,

நூ. பா. வே: 1. 'நுவலிய நெறியால்' பேரா; நச்.
'நுவலிய நெறிய' சு.வே.
'நுதலிய பொருளாற்' சு.வே.
உரை.சு.வே: 2. பொருண்மை யெய்திய நெறியினாற்

''மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி'' (குறள். 1118) எனவும்,

''உறுதி தூக்கத் தூங்கிய வறிவே
சிறிதுநனி விரைய லென்னு மாயிடை'' (நற். 284) எனவும்.

இவற்றுள் ஞாயிறும் திங்களும் அறிவும் கூறப்பட்டன.

''நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிதைய வூர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடு மன்னமே
ஈர்ந்தண் டுறையே யிதுதகா தென்னீரே'' (சிலப். கானல்)

இதனுள் கடலும் கானலும் புள்ளும் மரனுங் கூறப்பட்டன[1].

''மாலை நீ,
தையெனக் கோவலர் தனிக்குழ லிசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்'' (கலித். 118)

''வருந்தினை வாழிய நெஞ்சே'' (அகநா. 79)

பிறவும் என்றதனான்,

''மன்றப் பனைமேல் மலைமாந் தளிரேநீ
தொன்றிவ் வுலகத்துக் கேட்டு மறிதியோ
மென்றோள் ஞெகிழ்த்தான் தகையல்லால் யான்காணேன்
நன்றுதீ தென்று பிற'' (கலித். 142)

எனவும் இந்நிகரன கொள்க.

இத்துணையுங் கூறப்பட்டது கேட்போர் இயல்பு. (கக)

பதிப்பாசிரியர் விளக்கம்

நம்பி அகப்பொருளில்,

''நெஞ்சு நாணு நிறைசே ரறிவும்
செஞ்சுடர்ப் பருதியுந் திங்களும் மாலையும்
புள்ளும் மாவும் புணரியங் கானலும்
உள்ளுறுத் தியன்றவு மொழிந்தவை பிறவுந்
தன்சொற் கேட்குந போலவுந் தனக்கவை
யின்சொற் சொல்லுந போலவு மேவல்
செய்குந போலவுந் தேற்றுந போலவும்
மொய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்.'' (223)

என்ற நூற்பா, தலைவி கூற்றுக்கு எய்துவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று என்று காணப்படுகின்றது.

உரை.சு.வே: 1. கூறப்பட்டது

தொல்காப்பியர் பொருளியல் இரண்டாம் நூற்பாவில் சொல்லும் வழு அமைதியில் சொல்லும் பலவற்றிற் சில கூறுபாடு ''நெஞ்சும் நாணும்'' (நம்பி.223) என்னும் நூற்பாக் கருத்தை ஒத்துள்ளது.

(17) களன்

193. ஒருநெறிப் பட்டாங் கோரியன் முடியுங்
கரும நிகழ்ச்சி யிடமென மொழிப[1].

என்-னின் நிறுத்த முறையானே இடம் ஆமாறு உணர்த்து தல் நுதலிற்று.

(இ-ள்) ஒரு வழிப்பட்டு ஓரியல்பாக முடியும் வினை நிகழ்ச்சி இடம் என்று சொல்லுவர் என்றவாறு.

நிகழ்ச்சி, நிகழுந்த விடம்.

(ஒருநெறிப் படுதலாவது அகமாயினும் புறமாயினும் ஒரு பொருண்மேல் வருதல்)

ஒருநெறிப்பட வருதல்[2] ஓரியன் முடிதலாவது, அகத்தின் கண் களவென்றானும் கற்பென்றானும் வரின் அவற்றின் விரி வகை யொன்றானும் பற்றி வருதல்.

புறத்தின்கண் நிரைகோடலானும் மீட்டலானும் மேற்சேற லானும் எயில் வளைத்தலானும் யாதானும் ஓரியல்புபற்றி வருதல்.

கருமம் நிகழ்தலாவது, அப்பொருளைப் பற்றி யாதானுமொரு வினை நிகழும் இடம்.

இன்னும் கருமம் நிகழ்ச்சி என்றதனான் தன்மை, முன்னிலை, படர்க்கை யெனவுங் கொள்ளப்படும்.

சு.வே; 1. மொழியும்
உரை.சு.வே: 2. 'ஒருநெறிப்படவருதல்' வ.உ.சி பதிப்பில் இல்லை.

உதாரணம்:-

''செல்லாமை யுண்டே லெனக் குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை'' (குறள். 1151)

என்றவழிப் பிரிவுப்[1] பொருண்மை நிகழுமிடனாயிற்று.

[2]முன்னின்றானைக் கையற்று நுதலுதலின், முன்னிலை என்னும் இடமாயிற்று.

யாதும்[3] ஓர்பொருள் நிகழ்வுழி, அதற்காகுமிடத்தொடு நிகழ்தல் வேண்டுமென்று இப்பொருண்மை கூறப்பட்டது.

ஒருநெறிப்படாதும் ஓரியன் முடியாதும் வரும் இடம் வழுவாம். அஃதாவது புணர்தல் வேண்டி[4]த் தோழியை இரந்து குறையுறுவான், அவ்விடத்திற்குத் தக்க உரை கூறாது, தன் ஆற்றலும், பிறவும் கூறுதல்.

உதாரணம்:-

மெல்லிய னல்லாருண் மென்மை யதுவிறந்
தொன்னாருட் கற்றுட்கு முட்குடைமை-யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவரு
ணன்மை வரம்பாய் விடல்'' (நாலடி.188)

இதனாலும் அறிக.

அன்றியும்,

''நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலுள்
நீங்கி னதனைப் பிற'' (குறள்.495)

இதுவும் இடனறிதல்.

''உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரால்
எண்ணப் படவேண் டாதார்'' (குறள்.922)

இது தன்மையாரையும் முன்னின்றாரையும் ஒழித்துப் படர்சு

உரை.சு.வே: 1. பிரிபு பொருண்மை நிகழுமிடமாயிற்று
2. முன்னின்றானைக் கூறுதலின்
3. யாதானும் 4. தலைமகளொடு புணர்தல் வேண்டி

கையாரைத்[1] தொழிற்படுத்துதலின் உண்ணற்க என்னும் படர்க் கைச் சொல் படர்க்கைப் பொருளோடு முடிந்தது.

பிறவும் அன்ன. (கசுஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

இடம் என்பது பற்றி

1. இடம் என்பது, அவ்வாறொருவர் கூற, ஒருவர் கேட்ட இடம் என்றறிவது. அவை தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன. அவற்றுள் யான் என்பது தன்மை, நீ என்பது முன் னிலை, அவன் என்பது படர்க்கை. அவற்றுள் இன்னது பற்றி வந்தது என்றறிவது. (இறை. அகப். நூ. 56 உரை)

2. **தொல்காப்பியர்** கரும நிகழ்ச்சி இடம் என்றார்.

நம்பி அகப்பொருளார், "நெறிப்படு கருமம் நிகழ்வுழி யிடனே" (227) நெறிமைப்பட்ட காரிய நிலம் இடம் என்னும் உறுப்பாம். அன்றித் தன்மை முன்னிலை படர்க்கை யெனினும் அமையும்.

நெறிப்பட்ட கருமமாவன களவும் கற்பும் என்பனவாம் என்பர்.

3. "கருமஞ் செய்யிடம் ..... களரியென்பர்" (**திவாகரம்.11**)

4. **பேராசிரியர்** "இடமெனினும் களமெனினும் ஒக்கும். ஒருசெய்யுட் கேட்டால் இஃது இன்ன இடத்து நிகழ்ந்ததென்று அறிதற்கு ஏதுவாகியதோர் உறுப்பினை இடமென்றா னென்பது.

"ஒருநெறிப் படுதல்" என்பது ஒருவழிப் பலவுந் தொகுத்தல். 'ஓரியல்' என்பது அவற்றுக்கெல்லாம் இலக்கணம் ஒன்றாதல்.

அஃதாவது காட்சியும், ஐயமும், துணிதலும், புணர்ச்சியும், நயப்பும், பிரிவச்சமும், வன்புறையுமென்றின்னோ ரன்ன வெல் லாம் ஒருநெறிப்பட்டு இயற்கைப் புணர்ச்சி என்னும் ஓரிலக் கணத்தான் முடியு மென்பது.

உரை.சு.வே: 1. தன்மை யானையு முன்னின்றானையு மொழித்துப் படர்க்கை யானை.

'கரும நிகழ்ச்சி' என்பது காமப்புணர்ச்சி என்னும் செயப் படு பொருணிகழ்ச்சி. அஃது இடமெனப்பட்டது. இது வினை செய்யிடம். நிலமாயின் முன்னர்த் திணையெனப்பட்டன. காலம் முன்னர்ச் சொல்லும்" என்பர்.

5. **பேராசிரியர்** மேற்கண்டவாறு கூறினாலும் செய்யுளியல் முதல் நூற்பாவுரையில் "களன் என்பது முல்லை குறிஞ்சி முதலாயினவும் இரவுக்குறி பகற்குறி முதலாயினவும் உணரச் செய்தல். தன்மை, முன்னிலை, படர்க்கையுமாம்" என்பர்.

6. **நச்சினார்க்கினியர்** "பலவும் ஒருவழித் தொக்கவற்றுக் கெல்லாம் ஓரிலக்கணத்தான் முடியும் கரும நிகழ்ச்சியை இட மென்று கூறுப" என்று உரைகூறுவர். அவர் களனென்றது இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப்பாடும் முதலியன உணரச் செய்தலை என்பர். (தொல்.செய். நூ. 1 உரை)

7. **இலக்கண விளக்க நூலாசிரியர்** இத்தொல்காப்பிய நூற் பாவைத் தம் நூலுள்(574) எடுத்து அமைத்துக் கொள்கின்றார். அவர் இயற்கைப் புணர்ச்சி வன்புறை முதலிய கிளவித் தொகை களே இடம் என்பர்.

8. **வீரசோழிய உரையாசிரியர்** இடத்தைச் சுட்டு என்றும், இடன் என்றும் இரண்டாகப்பிரித்துக் கொண்டு, "இனிச் சுட்டு என்பது இப்பாட்டுத் தன்மையைச் சுட்டிற்று என்றறிவது.

இடனாவது அகவிடனும் புறவிடனுமென இரண்டுவகைப் படும். அகவிடனாவது மனையும் வளாகமும் பற்றிவருவது. புறவிடனாவது மலையும் பழனமும் சோலையும் கடலும் நெறி யும் ஆறும் பற்றி வருவது" என்பர்.

(18) காலவகை

194. இறப்பே நிகழ்வே யெதிர தென்னுங்
திறத்தியன் மருங்கிற் றெரிந்தன ருணரப்[1]
பொருணிகழ் வுரைப்பது கால மாகும்.

என்-னின் நிறுத்த முறையானே காலம் ஆமாறு உணர்த்து தல் நுதலிற்று.

நூ.பா.வே: 1. 'ருள்ளப்' பேரா.

"இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலமெனக் கூறுபட்டிய லும்பக்கத்தினை ஆராய்ந்து நோக்குமாறு பொருள் நிகழ்ச்சியைக் கூறுமது காலம் என்றவாறு.

உதாரணம்:

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே". (யா.வி.கழ.பக்.130,275)

இஃது இறந்தகாலத்தின்கண் புணர்ச்சியுண்மை தோன்ற வந்தது. இனி,

"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த,
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கே ழூர" (நற்.10)

என்ற வழி, நிகழ்கால[1] இளமைப் பருவந் தோன்ற வந்தது. இதனுள் 'நீத்தலோம்புமதி' என்பது எதிர்காலங் குறித்து நின்றது.

இவ்வகையினாற் காலமும் இடமும் எல்லாச் செய்யுளின் கண்ணும் வருமென்று கொள்க. (ககூசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

காலம் என்பது

1. காலம் என்பது இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என மூன்று வகைப்படும். அவற்றுள் உண்டான் என்பது இறந்தகாலம்; உண்ணாநின்றான் என்பது நிகழ்காலம்; உண் பான் என்பது எதிர்காலம். இவற்றுள் இன்னது பற்றிவந்தது என்றறிவது என்பர். (இறை.கள.நூற். 56)

2. **நச்சினார்க்கினியர்** "காலவகை யென்றது முக்காலத்தும் திணை நிகழ்ச்சிக் கண்ணே பொருணிகழ்ச்சியுணரக் கூறுதல் என்பர்" (செய்.1. உரை.)

உரை.சு.வே: 1. நிகழ்காலம் இளமைப் பருவமென்பது தோன்றவந்தது (வ.உ.சி)

3. **பேராசிரியரும்** மேற்கூறியவாறே இறப்பு முதலான முக்காலங்களையே கூறி, காலம் புறத்திற்கும் இவ்வாறே இன்றியமையாததென்பது. பெரும்பொழுது சிறுபொழுது என் பனவாகிய காலம் ஈண்டுத் திணையெனப்பட்டு அடங்கின. என்னை? முதலும் கருவும் உரிப்பொருளுங் கூட்டித் திணையா கலின் என்பர் . ஆனால், செய்யுளியல் முதல் நூற்பா உரையில் 'காலவகை என்பது சிறுபொழுது பெரும் பொழுது என்னும் காலப்பகுதி முதலாயின' என்பர். ஆனால் வீரசோழிய உரை யாசிரியர் அகப்பொருள் பாட்டிற்கு உரைநடாத்தும் இருபத் தேழு உறுப்பில் காலம் என்றொரு உறுப்பினைக் கூறிக் கால மாவது,

''யாண்டே அயனம் இருதுத் திங்கள்
பக்கம் நாளே கிழமை நாழிகை
அஞ்சங் கலையே காட்டம் முதலா
ஈண்டிதற் கேற்ப திதுவெனக்
கிளவியொடு கெழூஉம் விளைவின் கண்ணே'' என்பர்

(வீரசோ. 92-93 உரை.)

4. **நம்பி அகப்பொருள் நூலார்**

''சென்றதும் நிகழ்வதும் எதிர்வது மெனமுறை
நின்று பொருளுணர நிகழ்வது காலம்'' (228)

என்று கூறுகிறார். இலக்கண விளக்கமுடையார் கருத்தும் இதுவே.

(19) பயன்

195. இதுஈனி பயக்குமிதன்மா[1] றென்னுந்
தொகுநிலைக்[2] கிளவி பயனெனப் படுமே.

என்-னின் நிறுத்த முறையானே பயனாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) யாதானும் ஒருபொருளைக் கூறியவழி இதன்பின்பும் இதனைப் பயக்குமென விரித்துக் கூறாது முற்கூறிய சொல்லி னானே தொகுத்துக் கூறுதல் பயனெனப்படும் என்றவாறு.

நூ.பா.வே; 1. 'இதனா னென்னும்' பேரா.
2. 'தொகைநிலைக்' பேரா; நச்.

உதாரணம்:—

''சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூர மகளி ராரணங் கினரே
வாரல் வரினே[1] யானஞ் சுவலே
சார னாட நீவர லாநே'' (யா.வி.கழ.பக்.274,389)

இதனாற் பயன் வரைந்து கோடல் வேண்டுமென்பது.

''ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று'' (குறள்.323)

இதனாற் பயன்[2] நன்மை வேண்டுவார் இவ்வாறு செய்தல் வேண்டுமென்றல்.

இவ்வகையினால் யாதானுமொரு செய்யுளாயினும் பயன் படக்கூறல் வேண்டு[3]மென்பது கருதிப் பயனென ஒருபொருள் கூறினார். (ககூடு)

பதிப்பாசிரியர் விளக்கம்

பயன்

1. **இறையனார் களவியல் உரையாசிரியர்**

''பயன் என்பது இது சொல்ல இன்னது பயக்கும் என்றறிவது'' என்பர்.

2. **நம்பி அகப்பொருளார்** ''இப்பொருள் பயக்குமிஃதென்பது பயனே'' (229) என்பர்.

3. **இலக்கண விளக்கமுடையார்** இத்தொல்காப்பிய நூற் பாவினைப் பேராசிரியர் பாடப்படி எடுத்து அமைத்துக் கொள்ளுகிறார். (576.இல. விள)

4. **வீரசோழிய உரையாசிரியர்**

இனிப் பயனாவது,

உரை.சு.வே: 1. வார லெனினே
2. பயன் வேண்டுவார்
3. வேண்டு மென்பது பயனென

''பயனெனப் படுவது நயனுறக் கிளப்பின்
வழிபா டன்பே வாய்மை வரைவே
பிழையா நிலைமை பெருமை தலைமை
பொறையே போக்கே புணர்வே முயக்கே
நிறையே யச்ச நேச நீர்மை
ஐய மகற லார்வங் குணமே
பையப் பகர்தல் பண்பே சீற்றம்
காப்பே வெறியே கட்டு நேர்தல்
பூப்பே புலப்பே புறையே புறைவியெனப்
பாற்பட இன்னவை பயத்த லாகும்'' என்பர்.

5. பேராசிரியர் இந்நூற்பாவிற்கு 'இதனா னென்னும்' பாடமோதி 'இது மிகவும் பயக்கும் இதனானெனத் தொகுத்துச் சொல்லப்படும் பொருள் பயன் என்னும் உறுப்பாம்' என்று பொருள்கூறி, 'மாறாக் காதலர்' என்னும் பாட்டு, தோழியைத் தூது விடுவாளாதற் பயன்பட வந்தது. இவ்வாறு எல்லாப் பாட்டும் பயனுறுப்பாகவன்றி வாராவென்க. இவை புறத்திற்கும் ஒக்கும் என்பர். **''பயன் என்பது சொல்லிய பொருளாற் பிறி தொன்று பயப்பச் செய்தல்''** என்பர் (தொல்.செய்.நூ.1.பேரா)

(20) மெய்ப்பாடு

196. உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்[1] மெய்ப்பட முடிப்பது[2] மெய்ப்பா டாகும்.

என்-னின் நிறுத்த முறையானே மெய்ப்பாடு வருமாறு[3] உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) யாதானும் ஒன்றைக் கூறியவழி அதன்[4] அகப் பொருண்மையை விசாரித்துக் கூறுதலின்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே[5] மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பா டென்னும் உறுப்பாம் என்றவாறு.

நூ.பா.வே: 1. 'பொருளான்' பேரா; நச்.
'பொருளின்' சு.வே.
2. முடிவது
உரை.சு.வே: 3. ஆமாறு 4. அதன்கட் பொருண்மையை விசாரித்துணர்தலின்றி விசாரித்துக் கூறுதலின்றி
5. பொருண்மையின்

உதாரணம்:—

''ஐயோ வெனின்யான் புலியஞ் சுவலே
அணைத்தனன் கொளினே யகன்மார்பெடுக்க வல்லேன்
என்போற் பெருவிதுப் புறுக நின்னை
இன்னா துற்ற வறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர நடத்திசிற் சிறிதே'' (புறநா.255)

இதனுள் அழுகையாகிய மெய்ப்பாடு புலப்பட வந்தவாறு கண்டு கொள்க.

செய்யுட் செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டும் என்பது கருத்து. (ககக)

197. எண்வகை யியனெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவின ததுவே.

என்-னின் மெய்ப்பாடாவது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அது நகை முதலாகிய எட்டு[1] மெய்ப்பாட்டு நெறியையும் பிழையாதாகி, மேற் சொல்லப்பட்ட இலக்கணத்தை உடைத்து.

அஃதாமாறு மெய்ப்பாட்டியலிற் காண்க[2]. (ககஎ)

பதிப்பாசிரியர் விளக்கம்

மெய்ப்பாடு

1. இறையனார் களவியல் உரையாசிரியர்

'மெய்ப்பாடு என்பது எட்டுவகைப்படும். அவை நகை, அழுகை' இளிவரல், மருட்கை, உவகை, அச்சம், பெருமிதம், வெகுளி என இவை. அவற்றுள் இன்னதோர் மெய்ப்பாடு வந்தது என்று அறிவது. (இறை.கள.நூ. 56 உரை)

உரை.சு.வே: 1. முதலாக எட்டுக் குறியையும்
2. காட்டுதும்

குறிப்பு: மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பில் ''அஃதாமாறு மெய்ப்பாட்டியல் காட்டுதும்'' என்ற பாடம் உள்ளது. இது உண்மையானால், இளம்பூரணர் செய்யுளியலுக்கு உரை முன்னரே எழுதிவிட்டார் போலும்.

2. நம்பி அகப்பொருள்

''நகைமுத லாமிரு நான்குமெய்ப் பாடும்
நிகழ்பொருள் மெய்ப்பட நிற்பமெய்ப் பாடே''

என்று கூறும். (நம்பி.அக.231)

3. இலக்கண விளக்க முடையார் செய்யுளியலில் வரும் ''உய்த்துணர் வின்றி'' என்ற நூற்பாவை மெய்ப்பாட்டிற்கு விளக்கங்கூறும் முதற் கூறாக வைத்துக்கொண்டு, இதன்பின் 'நகையே யழுகை' என்னும் மெய்ப்பாட்டியல் நூற்பாவை இரண்டாங் கூறாகவும், அதன்பின் 'எள்ளல் இளமை' எனவரும் எட்டு நூற்பாவின் பொருளை மூன்றாங் கூறாகவும் அமைத்துக் கொண்டு, ஒரு நூற்பா செய்து மெய்ப்பாடு முப்பத்திரண்டாம் என்பர்.

4. வீரசோழிய உரையாசிரியர்

''மெய்ப்பாட் டியல்வகை மேதக விரிப்பின்
மெய்க்கட் பட்டு விளங்கிய தோற்றம்
செவ்விதில் தெரிந்து செப்பல்மற் றதுவே''

என்று மெய்ப்பாட்டிற்குப் பொதுவிலக்கணம் கூறுவர்.

''அகமெய்ப் பாடே புறமெய்ப் பாடெனத்
தகநனி உணர்ந்தோர் தந்துரைத் தனரே''

என்று அம்மெய்ப்பாட்டை அகம் புறம் என்று இரண்டாகப் பிரித்தமைத்துக் கொள்வர்.

அவற்றுள் அகமெய்ப்பாட்டினை,

''அகமெய்ப் பாடே அறியுங் காலை
விளர்ப்பே பசப்பே மெலிவே விதிர்ப்பே
துளக்கம் துயர்தல் தும்மல் சோர்தல்
வேர்த்தல் வெருவுதல் விம்முதல் விரும்புதல்
ஒப்பி லாமை உருகுதல் மயங்குதல்
மூரி உயிர்ப்பே மூர்ச்சனை முறுவல்
காரிகை கடத்தல் கழிகண் ணோட்டம்
இருந்துழி யிராமை இராகம் இகழ்தல்
வருந்திக் காட்டுதல் வாய்நனி யுறுதல்
சிந்தனை கூர்தல் சேர்துயி லின்மை

கண்டது மறுத்தல் காட்சி விரும்பல்
உண்டி விரும்பாமை உரைத்தது மறுத்தல்
கண்ணீர் வழிதல் கனவுநனி காண்டலென
எண்ணாற் றுறையும் என்மனார் புலவர்''

என்று கூறிப் புறமெய்ப்பாட்டினை,

''புறமெய்ப் பாடே திறனுளிப் புகலில்
ஆரணங் காயவக் காமந் தானே
காரணம் பற்றிக் கருத்துவேறு பட்டு
மற்றுமோ ரேழாய் மெய்க்கண் டதனொடும்
எட்டா மென்ப ரியல்புணர்ந் தோரே
அவைதாம்
நற்சிருங் காரம் நகையே வியப்பே
அச்சம் வீரம் உட்கோ ளிரக்கம்
இழிப்பெனத் தோன்றின யிவைஅவை தாமே
விழுத்தக வொன்றிற் கொரோநான் காக
முப்பத் திரண்டென மொழிந்தனர் கண்டே''

என்பர்.

5. முன், மெய்ப்பாட்டியலில் மெய்ப்பாட்டின் பொது இலக்கணம் கூறும் நூற்பா இல்லை. செய்யுளியலில் வந்துள்ள 'உய்த்துணர்வின்றி' (196) என்ற நூற்பாவே அதனை உணர்த்தும் நூற்பாவாக உள்ளது.

6. இளம்பூரணர் மெய்ப்பாட்டியலில் 'நகையே அழுகை' (3) என்ற நூற்பாவுரையில்,

''மெய்ப்பாடென்பது யாதோ வெனின்?

''உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்
மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே''

எனச் செயிற்றியனார் ஓதுதலின், அச்சமுற்றான் மாட்டு நிகழும் அச்சம் அவன் மாட்டுச் சத்துவத்தினாற் புலப்பட்டுக் காண் போர்க்கும் புலனாகும் தன்மை மெய்ப்பாடெனக் கொள்ளப் படும். மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று.

அஃதேல் இவ்விலக்கணம் கூத்தினும் பயன்படல் உண்டா தலின் ஈண்டு வேண்டா வெனின், ஈண்டுஞ் செய்யுட் செய்யுங்

கால் சுவை படச் செய்யவேண்டுதலின் ஈண்டுங் கூறவேண்டு மென்க. ''உய்த்துணர்வின்றி'' என இவ்வாசிரியர் மெய்ப்பாடும் செய்யுளுறுப்பென ஓதினமை உணர்க.'' என்பர்.

7. பேராசிரியர் ''மெய்ப்பாடென்பது பொருட்பாடு; அஃ தாவது, உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்'' என்பர். (மெய்ப்.17) ''மெய்ப்பாடென்பது சொற்கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்'' என்பர். (தொல். செய். 1 நூ)

8. தண்டியாசிரியர் மெய்ப்பாட்டிற்குச் சுவையென்று பெயர்தந்து ''உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற எண்வகை மெய்ப்பாட்டி னியல்வது சுவையே'' (69) என்பர்.

9. திரு. சோமசுந்தரபாரதியார் • தாம் எழுதியுள்ள மெய்ப் பாட்டியல் உரை முன்னுரையில் ''மெய்ப்பாடென்பது அக வுணர்வுகளை ஆராயாமலே யாரும் இனிதறியப் புலப்படுத்தும் புறவுடல் இயற்குறியாம். மெய்ப்படத் தோன்றும் உள்ளுணர்வை மெய்ப்பாடென்றது ஆகுபெயர்'' என்பர்.

(21) எச்சவகை

198. சொல்லொடுங் குறிப்பொடும் முடிவுகொ[1] ளியற்கை புல்லிய[2] கிளவி யெச்ச மாகும்.

என்-னின் நிறுத்த முறையானே எச்சவகை ஆமாறு உணர்த் துதல் நுதலிற்று.

(இ-ள்) பிறிதோர் சொல்லொடும், பிறிதோர் குறிப்பொடும் முடிவு கொள்ளும் இயற்கையைப் பொருந்திய செய்யுள் எச்சம் ஆகும் என்றவாறு (எச்சம் என்னும் உறுப்புடைய செய்யுள் ஆகும்).

எனவே சொல்லெச்சம் குறிப்பெச்சமென இருவகையாயின.

அது, **எச்சவியலுள், 'பிரிநிலை வினையே'** (நூ.36) என்னுஞ் சூத்திரத்துள் பிரிநிலை[3] என்பது முதலாகச் சொல்லப்பட்ட

நூ.சு.வே: 1. 'முடிவு கொள்ளியல்'
2. 'புல்கிய'
உரை.சு.வே: 3. 'பிரிநிலை வினை'

எண் வகையானும் (ஒன்பது வகையானும்) வருவன சொல்லெச்சமாம். குறிப்பென்றோதப்பட்டது குறிப்பெச்சமாம். (தகூஅ)

பதிப்பாசிரியர் விளக்கம்

சொல்லெச்சம் குறிப்பெச்சம்

1. தொல். சொல். எச்சவியலில், தொல்காப்பியர்,

''பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி'' (34)

என்னும் நூற்பாவால் எச்சங்களைப் பத்து என்று தொகுத்துக் கூறியுள்ளார். அப்பத்துள் ஒன்பதைச் சொல்லெச்சமென்றும், குறிப்பு என்ற ஒன்றினைக் குறிப்பெச்சமென்றும் இளம்பூரணர் கூறுகின்றார்.

2. **வீரசோழிய உரையாசிரியர்**

''எச்சமாவது ஒழிந்தது. அது வினையெச்சம், பெயரெச்சம் என்று இருவகைப்படும்'' என்பர். (காரிகை. 90)

3. **இறையனார் களவியல்**

''சொல்லே குறிப்பே ஆயிரண் டெச்சம்'' (58)

என்று கூறும்.

4. **நம்பி அகப்பொருள்**

''சொல்லே யாயினும் குறிப்பே யாயினும்
சொல்லி முடித்தல் வேண்டுவ தெச்சம்'' (232)

என்று கூறும்.

5. **பேராசிரியர்** ''கூற்றினானும் குறிப்பினானும் முடிக்கப்படும் இலக்கணத்தொடு பொருந்திய கிளவி எச்சம் என்னும் செய்யுள் உறுப்பாம்'' என்று மேல் நூற்பாவிற்குப் பொருள் எழுதிவிட்டு ''செங்களம்படக் கொன்று'' என்ற குறுந்தொகைப் பாட்டினை எடுத்துக்காட்டி, ''நீ தரும் பூக்களால் யாம் குறை

யுடையோம் அல்லேம் என்று தோழி தலைவற்குச் சொன்னாளேல் கூற்று எச்சமாம். என்னை? அக்கூற்று எஞ்சியிருத்தலின் என்க. அவ்வாறின்றித் தலைமகட்குச் சொன்னாளேல் குறிப்பெச்சமாம் என்னை? குலைக்காந்தளைக் காண்பாயாகில் நீ சென்று காணெனத் தலைமகளைத் தலைவனிருக்கும் இடத்துய்த்து நீக்கிய குறிப்பினளாதலின் என்க'' என்பர்.

6. இளம்பூரணர் கூறும் சொல்லெச்சமும் குறிப்பெச்சமும் சொல்லதிகாரத்திற்கே உரியன. பேராசிரியர் கூறும் சொல்லெச்சமும் குறிப்பெச்சமும் பொருளதிகாரத்திற்கே உரியன என்க.

7. 'எச்சவகை' என்பது சொல்லப்படாத, மொழிவகைகள் குறித்துக்கொள்ளச் செய்தல்; அது கூற்றினும் குறிப்பினும் வருதலின் 'வகை' என்றான். (தொல். செய். 1 பேரா.)

8. 'எச்சவகை' என்றது சொல்லப்படாத ஒழிபும் தழீஇக் கொள்ளச் செய்தலை; அது கூற்றும் குறிப்பும் என வருதலின் 'வகை' என்றார். (தொல். செய். 1 நூ. நச்.)

9. சேனாவரையர் கருத்து: சொல் குறிப்பு இசை மூன்றும் மேல் வந்து முடிக்கும் எஞ்சு பொருட் கிளவி பெறா.

(22) முன்னம்

199. இவ்விடத் திம்மொழி யிவரிவர்க் குரியவென்[1]
றவ்விடத் தவரவர்க் குரைப்பது[2] முன்னம்.

என்-னின் நிறுத்த முறையானே முன்னம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இவ்விடத்து இம்மொழியை இவர்க்குச் சொல்லத் தகுமெனக் குறித்து, அவ்விடத்து அவரவர் தம்மொழியை[3] உரைப்பது முன்னமாம் என்றவாறு.

நூ.பா.வே: 1. 'குரிய ரென்' (மாறனலங்கார உரை)
2. 'உரைப்பதை' சு.வே.
உரை.சு.வே: 3. அவர்க்கு அம்மொழியை

எனவே, இடமுங் காலமும் உணர்ந்து, கேட்போர்க்குத் தக்கவாறு மொழிதலும் செய்யுள் உறுப்பாம் என்றவாறு.

(நூற்பாவில் இடம் என்றாலும்) வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனாற் காலமுங் கொள்க. (ககூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

முன்னம்

1. ''இன்னார்க் கின்னுழி யின்னது பயக்குமென
முன்னந் தருவது முன்ன மாகும்'' (நம்பி.அக.250)

2. வீரசோழிய உரையாசிரியர், முன்னத்தை இயல்புரை என்பர். (காரிகை.90)

''இயல்பெனப் படுவ தியல்புழி யெண்ணில்
இன்னுழியா யின்ன தியன்ற திதுவென
முன்ன முரைப்ப தென்மனார் புலவர்''

3. சொற்கள் குறிப்பால் பொருள் உணர்த்துதலை,

''முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே
இன்ன என்னுஞ் சொன்முறை யான''

(தொல். எச்.72) என்பர்.

4. **பேராசிரியர்** 'யாதோரிடத்தானும், யாதானுமொரு மொழி தோன்றியக்கால் இம்மொழிசொல்லுதற்குரியாரும் கேட்டற்குரியாரும் இன்னாரென்று அறியுமாற்றான், அங்ஙனம் அறிதற்கு ஓரிடம் நாட்டி அவ்விடத்துக் கூறுவார்க்கும் கேட்பார்க்கும் ஏற்றவுரை செய்யுளிடத்தே சொல்லுவது முன்னம்'' என்பர்.

முன்னமென்பது உயர்ந்தோரும் இழிந்தோரும் ஒத்தோரும் தத்தம் வகையான் ஒப்பச் சொல்லுதற்குக் கருத்துப்படச் செய்தல். (தொல். செய். நூ. 1. பேரா.) முன்னம் என்றது கூறுவாரையும் கூறக்கேட்டாரையும் எல்லோரும் கருதும்படி செய்தல். (தொல். செய். நச்)

5. **இலக்கணக் கொத்தாசிரியர்** சொற்களுக்குப் பொருள் கூறுங்கால் பொருள் முதலான பதினைந்துங் காரணமாக உரை கூறுவர் என்று கூறி, அவற்றுள் முன்னங்காரணமாகச் சொற் பொருள் உரைத்தலை நன்னூலார் 'முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" எனத் தொகுத்தார். தொல்காப்பியனார் "இவ்விடத்திம்மொழி என்னும் சூத்திரத்தால் விரித்தனர்" என்பர்.

6. உவமை முன்னமரபினாற் கூறப்படுதலை, உவமவியல் 23ஆம் நூற்பாவால் உணர்க.

(23) பொருள் வகை

200. இன்பமு மிடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமு மென்றிவை யிழுக்குநெறி யின்றி
இதுவா கித்திணைக் [1]குரிப்பொரு ளென்னாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை யென்க.

என்-னின் நிறுத்த முறையானே பொருண்வகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இன்பமும் துன்பமும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமு மென்று சொல்லப்பட்டவை வழுவு நெறி யின்றி இத்திணைக்[2] குரிப்பொருள் இப்பொருள் என்னாது எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும் பொருள் பொருள்[3] வகையாம் என்றவாறு.

(உ00)

பதிப்பாசிரியர் விளக்கம்

பொருள்வகை

1. **தொல்காப்பியர்** 'பொருள்' என்றும் (செய்.1) 'பொருள் வகை' என்றும் கூறியுள்ளதை, இறையனார் களவியல் உரை

சு. வே: 1. குரிய பொருள்
உரை.சு.வே: 2. அத்திணைக் குரிப்பொருளென்னாது
உரிய பொருளென்னாது
3. பொருளே

யாசிரியர் 'கோள்' என்று கூறுவர். கோள் என்பது ஒரு பாட்டினகத்துப் பொருள் கொண்டு நிற்கும் நிலை. அஃது ஐந்து வகைப்படும். அவை விற்பூட்டு, விதலை யாப்பு, பாசி நீக்கு, கொண்டு கூட்டு, ஒருசிறைநிலை என்பனவாம். அவற்றுள் இன்னதோர் பொருள் கொண்டு நின்றது இப்பாட்டு என்று அறிவது.

அவற்றுள் விற்பூட்டு என்பது முதலும் கடையும் பொருள் கொண்டு நிற்பது. விதலை யாப்பு என்பது தலையும் நடுவும் கடையும் பொருள் கொண்டு நிற்பது. பாசிநீக்கு என்பது சொற்றோறும் அடிதோறும் பொருள் அற்று நிற்பது. கொண்டு கூட்டு என்பது சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள்கொள்ளுமாறு அறிந்து பொருள் கொள்ள நிற்பது. ஒருசிறைநிலை என்பது ஒருபாட்டினகத்துச் சொல்லப்பட்ட பொருள் ஒருவழிநிற்பது என்பர். (இறை. அக. 56)

2. வீரசோழிய உரையாசிரியர் பொருள்கோளும் பொருள் நடையுமென இரண்டு கூறிக் காரிகையுள் (90) 'கோள்' என்று கூறியதற்குப் பொருள்கோள் என்று பொருள் எழுதிப் பொருள் கோளாவது,

> ''கொழுங்கொடி, வள்ளி செழுங்குலை வாழை
> தீங்கரும் பேமலர் திகழ்வில் பலவே
> தேங்கம ழசோகு செருவிற் பூட்டே
> பூம்புன லாறெனப் பொருள்கோள் ஏழே''

அவற்றுள்,

> ''கொழுங்கொடி வள்ளி கூறுமுற் பொருளே
> செழுங்குலை வாழையின் சொற்பொரு வீறே
> இன்தீங் கரும்பி லிடையது பொருளே
> வன்றாட் பலவுக்கு முதலிடை பொருளே
> நற்பூ வசோகுக்கு நடுவது பொருளே
> விற்பூட்டு மேலுங் கீழும் பொருளே
> இரும்புன லாற்றினுக் கெங்கும் பொருளே''

என்றபடி இன்ன பொருள் என்றறிவது என்பர்.

காரிகையில் (91) 'பொருணடை' என்று கூறப்பட்டிருத்த லுக்கு இனிப் பொருணடையாவது,

''அளைமறி கோடலும் மொழிமாற்றுக் கோடலும்
கொண்டு கூட்டும் இருநிர னிறையும்
சுண்ணங் கோடலும் முதலாயி னவே
அவைதாம்
தலைமையு மின்மையுங் கூட்டிப்
பின்னருங் காரணம் பற்றிய
பொருட்டாத் தோன்றும் பொருள்வகை யுடைத்தே''

என்பர்.

3. நம்பி அகப்பொருள்

''ஒருதிணைக் குரிமை பூணா நிலைமை
பொருள்வகை யென்மனார் புலமை யோரே''

(233) என்று கூறும்.

அதன் உரை: அவையாவன நிரனிறை, மொழிமாற்று, சுண்ண மொழிமாற்று, அடிமறி மொழிமாற்று, பூட்டுவிற் பொருள்கோள், புனல்யாற்றுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள் கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டு கூட்டுப் பொருள் கோள் என ஒன்பதாம் என்று கூறும்.

4. இலக்கணக் கொத்துரையாசிரியர் ஆற்றொழுக்கும், அடி மறிமாற்றும், பொருத்தப் புணர்ச்சியுளடங்கும். ஏனையவை பொருத்தமில் புணர்ச்சியாம் என்பர்.

5. பேராசிரியர் 'பொருள்வகை' என்பதற்கு மேற்குறிப்பிட் டவாறு பொருள் கொள்ளாமல் 'இன்பமும் துன்பமும் புணர் தலும் பிரிதலும் ஒழுக்கமும் எனப்பட்ட இவை இழுக்காதவாற் றான் இத்திணைக்கு இது பொருளென்று ஆசிரியன் ஓதிய உரிப்பொருளன்றி, அவற்றுக்கெல்லாம் பொதுவாகப் புலவனாற் செய்யப்படுவது பொருட் கூறெனப்படும்'' என்று நூற்பாவிற்குப் பொருள் கூறிவிட்டு 'வகை' என்றதனாற் புலவன்றான் வகைந் ததே பொருள் என்று கொள்க. அவ்வாறு வகைந்து கொள்ளும் பொருள் இன்றிச் செய்யுள் செய்தலாகாதென்பது நூற்பாக் கருத்து என்று சிறப்புரை கூறி,

''கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்

தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த சுற்பின் வாணுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறனசைஇச் சென்றவென் னெஞ்சே'' (அகநா.9)

என்ற பாட்டை எடுத்துக்காட்டி, ''என்றாற் போலச் செய்யுள் செய்தவன் தானே வகுப்பனவெல்லாங் கோடல். இது பாலைப் பாட்டினுள் வந்ததாயினும், முல்லை முதலாயவற்றுக்கும் பொதுவா மென்பது. பொதுமை என்பது எல்லா உரிப் பொருட்கும் ஏற்கப் பல்வேறு வகையாற் செய்தல்'' என்பர். இவரைப் பின்பற்றி **நச்சினார்க்கினியரும்** இவ்வாறே கூறுவர்.

6. இவ்விருவரும் கூறுவது **வீரசோழியஉரையாசிரியர்** கூறும் உட்பெறு பொருள்போலும்.

''உட்பெறு பொருளைச் செப்புங் காலை
பெற்றசொற் பொருளைச் செப்புதன் வழியே'
மற்றொரு சொற்பொருள் வந்துநிற் பதுவே''

என்பர். (வீரசோ.கா. 90-96 உரை)

7. ''பொருளென்பது புலவன் தான் தோற்றிக் கொண்டு செய்யப்படுவதோர் பொருண்மை'' (தொல்.செய். 1) என்பர் பேராசிரியர்.

(24) துறை

201. அவ்வவ[1] மாக்களும் விலங்கு மன்றிப்
பிறவவண் வரினுந் திறவதி னாடித்
தத்த மியலான்[2] மரபொடு முடியின்
அத்திறந் தானே துறையெனப் படுமே.

என்-னின் நிறுத்த முறையானே துறை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நூ.பா.வே: 1. 'அவ்வம் மக்களும்' பேரா.
'அவ்வ மாக்களும்' நச்.
2. 'இயலின்' பேரா.

(இ-ள்) அகப்பொரு ளாகிய ஏழு பெருந்திணைக்கும் புறப் பொரு ளாகிய ஏழு பெருந்திணைக்கும் உரிய மாந்தரும், பரந்து பட்ட[1] மாவும் புள்ளும், உம்மையால் மரம் முதலாயினவும், 'பிற அவண் வரினும்' என்றதனால் நிலம் நீர் தீ வளி முதலாயினவும் செய்யுட்கண் வருமிடத்துத் திறப்பாடுடைத்தாக ஆராய்ந்து தத்தமக் கேற்ற[2] பண்போடும் பொருந்திய மரபோடும் முடியின் அவ்வாறு[3] திறப்பாடுடைத்தாய் வருவது[4] துறை யென்று கூறப்படும் என்றவாறு. (உ0க)

பதிப்பாசிரியர் விளக்கம்

துறை

1. **களவியலாசிரியர்** துறை என்பதைச் செய்யுள் உறுப்பாகக் கூறவில்லை. (நூற்பா. 56)

2. **வீரசோழிய நூலார்** உரைவகையுள் துறை என்ற ஒன்றைக் கூறவில்லை. 'நடை' என்பதைக் கூறுகிறார். ஆனால், திணையின் உட்பிரிவைத் திறம் என்றும் கூறுகிறார். (காரிகை.99)

3. **பேராசிரியர்** "ஐவகை நிலத்திற்கும் உரியவெனப்படும் பல்வேறு வகைப்பட்ட மக்களும் மாவும் புள்ளும் ஓதி வந்தவா றன்றிப் படைத்துச் செய்யினும் அவ்வத்திணைக் கேற்ற இலக் கணமும் வரலாற்று முறைமையும் பிறழாமைச் செய்யின் இது மார்க்கம் (துறை) எனப்படும்.

"ஊர்க்கா னிவந்த பொதும்பரு ணீர்க்கால்" (56) என்னும் கலியினுள் "கொழுநிழன் ஞாழன் முதிரிணர் கொண்டு, கழும முடித்துக் கண்கூடு கூழை" என நெய்தற் றலைமகள் போலக் கூறி, அவளை மருதநிலத்துக் கண்டான் போலக் கூறி "ஊர்க்கா னிவந்த பொதும்பருள்" எனவும் சொல்லிப் பின் குறிஞ்சிப் பொருளாகிய புணர்த லுரிப்பொருளான் முடித்தான்.

இவ்வாறு மயங்கச் செய்யினும் குறிஞ்சித்துறைப்பாற்படச் செய்தமையின் அத்துறையுறுப்பான் வந்ததென்பது.

உரை.சு.வே: 1. உயர்ந்து பட்ட
2. தத்தமக் கேற்றிய
3. இவ்வாறு 4. வரும்.

இதுவும் மேலைப் பொருள்வகை போலப் புலவராற் செய்து கொள்ளப்படுவதாகலான், அதற்குப் பின் வைத்தான் என்பது'' என்பர்.

அவர் ''துறைவகை யென்பது முதலும் கருவும் முறை பிறழ வந்தாலும், இஃது இதன்பாற் படுமென்று ஒருதுறைப் படுத்தற்கு ஏதுவாகியதோர் கருவி அச்செய்யுட்குளதாகச் செய்தல். அவையும் பலவாதலின் வகை என்றானென்பது'' என்பர். (தொல். செய். 1 உரை)

4. **இத்தொல்காப்பிய நூற்பாவை இலக்கண விளக்க நூலா சிரியர் தம் நூலுள் (583) எடுத்து அமைத்துக் கொள்ளுகின்றார்.** அதன் உரையுள் ''இதுவும் மேலைப் பொருள்வகை போலப் புலவரால் செய்து கொள்ளப்படுவதாகலின், அதற்குப் பின் வைக்கப்பட்டது. இங்ஙனம் கூறியவ்ாற்றான்,

> ''உரைப்போர் கேட்போ ருண்மை யின்றி,
> உரைக்குங் கவியே உரைப்பது துறையே'' (நம்பி. அகத். 234)

என்னும் உறுப்பாதல் பெற்றாம்'' என்பர்.

5. ''சொல்லிய வல்ல வொன்றினு மவற்றோ
டொல்லும் வகைதேர்ந் துணர்த்தியல் வழாமல்
உரைப்போர் கேட்போர் உண்மை யின்றி
உரைக்குங் கவியே உரைப்பது துறையே'' (234)

என்பது நம்பி அகம்.

6. **பேராசிரியர்** ''மாட்டும் எச்சமும் நாட்ட லின்றி'' (செய். 211) என்ற நூற்பாவுரையில் ''ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த'' (அக.8) என்னும் பாட்டினை எடுத்துக்காட்டி இது துறைவகை யின்றி வந்த தென்பர்.

குறிப்பு:- மேற்கண்ட பேராசிரியர் உரைக்கு விளக்கமாக, 'மாட்டும் எச்சமும்' என்னுஞ் சூத்திரத்து உரையில், **இச்செய்யுளுள் முதலும் கருவும் முறைபிறழ வாராமையின்** இதனைத் துறைவகை யின்றி வந்ததென்பர் பேராசிரியர் என்று **அகநானூற்று வேங்கடவிளக்கு உரைக்குறிப்பு** (8) கூறுகிறது.

(25) மாட்டு

**202. அகன்றுபொருள் கிடப்பினு மணுகிய நிலையினும்
இயன்றுபொருள் முடியத் தந்தன ருணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்[1].**

என்-னின் நிறுத்த முறையானே மாட்டேறு உணர்த்துதல் நுதலிற்று. **(உ0உ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

1. மாட்டு

மாட்டென்பது, பல்வேறு பொருட்பரப்பிற்றாயினும் அன்றாயினும் நின்றதனொடு, வந்ததனை ஒரு தொடர்கொளீஇ முடித்துக்கொள்ளச்செய்தல் (பேரா. செய். 1 நூ. உரை). மாட்டென்றது அகன்றும் அணுகியும் கிடந்த பொருள்களைக் கொண்டு வந்து தொடராகக் கூட்டி முடித்தலை. (நச். செய் 1. நூ. உரை)

2. பேராசிரியர் கருத்து

பேராசிரியர் இந்நூற்பாவிற்குப் பொருள் கொள்ளுங்கால், 'அகன்று பொருள் கிடப்பச் செய்யினும், அணுகிக் கிடப்பச் செய்யினும் இருவகையானும் சென்று பொருள் முடியுமாற்றால் கொணர்ந்துரைப்பச் செய்தலை மாட்டென்னும் உறுப்பென்று சொல்லுவர் செய்யுள் வழக்கினுள்' என்று பொருள்கூறி, இதுவும் நால்வகைப் பொருள்கோளன்றிப் புலவரது வேறு செய்கை; அது,

> ''முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
> வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
> வாரேன் வாழிய நெஞ்சே'' (பட்டி. 218-220)

என நின்றது, பின்னர்

நூ. சு. வே: 1. வழக்கே
உரை.சு.வே: 1. இதன்பின் 'இதுவும்' என்ற சொல் மட்டும் உள்ளது (த.ச.பதி)

"வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென் றோளே"
(பட்டி. 300, 301)

எனச் சேய்த்ததாகச் சென்று பொருள் கோடலின் அஃது அகன்று பொருள் கிடப்பினும் இயன்று பொருள் முடியத் தந்து உரைத்ததாம்.

நச்சினார்க்கினியர் கருத்து

3. **சிந்தாமணி** நாமகளிலம்பகத்தே மதிலைப்பற்றித் **திருத்தக்கதேவர்** புனைந்து கூறிவரும் பாடல்களில், 101ஆம் பாட்டில் "மாற்றவர் மறப்படை மலைந்து மதில் பற்றின்" என்ற சொற்றொடரிலுள்ள 'பற்றின்' என்னும் வினையெச்சத்தை, 104ஆம் பாட்டில் "திருந்து மதில் தெவ்வர் தலைபனிப்பத் திருந்தின்றே" என்ற சொற்றொடரிலுள்ள 'பனிப்ப' என்ற வினையெச்சத்துடன் கூட்டி, "மதில் மாற்றவர் பற்றின், தெவ்வர் (அவர்) தலை பனிப்பத் திருந்தின்று" என்று வினை முடிவு கூறி,

"இத் தொடர்நிலையில் (சிந்தாமணியில்) சொற்களைத் துணித்துப் பல விடத்தினும் எடுத்துக் கூட்டியது, செய்யுளுறுப்பு இருபத்தாறினும் மாட்டென்பது ஒருறுப்பாதலின்.

'அகன்றுபொருள் ..... பாட்டியல் வழக்கின்' (செய்.202) என்றும்,

'மாட்டு மெச்சமு ..... தொடர்நிலை பெறுமே' (செய். 203) என்றும், **தொல்காப்பியனார்** கூறினார். இதனால் நாடு முதலிய கவிகளில் மாட்டுப் பெற்று வந்தனவும், மாட்டின்றி வந்தனவுங் கொள்க" என்பர்

4. **மாறனலங்காரம்** 'மாட்டெறிந்தொழிதல்' என்றும், 'மாட்டுறுப்பினவா மனக்கொளக் கூறல்' என்றும் இரண்டு உத்திகளைக் கூறுகிறது. அதன் **உரையாசிரியர்** 'மர்ட்டெறிந் தொழிதல்' என்பது முன் ஒருபொருட் கிலக்கணங் கூறிப் பின்னர் வருவதும் அது போலும் என்றல். மாட்டுறுப்பினவா

மனக் கொளக் கூறல் என்பது ஒரு சூத்திரத்துப் பொருள் கொள்ளுங்கால், அகன்று பொருள் கிடப்பனவும் அணுகிக் கிடப்பனவுமான இருவகையையும் என்பர். அதனால் இவ் விரண்டு உத்திகளும் வெவ்வேறு என்பதும், அவ்விரண்டுள் ஒன்று மாட்டு என்னும் செய்யுள் உறுப்பா மென்பதும் அறியத் தக்கன.

''திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேதம்'' (முத்.42)

'இறந்து படிற்பெரிதா மேதம்' என்பது அணுகிய நிலையெனப் படும். பிறவும் அன்ன. மாட்டுதல் என்பது கொண்டு வந்து கொளுத்துதல் என்பர்.

203. மாட்டு மெச்சமு நாட்ட[1] லின்றி
உடனிலை மொழியினுந் தொடைநிலை பெறுமே.

இவ்விரண்டும் சூத்திரத்தாற் பொருள் விளங்கும். (20கூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

மாட்டும் எச்சமும்

1. செய்யுள்கள் மாட்டு, எச்சம் என்னும் இரண்டு உறுப் புக்களைப் பெறாமலும் வரும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. ஆனால் **இறையனார் அகப்பொருள்** சிறிது வேறுபட்டு,

''அவற்றுள்
எச்சமுங் கோளும் இன்மையும் உரிய'' (57)

என்று கூறுகிறது. இவற்றின் வேறுபாடறிக.

நம்பியகப்பொருள்,

''அவற்றுள்
எச்ச மின்றியு மியையு மென்ப'' (235)

என்று கூறுகிறது.

நூ.சு.வே: 1. 'நாட்ட மின்றி, யுடைநிலை மொழியினுந் தொடைநிலை'

2. பேராசிரியர் ''எச்சமும் மாட்டும் என்னாது மாட்டு முற்கூறிய தென்னையெனின், எச்சம் முதலாகிய ஐந்து உறுப்பும் இவ்விதி பெறுமென்று கோடற்கு எதிர் சென்று தழீஇயினான் என்பது.

உதாரணம்:-

வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி நீர
நீலப் பைம்போ துளரிப் புதல
மீலி யொண்பொறிக் கருவிளை யாட்டி
நுண்மு ளீங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண்ணத் துய்ம்மல ருதிரத் தண்ணென்
றின்னா தெறிதரும் வாடையொ
டென்னா யினன்கொ லென்னா தோரே'' (குறுந். 110)

என்பது எச்சமின்றி வந்தது.

''தாமரை புரையுங் காமர் சேவடி''

என்பது முன்னமின்றி வந்தது.

''மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே'' (குறுந்.7)

என்பது பொருளின்றி வந்தது.

''ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த''

என்பது துறைவகையின்றி வந்தது.

''யானே யிண்டை யேனே'' (குறு.54)

என்பது மாட்டின்றி வந்தது.

இடைநின்ற மூன்றினை இலசினாற் கொண்டு இரண்டினை எடுத்தோதினான். இவை யிரண்டும் அவற்றது துணை இன்றி யமையாச் சிறப்பினவல்ல என்றற் கென்பது'' என்பர்.

(26) வண்ணம்

204. வண்ணந் தாமே[1] நாலைந் தென்ப.

நூ.பா.வே: 1. 'தானே' யா.வி;நச; தொன்.

என்-னின் இனி, நிறுத்த முறையானே வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) [1]வண்ணம் ஆவன இருபதாம் என்றவாறு.

அவற்றின்[2] பாகுபாடு முன்னின்ற சூத்திரத்தான் காட்டுதும்.

(உ0ச)

பதிப்பாசிரியர் விளக்கம்

வண்ணம்

1. விருத்தி ஆசிரியர்

"வண்ணம் என்பது வண்ணங்களும் என்றவாறு. அவ் வண்ணந் தானே இருபது எனக் கொள்க. என்னை? வண்ணத் ..... தென்ப" என்றாராகலின் என்பர்.

(யா. வி. கழ. பக். 401)

2. வண்ணம் என்பது பல பொருள் ஒருசொல். அது **பாவின் ஓசை விகற்பம், சந்தப் பாட்டு, முடுகியல், அராகம், இசைப் பாட்டு**என்னும் இவற்றையும் குறிக்கும்.

"பாடுவல் விறலியோர் வண்ணம்" (புறநா. 15?)

"ஞானசம் பந்தன்சொல் வண்ணம் மூன்றும்
தமிழில் தெரிந்திசை பாடுவார்" (திருமுறை. 2. திருப்பிரமபுரம்)

என்பனவெல்லாம் இசைப்பாடல் வகை. தொல்காப்பியர் கூறுவது பாவின் ஓசை விகற்பமாகிய வண்ணமாம்.

3. பேராசிரியர்

"வண்ணம் என்பது சந்த வேறுபாடு. அவை நூறும் பலவுமாகி வேறுபடினும் இவ்விருபதுள் அடங்கும் என்பதும், அவ் வேறுபாடெல்லாம் சந்த வேற்றுமையைச் செய்யா என்பதும் கூறியவாறு. அது நுண்ணுணர்வுடையார்க்குப் புலனாம்" என்பர்.

உரை.சு.வே: 1. வண்ணமாய் வருவது 2. அவற்றின் பெயர்.

அவர் செய்யுளியல் முதல் நூற்பாவுரையில் 'வண்ணம் என்பது ஒருபாவின்கண்ணே நிகழும் ஓசைவிகற்பம்'' என்று ரைப்பர்.

205. அவைதாம்

பாஅ வண்ணந் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ண மளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணஞ்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ண மொரூஉ வண்ணம்
எண்ணு வண்ண மகைப்பு வண்ணந்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்
றாங்கென[1] மொழிப வறிந்திசி னோரே.

என்-னின் வண்ணத்திற்குப்[2] பெயர் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) இதுவும் சூத்திரத்தாற் பொருள் விளங்கும். **(உ0நி)**

206. அவற்றுட்

பாஅ வண்ணஞ்
சொற்சீர்த் தாகி நூற்பாற்[3] பயிலும்

என்-னின் பாவண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பாஅ வண்ணமாவது சொற்சீரடியாகி நூலின்கட் பயின்று வரும் என்றவாறு.

நூ.பா.வே: 1. 'றாங்கவை' யா.வி.
'றாங்கன' பேரா.
'றாங்கன மறிப' நச்.

உரை.சு.வே: 2. வண்ணவுறுப்பாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நூ.பா.வே: 3. 'நூற்பாப் பயிலும்'' தொன்.
''அவற்றுட்
பாஅ வண்ணஞ் சொற்சீர்த் தாகி
நூற்பாற் பயில நோக்கின் றென்ப'' சு.வே.

உதாரணம்:—

''அஇ உஅம் மூன்றுஞ் சுட்டு'' (தொல்.நூன்.31)

''கொல்லே ஐயம்'' (தொல்.இடை. 20)

''எல்லே யியக்கம்1'' (தொல். இடை.21)

என வரும். (உ.oசூ)

பதிப்பாசிரியர் விளக்கம்

பாஅ வண்ணம்

1. அவற்றுள் பாஅ வண்ணம் சொற்சீரடியால் நூலுள் பயிலவருவது. (யா.வி.கழ.பக். 402)

2. பாவு வண்ணமாவது நூற்பாப் பயிலே வருவது. (வீர.சே.ம.காரி.142)

3. **பேராசிரியர்** ''பாஅ வண்ணம் என்பது நூற்பா வண்ணம். எற்றுக்கு? நூற்பாற் பயிலும் என்றமையின். இது சொற்சீரடித்தாகி வரும் என்பது. இதனுட் பயிலும் எனவே அத் நூற்பாவினு ளல்லது அகவலுள் இத்துணைப் பயிலா தென்பது. இது,

''வடவேங்கடந் தென்குமரி'' (தொல். பாயி)

எனவும்,

''எழுத்தெனப் படுப அகரமுத
னகர விறுவாய் முப்பஃ தென்ப'' (தொல். நூன். 1)

எனவும்,

''அவற்றுள்
அஇஉ
ஏஒ வென்னு மப்பா லைந்தும்'' (தொல். நூன். 3)

எனவும் பயின்றுவரும்.

உரை.சு.லே: 1. 'எல்லே விளக்கம்' தொல். இள. உரை
'எல்லே யிலக்கம்' சேனா; நச்.
''எல்லே விளிக்கும்'' சு.லே.

''பெரியகட் பெறினே'' (புறநா. 235)

என்பது சொற்சீராகி அகவலுட் பயிலாது வந்தது.

''சொற்சீரடி என்னாது'', ''சொற்சீர்'' என்றான், **அடியோடு தொடராதுஞ்** சொற்சீர் வருமாதலினென்பது. இவை,

''நன்றுபெரி தாகும்'' (தொல். சொல். 343)

என்றாற் போல வேறாகி நிற்பன.

இவை கலியுள்ளும் பரிபாடலுள்ளும் சொற்சீர் வருமென மேற்கூறினானாகலின் அவற்றுள்ளுஞ் சந்த வேற்றுமைப்பட்டன பாஅ வண்ணமேயா மென்பது என்பர்.

4. 'அளப்பரியையே' எனச் சொற்சீரடி வந்தமையால் சொற்சீர் வண்ணமாயிற்று. ஈண்டு 'சொற்சீர் என்றது அளவடியிற் குறைந்தும் வஞ்சியோசையின்றி அகவலோசையாயும் வரும் அடியினை என்பர். (பதிற். 142 உரை)

207. தாஅ வண்ணம்
இடையிட்டு வந்த வெதுகைத்[1] தாகும்.

என்-னின் தாஅ வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தாஅ வண்ணமாவது இடையிட்டெதுகையான் வரும் என்றவாறு.

உதாரணம்:—

''தோடா ரெல்வளை நெகிழ நாளும்
நெய்த லுண்கண் பைதல கலுழ
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைக றோறும் பையப் பெருகின
நீடா நிவணென நீமனங் கொண்டோர்
கேளார் கொல்லோ காதலர் தோழி
வாடாப் பௌவ மறமுகந் தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ

நூ.பா.வே: 1. 'வெதுகைத் தென்ப' பேரா.
'வெதுகை யாகும்' தொன்.
'எதுகைத்தாகும்' இள; நச்; யா. வி.

ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே. (யா.வி.கழ.பக்.153,402)

என்னும் பாட்டு, (உ.ம)

பதிப்பாசிரியர் விளக்கம்

தாஅ வண்ணம்

1. "தாஅ வண்ணமாவது, தோன்று மிடத்து ஓரோவடி இடையிட்டு வந்த எதுகைத் தாகும்". (யா.வி.கழ. பக்.402)

2. "தாவு வண்ணமாவது இடையிட்டு வந்த எதுகைத் தாவது". இவர் தாஅ வண்ணத்தைத் தாவு வண்ணம் என்பர், (வீர. சோ, காரி. 142)

3. **பேராசிரியர்** தாஅ வண்ணத்தை வேறுபடக்கூறுவர். "இடையீடுபடத் தொடுப்பது தாஅ வண்ணம்" என்றுகூறி அவை, பொழிப்பும் ஒருஉவு மாகலின் எதுகையென வரைந்து கூறினான் என்பது" என்பர். அவர் அவ்வாறு கூறியதன் கருத்தை,

"ஒருசீ ரிடையிட் டெதுகை யாயிற்
பொழிப்பென மொழிதல் புலவ ராறே"

என்றும்,

"இருசீ ரிடையிடி னொருஉவென மொழிப"

என்றும் (செய்.93,94) கூறும் நூற்பாவினை நோக்கி அறிக. பொழிப்பு, ஒருசீர் இடையிட்டு வரும். ஒருஉ இருசீர் இடையிட்டு வரும். இவை இரண்டும் இடையிட்டு (தாஅய்) வந்தமையால் தாஅ வண்ணமாயிற்று.

இளம்பூரணர் காட்டும் உதாரணத்தை "அடியிடையிட்டு வருவது தொடை வேற்றுமையாவதல்லது வண்ணவேற்றுமையாகா தென்பது" என்றுகூறிப் பேராசிரியர் மறுக்கிறார். தாஅ வண்ணத்திற்கு இவர் காட்டும் உதாரணம்,

"உலக முவப்ப வலனேர்பு திரிதரும்"

பொழிப்பெதுகை.

''உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை''
ஒரூஉவெதுகை என்பனவாகும்.

208. வல்லிசை வண்ணம் வல்லெழுத்து[1] மிகுமே.

என்-னின் வல்லிசை வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வல்லெழுத்து மிக்கு வருவது வல்லிசை வண்ணமாம் என்றவாறு.

உதாரணம்:-

''வட்டொட்டி யன்ன வணர்முடப் புன்னைக்கீழ்க்
கட்டொட்டுக் கண்ணி தொடுப்பவர்[2] தாழைப்பூத்
தொட்டிட்டுக் கொள்ளும் துறைச்சேர்ப்ப னின்னொடு
விட்டொட்டி யுள்ளம் விடாது நினையுமேல்[3]
ஒட்டொட்டி[4] நீங்காதே ஒட்டு'' (யா.வி.கழ.பக்.403) **(உ0ஃ)**

209. மெல்விசை வண்ண மெல்லெழுத்து மிகுமே.

என்-னின் மெல்லிசை வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மெல்லெழுத்து மிக்கது மெல்லிசை வண்ணமாம் என்றவாறு.

உதாரணம்:-

''பொன்னி னன்ன புன்னைநுண் டாது
மணியி னன்ன நெய்தலங் கானல்
மனவென வுதிரு மாநீர்ச் சேர்ப்ப[5]
மாண்வினை நெடுந்தேர் பூண்மணி யொழிய
மம்மர் மாலை வாநீ[6]
நன்மா மேனி நயந்தனை யெனினே''. (யா.வி.கழ.பக்.176,404)

என வரும். **(உ0கூ)**

நூ.பா.வே: 1. வல்லெழுத்துப் பயிலும்' பேரா; நச், தொன்.
உரை.சு.வே: 2. பட்டொட்டி யன்ன தொடர்பு முடப்
3. நினையுமேல் நினையின்மேல்
4. விட்டொட்டி நீங்காதே
5. சேர்ப்ப 6. வரனீ

பதிப்பாசிரியர் விளக்கம்

மெல்லிசை வண்ணம்

1. யா. க. விருத்தியாசிரியர், ''மெல்லிசை வண்ணமாவது மெல்லெழுத்து மிக்குவருவது'' என்றுகூறி இத் தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக் காட்டி, இளம்பூரணர் உதாரணமாக எடுத்தாண்ட 'பொன்னி னன்ன' என்ற பாட்டினையே மேற் கோளாகக் காட்டுவர். (யா.வி.கழ.பக்.403).

2. **வீரசோழியமும்** மெல்லிசை வண்ணத்தை முதலாவதாக அமைத்துக்கொள்ளுகிறது. (வீரசோ.142).

3. **பேராசிரியர்** இந்நூற்பாவுரையில் ''மெல்லெழுத்து மிகுவது மெல்லெழுத்து வண்ணமாம்'' என்று உரை கூறிவிட்டு, ''ஒரு செய்யுள் முழுவதும் வேறு இன எழுத்து வாராமல் ஓரின வெழுத்தே பயிலச்செய்தால் இன்னாதாதலின், இவை உறுப் பெனப் பட்டு இடையிட்டு வருமென்றானென்பது.

அவ்வாறு செய்யின் அவை மிறைக்கவி எனப்படும். ஒழிந்த எழுத்திற்கும் இஃதொக்கும்'' என்று எழுதுவது அறிஞர் சிந்தித்துக் கொள்ளவேண்டிய தொன்றாம்.

குறிப்பு:— மெல்லெழுத்து மிக்கு, ஏனையெழுத்துக் குறைந்து விரவி வருவது மெல்லிசை வண்ணம் என்க.

4. **தண்டியாசிரியர்** சொல்லணியியலில் ''ஒரெழுத்து மடக்கலு முரித்தென மொழிப'' எனும் நூற்பாவுரையில், பேராசிரியர் கூறும் மிறைக்கவியை ஒருயிர் மடக்கலில் குற்றுயி ரான் வந்த மடக்கு நெட்டுயிரான் வந்த மடக்கு என்றும், மற்று ககர விகற்பத்தான் வந்த மடக்கு தகர விகற்பத்தான் வந்த மடக்கு என்றும், ஈரெழுத்தால் வந்த மடக்கு, மூன்றெழுத்தால் வந்த மடக்கு, நான்கெழுத்தால் வந்த மடக்கு, ஒற்றெழுத்தின்றி வருவது, வல்லினத்தால் வருவது, மெல்லினத்தால் வருவது இடையினத்தால் வருவதென்றும் கூறுவர்.

5. ஒத்தநூற்பா

''மெல்லினம் மிகுவன மெல்லிசை வண்ணம்'' (முத்து. வீ.)

''எதுகை முதலடி யெல்லாம் வல்லினம்
மிகுவன வல்லிசை யாம்மிளம் பிடினே'' (முத்து. வீ.)

210. இயைபு வண்ண மிடையெழுத்து மிகுமே.

என்-னின் இயைபு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இடையெழுத்து மிக்குவருவது இயைபு வண்ணமாம் என்றவாறு.

உதாரணம்:—

''வால்வெள் ளருவி வரைமிசை யிழியவும்
கோள்வல் லுழுவை விடரிடை யியம்பவும்
வாளுகி ருளியம் வரையக மிசைப்பவும்
வேலொளி விளக்கினர் வரினே
யாரோ தோழி வாழ்கிற் போரே. (யா.வி.கழ.பக்.404)'

என வரும். **(உகo)**

பதிப்பாசிரியர் விளக்கம்

இயைபு வண்ணம்

1. ''இயைபு வண்ணம் என்பது இடையெழுத்து மிக்கு வருவது'' என்றுகூறி 'இயைபு வண்ணம்' என்ற தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக் காட்டுவர். (யா.வி).

2. **வீரசோழியம்** ''இயைபு வண்ணமாவது இடையெழுத்து மிகுவது'' என்னும்.

3. மேற்கூறிய இரண்டு மேற்கோளும் தொல்காப்பிய நூற்பாவின் இப்பொழுதுள்ள பாடத்தைக் குறிப்பனவாக உள்ளன.

ஆனால், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், என்பனபோல் இது இடையிசை வண்ணம் என்றிருத்தலே தக்கதாம். **முத்துவீரிய ஆசிரியர்** ''இடையினம் மிகுவன இடை யிசை வண்ணம்'' என்று கூறுகிறார்.

4. **பேராசிரியர்** ''மென்மை வன்மைக்கு இடைநிகர்வாகிய எழுத்தான் வருதலின் இயைபு வண்ணம் என்றார்'' என்பர். அவர் அவ்வாறு கூறுதலின், இடை என்னும் சொல்லிற்கும், இயைபு என்னும் சொல்லிற்கும் இயைபு உண்டுபோலும்.

5. **இடைபு** வண்ணம் என்றும் பெயரிருக்கலாம்.

211. அளபெடை வண்ண மளபெடை பயிலும்[1].

என்-னின் அளபெடை வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அளபெடை பயின்று வருவது அளபெடை வண்ண மாம் என்றவாறு.

உதாரணம்:—

தாஅட் டாஅ மரைமல ருழக்கி
பூஉக் குவளைப் போஒ தருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅண் மோஒட் டெருமை'' (யா.வி.கழ.பக்.169)

என வரும். **(உகக)**

பதிப்பாசிரியர் விளக்கம்

அளபெடை வண்ணம்

1. **யாப்பருங்கல விருத்தியாசிரியர்** ''அளபெடை வண்ண மாவது அளபெடை பயின்று வருவது'' என்று கூறி, இத்தொல் காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டுகிறார்.

2. **வீரசோழியம்** ''அளபெடை வண்ணமாவது அளபெடை யில் வருவது'' என்னும். (வீரசோ. 142)

3. **பேராசிரியர்** ''இரண்டு அளபெடையும் பயிலச் செய்வன அளபெடை வண்ணமாம்'' என்று கூறி உயிரளபெடைக்கும் ஒற்றளபெடைக்கும் உதாரணம் காட்டுவர்.

நூ.சு.வே: 1. இயலும்

212. நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்.

என்-னின் நெடுஞ்சீர் வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நெட்டெழுத்துப் பயின்றுவருஞ் சீரினையுடைய வண்ணம் நெடுஞ்சீர் வண்ணமாம் (த. ச. பதி).

"நெட்டெழுத்துப் பயின்று வருவது நெடுஞ்சீர் வண்ணம் என்றவாறு." (வ.உ.சி.பதி)

உதாரணம்:—

"நீரூர் பானா யாறே காடே
நீலூர் காயாப்[1] பூவீ யாவே
காரூர்[2] பானா மாலே யானே
யாரோ தாமே வாழா மோரே
ஊரூர் பாகா தேரே
பீரூர் தோளாள் பேரூ ரானே" (யா.வி.கழ.பக்.404)

என வரும். (உகஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

நெடுஞ்சீர் வண்ணம்

1. **யாப்பருங்கல விருத்தியாசிரியர்** "நெடுஞ்சீர் வண்ண மென்பது நெட்டெழுத்துப் பயின்றுவருவது" என்றுகூறி, இத் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டுவர்.
(யா. வி. கழ. பக். 404)

2. **வீரசோழியம்** "நெடுஞ்சீர் குறுஞ்சீ ரிவை வண்ணமே" என்று கூறும். உரையாசிரியர் "நெடுஞ்சீர் வண்ணமாவது நெட்டெழுத்துப் பயிலவருவது" என்பர். (வீர.சோ. 142)

3. காரிகைக்குப் புத்துரை எழுதிய **அ. குமாரசாமிப்புலவர்** 'நெடுஞ்சீர்' என்பதற்கு "நெட்டெழுத்து அசையாய் நிற்குஞ்சீர்" என்பர்.

உரை.சு.வே: 1. காயாம்பூ
2. காஞ்சூர் பானா மாவே.

4. **பேராசிரியர்** நெடிதாய் வருவது நெடுஞ்சீர் எனப் பட்டது என்பர்.

5. **நச்சினார்க்கினியர்** இதன் உதாரணப் பாட்டை 'இதுவும் மிறைக்கவியாம்' என்பர்.

மேற்கூறியவற்றால் நெட்டெழுத்து முதலில் அமைய வருஞ் சீர்களால் இவ்வண்ணம் வரும்போலும்.

213. குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்.

என்-னின் குறுஞ்சீர் வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) குற்றெழுத்துப் பயின்று வருவது குறுஞ்சீர் வண்ண மாம் என்றவாறு.

உதாரணம்:-

''உறுபெய லெழிலி தொகுபெயல் பொழியச்
சிறுகொடி யவரை பொதி1தளை யவிழ
குறிவரு பருவ மிதுவென மறுகுபு
செறிதொடி நறுநுத லழியல்
அறியலை யரிவையவர் கருதிய பொருளே'' (யா.வி.கழ.பக்.405)

என வரும். (உகஉ)

பதிப்பாசிரியர் விளக்கம்

குறுஞ்சீர் வண்ணம்

1. **மதுரைத் தமிழ்ச்சங்கச் செய்யுளியல் பதிப்பில்** நெடுஞ்சீர் வண்ணத்திற்கு இளம்பூரணர் உரை ''நெட்டெழுத்துப் பயின்று வருஞ் சீரினையுடைய வண்ணம்'' என்று உள்ளது. ஆனால் குறுஞ்சீர் வண்ணத்திற்கு 'குற்றெழுத்துப் பயின்று வருவது' என்றே உள்ளது. ''குற்றெழுத்துப் பயின்று வரும் சீரினை யுடைய வண்ணம்'' என்றிருந்தால் மேலதனோடு பொருந்தி நிற்கும்.

உரை.சு.வே: 1. நெறிதளை

ஆனால், **திரு. அ. குமாரசாமிப்புலவர்** ''குற்றெழுத்து அசை யாய் நிற்குஞ் சீரே குற்றெழுத்து வண்ணம்'' என்பர்.

2. **நச்சினார்க்கினியர்** ''இதுவும் மிறைக்கவியாம்'' என்பர்.

3. **திவாகரம்** ''குற்றெழுத்துத் தொடரினது குளகச் செய்யுள்'' என்று கூறும்.

பிங்கலமும் ''குற்றெழுத்துச் செய்யுளும் மரக்காலும் குளகம்'' என்று கூறும்.

4. **குறுஞ்சீர்** என்றதில், சீர் என்றது ஓசையைப் போலும்.

214. சித்திர வண்ணம்
நெடியவுங் குறியவும் நேர்ந்துடன்[1] வருமே[2].

என்-னின் சித்திரவண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சித்திரவண்ண மாவது நெட்டெழுத்தும் குற் றெழுத்தும் சார்ந்து வரும் என்றவாறு.

உதாரணம்:—

''ஓரூர் வாழினுஞ் சேரி வாராரா
சேரி வரினு மாரா[3] முயங்காரா'' (குறுந். 231)

என வரும். (உகச)

பதிப்பாசிரியர் விளக்கம்

சித்திர வண்ணம்

1. சித்திர வண்ணம் என்பது குற்றெழுத்தும் நெட்டெழுத் தும் விராய் வருவது என்று கூறி, இத் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டுவர். (யா. வி. கழ. பக். 405)

நூ.பா.வே: 1. 'நேர்ந்து வருமே' தொன்
2. 'வருஉம்' நச்.
உரை.சு.வே: 3. ''மார்வ முயங்கார்''

2. சித்திரவண்ணமாவது குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் விரவி வருவது. (வீரசோ. 142)

3. சித்திரவண்ண மென்பது பலவண்ணம்படச் செய்வ தாகலின் அப் பெயர்த்தாயிற்று. (பேரா. உரை)

4. சித்திரம் பலவிதம் என்பர் (**அ. குமாரசாமிப்புலவர்**)

5. **நச்சினார்க்கினியர்** இதுவும் மிறைக்கவியென்பர்.

6. தொல்காப்பியர் நெடியவும் குறியவும் நேர்ந்து வருவது சித்திரவண்ணம் என்பர்.

7. சித்திரம் என்பதற்குப் 'பல' என்று பொருள் கொள்வர் பேராசிரியர். இவ்வண்ணத்தில் பல தன்மை யில்லையாதலின் அது பொருந்தாது. 'சித்திரம்' என்ற வடசொற்கு 'அதிசயம்' என்றும் பொருள் உண்டு. அப்பொருளும் பொருந்துமாறில்லை.

இது நெடிலும் குறிலுமாகிய சில திற எழுத்துக்களால் அமைந்த வண்ணமாதலின், சிலதிற வண்ணம் என்னும் தொடர்மொழி சில திறவண்ணம், சிற்றிறவண்ணம், சித்திர வண்ணம் என்றாயிற்று. இவ்வாறு ஆதலை நல்லதத்தன் என்னுஞ்சொல், நல்தத்தன், நற்றத்தன், நத்தத்தன் என்று முடிந்து நிற்றலால் அறிக. இன்னும் முற்றம் முத்தம் எனவும், சிற்றளி என்பது சித்தளி எனவும், கற்றாழை கத்தாழை எனவும் திரிந்து வருதலைக் கருதுக. இது மருவியல்.

215. நலிபு வண்ண மாய்தம் பயிலும்.

என்-னின் நலிபுவண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுத லிற்று.

(இ-ள்) ஆய்தம் பயின்று வருவது நலிபு வண்ணமாம் என்றவாறு.

உதாரணம்:—

> ''அஃகாமை செல்வத்துக் கியாதெனின் வெஃகாமை
> வேண்டும் பிறன்கைப் பொருள்'' (குறள். 178).

என வரும். (உகரி)

பதிப்பாசிரியர் விளக்கம்

நலிபு வண்ணம்

1. "நலிபு வண்ணம் என்பது ஆய்தம் உடைத்தாய் வருவது" தொல்காப்பிய நூற்பாவினை மேற்கோள் காட்டுவர் (யா. வி. கழ. பக். 405)

2. நலிவு வண்ணமாவது ஆய்த முடைத்தாய் வருவது என்பர் (வீரசோ.காரி. 142).

3. **பேராசிரியர்** "நலிபு என்பது ஆய்தம். ஆய்தம் பயின்று வருவது நலிபு வண்ணமாம்" என்பர்.

4. **நச்சினார்க்கினியர்,**

"எஃகோ டவன்கேட்ப வேமறந்தான் போதென்றாய்
அஃகுநீர்க் கான்யாற் றவிர்மண லெக்கர்மேல்"

என்றால் தொடைப்பாற்படும் என்பர்.

5. **நலிதல் ஓசையைப் பற்றி:**

"எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபுந் தத்தமிற் சிறிதுள வாகுப்" (நன்.87)

"எடுத்தல் படுத்தல் இரண்டே ஓசை
நலிதல் விலங்கலொடு நான்கென் பார்சிலர்
மூன்றெனத் துணிந்தே மொழிகுவர் பலரே" (இல. கொத்து. 127)

6. **ஆய்தம் நலிபு ஓசையாற் பிறக்கும்.**

"ஆய்தமு மொற்றெனப் பெற்றசை யாக்குமென்
றோதி னாருள ராகவு மொண்டமிழ்
நாத ராயவர் நாநலி போசையிற்
கேது வென்றேடுத் தோதினா ரென்பவே"

ஆய்தமும் ஒற்றினைப் போல் அளபெழுந்து அசையாகுதலால் ஒற்றளபெடையிற் சேர்த்துக் கூறப்பட்டாலும், ஒற்றுக்குள்ள ஓசையைப் பெறாமல், நா நலிபு ஓசையாற் பிறத்தலால் வண்ணத்துள் தனித்து ஓதப்பட்ட தென்க.

7. ஆய்த ஓசையைப்பற்றி,

''உயிரெழுத் துரைத்தனம் உரித்த தேங்காய்க்
கண்போல் முச்சுழி கவினுறக் காட்ட
ஆய்தந் துணையிழந் தலமருங் காக்கைக்
குழறலின் மிடற்றிற் குழறொலி தருமே''

என்பர் தவத்திரு **தண்டபாணி சுவாமிகள்.**

(அறுவகையிலக்கணம்.எழுத். 16)

216. அகப்பாட்டு வண்ணம்
முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே[1].

என்-னின் அகப்பாட்டு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அகப்பாட்டு வண்ணமாவது முடியாத[2] தன்மையின் முடிந்ததன் மேற்று என்றவாறு.

உதாரணம்:-

''பன்மீ னுணங்கற் படுபுள் ளோப்பியும்
புன்னை நுண்டாது நம்மொடு தொகுத்தும்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியும்
தோளி னீங்காமை சூளிற் றேற்றி
மணந்ததற் சேர்வான்[3] றணந்துபுற மாறி
இனைய னாகி யீங்குத் துறந்தோன்
பொய்த லாயத்துப் பொலந்தொடி மகளிர்[4]
கோடுயர் வெண்மண லேறி
ஓடுகலம் எண்ணும் துறைவன் றோழி'' *(யா. வி. கழ. பக். 406)*

என வரும். (உகசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

அகப்பாட்டு வண்ணம்

1. ''அகப்பாட்டு வண்ணம் என்பது முடியாதது போன்று

நூ.பா.வே: 1. 'முடித்தன் மேற்றே'
உரை.சு.வே: 2. முடியாத் தன்மையான்
3. கொல்வான்
4. மகளிரொடு

முடிவது'' என்று மேல் நூற்பாவை மேற்கோள் காட்டுவர். (யா. வி. கழ. பக். 406)

2. முடியாதது போல முடிவது அகப்பாட்டு வண்ணம் என்பர். (வீரசோ.காரி. 142)

3. பேராசிரியர்

''இறுதியடி இடையடி போன்று நிற்பது அகப்பாட்டு வண்ணம்'' என்றுகூறி, ''அவையாவன முடித்துக் காட்டும் ஈற்றசை ஏகாரத்தானன்றி ஒழிந்த உயிரீற்றானும் ஒற்றீற் றானும் வருவன'' என்பர்.

217. புறப்பாட்டு வண்ணம்
முடிந்தது[1] போன்று முடியாத தாகும்.

என்-னின் புறப்பாட்டு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புறப்பாட்டு வண்ணமாவது முடிந்தது போன்று முடியாதாகி வரும் என்றவாறு.

உதாரணம்:—

''நிலவுமண லகன்றுறை வலவ னேவலின்
எரிமணிப் புள்ளின மொய்ப்ப[2] நெருநலும்
வந்தன்று கொண்கன் றேரே யின்றும்
வருகுவ தாயி னொன்றுபு சென்று
ததைந்த புன்னைத் தாதுகு தண்பொழின்
மெல்ல[3] மென்முலை ஞெமுங்கப்
புல்லி னெவனோ மெல்லியல் நீயே
நல்காது விடுவை யாயின் வைகலும்
படர்மலி யுள்ளமொடு மடன்மா வேறி
உறுதுய ருல்குட னறியச்
சிறுகுடிப் பாக்கத்துப் பெரும்பழி தருமே.'' (யா.வி.கழ.பக்.406)

(உகள)

நூ.சு.வே: 1. முடிநத் தொன்று
உரை.சு.வே; 2. மொய்ப்ப
3. தமிழ்ச்சங்கப்பதிப்பில் முச்சீரடியே.

பதிப்பாசிரியர் விளக்கம்

புறப்பாட்டு வண்ணம்

1. "புறப்பாட்டு வண்ணம் என்பது முடிந்தது போன்று முடியாததன் மேற்று" என்று கூறி, 'புறப்பாட்' டென்னும் இந்நூற்பாவை மேற்கோள் காட்டுவர். *(யா.வி.கழ.பக். 406)*

2. "புறப்பாட்டுவண்ணமாவது முடிந்ததுபோன்று முடியாதது" என்பர். *(வீரசோ.காரி. 142)*

3. **பேராசிரியர்** "இறுதியில் நிற்கவேண்டிய அடி புறத்தாகவும் (ஈற்றயலாகவும்) இறுதியடி முடிந்தது போன்று நிற்பது" என்பர். அவர் காட்டும் உதாரணம்:

> "இன்னா வைகல் வாரா முன்னே
> செய்ந்நீ முன்னிய வினையே
> முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே"
>
> *(புறநா.363)*

என்பதாம். இந்த எடுத்துக்காட்டில் 'செய்ந்நீ முன்னிய வினை' என்பது ஈற்றில் நிற்க வேண்டிய அடியாகும். அது புறத்தே உள்ளது. "முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே" முடியாது எச்சமாயிருந்தாலும் ஈற்றேகாரம் பெற்று முடிந்தது போல் உள்ளது.

218. ஒழுகு வண்ண மோசையி னொழுகும்.

என்-னின் ஒழுகு வண்ணமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஓசையான் ஒழுகிக் கிடப்பது ஒழுகுவண்ணம் என்றவாறு.

உதாரணம்:—

> "அம்ம வாழி தோழி காதலர்
> இன்முன்[1] பனிக்கு மின்னா வாடையொடு
> புன்கண் மாலையு மின்று[2] நலிய
> உய்யல[3] ளிவளென வுணரச் சொல்லிச்

உரை.சு.வே: 1. இனமீன் 2. அன்பின்று நலிய
3. உய்யல ளிவளென்

செல்லுநர்ப் பெறினே சேய வல்ல
இன்னளி1 இறந்த மன்னவர்
பொன்னணி நெடுந்தேர் பூண்ட மாவே''. (யா.வி.கழ.பக்.407)
(உகஅ)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒழுகு வண்ணம்

1. ''ஒழுகு வண்ணம் என்பது ஓசையின் ஒழுகிக் கிடப்பது'' என்று இத் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டுவர். (யா.வி.கழ.பக். 4)

2. ''ஒழுகுவண்ணமாவது ஓசையி னொழுகுவது'' என்பர். (வீரசோ. காரி. 142)

3. **பேராசிரியர்** ''முற்கூறிய வகையானன்றி ஒழுகிய வோசையாற் செல்வது ஒழுகு வண்ணம்'' என்றுகூறி, ''ஒழிந்தனவும் ஒழுகுமாயினும் அவை வேறு வேறு இலக்கண முடையன'' என்பர்.

4. ''விரவி மூவினமும் மிகுவன ஒழுகிசை''
என்பர் **முத்துவீரிய ஆசிரியர்**

5. ''ஒழுகிசை யென்பது வெறுத்திசை யின்மை''

என்று தண்டியலங்காரம் கூறும். இதனை வடநூலார் ''சுகுமாரதை'' என்பர்.

''மென்மை ஒன்றின் நெறிவார் குழலி சுகுமாரதை யென்று நேர்ந்தறியே''

என்பது வீரசோழியம்.

''சுகுமாரதையாவது வல்லொற்று நீங்கியுள்ள சொற்களால் ஆக்கப்பட்டு மெல்லிதாயிருப்பது'' என்பது அதன் உரை.

6. **முத்துவீரிய ஆசிரியர்** மூவினமும் விரவியது ஒழுகிசை என்பர். **வீரசோழியம்** வல்லொற்று நீங்கி மெல்லிதாயிருப்பது சுகுமாரதையாகிய ஒழுகிசை என்று கூறும். இது வடமொழி மரபு. மூவினம் விரவியது சமநிலையுமாம்.

உரை.சு.வே 1. இன்னினி

7. ஆனால், **பதிற்றுப்பத்தில்** ஒழுகுவண்ணமும் சொற்சீர் வண்ணமும் வந்துள்ளன. சொற்சீரடி பயின்றது சொற்சீர் வண்ணமாகும். இதற்குப் பாவண்ணம் என்று பெயர். பதிற்றுப் பத்தில் சொற்சீரடி வந்துள்ள பகுதி நீங்கலாக மற்றைப் பகுதி யெல்லாம் ஒழுகுவண்ணமே. பதிற்றுப்பத்தில் செந்தூக்கும் வஞ்சித்தூக்கும் வந்துள்ளன. வஞ்சித்தூக்கு வந்த பகுதியைத் தூங்கிசை என்றல் வேண்டும். அவ்வாறு கூறாது அப்பகுதியை யும் உள்ளடக்கி ஒழுகுவண்ணம் என்றே கூறுவர் அதன் உரை யாசிரியர்.

ஒழுகிசை வண்ணம்

8. ஒழுகுதல் - நேரே செல்லல் என்பர் **திரு. அ. குமார சுவாமிப் புலவர்** அவர்கள்.

9. சிலப்பதிகாரத்துள் கானல் வரியுள் ''திங்கண்மாலை வெண்குடையான்'' என்று தொடங்கும் மூன்று பாடல்களையும் ஆற்றுவரியுள் ஒழுகுவண்ணம் என்பர் **அரும்பத உரையாசிரியர்.**

10. வண்ண விகற்பங்களைக் கூறும் 'தூங்கேந்து' என்ற **காரிகையில்** (வீரசோ) ''பாங்கே அகவல் ஒழுகல்வலிமெலிப்பாற் படுத்தி'' என்று கூறுவர். அந் நான்கில் ஒழுகல் ஒன்றாகும்.

11. ஒழுகிசை நடையென்றால் வாசிப்போனது நா தடை யுறாவண்ணம் ஆற்றொழுக்குப் போலக் கவி ஓடிச்செல்வது. கம்பராமாயணம் கங்கைப்படலம், முதல் நான்கு பாடல்கள். (கே.என். சிவராஜ பிள்ளை, தமிழ்க்கவிவாணருக்கு ஒரு விண் ணப்பம்.) (தமிழ் ஆய்வு)

219. ஒரூஉ வண்ண மொரூஉத்[1]தொடை தொடுக்கும்.

என்-னின் ஒரூஉ வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒரூஉ வண்ணமாவது நீங்கின தொடையாகிக்[2] கிடப்பது என்றவாறு. அது செந்தொடையாம்.

நூ.பா.வே: 1. 'மொரீஇத் தொடுக்கும்' பேரா: நச்; தொன்.
உரை.சு.வே: 2. தொடையாகத் தொடுப்பது

உதாரணம்:—

''தொடிநெகிழ்ந் தனவே கண்பசந் தனவே
யான்சென் றுரைப்பின் மாண்பின் றெவனோ
சொல்லாய் வாழி தோழி வரைய
முள்ளாற் பொதுளிய அலங்குகுரல்[1] நெடுவெதிர்
பொங்குவர விளமழை துவைப்ப
மணிநிலா விரியுங் குன்றுகிழ வோற்கே'' (யா.வி.கழ.பக்.205,407)

என வரும். (உக)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஒரூஉ வண்ணம்

1. ''ஒரூஉ வண்ணம் என்பது, ஒன்றாத தொடையாற் கிடப்பது; அஃதியாதோவெனின் செந்தொடை என்றுகூறி, இத் தொல்காப்பிய நூற்பாவினை மேற்கோள் காட்டுவர்''. (யா.வி.கழ.பக். 407)

2. ஒரூஉ வண்ணமாவது,

'அடியடி தோறும் ஒன்றாத் தொடையுடைத்தாவது'

என்பர் (வீரசோ. காரி. 142).

3. ஒரூஉ வண்ணம் ஓரீஇத் தொடுக்கும் என்பவாகலின் அது செந்தொடை என்பர். (இல. விள. 757)

4. **பேராசிரியர்** யாற்றொழுக்குப் போலச் சொல்லிய பொருள் பிறிதொன்றினை அவாவாமை அறுத்துச் செய்வது ஒரூஉ வண்ணம் என்றுகூறி, ஓரீஇத் தொடுத்தல் என்பது எல்லாத் தொடையும் ஓரீஇச் செந்தொடையால் தொடுத்த லென்பாரும் உளர் என்று இளம்பூரணர் கருத்தை எடுத்துக் காட்டி, ''செந்தொடையுந் தொடையாகலான் அற்றன் றென்பது'' என்று அவரை மறுப்பர். மேலும் அவர், அது

''யானே யீண்டை யேனே யென்னலனே
ஆனா நோயொடு கான லஃதே

உரை.சு.வே: 1. விலங்குகுலை.

துறைவன் றம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே.'' (குறுந்.97)

என வரும்.

''சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே'' (புறநா.235)

என்பதும் அது.

யாப்பு என்னும் உறுப்பு (செய். 74) பொருள் நோக்கிய வாறுபோல, இது பொருள் நோக்காது, ஓசையே கோடலானும், அடியிறந்து கோடலானும் யாப்பெனப்படாது என்பர்.

220. எண்ணு வண்ண மெண்ணுப் பயிலும்.

என்-னின் எண்ணுவண்ணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எண்ணுப் பயின்று வருவது எண்ணு வண்ணமாம் என்றவாறு.

உதாரணம்:—

''நிலம்நீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரி யையே
நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை'' (பதிற். 14)

என வரும். **(உஉ0)**

பதிப்பாசிரியர் விளக்கம்

எண்ணு வண்ணம்

1. ''எண்ணு வண்ணம் என்பது செவ்வெண்ணினாலும், உம்மை எண்ணினாலும், என எண்ணினாலும், என்றா எண்ணினாலும் பிறவும் யாதானும் ஓர் எண்ணினாலும் வருவது'' என்று கூறி, இத்தொல்காப்பிய நூற்பாவை மேற் கோள் காட்டுவர். (யா. வி. கழ. பக். 408)

2. ''எண்ணு வண்ணமாவது எண்பெயர் மிக்கு வருவது''. (வீரசோ. காரி. 142)

3. ''எண்ணி வருவன எண்ணெனப் படுமே'' (முத்துவீ).

4. கலிப்பாவின் உறுப்பில் எண் என்பதும் ஓர் உறுப் பாம். இது பேரெண், இடையெண், சிற்றெண் என்று வரும். கலிப்பாவில் எண் வந்த பகுதியும் எண்ணுவண்ணமே.

5. பிற்காலத்தே வந்துள்ள திருவெழுகூற்றிருக்கை என்னும் பாட்டும் எண்ணுவண்ணமே.

6. நாட்டுப்புறப் பாடல்களில் தண்ணீர் இறைப்போர் இறைத்த சாலை எண்ணுவதற்குப் பாடும் ஏற்றப்பாட்டும் எண்ணுவண்ணமே.

221. அகைப்பு வண்ண மறுத்தறுத் தொழுகும்.

என்-னின் அகைப்பு வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அகைப்பு வண்ணமாவது அறுத்தறுத்தியலும் என்றவாறு. (தமிழ்ச்சங்கப்பதிப்பு)

(''அறுத்தறுத் தியலுவது அகைப்பு வண்ணமாம்'' வ. உ. சி. பதிப்பு.)

உதாரணம்:—

''தொடுத்த வேம்பின் மிசைத் துதைந்த போந்தை[1]
அடைய அசைந்த ஆர்மலைப் பாட்டுர்
அண்ணல் என்போன் இயன்ற சேனை
முரசிரங்குந் தானையெதிர் முயன்ற
வேந்தருயிர் முருக்கும் வேனினன்[2] னவனே'' (யா. வி. கழ. பக். 408)

எனவரும். (உஉக)

பதிப்பாசிரியர் விளக்கம்

அகைப்பு வண்ணம்

1. ''அகைப்பு வண்ணம் என்பது அறுத்து அறுத்துச் சொல்லப்படுவது'' என்றுகூறி இத் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டுவர். (யா. வி. கழ. பக். 408)

உரை.சு.வே: 1. போந்தையிடை
2. வேலினவன்

2. அகைப்பு வண்ணமாவது அறுத்தறுத்து ஒழுகுவது (வீரசோ. காரி. 142)

3. 'அறுத்தறுத் தியல்வன அகைப்பாகும்மே' (முத்துவீ. யா. ஒழி. 31)

4. 'குற்றிகரக் குற்றுகரங்கள் வந்து இன்னாங்காய் அறுத் திசைத்தமையால் குற்றப்பாடு என்று களைந்திடாமோவெனின்; அற்றன்று; அறுத்திசைப்பும் வெறுத்திசைப்பும் குற்றம் என்று களைந்திடப்படா, பிற சான்றோர் செய்யுளகத்தும் அருகிவரு மாகலின்' (யா. வி. கழ. பக். 424) என வருதலை நோக்கினால் குற்றியலிகர குற்றுகரங்களால் அறுத்திசை உண்டாகும் என்று தெரிகிறது. இவற்றிலன்றி வஞ்சிச்சீரினும் அறுத்திசைத்தல் உண்டாம்.

5. **பேராசிரியர்** ''விட்டு விட்டுச் சேறலின் அகைப்பு வண்ணம் என்னும் பெயர் பெற்றது.

''வாரா ராயினும் வரினும் அவர்நமக்
கியாரா கியரோ தோழி'' (குறுந். 110)

என்புழி, ஒருவழி நெடில் பயின்றும் ஒருவழிக் குறில் பயின்றும் அறுத்தொழுகிய அகைப்பு வண்ணமாம்'' என்பர்.

6. அகைப்பு வண்ணம் ஒழுகு வண்ணத்திற்கு எதிரான பண்புடையது. (திரு ச. வே. **சுப்பிரமணியன்** இல. தொகை. யாப். பக். 318)

7. அகைத்தல் அறுத்தலாதலில் காரணப்பெயர். நச்.

8. அறுத்திசைப்பும் வெறுத்திசைப்பும் அகன்றிசைப்பும் ஓசைக் குற்றம் என்பர். (யா. வி. கழ. பக். 424)

9. தாளவகையுள் 'அறுத்துக் கொட்டுதல்' என்பது ஒன்றாகும்.

10. **அகைப்பு வண்ணம்**

''சித்தி ரத்தொடு சேர கைப்பென
வைத்த வண்ணமும் மன்னெ டில்குறில்

ஒத்த வண்ணமா யோங்க டிக்குளே
உற்ற ஓசைசீர் இற்ற வோசையே''
(கம்பராமாயணக் கௌஸ்துபம். தமிழாய்வு)

222. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.

என்-னின் தூங்கல் வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தூங்கல் வண்ணமாவது **வஞ்சியுரிச்சீர்** பயின்று வரும் என்றவாறு.

உதாரணம்:—

''வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்'' (பட்டினப். 1,2.)

என வரும். **(உஉஉ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

தூங்கல் வண்ணம்

1. தூங்கல் வண்ண மென்பது பெரும்பான்மையும் வஞ்சி பயின்று வருவது என்று கூறி, இத் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டுவர். (யா. வி. கழ. பக். 408)

2. தூங்கல் வண்ணமாவது வஞ்சி பயில வருவது (வீரசோ. காரி. 142)

3. நிரையிறு முரிச்சீர் மிக்குத் தூங்கிய
ஓசையின் வருவன தூங்கிசை யாகும்''
(முத்து.வீயா.ஒழி. 30).

4. **பேராசிரியர்** ''தூங்கல் வண்ணம் தூங்க லோசைத்தாகி வருவது. நூற்பாவுள் வஞ்சி யென்பது வஞ்சித் தூக்குப் போல இதுவும் அற்றுச் சேற லுடைத்தென்பது'' என்பர். ஆனால், **இளம்பூரணர்** வஞ்சியுரிச்சீர் பயின்று வருவது என்பர்.

223. ஏந்தல் வண்ணஞ்
[1]சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.

என்-னின் ஏந்தல் வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று.

நூ.சு.வே. 1. சொல்லியது

(இ-ள்) ஏந்தல் வண்ணமாவது, சொல்லிய[1] சொல்லினானே சொல்லப்பட்டது சிறக்க வரும்[2] என்றவாறு.

உதாரணம்:—

''கூடுவார் கூடல்கள் கூட லெனப்படா
கூடலுட் கூடலே கூடலுங்-கூடல்
அரும்பிய முல்லை யரும்பவிழ் மாலைப்
பிரிவிற் பிரிவே பிரிவு'' (யா. வி. கழ. பக். 410)

என வரும். (உஉஙு)

பதிப்பாசிரியர் விளக்கம்

ஏந்தல் வண்ணம்

1. ''ஏந்தல் வண்ணம் என்பது சொல்லிய சொல்லிற் சிறந்து வருவது'' என்று தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டுவர் (யா. வி. கழ. பக். 409).

2. ஏந்தல் வண்ணமாவது சொன்ன சொல்லே சிறந்து வருவது (வீரசோ. காரி. 142).

3. ''நேரிறு முரிச்சீர் மிகவந் தேந்திய
ஓசையின் வருவன யேந்திசை யாகும்'' (முத்துவீ. யா. ஒழி. 28)

4. **பேராசிரியர்** ''சொல்லிய சொல்லானே, சொல்லப்படும் பொருள் சிறப்பச் செய்வது ஏந்தல் வண்ணம்'' என்பர். அவர் 'ஏந்தலென்பது மிகுதல்; ஒருசொல்லே மிக்குவருதலில் ஏந்தல் வண்ணம் என்றானாயிற்று. அது ''வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்'' எனவரும்' என்று விளக்கந் தருவர். பிற்காலத் தார் கூறும் சொற்பின்வருநிலை இதன்பாற்படுமென்க.

5. வெண்பா முதலான பாக்களில் வரும் ஏந்திசையை யாப்பருங்கலத்தின் அறிக.

224. உருட்டு வண்ண மராகந் தொடுக்கும்.

உ.ரசு.வே: 1. சொல்லியது சொல்லினிற்
2. சொல்லப்பட்டது சிறக்கும்

என்-னின் உருட்டு வண்ணம் ஆமாறு . உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உருட்டு வண்ணமாவது அராகந் தொடுக்கும் என்ற வாறு.

உதாரணம்:—

''தாதுறு முரிசெறி தடமல ரிடையிடை
தழலென விரிவன பொழில்'' (யா.வி.கழ.பக்.)

என வரும். (உஉ-ச)

பதிப்பாசிரியர் விளக்கம்

உருட்டு வண்ணம்

1. உருட்டு வண்ணம் என்பது அராகத் தொடைமேல் வருவது என்றுகூறி, இத் தொல்காப்பிய நூற்பாவை மேற் கோள் காட்டுவர் (யா. வி. கழ. பக். 410)

2. ''உருட்டு வண்ணமாவது அராகந் தொடுப்பது'' என்று கூறுவர். (வீரசோ. காரி. 142)

3. ''உருட்டாம் அராகத் தொடுவரு வனவே'' (முத்துவீ. யா. ஒழி.26)

4. தொல்காப்பியர் அராகம், பரிபாடற்கும் அம்போதரங் கக் கலிப்பாவிற்கும் உறுப்பாக வரும என்பர். அராகம் வேறு முடுகியல் வேறு என்பதே தொல்காப்பியர் கொள்கை. திருஞான சம்பந்தர் தேவாரத்துள் வரும் திருவிராகம் இவ்வராகத்துள் அடங்கலாம். திருவிராகம் பல பண்களில் வருகின்றது. அவை நான்கடிப் பாடல்கள்.

5. பிற்காலத்தில் அராகம் முடுகியல் என்னும் இவை ஒன்றே என்ற கொள்கை தோன்றிவிட்டது.

''அராகம் முடுகியல் வண்ணக மாகும்.

என்று கூறும் திவாகரம்.

6. **பேராசிரியர்** உருட்டிச் சொல்லப்படுவது அராகம் என்று கூறி,

''உருமுரறு கருவிய பெருமழை தலைஇய'' (அகநா.158)

எனவரும். இது நெகிழாது உருண்டவோசையாகலிற் குறுஞ்சீர் வண்ணமெனப் படாது உருட்டு வண்ணமெனப் பட்டது என்பர்.

7. **இளம்பூரணர்** அராகமென்பது ஈரடியானும் பலவடியானும் குற்றெழுத்துப் பயின்றுவரத் தொடுப்பது. பெருமைக் கெல்லை ஆறடி என்பர் (செய். 117)

8. **பேராசிரியர்** குறிலிணை பயின்ற அடி அராகமெனப் படும் என்பர். (செய். 121)

225. [1]முடுகு வண்ண முடிவறி யாமல்
அடியிறங் [2]தோடி யதனோ ரற்றே.

என்-னின் முடுகுவண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முடுகு வண்ணமாவது நாற்சீரடியின் மிக்கோடி அராகத்தோடு ஒக்கும் என்றவாறு.

உதாரணம்:—

''நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ'' (கலித். 39) என வரும். (உ.உரி)

பதிப்பாசிரியர் விளக்கம்

முடுகு வண்ணம்

1. முடுகு வண்ணம் என்பது, அடியற்றவழி அறியலாகா

நூ.பா.வே: பேராசிரியர் நச்சினார்க்கினியர், வீரமாமுனிவர் மூவரும்

1. ''முடுகு வண்ணம்
அடியிறந் தோடி யதனோ ரற்றே'' என்று பாடங் கொண்டனர்.
2. ''தொழுகி'' வ. உ. சி. பாடம். ஆனால், உரையில் 'மிக்கோடி' என வருதலால் எல்லோருடைய பாடத்துடன் பொருந்த 'அடியிறந்தோடி' எனப் பாடம் கொள்ளப்பட்டது.

தாய் நீண்ட அடித்தாய் அராகந் தொடுத்து வருவது என்று கூறி,

''முடுகு வண்ணம் முடிவறியாமல்
அடியிரந் தொழுகும் அதனோ ரற்றே'' (யா. வி. கழ. பக். 11)

(வ. உ. சி. பதிப்பின் பாடத்தை இந்நூற்பா ஒத்திருக்கிறது). என்பர்.

2. 'உருட்டு வண்ணமாவது அராகந் தொடுப்பது'. (வீரசோ. காரி. 142)

3. ''அராகமாய் வருகுவ தன்றி யடிமுதல்
ஈறுந்தோன் றாமல் தொடர்ந்தெ ழும்பிய
அடியான் வருவன முடுகா கும்மே'' (முத்துவீ. யா. ஒழி. 28)

4. உருட்டு வண்ணமாகிய அராகத்தோடு சேர்ந்து வரும் முடுகுவண்ணம். முடுகியல் எழுசீரடி, அறுசீரடி, ஐஞ்சீரடி களால் வரும் என்பதைச் செய்யுளியல் 61, 62ஆம் நூற்பாக் களால் அறிந்துகொள்ளலாம். முடுகியலடி, பரிபாடலில் வரும்.

5. அராகமாய் வருவதன்றி, அடியின் முதலும் ஈறுந் தோன்றாமல் தொடர்ந்து நீண்ட அடியான் வருவன முடுகு வண்ணம். (தொன்னூல் பக். 81)

6. முடுகு வண்ணமாவது, முடுகியல் தொடுத்த அடியோடு பிறவடி வேறுபடத் தொடர்ந்தோடுவது என்பர் நச்சினார்க் கினியர்.

7. ஆனால், **பேராசிரியர்** முடுகு வண்ணமென்பது நாற் சீரடியின் மிக்கு ஓரடி அராகத்தோ டொக்கும் என்று கூறி,

''நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோள் பசலையு மம்பலும்'' (கலி. 39)

என்று எடுத்துக்காட்டுக் கூறுகிறார்.

8. மாறனலங்கார உரையாசிரியர், அராகந் தொடுத்த அடியோடும் பிறிதடியும் படத் தொடுப்பது முடுகு வண்ணம் என்பர். (மாற. பொது. 85. உரை)

226. வண்ணந் தாமே யவையென[1] மொழிப.

என்-னின் மேற்பட்ட வண்ணமெல்லாம் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வண்ணங்களாவன மேற் சொல்லப்பட்டன என்ற வாறு.

இதனால் பெற்ற தென்னை? இப்பொருள்[2] மேலே பெறப் பட்டதால் எனின், ஒரு பயன்[3] கருதிக் கூறினாரென்க. வண்ணம் பாகுபடுகின்றது தொடையினானன்றே (தொகையினானன்றே த. ச. பதி. பாடம்) இன்னும் வேறொரு வாற்றாற் பாகுபடுப்பப்[4] பலவாம் என்பது அறிவித்தல்.

அது குறில் நெடில் வல்லினம் மெல்லினம் இடையினம் என நிறுத்தி, அகவல் ஒழுகிசை வல்லிசை மெல்லிசை என்ற நான்கினோடும் உறழ இருபதாம்; அவற்றைத் தூங்கிசை, ஏந்திசை, அடுக்கிசை, பிரிந்திசை. மயங்கிசை என்பனவற்றோடு உறழ நூறாம்.

அவற்றைக் குறிலகவற் றூங்கிசை வண்ணம் நெடிலகவற் றூங்கிசை வண்ணம் என ஒரு சாராசிரியர் பெயரிட்டு வழங்குப. (உஉசு)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. வண்ணத்தின் தொகைவகைவிரி

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் "ஓசை (வண்ணம்) என்கின்ற ஒன்று, செப்பல், அகவல், துள்ளல், தூங்கல், கொஞ்சல் என்

நூ.பா.வே: 1. யிவையென' பேரா; நச்.
உரை.சு.வே: 2. பொருண்மை
3. ஒருபயன் கூறினாரென்க
4. பாகுபடுப்பதேயாகு

னும் தொகையானும், பாவண்ணம் முதலான இருபது வண்ணம் என்னும் வகையானும், குறில் அகவல் தூங்கிசை வண்ணம் முதலாகிய நூறுவண்ணம் என்னும் விரியானும் வரும்'' என்பர். (யா.வி.கழ.பக். 10)

2. பதினைந்துவகைச் செய்யுள்

''இவ்வாறு வண்ண விகற்பம் எடுத்தோதினார் **தொல்காப்பியனாரும் கையனாரும்** முதலாக உடையார்'' என்று அவர் கூறுவதையும் ஒப்பு நோக்குக. (யா.வி.கழ.பக். 411) இன்னும் அவர், உயிர்மிக்குவந்தது, நான்கு அளபெடையும் வந்தது, வன்மை மிக்குவந்தது, மென்மை மிக்குவந்தது, இடைமை மிக்குவந்தது, குற்றியலிகரம் வந்தது, குற்றியலுகரம் வந்தது, ஆய்தம் வந்தது, மகரக்குறுக்கம் வந்தது, ஐகாரக்குறுக்கம் வந்தது, ஔகாரக் குறுக்கம் வந்தது எனப் பதினைந்து வகையான செய்யுள்களைக் காட்டுகின்றார். (யா. வி. கழ. பக். 31, 32, 33)

3. இசையிலாத கவி

''தசையி றந்தச டலமெஃ தீயுமோ
இசையி றந்த கவியஃ தீயுமாம்''
(கம்பராமாயணச் கௌஸ்துபம்-தமிழாய்வு)

(27) அம்மை

227. சின்மென் மொழியாற் சீர்புனைந்[1] தியாப்பின்
அம்மை தானே அடிநிமிர் வின்றே.

என்-னின் நிறுத்த முறையானே அம்மையாகிய செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சிலவாகிய மெல்லியவாகிய மொழியினானே தொடுக்கப்பட்ட அடிநிமிர்வில்லாத செய்யுள் அம்மையாம்[2] என்றவாறு.

நூ.பா.வே: 1. ''சிரிது'' யா.கா.
''தாய பனுவலின்'' பேரா; நச்.
உரை.சு.வே: 2. வனப்புப் பாகுபடுக்குமாறு அம்மையாகிய

உதாரணம்:—

''அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை'' (திருக்கு.315)

என வரும். (உ.எ)

பதிப்பாசிரியர் விளக்கம்

1. பேராசிரியர் பாடவேறுபாடு

தொல்காப்பியத்திற்கு இப்பொழுதுள்ள உரைகளில் பழமையானது இளம்பூரணர் உரையே. பேராசிரியர் உரை பின்னர் எழுந்தது. பேராசிரியர் உரையில் இளம்பூரணர் உரைக்கு மாறுபட்ட கருத்தினையே பெரும்பாலும் பார்க்க முடிகிறது. அம்மை முதலான எட்டும் தனிப்பாக்களுக்கு உரிய இலக்கணம் என்பது **இளம்பூரணர்** கருத்து. தொல்காப்பியர் தனிப்பாக்களுக்கே இலக்கணங் கூறுகின்றாரென்பது செய்யுளியல் முதல்நூற்பாவால் விளங்கும். ஆனால் **பேராசிரியர்** முதல் நூற்பாவிற் கூறிய **மாத்திரை முதலான இருபத்தாறு உறுப்பும் ஓரோர் செய்யுட்கே ஓதிய உறுப்பென்றும், அம்மை முதலிய இவை பல செய்யுளுந் திரண்டவழிப் பெறும் வனப்பென்றும் கருதிக்கொண்டு செய்யுளியலுக்கு உரை** யெழுதியுள்ளார். அதற்கியைய இந்நூற்பாவிற்கு அவர் கொண்ட பாடம்,

''வனப்பியல் தானே வகுக்குங் காலை
சின்மென் மொழியாற் றாய பனுவலோ
டம்மை தானே அடிநிமிர் பின்றே''

என்பதாகும். இவரைப் பெரும்பாலும் பின்பற்றும் நச்சினார்க்கினியரும்,

''வனப்பியல் தானே வகுக்குங் காலை''

என்ற பாடத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. **நச்சினார்க்கினியர்** இந்நூற்பா உரையில் ''அம்மை முதலான இவற்றை வனப்பென்று பெயர் கூறிற்றுப் பலவுறுப்புந் திரண்ட வழிப் பெறுவதோர் அழகாதலின். இப்பெயர் சூத்திரத்தாற் பெற வேண்டுவார்

'வனப்பியல் தானே வகுக்குங் காலைச் சின்மென் மொழியால்' எனப்பாடமோதுப" என்று எழுதுவதை நோக்கினால் 'வனப்பியல் தானே வகுக்குங்காலை' என்ற பாடம் பேராசிரியர் படைத்துக் கொண்ட பாடம் என்பது புலனாகின்றது. நச்சினார்க்கினியர் இரண்டடி நூற்பாவாகவே பாடங் கொண்டுள்ளார்.

2. யாப்பருங்கலம் கூறுவது

தொல்காப்பியர் கூறுவதைப் போலவே யாப்பருங்கலம் (95) "அம்மை முதலிய ஆயிரு நான்மையும்" என்று கூறுகின்றது. அம்மை முதலானவற்றிற்கு "வனப்பு" என்றொரு பெயர் கூறவில்லை. ஆனால் **விருத்தியாசிரியர்** "அம்மை முதலாசிய எட்டு யாப்பலங்காரமும்" என்று உரை கூறுகின்றார்.

பின்னர், அவர் இவற்றை விளக்குமிடத்து 'அம்மை முதலிய ஆயிரு நான்மையும்' என்பது அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு என இவை எட்டும் எனக் கொள்க என்று கூறிவிட்டு,

"அம்மையாவது, சிலவாய மெல்லியவாய சொற்களால் ஒள்ளிய வாய பொருண்மேல் சிலவடியாற் சொல்லப்படுவது. என்னை?

> "சின்மென் மொழியாற் சீரிது நுவலின்
> அம்மை தானே அடிநிமிர் வின்றே" (தொல்.செய்.227)

என்றாராகலின் "என்று கூறி இளம்பூரணர் கூறிய குறட்பாவையே மேற்கோள் காட்டுகிறார். இவர் 'சீரிது' எனப் பாடங் கொண்டு 'ஒள்ளியவாய பொருண்மேல்' என்று உரை கூறுகின்றார்.

3. யாப்பருங்கலக் காரிகை கூறுவது

காரிகை 33இல் "வசை வனப்பு" என முன்னே கூறிவிட்டுப் பின் அதன் உரையில், வனப்பு எட்டுவகைப்படும் அம்மை இழைபு என. என்னை,

''அம்மை அழகு தொன்மை தோல் விருந்
தியைபு புலனிழை பெனவனப் பெட்டே''

என்றாராகலின் என்று கூறி அம்மை என்பது சிலவாய மெல்லியவாய சொற்களால் ஒள்ளியவாய பொருண்மேல் சில அடியாற் சொல்லப்படுவது; என்னை,

''சின்மென் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அம்மை தானே அடிநிமிர் வின்றே''

என்றாராகலின் என்றுகூறி, இளம்பூரணர் எடுத்துக்காட்டும் 'அறிவினான்' என்னும் குறளையே மேற்கோள் காட்டுகிறது.

காரிகை, அம்மை முதலானவற்றை வனப்பென்று குறிப்ப துடன் இளம்பூரணர் கொண்ட பாடம் அமைந்த நூற்பாவை அப்படியே எடுத்துக்காட்டுகிறது. காரிகை கூறும் ''வனப் பெட்டே'' என்ற நூற்பா எந்த நூலில் உள்ளதென்று தெரிய வில்லை.

4. திருவள்ளுவமாலையில்

''எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம் - இழுக்கின்றி
என்றெவர் செய்தன வெல்லா மியம்பின
இன்றிவ ரின்குறள்வெண் பா'' (45. நச்சுமனார்)

என்னும் பாட்டில் வனப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

5. வீரசோழியம் கூறுவது

வீரசோழியம் செய்யுளுக்குள்ள பத்து ஆவிகளைக் குறிப் பிடும்பொழுது காந்தி என்று ஒன்றினைக் கூறுகின்றது.

''ஆனா அழகினைக் காந்தியென் கின்ற ததுதமிழின்
நானா விதமாய் நடைபெற் றியலும்'' (151)

என்பது அப்பாடல். காந்தி என்னும் அலங்காரம் **யாப்பு வனப் பெனக்** கொள்க. அது தமிழிற் பல கூறுபாடுபட்டு ..... நெறிப் பட்டியலும் என்று கூறும்.

6. இங்கே வீரசோழியவுரை கூறும் **யாப்பு வனப்பும்** யா.வி. ஆசிரியர் கூறும் **யாப்பலங்காரமும்** ஒத்திருத்தலைக் காண்க.

7. அம்மைக்கு இலக்கணம் கூறும் 'சின்மென்' மொழியால் என்ற நூற்பாவின் முதலடிக்குச் 'சின்மென்மொழியால் **தாயபனு வலொடு**' என்று பாடங்கொள்வர் பேராசிரியரும் அவரைப் பின்பற்றும் நச்சினார்க்கினியரும், யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக் காரிகை உரை இவற்றில் இப் பாடமில்லை.

8. **பேராசிரியர்** சிலவாய மெல்லியவாய சொல்லோடும் இடையிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடும் அடிநிமிர்வில்லது அம்மையாம் என்று கூறிப் பதினெண் கீழ்க் கணக்கு நூற்களை மேற்கோள் காட்டுவர்.

9. பின்வரும் பரந்த மொழியால் அடிநிமிர்ந்தொழுகும் தோல் என்பது அம்மைக்கு எதிரான இலக்கணமுடைய தென்க.

10. **பேராசிரியர்** தொடர்நிலைச் செய்யுளே யன்றித் தனித்து வரினும் அச் செய்யுள் அம்மையாம் என்பர்.

அம்மை என்பது குணப் பெயர். அமைதிப்பட்டு நிற்றலின் அம்மை என்றாயிற்று என்பர்.

11. உலக வழக்கில் வளராது குள்ளமாயிருக்கும் பெண்ணை 'அம்மைக் குள்ளி' என்று வழங்கும் வழக்கம் உண்டு.

(28) அழகு

228. செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே யழகெனப் படுமே.

என்-னின் நிறுத்த முறையானே அழகு என்னும் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) செய்யுட்குரிய சொல்லினாற் சீரைப்[1] புனைந்து தொடுப்பின் அவ் வகைப்பட்ட செய்யுளும் அழகு எனப்படும் என்றவாறு.

உரை.சு.வே: 1. சீர்புனைந்து

உதாரணம்:-

''1துணியிரும் 2பரப்பகங் குறைய வாங்கி
மணிகிள ரடுக்கன் முற்றிய வெழிலி
காலொடு மயங்கிய கனையிரு ணடுநாள்
யாங்குவந் தனையோ வோங்கல் 3வெற்ப
நெடுவரை மருங்கிற் பாம்பென விழிதரும்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே'' (யா.வி.கழ.பக்.398)

எனவரும். (உ.உ.சி)

பதிப்பாசிரியர் விளக்கம்

அழகு

1. அழகாவது, செய்யுட் சொல்லாகிய திரிசொல்லினால் ஓசை இனியதாக நன்கு யாக்கப்படுவது; என்னை?

''செய்யுள் ..... அழகெனப்படுமே'' என்றாராகலின் என்பர். (யா.வி.கழ.பக். 398)

2. காரிகை உரையாசிரியரும் மேற்கண்டபடியே எழுதியுள்ளார்.

3. **இளம்பூரணர்**, யா. வி. ஆசிரியர், காரிகைஉரையாசிரியர் மூவரும் 'துணியிரும் பரப்பகம்' என்னும் தனிப்பாட்டினையே அழகுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டுவர்.

4. **பேராசிரியர்** இந் நூற்பாவிற்குத் ''திரிசொற் பயிலாது செய்யுளுட் பயின்று வரும் மொழிகளாற் சீரறுத்துப் பொலிவு பட்ட யாப்பின் பொருள் அழகு'' என்று பொருள்கூறி,

'அவ்வகை' என்றதனால், அவை வேறு வேறு வந்து ஈண்டிய தொகை நிலைச் செய்யுள் என்றவாறு. அவையாவன: நெடுந்தொகை முதலாகிய தொகை எட்டும் என்றவாறு என்பர்.

உரை.சு.வே: 1. துளியிடும்
2. பௌவம்
3. பரம்பற, பரம்புபட

5. **நச்சினார்க்கினியர்** "வழக்குச் சொற்பயிலாமல் செய்யுளுட் பயின்றுவரும் சொல்லானே சீர்த்துப் பொலிவு பெறப் பாடின் அழகாம்" என்று கூறிப் பேராசிரியர் காட்டும் எடுத்துக் காட்டினையே காட்டுவர்.

6. அம்மையைக் கூறும் நூற்பா 'சின்மென் மொழியாற் சீர்புனைந்து' என்று கூறுகின்றது. இந்நூற்பா 'செய்யுள் மொழியாற் சீர்புனைந்து' என்று கூறுகின்றது. இவை ஒப்பு நோக்கத்தக்கன.

7. 'அழகு' என்பது செய்யுள் மொழியால் யாக்கப் படுவது.

8. தெரிந்த மொழியால் அல்லது சேரி மொழியாற் கூறப் படும் புலன் என்பது, அழகிற்கு எதிரான அமைப்பை உடைய தாம்.

(29) தொன்மை

229. தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.

என்-னின் நிறுத்த முறையானே தொன்மைச்[1] செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தொன்மை யாவது உரையொடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய பொருள்மேல் வருவது[2].

(அது) அவை இராம[3] சரிதமும், பாண்டவ சரிதமும் முதலாகிய வற்றின்மேல் வருஞ்செய்யுள். (உ உசு)

நூ.பா.வே: 'தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே'' யா. வி; பேரா; நச்.
'சுரிகுழன் மடவாய் தொன்மைதானே'' காரிகை.

உரை.சு.வே: 1. தொன்மைச் செய்யுளாமாறு
2. வருவனவாம்
3. இராம சரிதை பாண்டவசரிதை

பதிப்பாசிரியர் விளக்கம்

தொன்மை

1. தொன்மை யாவது, பழைமைத்தாய் நிகழ்ந்த பெற்றி உரைக்கப்படுவனவற்றின் மேற்று; என்னை?

"தொன்மைதானே.....பழைமை மேற்றே" என்றாராகலின்; வரலாறு:—

"செறிதொடி உவகை கேளாய் செஞ்சுடர்த்
தெறுகதிர்ச் செல்வன்.....'

என்பது போல்வனவும், **பாரதமும், இராமாயணமும்** கொள்க என்பர். (யா.வி.கழ.பக். 399)

2. தொன்மை என்பது, பழைமைத்தாகி நிகழ்ந்த பெற்றி உரைக்கப்படுவனவற்றின் மேற்று; என்னை?

"சுரிகுழல் மடவாய் தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

என்றாராகலின்.

வருமாறு:

"செறிதொடி உவகை கேளாய்ச் செஞ்சுடர்த்
தெறுகதிர்ச் செல்வன் செய்வதென்"

என்பதூஉம், பாரதமும், இராமாயணமும் முதலாக உடையனவுமெனக் கொள்க என்பர். (காரிகை உரையாசிரியர்; வேணுகோபதிப்பு) காரிகையில் இந்நூற்பா மகடூஉ முன்னிலையாக உள்ளது.

3. **பேராசிரியர்** 'தொன்மையென்பது உரைவிராஅய்ப் பழைமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது 'என்று கூறி அவை **பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன** என்பர்.

4. **நச்சினார்க்கினியர்** பேராசிரியரைப்போலவே கூறிவிட்டுச் "சிலப்பதிகாரமும் அதன்பாற்படும்" என்பர்.

(30) தோல்

230. இழுமென் மொழியால்[1] விழுமியது[2] நுவலினும்
பரந்த மொழியா[3] டிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்னெறிப்[4] புலவர்.

என்-னின் நிறுத்த முறையானே தோலாகிய செய்யுள்[5] உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இழுமென்[6] மொழியால் விழுமிய பொருளை[7] கூறினும், பரந்த மொழியினால் அடிநிமிர்ந்து ஒழுகினும் தோல் என்னும் செய்யுளாம் என்றவாறு.

உதாரணம்:—

"பாயிரும் பரப்பகம் புதையப் பாப்பக[8]
ஆயிர மணிவிளக் கழலுந் சேக்கைத்
துணிதரு வெள்ளந் துயில்புடை[9] பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி யெளிதெனக் கூறின்
இம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லைத் தீமை யில்லலச்
செய்வோ ரில்லைச் செய்பொரு ளில்லை
10அறிவோர் யாரஃ திறுவழி யிறுகென"

(மார்க்கண்டேயனார்-காஞ்சி)

என்றது, இழுமென் மொழியால் விழுமியது நுவல வந்தது.

"திருமழை தலைஇய விருணிற விசும்பு"

என்னுங் கூத்தராற்றுப்படை பரந்தமொழியான் அடிநிமிர்ந்து வந்தது. (உரு0)

பதிப்பாசிரியர் விளக்கம்

தோல்

1. யாப்பருங்கல விருத்தியாசிரியர் "தோல் என்பது இழு

நூ.பா.வே: 1. மொழியான் 2. விழுமிய 3. 'மொழியான்' பேரா; நச். கு.வே: 4. தென்னெறிப் புலவர், தென்மொழிப்புலவர்
உரை.கு.வே: 5. செய்யுள் ஆமாறு 6. முழங்கின 7. பொருளாகக்
8. பாம்பின் 9. துயிலெடை 10. அறிவாரில்லை.

மென்று மெல்லியவாய சொற்களால் விழுமியவாய்க் கிடப்பன வும், எல்லாச் சொற்களோடும் கூடிய பல அடியை உடையவாய்க் கிடப்பனவும் என இரண்டு வகைப்படும்'' என்றுகூறி ''இழு மென்'' என்ற நூற்பாவை எடுத்துக்காட்டி, இளம்பூரணர் கூறிய 'பாயிரும்' என்ற பாட்டு இழுமென் மொழியால் விழு மியது நுவன்ற தென்றும், ''திருமழைதலைஇய'' என்ற பாட்டு பரந்த மொழியால் அடி நிமிர்ந்தொழுகியதென்றும் கூறுவர். (யா.வி.கழ.ப.க் 399)

2. காரிகை உரையாசிரியரும் மேற்கண்டவாறே கூறுவர் (காரிகை. 33 உரை).

3. பேராசிரியர் ''இது முறையானே தோல் என்னும் வனப் புணர்த்துதல் நுதலிற்று; அஃது இருவகைப்படும்; கொச்சகக் கலியானும் ஆசிரியத்தானும் செய்யப்படுவன. 'யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது' (செய். 143) என்றவழி, தேவபாணியும் காமமும் பொருளாகவன்றியும் கொச்சகக்கலி வருமென்றானாகலான் அவைமேல் வருதல் ஈண்டுக் கொள்ளப் பட்டது'' என்று நுதலிய துரைத்து, ''இழுமென் மொழியால் விழுமியது நுவலினும் - மெல்லென்ற சொல்லான் அறம் பொருள் இன்பம் வீடென்னும் விழுப்பொருள் பயப்பச் (கொச்சகக் கலியாற்) செய்வன.

அவை செய்த காலத்துள்ளன கண்டிலம்; பிற்காலத்து வந்தன கண்டு கொள்க.

பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும் - ஆசிரியப் பாட்டான் ஒருகதைமேல் தொகுக்கப்பட்டன. அவையும் பொருட்டொடர் நிலை.

தோல் என மொழிப தொன்மொழிப்புலவர் (இதனுள்) 'தொன்மொழி' என்றார் பழைய கதையைச் செய்தல் பற்றி. இது முன்வரும் சூத்திரத்தானும் பெறுதும்'' என்பர்.

4. நச்சினார்க்கினியர் இந்நூற்பாவிற்குப் பேராசிரியரைப் போலவே உரைகூறிவிட்டுப் பின் ''யாப்பினும் பொருளினும்

வேற்றுமையுடையது" (செய். 143) என்றவழிப் பொருள் வேறு பட்டுக் கொச்சகத்தாற் செய்யப்படுவன தோலாம். இவை பொருட் டொடர்; அவை **சிந்தாமணி** முதலியன.

அவை பாவிற்கு இனமாகிய துறையும் விருத்தமும் பற்றிச் செய்தன என்பார்க்கு அப்புலவர் செய்யுட் செய்கின்ற காலத் திற்கு நூல் தொல்காப்பியமாயவாறும், அவர் இனம் கொள் ளாதவாறும், அவ்வினங்கடாம் இலக்கணக் குறைபாடுடைய வாறும் கொச்சகம் போற் சிறப்பின்மையும் முன்னர் விளங்கக் கூறியவற்றைக் கொண்டும், பின்பு செய்த நூல்கள் முன்பு செய்த செய்யுட்கட்கு விதியாகாதவாறும் கொண்டும் மறுக்க என்பர். அவர் இனி, ஆசிரியப்பாவான் அடிநிமிர்ந்து வந்தன **தேசிகப் பா** என்பர்.

5. **பேராசிரியர்** இந்நூற்பா உரையுள், "தொன்மொழி" என்றார், பழைய கதையைச் செய்தல் பற்றி; இது முன்வருஞ் சூத்திரத்தானும் பெறுதும் என்று எழுதுவதை நோக்கினால் தோல் என்பதற்குப் பழமை என்று பொருள் காண்பதாகத் தெரிகின்றது.

ஆனால், **பிங்கல நிகண்டாசிரியர்**

> "யானையும் வனப்பும் அதளும் தோல்வியும்
> தோலென் றுரைப்பர் தோற்பல கையுமாம்"

என்று கூறும் பலபொருள்களில் தொன்மை என்ற பொருளைக் கூறாமல், வனப்பு என்று கூறுவதைக் கருதினால், இத் தோல் இழுமென் மொழி, பரந்த மொழி பற்றி வரும் **ஒருவகை வனப் பென்பது புலனாம்.**

> "தொல்வரவும் தோலும்"

என்பது **திருக்குறள்.**

6. **சிலப்பதிகார வுரையுள் அடியார்க்குநல்லார்** "இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளை அடிகள் செய் கின்ற காலத்து இயற்றமிழ் நூல் தொல்காப்பியமாதலானும்

பிற்கூறிய நூல்கள் நிரம்பா இலக்கணத்தனவாதலானும், அந் நூலின் முடிபே இதற்கு முடிபென்று கொள்க.

அந்நூலிற் செய்யுளியலின் கண்ணே ஆசிரியர் பாவும் இனமுமென நான்கினீக்கிய பாவினைத் தொகைவரையறை யான் இரண்டென அடக்கியும், விரிவரையறையான் ஆறென விரித்தும், அவறறை அறம் பொருளின்பத்தாற் கூறுக வென்றுங் கூறிப் பின்பு அம்மை முதலிய எட்டு வனப்பும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கண மென்று கூறியவாறு.

> ''இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
> பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினும்''

என்பதனால் குவிந்து மெல்லென்ற சொல்லானும், பரந்து வல்லென்ற சொல்லானும், அறம் பொருளின்பம் பயப்ப வீடென்னும் விழுமிய பொருள் பயப்ப ஒருகதைமேற் கொச்சகத் தானும், ஆசிரியத்தானும், வெண்பா வெண்கலிப்பாவானும், மற்றும் இன்னோரன்ன செய்யுளானும் கூறுக வென்றமையால், **இச்சிலப்பதிகாரம்** என்னும் தொடர்நிலைச் செய்யுள் அங்ஙனம் கூறிய தொடர்நிலையென உணர்க'' என்பர். இவர் பேராசிரியர் கருத்தை உட்கொண்டும், வேறுபட்டும் உரைக்கின்றார்

(31) விருந்து

231. [1]விருந்தே தானும்
புதுவது புனைந்த[2] யாப்பின் மேற்றே.

என்-னின் நிறுத்த முறையானே விருந்தென்னுஞ் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) விருந்தாவது, முன்புள்ளார் சொன்ன நெறி போய்ப், புதிதாகச் சொன்ன[3] யாப்பின் மேலது என்றவாறு.

புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல்வழி யின்றித்[4] தானே தோற்றுவித்தல். அது வந்தவழிக் காண்க.

நூ.பா.வே: 1. 'விருந்து தானே' சு. வே.
2. 'இளந்த' பேரா; நச்.
உரை.கு.வே: 3. புதிதாகப் புனைந்த
4. மொழியினிழல்வழியன்றித்

இது பெரும்பான்மையும் ஆசிரியப் பாவைக் குறித்தது. (உகக)

பதிப்பாசிரியர் விளக்கம்

விருந்து

1. யா. க. விருத்தியாசிரியர் விருந்து என்பது புதியவாயின வற்றின் மேற்று. அவை இப்பொழுது உள்ளாரைப் பாடும் பாட்டு; என்னை,

''விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்று'' என்றாராகலின். அவை வழிப்பட்டுழி அறிந்து கொள்க என்பர். (யா.வி.கழ.பக். 400)

2. காரிகை உரை: திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை யவர்கள் பதிப்பில்,

''வெதிர்புரை தோளாய் விருந்து தானே
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே''

என்று இந்நூற்பா காணப்படுகின்றது.

3. பேராசிரியர் ''விருந்து தானும் புதிதாகப் பாடுந் தொடர் நிலை மேற்று'' என்று பொருள்கூறி, 'தானும்' என்ற உம்மை யான் முன்னைத் தோலெனப் பட்டதூஉம் பழைய கதையைப் புதிதாகச் சொல்லியதாயிற்று.

இது பழங்கதை மேற்றன்றிப் புதிதாகச் சொல்லப்படுதல் ஒப்புமையின் உம்மையான் இறந்துதழீஇயினான் என்பது.

'புதுவது கிளந்த யாப்பின் மேற்று' என்ற தென்னை யெனின், புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச் செய்வது.

அது **முத்தொள்ளாயிரமும்** பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளும் என உணர்க. **கலம்பகம்** முதலா யினவும் சொல்லுப என்று சிறப்புரை கூறுவர்.

(32) இயைபு

232. ஞகார[1] முதலா[2] ளகார வீற்றுப்
புள்ளி யிறுதி[3] யியைபெனப் படுமே.

என்-னின் நிறுத்த முறையானே இயைபாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வருஞ் செய்யுள் இயைபு என்னுஞ் செய்யுளாம் என்றவாறு.

உதாரணம் வந்த வழிக்காண்க. **(உகஉ)**

பதிப்பாசிரியர் விளக்கம்

இயைபு

1. இயைபு என்பன ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் எனப்பட்ட பதினொரு புள்ளி ஈறாய் வந்த பாட்டெல்லாம். அவை பதினொருதாரணமும் வந்தவழிக் கண்டு கொள்க. என்னை?

> "ஞகாரை முதலா ளகாரை ஈற்றுப்
> புள்ளி யிறுதி யியைபெனப் படுமே"
>
> *(யா.வி.கழ.பக். 400)*

என்றாராகலின் என்பர்.

2. **காரிகை உரையாசிரியரும்** இவ்வாறே கூறுவர்.

3. **பேராசிரியர்** "ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் பதினொரு புள்ளியீற்றினுள் ஒன்றனை இறுதியாகச் செய்புஞ் செய்யுள் பொருட்டொடராகவும் சொற்றொடராகவும் செய்வது இயைபெனப்படும்" என்று உரை கூறி,

இயைபு என்றதனானே பொருளும் இயைந்து, சொல்லும் இயைந்து வருமென்பது கருத்து.

நூ.பா.வே: 1. 'ஞகாரை' பேரா; நச்.
2. 'ளகாரை' பேரா.
3. 'யியைபென மொழிப' சு. வே.

சீத்தலைச் சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலையும், கொங்கு வேளிராற் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன. அவை னகரவீற்றான் இற்றன.

மற்றையீற்றான் வருவனவற்றுக்கும் ஈண்டு இலக்கணம் உண்மையின், இலக்கியம் பெற்ற வழிக்கொள்க. இப்பொழுது அவை வீழ்ந்தன போலும்.

பரந்த மொழியான் அடிநிமிர்ந்தொழுகிய தோலொடு இதனிடை வேற்றுமை என்னையெனின், அவை ''உயிரீற்ற வாதல் பெரும்பான்மையாகலான் வேறுபாடுடைய சொற் றொடரால் வருதலுமுடையவென்பது'' என்பர்.

சொற்றொடர் என்பது அந்தாதி யெனப்படுவது என்றத னான், உயிரீற்றுச் சொற்றொடர் (அந்தாதி) சிறுபான்மை என்பது கொள்க என்பர்.

4. தொல்காப்பியர் மொழிமரபில் மொழிக்கு ஈறாம் எழுத்துக்களைக் கூறும் பொழுது,

''உயிர்ஒள எஞ்சிய இறுதி யாகும்'' (36)

''கவவோ டியையின் ஒளவு மாகும்'' (37)

என்னும் நூற்பாக்களால் உயிர் பன்னிரண்டும் ஈறாகுமென்றும்,

''ஞணநம னயரல வழள வென்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி'' (45)

என்னும் நூற்பாவால் இப்பதினொரு புள்ளியும் ஈறாகு மென்றும் கூறியுள்ளார்.

குற்றியலுகரம் ஈற்றில் வருவதாதலால் அந்த ஒன்றினையும் மேலனவற்றுடன் கூட்டிப் புணரியலில் (1) அறுநான்கு ஈறு என்று குறிப்பிடுவர்.

அவற்றுள் உயிரீறு குற்றியலுகர வீறுகளை ஒழித்து ஏனைய பதினொரு ஒற்றுக்களே இயைபென்னும் இலக்கியத் திற்கு வரும் என்பர்.

இயைபிற்கு ஒற்றுக்கள் சிறந்தன போலும்.

5. அடி தொறும் ஈற்றெழுத்து ஒன்றி வருவது தொடையுள் இயைபுத்தொடை எனப்படும். இயைபு வண்ணம் என்றொரு வண்ணமுண்டு. வேறுபாடறிக

(33) புலன்

